# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

# ONLINE PROGRAMMES

## முதுகலை தமிழ் இலக்கியம் (எம்.ஏ.)

### இரண்டாமாண்டு - நான்காம் பருவம்

### தாள்: 205144

# ஆராய்ச்சி அறிமுகம்

**Author:**

**Dr.M. K. KOVAIMANI,** *Associate Professor & Head, Department of Palm – leaf Manuscripts, Tamil University, Thanjavur – 613010.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. V. THIRUVENI,** *Assistant Professor of Tamil, Directorate of Distance Education, Alagappa University, Karaikudi.630003.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi 1100 44
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE12-02/Printing of Course Materials/2020 Dated 30.01.2020 Copies 1000**

## பிரிவு 1. ஆய்வு – ஆய்வாளர் - ஆய்வேடு

## கூறு 1. ஆய்வும் ஆய்வேடு வகைகளும்


1.1.முன்னுரை

1.2.குறிக்கோள்கள்

1.3.ஆய்வு

1.4.ஆய்வேடு வகைகள்

1.4.1.வரலாற்றாய்வு

1.4.2.ஒப்பீட்டாய்வு

1.4.3.சோதனை ஆய்வு

1.4.4.உய்த்துணராய்வு

1.4.5.செலுத்துநிலை ஆய்வு

1.4.6.அமைப்பியல் ஆய்வு

1.4.7.நடைமுறைசார் ஆய்வு

1.4.8.மாதிரி ஆய்வு

1.4.9.அளந்தறி ஆய்வு

1.4.10.மதிப்பீட்டாய்வு

1.4.11.புள்ளி விவர ஆய்வு

1.4.12.விளக்கவியல் ஆய்வு

1.4.13.செயல்முறை ஆய்வு

1.4.14.மரபியல் ஆய்வு

1.4.15.நாட்டுப்புறவியல் ஆய்வு

1.4.15.1.வரலாற்றுப் புவியியல் ஆய்வு

1.4.15.2.வரலாற்று மீட்டுருவாக்க ஆய்வு

1.4.15.3.குறிக்கோள் ஆய்வு

1.4.15.4.செயல்திறன் ஆய்வு

1.4.15.5.உளவியல் ஆய்வு

1.4.15.6.அமைப்பியல் ஆய்வு

1.4.15.7.வாய்மொழி வாய்பாட்டு ஆய்வு

1.4.15.8.கலப்புப் பண்பாட்டாய்வு

1.4.15.9.நாட்டுப்புறப் பண்பாட்டாய்வு

1.4.15.10.மக்கள் பண்பாட்டாய்வு

1.4.15.11.அரை உலகக் கோட்பாட்டு ஆய்வு

1.4.15.12.சூழ்நிலைக் கோட்பாட்டு ஆய்வு

1.5.தொகுத்துக் காண்போம்

1.6.முன்னேற்றத்தைச் சோதிக்குள் வினாக்களுக்கான விடைகள்

1.7.பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**கூறு 2. கூறுகள் - அணுகுமுறைகள்**

2.1.முன்னுரை

2.2.குறிக்கோள்கள்

2.3.ஆய்வும் ஆய்வுப்பொருள் தேர்வும்

2.3.1.ஆய்பொருள் தேர்ந்தெடுக்கும் ஆய்வாளரின் தகுதிகள்

2.3.2.ஆய்வின் முன்வரலாற்றை அறிதல்

2.3.3.தலைப்புகளின் வகைகள்

2.3.3.1.விளக்கத் தலைப்பு

2.3.3.2.சிக்கலை மையமிட்ட தலைப்பு

2.3.3.3.ஆய்வாளருக்குரிய ஆய்வுக்களம்

2.4.தொகுத்துக் காண்போம்

2.5.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

2.6.பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**கூறு 3. ஆய்வாளருக்குரிய தகுதிகள் - ஆய்வுக்குரிய காலம்**

3.1.முன்னுரை

3.2.குறிக்கோள்கள்

3.3.ஆய்வாளருக்குரிய தகுதிகள்

3.3.1.ஆய்வுப் பொருள் பற்றிய அறிவு

3.3.2.ஆய்வாளருக்கு ஆய்வில் பற்று

3.3.3.விடாமுயற்சி

3.3.4.நுண்ணோக்குப் பார்வை

3.3.5.ஆய்வு நேர்மை

3.3.6.நடுவு நிலைமை

3.3.7.ஆய்வு நாகரிகம்

3.3.8.கடும் உழைப்பு

3.3.9.பொறுமை

3.3.10.ஆய்வு ஒழுக்கம்

3.4.ஆய்வுக்குரிய காலம்

3.5.தொகுத்துக் காண்போம்

3.6.முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

3.7.பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

## கூறு 4. ஆய்வு நோக்கினைச் சுட்டல் - ஆய்வுச் சிக்கல் - ஆய்வுப் பொருள் பற்றிச் செய்யப்பட்ட ஆய்வுகள்

4.1. முன்னுரை

4.2. குறிக்கோள்கள்

4.3. ஆய்வு நோக்கினைச் சுட்டல்

4.3.1. கருதுகோள்களின் தேவை

4.3.2. கருதுகோளின் தகுதிகள்

4.3.3 .கருதுகோள் உருவாக்கம்

4.3.3. கருதுகோளின் வகைகள்

4.3.3.1 .எளிய கருதுகோள்

4.3.3.2. மாற்றுக் கருதுகோள்

4.3.3.3 .பயனில் கருதுகோள்

4.3.3.4. எதிர்மறை கருதுகோள்

4.4.ஆய்வுச் சிக்கல்

4.4.1. ஆய்வுச் சிக்கல் தேர்வில் எண்ணத்தக்கன

4.4.2. ஆய்வுச் சிக்கல் தேர்வு முறைகள்

4.4.3. ஆய்வுச் சிக்கலை வரையறுத்தல்

4.4.4. ஆய்வுச் சிக்கலின் தோற்றுவாய்கள்

4.4.5. ஆய்வுச் சிக்கலைத் தேர்ந்தபின் செய்யவேண்டுவன

4.4.6. ஆய்வுச் சிக்கல் தேடுவதில் ஏற்படும் தவறுகள்

4.5. ஆய்வுப் பொருள் பற்றிச் செய்யப்பட்ட ஆய்வுகள்

4.5.1. நற்றிணை

4.5.2. குறுந்தொகை

4.5.3. ஐங்குறுநூறு

4.5.4. பதிற்றுப்பத்து

4.5.5 .பரிபாடல்

4.5.6. கலித்தொகை

4.5.7. அகநானூறு

4.5.8. புறநானூறு

4.5.9. பத்துப்பாட்டு

4.5.10. சங்க இலக்கியம் - தொகுப்புப் பதிப்புகள்

4.5.10.1. வையாபுரிப்பிள்ளை பதிப்பு

4.5.10.2. மர்ரே எஸ். இராஜம் பதிப்பு

4.5.10.3. பழந்தமிழ் இலக்கியப் பேழை

4.5.10.4. வர்த்தமானன் பதிப்பு

4.5.10.5. நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பதிப்பு

4.5.10.6. திருக்கோயிலூர் மடாலயப் பதிப்பு

4.5.10.7. முனைவர் ச.வே. சுப்பிரமணியன் பதிப்பு

4.5.10.8. இணையதளப் பதிப்பு

4.6. தொகுத்துக் காண்போம்

4.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

4.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**பிரிவு 2. கூறுகள் - அணுகுமுறைகள்**

**கூறு 5. முதன்மைக் கூறுகள் - துணைநிலைக் கூறுகள்**

5.1. முன்னுரை

5.2. குறிக்கோள்கள்

5.3. சான்று மூலங்கள்

5.3.1. முதன்மைக் கூறுகள்

5.3.2. துணைநிலைக் கூறுகள்

5.3.3. தரவுகளின் ஒழுங்கு

5.4. தொகுத்துக் காண்போம்

5.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

5.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**கூறு 6. தொகுத்தல் - பகுத்தல் - உற்றுநோக்கல்**

6.1. முன்னுரை

6.2. குறிக்கோள்கள்

6.3. தொகுத்தல்

6.4. பகுத்தல்

6.5. உற்றுநோக்கல்

6.5.1. உற்றுநோக்கலின் பயன்கள்

6.5.2. கருதுகோளும் உற்றுநோக்கலும்

6.5.3. உற்றுநோக்கலின் வகைகள்

6.5.3.1. கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல்

6.5.3.2. கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல்

6.5.3.3. ஆய்வாளர் பங்குபெறும் உற்றுநோக்கல்

6.5.3.4. ஆய்வாளர் பங்குபெறா உற்றுநோக்கல்

6.5.3.5. கள உற்றுநோக்கல்

6.5.3.6. தன்னை உற்றுநோக்கல்

6.5.3.7. சமூக ஆய்வில் உற்றுநோக்கல்

6.5.4. உற்றுநோக்கலில் உள்ள இடர்ப்பாடுகள்

6.6. தொகுத்துக் காண்போம்

6.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

6.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**கூறு 7. உற்று நோக்குவாரின் அணுகுமுறைகள்**

7.1. முன்னுரை

7.2. குறிக்கோள்கள்

7.3. உற்று நோக்குவாரின் அணுகுமுறைகள்

7.3.1. வரலாற்று ஆய்வு அணுகுமுறை

7.3.2. ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறை

7.3.3. சோதனை ஆய்வு அணுகுமுறை

7.3.4. உய்த்துணர் ஆய்வு அணுகுமுறை

7.3.5. செலுத்துநிலை ஆய்வு அணுகுமுறை

7.3.6. அமைப்பியல் ஆய்வு அணுகுமுறை

7.3.7. நடைமுறைசார் ஆய்வு அணுகுமுறை

7.3.8. மாதிரி ஆய்வு அணுகுமுறை

7.3.9. அளந்தறி ஆய்வு அணுகுமுறை

7.3.10. மதிப்பீட்டாய்வு அணுகுமுறை

7.3.11. புள்ளிவிவர ஆய்வு அணுகுமுறை

7.3.12. விளக்கவியல் ஆய்வு அணுகுமுறை

7.3.13. செயல்முறை ஆய்வு அணுகுமுறை

7.3.14. மரபியல் ஆய்வு அணுகுமுறை

7.3.15. கோட்பாட்டாய்வு அணுகுமுறை

7.3.16. நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறை

7.4. தொகுத்துக் காண்போம்

7.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

7.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**கூறு 8. நேர்காணல் - நேர்காணலின் வகைகள் - வினாத்தொகுதி**

8.1. முன்னுரை

8.2. குறிக்கோள்கள்

8.3. நேர்காணல்

8.3.1. நேர்காணல் உத்திகள்

8.3.2. நேர்காணலின் பயன்

8.4. நேர்காணல் வகைகள்

8.4.1. ஆணைவழியிட்ட நேர்காணல்

8.4.2. ஆணைவழிப்படா நேர்காணல்

8.4.3. கட்டமைப்புடைய நேர்காணல்

8.4.4. கட்டமைப்பற்ற நேர்காணல்

8.4.5. ஒருமுக நேர்காணல்

8.4.6. ஆழ்நிலை நேர்காணல்

8.4.7. அடுத்தடுத்து நேர்காணல்

8.5.வினாத்தொகுதி

8.5.1. வினாநிரலின் சிறப்புக் கூறுகள்

8.5.1.1. வினாநிரலின் நிறைகள்

8.5.1.2. வினாநிரலின் குறைகள்

8.5.2. வினாநிரலின் நோக்கம்

8.5.3. வினாத்தொகுதி வகைகள்

8.5.3.1. கட்டமைப்புடைய வினாத்தொகுதி

8.5.3.2. கட்டமைப்பற்ற வினாத்தொகுதி

8.5.3.3. வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதி

8.5.3.4. வரையறுக்கப்படாத வினாத்தொகுதி

8.5.3.5. கலவை வினாத்தொகுதி

8.5.3.6. உண்மையறி வினாத்தொகுதி

8.5.3.7. கருத்தறி வினாத்தொகுதி

8.5.3.8. படம்சார் வினாத்தொகுதி

8.5.3.9. ஒரு நோக்கு வினாத்தொகுதி

8.6. தொகுத்துக் காண்போம்

8.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

8.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

## பிரிவு 3. ஆய்வேடு - உருவாக்கம்

## கூறு 9. மாதிரிகள் - கள ஆய்வுக்குத் தேவையான பொருட்கள்

9.1. முன்னுரை

9.2. குறிக்கோள்கள்

9.3. மாதிரிகள்

9.4. கள ஆய்வுக்குத் தேவையான பொருட்கள்

9.4.1. களப்பணிக்கு முன்

9.4.1.1. களப்பணி ஊர்களைத் தேர்ந்தெடுத்தல்

9.4.1.2. தகவலாளியைத் தேர்ந்தெடுத்தல்

9.4.1.3. தகவல் சேரிக்கும் இடம்

9.4.1.4. களப்பணி அறிவு

9.4.1.5. களப்பணிக்குப் பயன்படும் கருவிகள்

9.4.1.6. களப்பணி செல்லும் முன் திட்டம்

9.4.1.7. வினாநிரலும் வினாப்பட்டியலும்

9.4.1.7.1. வினாநிரல்

9.4.1.7.2. வினாப்பட்டியல்

9.4.2. களப்பணியின் போது

9.4.2.1. காலமும் பொழுதும்

9.4.2.2. உற்றுநோக்கல்

9.4.2.3. நேர்காணல்

9.4.3. களப்பணிக்குப் பின்

9.4.3.1. வகைப்படுத்துல்

9.4.3.2. தரவுகளை ஆய்வு செய்தல்

9.5. தொகுத்துக் காண்போம்

9.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

9.7. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**கூறு 10. எழுத்து - பட ஆதாரங்கள் - திரைப்படம் - ஒலிப்பதிவு - ஒளிப்பதிவு**

10.1. முன்னுரை

10.2. குறிக்கோள்கள்

10.3. எழுத்து

10.4. பட ஆதாரங்கள்

10.5. திரைப்படம்

10.5.1. திரைப்படத்தின் வரலாறு

10.5.2. திரைப்படக் கருவிகள்

10.6. ஒலிப்பதிவு

10.7. ஒளிப்பதிவு

10.7.1. ஒளிப்பதிவின் வரலாறு

10.8. தொகுத்துக் காண்போம்

10.9. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

10.10. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**கூறு 11. ஆய்வேடு உருவாக்கம் - ஆய்வேட்டின் அமைப்பு**

11.1. முன்னுரை

11.2. குறிக்கோள்கள்

11.3. ஆய்வேடு உருவாக்கம்

11.3.1. பொது மக்களுக்கான ஆய்வேடு உருவாக்கம்

11.3.2. நிர்வாகிகளுக்கான ஆய்வேடு உருவாக்கம்

11.3.3. ஆய்வாளருக்கான ஆய்வேடு உருவாக்கம்

11.3.4. முன்னுரை உருவாக்கம்

11.3.5. ஆய்வுநெறி விளக்கம்

11.3.6. குறிப்புக்களை ஆளும் திறன்

11.3.7. ஆய்வேடு உருவாக்குதலில் சிந்தனை

11.3.8. ஆய்வேட்டின் வடிவ வரையறை

11.3.9. ஆய்வறிக்கையை விரித்து உருவாக்கல்

11.3.10. செம்மைப்படி உருவாக்கல்

11.3.10.1. முதற்படி உருவாக்கம்

11.3.10.2. இரண்டாம்படி உருவாக்கம்

11.3.10.3. மூன்றாம்படி உருவாக்கம்

11.4. ஆய்வேட்டின் அமைப்பு

11.4.1. ஆய்வேட்டின் புற அமைதி

11.4.2. ஆய்வேட்டின் அக அமைதி

11.4.2.1. முன்னுரை வரைவு

11.4.2.2. ஆய்வுத் தலைப்பு விளக்கம்

11.4.2.3. மேற்கொள்ளும் ஆய்வு முறை விளக்கம்

11.4.2.4. கருதுகோள் விளக்கம்

11.4.2.5. இயல் முன்னுரை

11.4.2.6. பத்தி பிரிப்பு

11.4.2.7. எடுத்துரை உத்திகள்

11.4.2.8. இயல் முடிப்பு

11.4.2.9. ஆய்வு நடை

11.4.2.10. இயல் இயைபு

11.4.2.11. முடிவுரை

11.5. தொகுத்துக் காண்போம்

11.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
11.7. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**பிரிவு 4. இயல் பிரிப்பு - கருத்து விளக்கம் - புறக்கட்டமைப்பு**

**கூறு 12. பகுதிகள் - இயல் பிரிப்பு - கருத்து விளக்கம்**

12.1. முன்னுரை
12.2. குறிக்கோள்கள்
12.3. பகுதிகள்
12.4. இயல் பிரிப்பு
12.5. கருத்து விளக்கம்
12.6. தொகுத்துக் காண்போம்
12.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
12.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

**கூறு 13. ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு - பின்னிணைப்பு**

13.1. முன்னுரை
13.2. குறிக்கோள்கள்
13.3. ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு
    13.3.1. ஆய்வுரையைத் தட்டச்சுச் செய்பவர்
    13.3.2. ஆய்வுரைத் தாள்
    13.3.3. ஓரப்பகுதிகள்
    13.3.4. இடைவெளி
    13.3.5. தலைப்புகள்
    13.3.6. தட்டெழுத்துப் படிகளைத் திருத்துதல்
13.4. பின்னிணைப்பு
    13.4.1. பின்னிணைப்புக்களில் அமையத்தக்கன
    13.4.2. பின்னிணைப்புப் பிரிவுகள்
    13.4.3. அட்டவணைகள், விளக்கப்படங்கள்
    13.4.4. பின்னிணைப்பின் பயன்கள்
    13.4.5. பின்னிணைப்பில் ஆய்வாளர் பின்பற்ற வேண்டியன
13.5. தொகுத்துக் காண்போம்
13.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
13.7. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

## கூறு 14. மேற்கோள் - அடிக்குறிப்பு - துணைநூல் பட்டியல்

14.1. முன்னுரை

14.2. குறிக்கோள்கள்

14.3. மேற்கோள்

14.3.1. மேற்கோள்களின் நோக்கம்

14.3.2. மேற்கோளின் வகைகள்

14.3.3. மேற்கோள் தரவுகள் எத்தன்மைத்தன

14.3.4. குறிப்பட்டை

14.3.5. மேற்கோள் காட்டும் நெறிகள்

14.3.6. மேற்கோள் அறம்

14.3.7. மேற்கோளில் சுட்டுப் பெயர்கள்

14.3.8. செய்யுள் மேற்கோள்

14.3.9. உரைநடை மேற்கோள்

14.4. அடிக்குறிப்பு

14.4.1. அடிக்குறிப்பு அமைத்திடும் முறைகள்

14.4.2. அடிக்குறிப்பில் சுருக்கக் குறியீடுகள்

14.4.3. அடிக்குறிப்பின் பயன்கள்

14.4.4. அடிக்குறிப்பில் ஆய்வாளர் பின்பற்ற வேண்டிய நெறிகள்

14.5. துணைநூல் பட்டியல்

14.5.1. துணைநூற்பட்டியல் அமைவிடம்

14.5.2. துணைநூற்பட்டியலில் இடம்பெறத்தக்கன

14.5.3. துணைநூற்பட்டியலை வகைப்படுத்துதல்

14.5.4. துணைநூற்பட்டியலின் வகைகள்

14.5.4.1. செயல்விவரத் தொகுப்பு

14.5.4.2. மேற்கோள் துணைநூற்பட்டியல்

14.5.4.3. தேர்வுத் துணைநூற்பட்டியல்

14.5.5. துணைநூற்பட்டியலின் பயன்கள்

14.5.6. துணைநூற்பட்டியலில் ஆய்வாளர் பின்பற்ற வேண்டியன

14.6. தொகுத்துக் காண்போம்

14.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

14.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

# கூறு 1.

# ஆய்வும் ஆய்வேடு வகைகளும்

குறிப்பு

## 1.1. முன்னுரை

இலக்கிய ஆய்வு தன்வயமற்றது. எங்கு இலக்கிய இரசனையும், பாராட்டும் முடிவடைகிறதோ, அங்குதான் இலக்கிய ஆய்வு தொடங்குகிறது. இலக்கிய இரசனை, இலக்கியப் பாராட்டு ஆகிய இவ்விரண்டிலிருந்தும் வேறுபட்டது இலக்கிய ஆய்வு. சமூகத்தில் இந்த மூன்றிற்கும் இடம் இருக்கிறது. ஆனால் ஒவ்வொன்றிலும் ஈடுபட்டிருப்பவர், ஒவ்வொன்றையும் விரும்புகின்றவர்கள் சமூகத்தில் வெவ்வேறு வகையினர். இலக்கிய ஆய்வு செய்பவர்களுக்கு இரசனையிலும், பாராட்டிலும் ஈடுபாடு ஏற்படாது. இலக்கிய ஆய்வு நிலையானது. அது பொழுது போக்கு அன்று. அதில் ஈடுபடுகின்றவர்களுக்கும், படிக்கின்றவர்களுக்கும் பொறுமையும், ஆழமும், ஈடுபாடும் மிகவும் வேண்டும். ஆய்வு தன்வயமற்றது. பொதுமையுடையது. அது ஆளுக்கு ஆள், நாட்டிற்கு நாடு மாறுபடாதது. இவ்வகைப்பட்ட ஆய்வு பற்றியும் ஆய்வின் வகைகள் பற்றியும் இப்பகுதியில் காண்போம்.

## 1.2. குறிக்கோள்கள்

- ஆய்வு, ஆராய்ச்சி என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வேட்டின் வகைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- இலக்கிய ஆய்வேட்டின் வகைகள் பற்றி விரிவாகத்தெரிந்து கொள்வீர்கள்.

## 1.3. ஆய்வு

ஆய்வு என்பது, ஏதேனும் ஒன்றை நுணுக்கமாகத் தெளிந்து உணர மேற்கொள்ளப்பெறும் பெருமுயற்சியே ஆகும். புதிய உண்மைகளை வெளியிடும் நோக்கத்தில் ஆய்வு அமைதல் வேண்டும். அதாவது, 'தேடுவது' எனப் பொருள்படும் புதிய மெய்ம்மைகளைச்

*Self-Instructional Material*

குறிப்பு

சுட்டும் அடிப்படையான மெய்ம்மைகளைத் தேடிக் காண்பதே ஆய்வாகும். Research, Researcher என்ற பிரெஞ்சுச் சொல்லில் இருந்து உருவானதாகும். சுநளநயசஉாநச என்பதற்குத் 'தேடுதல்' என்று பொருளாகும். உண்மையைக் கண்டறியும் நாட்டமே ஆய்வாக மலர்கின்றது. அறிவின் அடிப்படையில் சான்று ஆதாரங்களைக் கொண்டு உண்மையைக் காணச் செய்யப்படும் முயற்சியை 'ஆராய்ச்சி' என்பர்.

ஆய்தல் என்பது ஒரு வினைச்சொல். இவ்வினைச்சொல்லிற்கு "உள்ளதன் நுணுக்கம்" என்று தொல்காப்பியம் விளக்கம் தருகின்றது. எனவே, நுணுக்கமாக அறிந்துகொள்வதனை ஆய்தல் என்று பண்டைத் தமிழர் கருதினர் எனக் கொள்ளலாம். மெய்ப்பாட்டின் வகைகளை விளக்கும் மெய்ப்பாட்டியல் நூற்பா 12இல், 'ஆராய்ச்சி' என்பதையும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இதற்கு இளம்பூரணர், "ஆராய்ச்சி என்பது ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத் தெனவாராய்தல். ஆராய்தல் எனினுந் தெரிதல் எனினுந் தேர்தலெனினும் நாடலெனினும் ஒக்கும்" என்கின்றார். ஆக ஆராய்தல் என்பது, தெரிதல் என்றும், தேர்தல் என்றும், நாடல் என்றும் கூறலாம். எனவே, ஆய்வென்பது உள்ளதன் நுணுக்கத்தைத் தெரிதல்/தேர்தல்/நாடல் என்றே கொள்ளலாம். ஆய்தல் என்ற சொல் தொல்காப்பியர் காலந்தொட்டே வழக்கில் இருந்து வருவதொன்றாகும். இதனை,

*"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடைமுறை*
*தான்சாம் துயரம் தரும்"*

என்று திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். 'ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை' என்ற தொடருக்குப் பரிமேலழகர், 'பலகாலும் பலவாற்றானும் ஆராய்ந்து' என்று பொருள் கூறுகின்றார். எனவே, பலகாலும் தேர்ந்து தெளிந்து புதிய உண்மைகளை நுணுக்கமாகக் கண்டறிவதும், அவ்வாறு உணர்ந்தவற்றைப் பலவாற்றானும் வகுத்தும் தொகுத்தும் புதிய கருத்துக்களாக வடித்துத் தருவதுமே ஆய்வு ஆகும். கீரை ஆய்தல் என்ற சொல் இன்றும் வழக்கில் உள்ளதொன்று.

ஆராய்ச்சி என்பது, ஆர்+ஆய்+சி என்ற மூன்று கூறுகளையுடையது. ஆர் என்பதற்குக் கூர்மை என்ற பொருளுண்டு. ஆய்தல் என்பதன் பகுதி ஆய் என்பது. ஆய்தல், என்பதற்கு

நுணுகுதல், வருந்துதல், அழகாயிருத்தல், அசைதல், சோதனை செய்தல், பிரித்தல், கருதுதல், தெரிந்தெடுத்தல், கொண்டாடுதல், கொய்தல், காம்பு நீக்குதல், குத்துதல் எனப் பல பொருள்கள் உண்டென்பர். ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் ஆகிய நான்கு சொற்களும் நுணுக்கம் என்ற பொருளையுடையன. ‘இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென’ என்று குறிஞ்சிப்பாட்டில் வரும் தொடருக்கு நச்சினார்க்கினியர், ‘நாணமும் மடமும் நுணுகிய வழிப்பிறந்த காதல்’ என்று பொருளுரைக்கின்றார்.

ஆய்வு முடிவு புதிய மெய்ம்மைகளாகவும் (Facts) புதிய கொள்கை விதிகளாகவும் (Principles) இருக்க வேண்டும். புதிய முடிவுகளை அல்லது புதிய கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்த வேண்டும். ஆய்வு ஏதேனும் ஒன்றைப் புதிதாகக் கண்டுபிடித்துக் கூறுவது. புதுவதாகக் காண்கின்ற முடிவுகளை நோக்கிய நெறிமுறைகளே ஆய்வு எனப்படும். ஆய்வு அடிவானம் போல் முடிவற்றது. விடிவெள்ளி போல் துலக்கம் பெறுவது. தற்சார்பின்மை ஆய்வை வளர்க்கும்.

## 1.4. ஆய்வேடு வகைகள்

ஆய்வேடு இரண்டு பெரும் பகுப்புக்குள் தயாரிக்கலாம். ஒன்று, இலக்கிய ஆய்வேடு (Literary Thesis); மற்றொன்று, அறிவியல் ஆய்வேடு (Scientific Thesis) ஆகும். மேலும் பகுப்பாய்வேடு (Analytical Thesis) என்றும், செயல்முறை ஆய்வேடு (Experimental Thesis) என்றும் பகுப்பதுண்டு. பகுப்பாய்வில் முன்பே உள்ள மெய்ம்மைகளைக் கொண்டு முடிவு காணல்; செயல்முறை ஆய்வில் தாமே மெய்ம்மைகளை நேரடியாகக் கண்டு தொகுத்து ஒப்பிட்டு முடிவுக்கு வருவது. அறிவியல் ஆய்வுகளை அடிப்படை ஆய்வு, பயன்பாட்டு ஆய்வு என்று இரண்டு வகையாகப் பகுப்பர். அணுவைப் பிளக்கலாம் எனக் கண்டறியப்பட்டது அடிப்படை ஆய்வு. அவ்வாறு பிளக்கப்படும் அணுவில் இருந்து விண்வெளிக்கலமும் அணுகுண்டும் கண்டது பயன்பாட்டு ஆய்வு. அடிப்படை ஆய்வில் அடிப்படை கரணியங்களைத் தெரிவது. பயன்பாட்டு ஆய்வில் நடைமுறைச் சோதனைகளைத் தேர்வது.

ஆய்வுக்கு மிகத் தேவையானது, அது எவ்வகையைச் சார்ந்தது என்பது. ஆய்வு செய்யும் முறையைக் கொண்டு ஆய்வேட்டின் வகைகள்

அமையும். மேலும், ஆய்வானது ஆய்வுப் பொருளுக்கு ஏற்பவும், ஆராயும் துறைக்கு ஏற்பவும் அமையும். ஆய்வு அணுகுமுறையைக் ஆய்வேட்டின் வகைகளைப் பாகுபாடு செய்யலாம். வரலாற்றாய்வு, ஒப்பீட்டாய்வு, சோதனை ஆய்வு, உய்த்துணராய்வு, செலுத்துநிலை ஆய்வு, அமைப்பியல் ஆய்வு, நடைமுறைசார் ஆய்வு, மாதிரி ஆய்வு, அளந்தறி ஆய்வு, மதிப்பீட்டாய்வு, புள்ளிவிவர ஆய்வு, விளக்கவியல் ஆய்வு, செயல்முறை ஆய்வு, மரபியல் ஆய்வு எனப் பதினான்கு நிலைகளில் ஆய்வேட்டின் வகைகள் அமைந்திருக்கக் காணலாம்.

### 1.4.1. வரலாற்றாய்வு

கடந்தகால நிகழ்வுகளில் இருந்து உண்மைகளை அறிந்து அவற்றைப் பொதுமைப்படுத்துவதே வரலாற்றாய்வு ஆகும். இங்குக் கருதுகோளுக்கு இடமில்லை. கடந்த கால வரலாற்று நிகழ்வுகளின் தாக்கங்கள் நிகழ்காலத்தில் எவ்வாறு பதிவாகி உள்ளன என்பதை இம்முறையில் அறியலாம். வரலாற்று ஆய்வாளர், வரலாற்றை எழுதுகின்றவர் நிலையில் இருந்து நோக்காமல் நிகழ்வுகள் நிகழ்ந்த நிலையில் நோக்கப் பெற வேண்டும். நமக்குத் தேவையான வரலாற்றுப் பகுதியைத் தேர்ந்தெடுப்பது மிகவும் கடினம். வரலாற்று நிகழ்வுக்குரிய சான்றாதாரங்கள் அனைத்தும் கிடைத்துவிடாது. எனவே, நிகழ்ச்சியை உறுதி செய்துகொள்வதில் இடர்ப்பாடு ஏற்படும். தன்நினைவு இல்லாமலேயே ஒரு சார்புடையதாக ஆக்கப்பெற்ற வரலாற்றில் நடுவுநிலைக் கண்ணோட்டத்தோடு அணுகுதல் பெரும் இடர்ப்பாட்டை உருவாக்கும். வரலாற்றின் அனைத்துத் தரவுகளையும் சரிபார்த்துத் தேவையான பகுதியைக் கொள்வதற்கு ஒரு மனிதனின் வாழ்நாள் முழுமையும் போதாது. எழுதப்பட்ட வரலாற்றைத் தவிர எழுதப்படாத வரலாறு புலப்படாததாக அமையும். அதனைத்தேடிக் காண்பதும், காண்பதை நம்புவதும் இயலாமற் போகலாம். வரலாற்றியல் ஆய்வில் தேடலும், தேடற்காகும் செலவும், காலமும் மிகுதியாக இருக்கும். ஒரு வரலாற்றாய்வாளன் பின்வரும் தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

- சமூக நிகழ்வுகளின் காரண காரியத் தொடர்பைச் சரியாக அறியும் சமூக நோக்கைப் பெற்றிருக்க வேண்டும்.
- முடிவுகளை எய்தும் முன்னர் நிகழ்வுகளையும் உண்மைகளையும் வரலாற்று நோக்கில் ஆராய்தல் வேண்டும்.

- வரலாற்று நிகழ்வுகளை அறியும்போது அவற்றை ஒரு சார்புபட அணுகுதல், தவறான பொருள் கற்பித்துக் காணல், உணர்ச்சி நோக்கில் மதிப்பிடுதல், கற்பனை மீக்கூர்ந்த நிலையில் காணுதல் ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.
- முன்னர் நிகழ்ந்த நிகழ்வின் முழுப் பரிமாணத்தையும் அறிந்து இப்போதுள்ள சிக்கலை அணுகுதல் வேண்டும்.
- பரந்துபட்ட வரலாற்றுலகில் தேவையான சிறிய பகுதியைத் தேர்ந்து தெளிதல் வேண்டும்.
- பொருத்தமான பகுதியைத் தேர்வதை விட்டுவிட்டுக் கிடைக்கும் பகுதியைப் பொருத்தும் செயற்கையை மேற்கொள்ளாமை வேண்டும்.

## 1.4.2. ஒப்பீட்டாய்வு

இலக்கிய ஒப்பீடு என்பது இரண்டு இலக்கியங்களை ஒப்பிட்டுக் காணுதலாகும். இவ்வொப்பீடு ஒருமொழி இலக்கியங்களுக்குள்ளோ பிறமொழி இலக்கியங்களுக்குள்ளோ நிகழும். ஒப்பீடுகளை நேரில் பார்த்துக் கூறுவதிலிருந்து ஆராய்ந்து கூறுவதில் பட மடங்கு வேறுபாடு உண்டு. இவ்வொப்பீடுகளைப் புற ஒப்பீடுகள், மேம்போக்கான ஒப்பீடுகள், எல்லாரிடமும் காணப்படும் ஒப்பீடுகள் ஆகியவற்றைச் சுட்டுவதிலிருந்து ஒப்பீட்டு ஆய்வு மிகமிக வேறுபட்டதாக அமையும்.

திருக்குறள், ஔவைக்குறள் ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்து இரண்டிற்கும் இடையே ஒப்புமைகளைக் காட்டுவது. ஒரே மொழியில் தோன்றிய ஒரே வகையான இலக்கியங்கள் இவை. ஒருவர் பாடியதைப் பார்த்து மற்றவர் பாடியிருக்க வாய்ப்புண்டு. எனவே இவற்றில் காணப்பெறும் ஒப்புமைகள் ஒப்பீட்டுக்குரியவையே அல்ல. ஒரே மரபச்சில், பண்பாட்டுப் பின்னணியில், படைக்கப்பெற்றவை இவை. வேறுபடும் சில கூறுகளை மறைத்து மேலோங்கி நிற்கும் ஒற்றுமைக் கூறுகள் இவற்றில் இருந்தே தீரும். தொடர்பற்ற இருவேறு தேசிய இனங்களின் படைப்புக்களை ஆராய்ந்து அவற்றில் உள்ள ஒற்றுமைப் பண்புகளையும் வேற்றுமைப் பண்புகளையும் அவற்றுக்குரிய காரணங்களுடன் ஆராய்வதே ஒப்பீட்டு முறை ஆய்வாகும் என்கின்றார்

குறிப்பு

கு.வெ.பாலசுப்பிரமணியன். ஒரு ஒப்பீட்டு ஆய்வாளன் பின்வரும் தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

- பயனுள்ள கூறுகளை ஒப்பிடுதல் வேண்டும். தேவையற்ற, புறமெய்ம்மை சார்ந்த கூறுகளைவிட்டு, அகமெய்ம்மை சார்ந்த பலர்க்கும் புலனாகாத ஒருமைத் தன்மைகளை ஒப்பிடல் வேண்டும்.
- இருக்கின்ற, இல்லாத பொருட்களையும் ஒப்பிடுதல் வேண்டும். உலகில் இருக்கின்ற பொருட்களைத் தாம் ஒப்பிட வேண்டும் என்பது இல்லை. இல்லாத பொருட்களையும் ஒப்பிடுதல் உண்டு.
- ஒப்பீட்டு முறை அறிக்கையானது இருபொருட்களை, இலக்கியங்களை ஒப்பீடு செய்யும்போது அவற்றிற்கிடையேயான ஒப்புமைகள் குறித்துத் தெளிவான ஓர் அறிக்கை தயாரித்துக் கொள்ளுதல் நல்லது.
- ஒப்பீட்டு முடிவுகளை உருவாக்குதல் வேண்டும். சரியான ஒப்பீட்டுத் தளத்தில் அமையாத ஒப்பீட்டு ஆய்வு நிறைவான முடிவுகளைத் தராது.
- ஆய்வாளர் எதிர்நோக்கத்தகும் இடர்ப்பாடுகளில் இருந்து ஒப்பீட்டு முறை ஆய்வில் அவ்வளவு எளிதாக முடிவுகளைப் பெற்றுவிட இயலாது.

## 1.4.3. சோதனை ஆய்வு

உற்றுநோக்கலின் ஒழுங்கமைப்பே சோதனை ஆகும். அதாவது, இயல்பாக நிகழும் ஒன்றன் காரணத்தைக் கண்டுபிடிக்கச் சோதனை செய்வதே சோதனை ஆய்வு ஆகும். இச்சோதனை வழியாகக் கருதுகோள் ஆராயப்படும். தற்செயலாக நிகழும் ஒன்றைத் தற்செயலாகக் கைக்குக் கிடைக்கும் கருதுகோள் ஒன்றன்வழி ஆராய்வது சோதனை ஆய்வாகும். இதுதான் சமூகவியல் ஆய்வின் உச்சநிலையாகும். அறிவியல் இயற்கையாக நிகழும் நிகழ்வை விளக்கவோ, அதற்கான காரணங்களைக் கண்டறியவோ முற்படுகிறது. இது தற்செயலான கருதுகோள் ஒன்றைக் கொண்டு ஆராய்வதால் செய்யக் கூடியதாகும். மரத்திலிருந்து ஆப்பிள் விழுந்தது இயற்கையான ஒரு செயல். பூமிக்கு ஓர் ஈர்ப்பு விசை இருக்கக் கூடுமோ என்பது அறிஞர் மனத்தில் தற்செயலாக விளைந்த கருதுகோள்.

குறிப்பு

இக்கருதுகோளைச் சோதனையில் கண்டு பூமிக்குப் புவி ஈர்ப்பு விசை உண்டு என்று உறுதிப்படுத்தினார்.

கிடைத்துள்ள தரவுகளைச் சரியானவையா எனச் சோதித்துப் பார்த்து ஒரு தெளிவான முடிவை நோக்கிச் செலுத்தத் துணைசெய்யும் ஆய்வாளருக்கும் ஆய்வுப் பொருளுக்கும் இடையே முறையான தருக்க நெறிப்பட்ட உறவை ஏற்படுத்துவது சோதனை ஆய்வு ஆகும்.

சோதனை ஆய்வில் நான்கு குறிப்பிடத்தக்க பண்புகள் உள்ளன. கட்டுப்பாடு, வினையாற்றல், உற்றுநோக்கல், மறுபடி மறுபடியும் காணுதல். இம்முறைகளில் செய்யப்பெறும் ஆய்வானது மிகச் சிறந்ததும், துல்லியமான முடிவுகளைத் தருவதும் ஆகும். யார் செய்தாலும் ஒரே முடிவே இந்த ஆய்வில் பெறப்படும். இலக்கிய ஆய்வு போல வேறு வேறு விளக்கங்களுக்கும் கருத்துகளுக்கும் இங்கு இடமில்லை. சோதனை ஆய்வில் ஆய்வாளன் மேற்கொள்ள வேண்டிய படிநிலைகள் பின்வருமாறு:

- சிக்கலுக்குரிய மூலத்தைக் குறித்த சரியான விவரம் அறிதல்.
- சிக்கலைத் தேர்ந்து விளங்கிக் கொள்ளுதல்.
- கருதுகோளைக் கணித்தல்.
- செய்ம்முறையைத் திட்டமிடுதல்.
- செய்ம்முறை மாதிரிகளைத் தேர்தல்.
- செய்ம்முறைக்குரிய கட்டுப்பாடுகளையும் சூழல்களையும் உருவாக்குதல்.
- செய்ம்முறையைப் பதிவு செய்தல்.
- செய்ம்முறை முடிவு விளக்குதல்.

சோதனை ஆய்வு அறிவியல் முறையில் பெறும் இடத்தைச் சமூக ஆய்வில் பெறுவதில்லை. சமூகநிலை ஆய்வில் சோதனைச்சாலை ஆய்வு பல சமயங்களில் பொருந்துவது இல்லை. சமூகத்தின் ஒரு பகுதியைத் தன்சோதனைச் சாலைக்குள் ஆய்வாளன் கொண்டு வர இயலாது. சமூக ஆய்வில் ஆய்வு செய்யப்படுகின்றவர்கள் உயிரும் உணர்வுமுடைய மக்களாக இருப்பதால் நம் விருப்பத்திற்கும் வசதிக்கும் அவர்களை உட்படுத்த முடியாது. அவர்களுடைய ஒத்துழைப்பு இன்றேல் இந்த ஆய்வு நடைபெறாது. சமூக ஆய்வில் உற்றுநோக்கல்,

சோதித்தல், கட்டுப்பாடுகளை விதித்தல் ஆகியன எல்லாம் சிக்கல்களை உருவாக்கும். ஒரே வகையான விதிமுறைகளும், செயல்முறைகளும் சமூக ஆய்வில் பயன்படாது. எனவே, சோதனை ஆய்வு சமூக ஆய்வில் பெரிதும் உட்படுத்துவதில்லை.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**

1. ஆய்வு என்றால் என்ன?
2. வரலாற்றாய்வு என்றால் என்ன?
3. ஒப்பீட்டாய்வு என்றால் என்ன?
4. சோதனை ஆய்வு என்றால் என்ன?

## 1.4.4. உய்த்துணர் ஆய்வு

ஒப்புக்கொள்ளப்பெற்ற உண்மைகளில் இருந்து வருவிக்கப்படும் செய்திகளை எடுத்துரைப்பதே உய்த்துணர் ஆய்வு எனப்படும். இதனை விதிமுறை ஆய்வு என்றும் அழைப்பர். சில பொது நிகழ்வுகளில் இருந்து வருவிக்கும் முடிவுகளே இவ்வாய்வுக்குரியதாகும். ஒரு குற்ற நிகழ்ச்சியில் கிடைக்கும் ஆதாரங்கள் அல்லது தடயங்கள் காட்டும் பண்புகளில் இருந்து இவ்வாய்வினைப் பயன்படுத்தி ஒரு முடிவுக்கு வரலாம். உய்த்துணர் ஆய்வு என்பது ஆராய்ச்சியில் ஓர் எளிமையையும் காலச் சிக்கனத்தையும் அளிப்பதாகும். மிக ஆழமாகவும் நுண்மையாகவும் ஆராய வாய்ப்பு இல்லாத சூழலிலும், நெடிய காலத்தைச் செலவிட முடியாத நிலையிலும் இந்த ஆய்வு பயன்படும். இந்த ஆய்வில் பெறப்படும் முடிவுகள் பொது மதிப்பீடுகள் என்ற அளவிலேயே அமையும். இவை பேராய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாறுபட்ட முடிவுகள் தோன்றலாம். ஆழ்ந்த கல்வியறிவு, நுண்ணோக்கு, புள்ளி விவரத் தொகுப்பு ஆகியவை இந்த ஆய்வுக்குத் தேவையில்லை. இயல்பான அறிவுக் கூர்மை, கற்பனையாக எண்ணிப் பார்க்கும் இயல்பு, அனுமானங்கள் ஆகிய இந்த ஆய்வுக்குத் தேவைப்படுவனவாகும்.

## 1.4.5. செலுத்துநிலை ஆய்வு

ஏற்கெனவே பெறப்பெற்ற சில முடிவுகளின் அடிப்படையில் மேலும் மேலும் ஆய்வு செய்து மாற்று முடிவுகளைக் காணபதே செலுத்துநிலை ஆய்வு ஆகும். சில காரணங்கள் அடிப்படையில்

இவ்வாறு தொடர்வது, இவ்விதிகளைப் பின்பற்றுவது என முடிவு செய்து ஆய்வை மேற்கொள்வதை இவ்வாய்வில் பின்பற்றலாம். வருவாய் குறைந்த குடும்பங்கள் அதிகமான நோய்க்கு இலக்காகின்றன என்பது பொது நிலையில் பெறப்பட்ட முடிவாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு தொற்றுநோய்ப் பரவலின் அடிப்படைகள், அவை வளர்வதற்கான சூழல் ஆகியன பற்றி செலுத்துநிலை ஆய்வில் ஆராயலாம். குறிப்பாக, சிலப்பதிகாரம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக்கு உரியது என்றும், இளங்கோவடிகள் சமணம் சார்ந்தவர் என்றும், இவர் சமயங்களின் பால் ஒரு பொதுக் கண்ணோட்டம் கொண்டவர் என்றும் கொண்டு அரசனைத் தலைமையாக உடைய அச்சமூகத்தில் தொழிற் பிரிவுகளின் அடிப்படையிலான பாகுபாடு எவ்வாறு நிலவியது, பத்தினிப்பெண் - கற்பு மேம்பாடு ஆகிய தொழத்தக்க நிலையில் சமூகத்தில் எவ்வாறு போற்றப்பட்டது, அரச நீதிக்கும் மேற்பட்ட ஆற்றல் இயற்கை அறத்துக்கு உண்டு என்பதை வலியுறுத்தும் உளப்பாங்கமைந்த சமுதாய நிலையை அடித்தளமாகக் கொண்டு இவ்வாய்வினை மேற்கொள்ள வேண்டும்.

## 1.4.6. அமைப்பியல் ஆய்வு

ஒரு நூல் அல்லது ஓர் அமைப்பு எந்த முறையில் வரிசையில், தரத்தில், கருத்துணர்த்தும் நெறியில் அமைந்துள்ளது என்பதை ஆய்வதே அமைப்பியல் ஆய்வு ஆகும். கம்பராமாயண அமைப்பு முறையையும், வால்மீகி இராமாயண அமைப்பு முறையையும் இவ்வடிப்படையில் ஆய்வு செய்யலாம். வால்மீகி கடுந்தவம் செய்து கண்விழித்தார். காவியம் ஒன்றைப் படைக்கும் மனநிலை கொண்டிருந்த அவர் கண்முன் ஒரு கொலைச் செயல் நிகழந்துவிட்டது. வேடன் ஒருவன் இணைந்திருந்த கிரௌஞ்சப் பறவைகளில் ஒன்றை அம்பால் வீழ்த்திவிட்டான். துணை பிரிந்து வருந்திய கிரௌஞ்சத்தின் துயர் கண்டு வருந்திச் சினமுற்ற முனிவர் வேடனைச் சபித்தார். பின்பு தம் தவஞானம் ஒரு காப்பியம் படைப்பதற்கு மாறாக வேடன் ஒருவனைச் சபிக்கப் பயன்பட்டு விட்டதே என எண்ணி வருந்தினார். ஆனால், "வேடனே கிரௌஞ்சப் பறவைகள் இணைந்திருக்கையில் காம மயக்கம் கொண்ட ஆண் பறவையைக் கொன்றாய்? நீ நல்ல கதி அடையமாட்டாய்" என்ற பொருளுடைய அச்சாப சுலோகத்திற்கு

வேறொரு பொருளும் உண்டு. அது, "திருமகளை மார்பிற் கொண்டவனே! பறவையிரண்டு இணைந்ததுபோல் இணைந்திருந்த இராவணன் மண்டோதரி ஆகிய இருவருள் காம மயக்கம் கொண்ட இராவணனை நீ கொன்றாய். அதனால் நீ பெரும்புகழ் பெறுவாய்" என்பதாகும். இந்தச் சுலோகத்தை அடிப்படையாகக் கொண்டே இராமாயணம் இயற்றப்பட்டது. வால்மீகி கொண்ட அமைப்பில் கம்பர் பல மாற்றங்களைச் செய்துள்ளார். இவற்றைக் குறித்து ஆய்வதே அமைப்பியல் ஆய்வு ஆகும்.

## 1.4.7. நடைமுறைசார் ஆய்வு

ஒவ்வொரு ஆய்வுப் பொருளையும் எப்படி ஏன் என்று கேள்வி எழுப்பிக் கொண்டு ஆய்வு செய்வதே நடைமுறைசார் ஆய்வு ஆகும். ஒன்று இயங்கும் தன்மையைக் குறித்த ஆய்வு என்றும் இதனைக் கூறலாம். ஒரு கடிகாரம் எவ்வாறு இயங்குகிறது. மூளை எப்படி இயக்கம் பெறுகின்றது? கணிப்பொறியின் இயக்க மூலத்தின் தன்மைகள் யாவை? என்றெல்லாம் ஆராய்வது நடைமுறைசார் ஆய்வில் நிகழ்த்தப்படும். இலக்கண இலக்கிய ஆய்வுகளில் நடைமுறைசார் ஆய்வு இடம்பெற வாய்ப்புள்ளது. இலக்கிய நிகழ்வு ஒவ்வொன்றையும் ஏன் எவ்வாறு என்றும், புலவன் இவ்வாறு படைக்க அடிப்படை யாதென்று வினவும் வகையிலும் இந்த ஆய்வு செயற்படும். இலக்கண உலகில் மொழிச் செயற்பாட்டுக்குரிய நெறிகளைச் சிந்திக்க இந்த ஆய்வு வழிவகுக்கும்.

## 1.4.8. மாதிரி ஆய்வு

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல் அமைவதே மாதிரி ஆய்வு. எதையெடுத்தாலும் ஒட்டுமொத்த ஒரு பொருளில் ஒன்றினைத் தரம்பார்த்து வாங்குவது என்பது மாதிரி பார்த்து வாங்குதல் என்பர். குறிப்பாக அரிசிக் கடையில் வைத்திருக்கும் அரிசிக் குவியலில் ஓரிரு அரிசியைப் பதம் பார்த்து வாங்குவதும், இனிப்புக் கடையில் இனிப்பு மாதிரி பார்த்து வாங்கும் இவற்றில் அடங்கும். ஒரு நூலின் ஒரு பகுதியைப் படித்துவிட்டு ஒட்டு மொத்த நூலைப் பற்றிய ஒரு கத்துக்கு வருவதுண்டு. ஒரு பொதுக்கருத்தினை ஆய்வாளன் பெறுவதற்கு மாதிரி ஆய்வு பெரிதும் துணை புரியும். மாதிரி ஆய்வு முறையானது

மெய்ப்பிக்கக் கூடிய மாதிரி ஆய்வு என்றும், மெய்ப்பிக்க இயலாத மாதிரி ஆய்வு என்றும் இரண்டாகப் பிரிப்பர். மெய்ப்பிக்கக் கூடிய ஆய்வு முறை என்பது, அங்கொன்றும் இங்கொன்றான மாதிரி ஆய்வு, ஒழுங்கான மாதிரி ஆய்வு, அடுக்கடுக்கான மாதிரி ஆய்வு, தொகுதி மாதிரி ஆய்வு என நான்காகப் பிரித்து ஆராயலாம். மெய்ப்பிக்க இயலாத மாதிரி ஆய்வு முறை என்பது, தன்னிகழ்வான மாதிரி ஆய்வு, ஒதுக்கீட்டு மாதிரி ஆய்வு, குறித்த நோக்குடைய மாதிரி என மூன்றாகப் பிரித்து ஆராயலாம்.

## 1.4.9. அளந்தறி ஆய்வு

மக்களுடைய பழக்கவழங்கள், வாழ்க்கை மதிப்புக்கள், நம்பிக்கைகள், விருப்பு மற்றும் வெறுப்புக்கள் குறித்துப் பலரை அணுகிக் கேட்டுத் தரவுகள் திரட்டி ஆராய்ச்சி செய்கின்ற முறையே அளந்தறி ஆய்வு ஆகும். தேர்தல் நடைபெறும் காலத்தில் தேர்தலுக்கு முன்பு மக்கள் கூடும் பல்வேறு இடங்களில் மக்களைச் சந்தித்து தேர்தல் குறித்த கருத்துக்கணிப்பு அளந்தறி ஆய்வு முறையைச் சார்ந்ததாகும். நிகழ்காலச் சிக்கலை மையமிட்டதாக அளந்தறிதல் ஆய்வு மேற்கொள்ளப்படும். இவ்வாய்வு முறையைக் கையாளும் ஆய்வாளர் சில நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும். அதாவது,

- வினாநிரல் உருவாக்கல்
- அளந்தறிதலுக்கு மாதிரி ஒன்று காணல்
- தரவுதிரட்ட உத்திகள் வகுத்தல்
- அளந்தறிதலைச் செயற்படுத்துதல்
- தரவுகளைப் பகுத்தாய்தல்
- முடிவுகளை வகுத்தல்

போன்ற நடைமுறைகள் இவ்வாய்வில் பின்பற்றவேண்டும். இந்த நடைமுறைகளை மேற்காணும் வரிசைப்படிதான் ஆய்வாளன் பின்பற்றப்படவேண்டும் என்பதில்லை. முறைமாற்றியும் பின்பற்றலாம். தேவையில்லாததை சிலவற்றை விட்டும் ஆய்வினை மேற்கொள்ளலாம்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

5. உய்த்துணர் ஆய்வு என்றால் என்ன?

குறிப்பு

6. செலுத்துநிலை ஆய்வு என்றால் என்ன?
7. அமைப்பியல் ஆய்வு என்றால் என்ன?
8. நடைமுறைசார் ஆய்வு என்றால் என்ன?
9. மாதிரி ஆய்வு என்றால் என்ன?
10. அளந்தறி ஆய்வு என்றால் என்ன?

## 1.4.10. மதிப்பீட்டாய்வு

ஒரு பொருண்மை குறித்து ஆய்வு நிகழ்த்தும்போது ஆய்வாளர்கள் பல குழுக்களாகப் பிரிந்து பல களங்களைத் தேர்ந்து கண்டும் கேட்டும் உணர்ந்தும் பெற்ற தகவல்களை ஒரு மதிப்பீடு செய்யப்படும் ஆய்வு மதிப்பீட்டாய்வு எனப்படும். பல நேர்காணல்கள், வினா நிரல்கள் மூலமாகக் கிடைத்த செய்திகளை ஒப்பிட்டு இம்மதிப்பீட்டில் உண்மை நிலையை அறிதலாகும். குறிப்பாக, அன்றாடக் கூலிகளின் வாழ்க்கைத் தரத்தில் கடந்த பத்தாண்டுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? மாற்றம் ஏற்பட்டுள்ளதெனின் எத்தனை விழுக்காடு? என ஆராய்தல் மதிப்பீட்டாய்வாகும். தீண்டாமை ஒரு கொடிய குற்றம் என்ற சட்டம் செய்த சூழலிலும், தீண்டாமை அறக்கொடுமை என நாகரிக உலகு வற்புறுத்திய போதும், தீண்டாமை பாவம் எனச் சமய உலகம் தெரிவித்த நிலையிலும், தீண்டாமை கடைப்பிடிப்போர் மனிதரல்லர் என்று சீர்த்திருத்த உலகம் செப்பிய காலத்திலும் நாட்டில் தீண்டாமை ஆங்காங்கே மறைவாகவும் நேரடியாகவும் கடைப்பிடிக்கப்படுவதை மதிப்பீடு செய்தல் மதிப்பீட்டாய்வு ஆகும்.

மதுவிலக்கின் பாதிப்பு தொழிலாளர் வாழ்வில் எத்தகையது என்பதை ஆய்ந்தோர், அவர்கள் வாழ்க்கையின் பல கூறுகளை மதிப்பீடு செய்து முடிவெய்தனர். அதாவது, ஒரு தொழிலாயின் நாட்கூலியின் அளவு, செலவினங்கள், குழந்தைகளின் நிலை, வீட்டின் தரம், குடும்ப உறுப்பினர் உடல்நலம், குடும்ப உறுப்பினர் பொழுது போக்கு, குடும்ப உடைமைகளில் மாற்றங்கள், குடும்பத்தில் விழாக்கள், கணவன் மனைவியிடையே உறவுநிலை, குடும்பச் சேமிப்பும் கடனும் போன்ற பத்துக் கூறுகளைப் பல வகைகாக மதிப்பீடு செய்தனர். இவற்றில்

உடைமைகளை மதிப்பீடு செய்தபோது தெரிவித்த கருத்து கருதுதற்குரியதாக அமைந்துள்ளது.

> "நாட்கூலியே ஆனாலும், குடும்பச் செலவுகளைக் குறைத்துக் கொண்டு அந்தக் குடும்பம் சிறிது பொருள் சேமித்தது. அதன் பயனாய் மண்சட்டி கலயம் ஆகியவற்றில் புழங்கிவந்த குடும்பம் அலுமினியப் பாத்திரங்களை வாங்கிப் பயன்படுத்தியது. அடுத்த ஒன்பதாண்டுகளில் எவர்சில்வர் பாத்திரங்களைப் புழங்கும் அளவுக்கு உயர்ந்தது. ஆடைகளிலும், வீட்டில் கூரைகளைப் பழுது பார்ப்பதிலும், உணவு முறைகளிலும் கூட மாற்றங்கள் தெரிந்தன. உடம்பிலும் கூடச் சிறிது சதை பூசியிருந்தது. . . . . எல்லாம் அந்தப் பழக்கம் வரும் வரைதான். குடும்பத் தலைவனுக்கு மதுப்பழக்கம் வந்தது. பதினொரு ஆண்டுகளின் வளர்ச்சி ஓர் ஆண்டில் கரைந்துவிட்டது. மறுபடியும் குடும்பம் மண்சட்டி கலயங்களுக்கு மாறியது. உடை, கூரை ஆகிய பிறவற்றிலும் வறுமைச்சுவடு பதிந்தது. . . . "

இந்த நிலையைக் கூறி மதுப்பழக்கம் ஒரு குடும்ப வளர்ச்சியை எந்த அளவு சாய்த்துவிட்டது என்பதை ஆய்வாளர் தெரிவிக்கின்றார். இவ்வாறான ஆய்வே மதிப்பீட்டாய்வு ஆகும்.

## 1.4.11. புள்ளி விவர ஆய்வு

தகவல்களைத் துல்லியமாக அளவிட்டுக் கூறும் முறை புள்ளி விவர ஆய்வு ஆகும். எண்களின் தனித்தன்மை, வரிசைத் தன்மை, இன்னொரு எண்ணோடு ஒப்பிட்டுக் கூற வசதியான தன்மை ஆகியவற்றால் புள்ளி விவர ஆய்வு முறை மற்ற ஆய்வு முறையிலிருந்து வேறுபடுகிறது. புள்ளி விவரங்களைக் கொண்டே சில ஆய்வுகள் முடிவுக்கு வரவேண்டியதிருக்கும். சமூக அறிவியல் ஆய்வில் புள்ளி விவர ஆய்வு மிகவும் பயன்படுவதாக உள்ளது. கல்வியியல் ஆய்விலும் இதற்குக் குறிப்பிடத்தக்க இடமுண்டு. எண்ணிக்கை சார்ந்த மெய்ம்மைகள், அளவீட்டு அடிப்படையிலான தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு அமைகின்றது.

குறிப்பு

செங்கற்பட்டு மாவட்டத்தில் தொடக்கக் கல்வி குறித்துக் கள ஆய்வு மேற்கொண்டவர் தம் ஆய்வின் முடிவுகளாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

- கிராமப்புறத் தொடக்கப் பள்ளியில் சேர்வோர் எண்ணிக்கை, ஊர்ப்பிள்ளைகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது குறைவாக உள்ளது. 49.2 விழுக்காட்டினரே பள்ளியில் சேர்க்கப்பெறுகின்றனர்.
- இரண்டாண்டு மூன்றாண்டுகளுக்குப் பிறகு பள்ளிக்கு வாராமல் நின்றுவிடுவோர் தொகை 7.6 விழுக்காட்டிலிருந்து 13.4 விழுக்காடாக உயர்ந்துள்ளது.
- பள்ளியைச் சிறுவர்கள் நாடாமைக்குக் காணரம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மேலங்கிகளில் பூத்தொழில் செய்யும் வேலையால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் கணிசமான ஊதியமே.
- சிறார்களைப் பணியமர்த்துவதைத் தடுக்கும் சட்டத்தைக் கடுமையாக்குவது மட்டுமன்றி, குடும்பங்களின் பிழைப்புக்கு உரிய தொழில் மையங்களை உருவாக்கிக் குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்துவதினால் பள்ளிப் படிப்புத் தடையில்லாமல் தொடர் வழிவகுக்கும்

இவ்வாறு ஆய்வாளர் தம்முடைய கள ஆய்வின் மூலம் பெற்ற புள்ளி விவரங்களின் அடிப்படைடியில் இவ்வாய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

இலக்கிய ஆய்வில் புள்ளிவிவர ஆய்வு ஓரளவே பயன்தரும். சங்கப் புலவர்களின் மொத்த எண்ணிக்கை 474. அவருள் உறுப்பால் பெயர்பெற்றோர் எண்ணிக்கை 71. ஊராற்பெயர் பெற்றவர் எண்ணிக்கை 189. கோத்திரத்தாற் பெயர் பெற்றவர் எண்ணிக்கை 11. சமயத்தாற் பெயர் பெற்றவர் எண்ணிக்கை 3. தெய்வத்தாற் பெயர் பெற்றவர் எண்ணிக்கை 63. தொழிலாற் பெயர் பெற்றவர் எண்ணிக்கை 47. சங்க இலக்கியத்துள் பெண்பாற் புலவர்கள் எண்ணிக்கை 30. பெண்பாற் புலவர்களில் ஔவையாரே மிகுதியும் பாடியவர். அவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 59. புலவர்கள் அனைவரிலும் மிகுதியாகப் பாடியவர் கபிலர். அவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 235. கூற்று வகையில் தோழி கூற்றே மிகுதி (308 பாடல்கள்). மொத்தப்

பாடல்களின் எண்ணிக்கையில் பெண்பாற் கூற்றே மிகுதி (564 பாடல்கள்). திணைகளில் பாலை 530, குறிஞ்சி 488, நெய்தல் 342, மருதம் 263, முல்லை 234. இவ்வாறு அறிஞர்கள் சங்க இலக்கியங்களைப் புள்ளிவிவர முறையில் பகுத்துக் காட்டுவர். இப்புள்ளி விவரங்களுக்கு மேல் ஆராய்ச்சி நிகழ வேண்டுமென்பதே கருதத்தக்கது. பாலைத்திணை மிகுதியாகப் பாடப்பட்டது ஏன்? தோழி கூற்று மிகுதியாக உள்ளதேன்? போன்றவாறு புள்ளிவிவர ஆய்வினைத் தொடர்ந்த ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

## 1.4.12. விளக்கவியல் ஆய்வு

ஆய்வாளர்களுக்குத் தோன்றியுள்ள சிக்கல்களைக் குறித்து விளக்கி அவற்றை அணுகுவதற்கு உரிய வழிமுறைகளைத் தெரிவித்து, அதற்குரிய முடிவை எட்டுவதே விளக்கவியல் ஆய்வு ஆகும். இவ்வகையான ஆய்வே ஆய்வுலகில் மிகுதியாக பயன்படுத்தப்படுகிறது. இவ்வாய்வில் முறை பொதுவான முடிவுகளை அடைவதற்கும், சுருக்கமாகவும் தெளிவாகவும் கோட்பாடுகளை அறிந்து கொள்வதற்கும் துணைநிற்கும். உண்மைகளைக் கண்டுபிடித்துக் கூறுவது என்பதை விட, சிக்கல்களை விளக்கி முடிவு எடுத்துக் கூறவதாக இவ்வாய்வு முறை அமையும். இந்த ஆய்வு முறை மூன்று வகையில் ஆய்வு செய்வதற்குத் துணைபுரிகின்றது.

- ஓர் ஆய்வுச் சிக்கலின் சூழலை, இதனோடு ஒத்த ஆய்வுக் சிக்கல்களுக்கும் இதற்கும் இடையேயான உறவை விளக்குகின்றது.
- என்ன அளவுகளை, அலகுகளைக் கொண்டு ஆய்வுச் சிக்கலை ஆராயலாம் என்பதை விளக்குகின்றது.
- துறைசார்ந்த வல்லுநர்கள், அனுபவம் வாய்ந்தவர்களின் துணையோடு சிக்கல்களுக்கு எங்ஙனம் முடிவு காணலாம் என்பதை விளக்குகின்றது.

சிக்கலைத் தேர்வது, கருதுகோளைக் காண்பது, தரவுகளைத் திரட்டுவது, வகைப்படுத்துவது, உத்திகளை வகுப்பது, உள்ளார்ந்த பொருண்மைகளை உற்று நோக்கி அறிவது, முடிவுகளை எய்துவது ஆகிய செயல்களில் இந்த ஆய்வும் ஏனைய ஆய்வுகளைப் போன்றதே

குறிப்பு

என்றாலும், ஒரே ஒரு வேறுபாடு உண்டு. அதாவது, பல விளக்கவியல் ஆய்வுகளில் கருகோளைச் சோதிப்பது என்பது தேவையற்றதாக அமையும். பெரும்பாலும் விளக்கவியல் ஆய்வுகள் நிகழ்காலச் சிக்கல்களையே அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பெறும். விளக்கவியல் ஆய்வு முறையை அளந்தறிதல், ஒப்பிட்டு அறிதல், வளர்ச்சியின் அடிப்படையில் அறிதல், உள்ளடக்கத்தை அறிதல் என்ற நான்கு வகைகளில் நிகழ்த்தலாம். இலக்கிய ஆய்வுகளில் உள்ளடக்கத்தை அறிதல், அறிந்து விளக்குதல் என்பனவே இடம்பெறுகின்றன. இந்த ஆய்வை ஆவணச் சான்றாதாரப் பகுப்பு எனவும் கூறுவதுண்டு.

## 1.4.13. செயல்முறை ஆய்வு

மனிதனுடைய உறுப்புக்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்று மருத்துவ உடலியங்கியல் ஆய்கிறது. இ∴து ஒரு செயல்முறை ஆய்வாகும். ஏன் எவ்வாறு ஒன்றன் இயக்கம் அமைகின்றது என்று காணுவதே செயல்முறை ஆய்வின் நோக்கமாகும். இலக்கியப் படைப்புக்களில் ஒரு பாத்திரத்தின் இயக்கம், செயல்முறை எவ்வாறு அமைகின்றது என்பதையும் அவற்றின் விளைவுகளையும் கணித்துரைக்கும் ஆய்வே செயல்முறை ஆய்வு.

நடப்பியல் வாழ்க்கைக் கூறுகள் எங்ஙனம் அமைகின்றன என்பதையும், இலக்கியப் பாத்திரப் படைப்புக்கள் நடப்பியல் கூறுகளோடு எந்த அளவு ஒத்தும் ஒவ்வாதும் இயக்கப்படுகின்றன என்பதையும் செயல்முறை ஆய்வு வழி விளக்கலாம். ஒரு படைப்பு எந்த அளவு அது தோன்றிய சமுதாயத்தின் பண்பாட்டுத் தாக்கத்தைப் பெற்று இயங்குகின்றது என்பதையும், சமூக இயக்கம் எவ்வாறு பல மாற்றங்களைக் கொணர்கிறது என்பதைக் கண்டறியவும் இவ்வாய்வு முறை பயன்படும்.

கண் செயல்படுத் திறத்தை ஆய்ததன் வழியே இன்று புதிது புதிதான வியக்கத்தக்க புகைப்படக் கருவிகள் படைக்கப்பெற்றிருக்கின்றன. ஓர் அமைப்பின் செயல்களை விளக்குவது மட்டுமின்றி அதற்கான காரணங்களையும் இந்த ஆய்வு முறை ஆராய்கின்றது. மருத்துவ அறிவியல் வளராத காலத்தில் பல

நோய்களுக்கு இறப்பே முடிவாக இருந்தது. இப்படிப்பட்ட சூழலில் 126 வயதுக்காரருக்கு 107 வயது வரையில் கண்பார்வை குன்றவில்லை. 86, 92 வயதுக்காரர்கள் நல்ல பார்வை உடையவர்களாகவே அக்காலத்தில் இருந்தனர். இந்நிலை குறித்து ஆய்ந்த ஆய்வாளர்,

குறிப்பு

- மின்சாரம் தீண்டாத அச்சிற்றூரில் இரவு உணவை மாலையிலேயே அருந்துதல் வழக்கம். பெரும்பாலோர் இரவு ஏழு மணிக்கு உறங்கிவிடுவர். வளர்பிறைக் காலங்களில் சற்று நேரமாவது உண்டு.
- பொழுது புலரும் வரையில் உறங்குவதும், பொழுது முழுவதும் உடலுழைப்பில் ஈடுபடுவதும் கிராமத்து மக்கள் வழக்கம்.
- மிகச் சிறிய தானியங்களை உற்றுப் பார்ப்பதைத் தவிர நுணுக்கமான எப்பொருளையும் மணிக்கணக்கில் தொடர்ந்து பார்க்கும் நிலை இல்லை.

போன்ற முடிவுகளை எட்டுகின்றார். இத்தகைய வாழ்வியல் நடைமுறை நமக்கும் பல உண்மைகளை அறிவிக்கின்றன. இன்று இரவு முழுவதும் மனிதனுக்குப் பயன்படுகிறது. இருள் என்ற தடையை அவன் மிக எளிதில் விலக்கிவிட்டான். அன்றைய பணிகளின் பரிமாணத்தைவிட இன்றைய பணிகளின் பரிமாணம் பலமடங்கு மிகுதியாகிவிட்டது.

## 1.4.14. மரபியல் ஆய்வு

ஒவ்வோர் உயிரிடமும் ஆராய்ச்சி பண்பு இயற்கையில் அமைந்துள்ளது. வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தேடல் நிகழ்வதில் ஆய்வுப் பண்பு வெளிப்படுகிறது. பறவைகள் எங்கு உணவு கிடைக்கும் என்று தேடுகின்றன. விலங்குகள் பருகுவதற்கு நீர் எங்குக் கிடைக்கும் என்று தேடுகின்றன. மனிதன் திரைகடலோடியும் பொருள் தேடுகின்றான். இந்தத் தேடல்களில் ஆராய்ச்சி இருக்கிறது. மரபியல் ஆய்வுகளில் அறிவியல் நோக்கு அறிவியல் அடிப்படை இல்லை என்று கூறிடலாகாது. அந்த நோக்கின், அந்த அடிப்படையின் சுவடுகள் அழிந்துவிட்டன. ஏன் எதற்கு என்று கூற முடியாத நிலையில் மரபியல் ஆய்வுகள் இன்று உள்ளன. வடக்கே தலைவைத்துப் படுக்கக் கூடாது. மேற்கு நோக்கிய வீட்டில் குடியிருக்கக் கூடாது. தெருவை நோக்கிய வீடு ஆகாது. தலைப்பிள்ளை தலைப்பெண் திருமணம் செய்யக் கூடாது

*Self-Instructional Material*

போன்ற சில எச்சரிக்கைகளில் அறிவியல் உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. மரபியல் ஆய்வு உண்மைகள் கட்டளைகளாக மாறிப் பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கும் பழக்கங்களாகிவிட்டன. சிலவற்றை நாம் மூடப்பழக்கங்கள் என்கின்றோம். எனவேதான் இன்றைய ஆய்வுகளில் ஒவ்வொன்றையும் ஏன் எதற்கு எப்படி என்று துருவித் துருவி ஆய்வு சான்றாதாரங்களைத் தொகுத்து ஆய்வில் முடிவுகளைக் காண்கின்றோம்.

மரபியல் ஆய்வுகள் பெரும்பாலும், சமூக அனுபவங்களால் பெறப்பட்ட உண்மைகளைக் கொண்டவை. அவற்றிற்குரிய அடிப்படைகளைத் தேர்ந்து கொண்டால் அந்த ஆய்வின் உண்மைகள் எவ்வளவு வலிமையானவை என அறிய இயலும். அடிப்படைகளையும் காரணங்களையும் அறியாத நிலையில் மரபியல் ஆய்வு உண்மைகளில் பல அனுமானங்களாகவும், கற்பனைகளாகவும் மூடப்பழக்கங்களாகவும் கருதப்பட்டுவிட்டன எனலாம்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

11. மதிப்பீட்டாய்வு என்றால் என்ன?
12. புள்ளி விவர ஆய்வு என்றால் என்ன?
13. விளக்கவியல் ஆய்வு என்றால் என்ன?
14. செயல்முறையாய்வு என்றால் என்ன?
15. மரபியல் ஆய்வு என்றால் என்ன?
16. நாட்டுப்புறவியல் ஆய்வு வகைகள் யாவை?

## 1.4.15. நாட்டுப்புறவியல் ஆய்வு

மேற்காணும் பொதுவான ஆய்வு முறைகளில் இருந்து வேறுபட்ட ஆய்வு முறைகளை நாட்டுப்புறவியல் ஆய்வு காட்டுகின்றது. இந்நாட்டுப்புறவில் ஆய்வு பன்னிரண்டு நிலைகளில் தன்னுடைய ஆய்வுப் பரப்பைச் சுட்டுகிறது. அதாவது, வரலாற்றுப் புவியியல் ஆய்வு, வரலாற்று மீட்டுருவாக்க ஆய்வு, குறிக்கோள் ஆய்வு, செயல்திறன் ஆய்வு, உளவியல் ஆய்வு, அமைப்பியல் ஆய்வு, வாய்மொழி வாய்பாட்டு ஆய்வு, கலப்புப் பண்பாட்டாய்வு, நாட்டுப்புறப் பண்பாட்டு ஆய்வு, மக்கள் பண்பாட்டு ஆய்வு, அரைஉலகக் கோட்பாட்டாய்வு, சூழ்நிலைக் கோட்பாட்டாய்வு என அவை அமையும்.

குறிப்பு

## 1.4.15.1. வரலாற்றுப் புவியியல் ஆய்வு

ஒரு கதை உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு வகையாக வழங்கலாம். இக்கதை அந்தப் பகுதிகளில் தோன்றியது என்பதைவிட ஒரு குறிப்பிட்ட இடத்தில் தோன்றிப் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியிருக்க வேண்டும் என்று கருதுவது சாலச் சிறந்தது. கருத்துப் பரவல் இயல்பானது என்றும், அது மொழி நாட்டெல்லைகளைக் கடந்து செல்லும் ஆற்றலுடையது என்றும் சொல்லலாம். நாகரிக நாடுகளில் இருந்து நாகரிகம் குறைவான நாடுகளுக்குக் கதைகளும் பிற செய்திகளும் பரவியிருக்க வேண்டும் என்பது டார்சன் கருத்து. வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா போன்ற குடியேற்ற நாடுகளில் நாட்டுப்புறக் கதைகள் நன்கு பரவியுள்ளன. இந்தியாவில் வடபகுதியில் தோன்றிய இராமாயணக் கதைக்கரு இந்தியாவின் பல பகுதிகளுக்கும், தென்கிழக்கு ஆசியாவின் சில பகுதிகளுக்கும் பரவியுள்ளது. வரலாற்றுப் புவியியல் முறையில் இக்கதைகளை ஆராயும்போது கதையில் பல மாற்று வடிவங்களையும் புவியியல் அமைப்பின்படி எங்கெங்கு வழங்குகிறது எனக் கண்டு தொகுத்து, அட்டவணையிட்டு, மாற்று வடிவங்களின் கூறுகளை ஆராய்ந்து பழமையான கூறுகள் அடங்கிய கதை எப்பகுதியில் வழங்கி வருகிறது என்பதைக் காணவேண்டும். சுமேரிய நாட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட களிமண் படிவுகளில் இருந்து கிடைத்த ஒரு கதையானது, “ஆற்றில் மிதந்து வந்த கூடையில் ஒரு குழந்தையை அரசனின் ஏவலன் கண்டான். அவனை எடுத்துச் சென்று தன் மனைவியிடம் கொடுத்து வளர்த்தான். அக்குழந்தையைப் போர்க்கலைகளைக் கற்கச் செய்தான். மன்னன் அக்குழந்தை வளர்ந்து இளைஞனானபின் அரசுரிமையை அளித்தான்” என்பது. இக்கதை மகாபாரதத்தில் இடம்பெறும் கர்ணன் கதை போன்றதே. பதினாறு நாடுகளில் இதைப்போன்ற கதை உலவி வருவதாகக் கூறுவர். தொடக்கக் காலத்தில் இருந்து வாய்மொழி வழியாகப் பரவிய இக்கதையின் மூலம் இந்தியாவிலிருந்தே பெறப்பட்டதாதல் வேண்டுமென்று ஆய்வாளர் கருத்தாக அமைகிறது. இவ்வாறு வரலாற்றுப் புவியியல் ஆய்வு அமைதல் வேண்டும்.

## 1.4.15.2. வரலாற்று மீட்டுருவாக்க ஆய்வு

அழிந்துபட்ட வரலாற்றைக் காலப் பகுதிகளின் எச்சங்களைக் கண்டறிந்து மீட்டுவாக்கம் செய்யும் ஆய்வே வரலாற்று மீட்டுருவாக்க ஆய்வு ஆகும். இம்முறை ஜப்பானிய ஆவியுலகக் கோட்பாட்டாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. நாட்டுப்புறக் காவியங்களில் பெரும் வரலாற்று உண்மைகள் காணக்கிடைக்குமென்றும், அவற்றை இம்முறையில் மீட்டுருவாக்கம் செய்ய இயலுமென்றும் ஆய்வாளர்கள் கருதினர். எனினும் வாய்மொழி வழியாக வழங்கும் கதைகளில் கற்பனை எது வரலாறு எது என்று பகுத்தறிவது கடினமான செயலாகும். படிப்படியாகப் பெறப்படும் பரிணாம வளர்ச்சியைக் காணும் முறை தோன்றியபின் வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு மதிப்பிழந்து விட்டது எனலாம்.

## 1.4.15.3. குறிக்கோள் ஆய்வு

நாட்டுப்புற மக்களிலே பொழுதுபோக்காக வழங்கிவரும் ஒரு கதை அல்லது கதைப்பாட்டு அவர்களை ஒரு குறிக்கோள் நோக்கிச் செலுத்துவதற்குப் பயன்படும். அவ்வாறு ஒரு கதையினால் ஏற்பட்ட விளைவுகளைக் குறிக்கோள் ஆய்வு ஆராய்கிறது. வழிவழியாக நம் நாட்டில் வந்த கட்டபொம்மன் கதைப்பாடல் விடுதலை இயக்கக் குறிக்கோளுக்குப் பெரிதும் பயன்பட்டன.

வாராண்டா வாராண்டா வெள்ளைக் காரன்
வரட்டும் பார்க்கிறேன் தொப்பிக் காரன்
போராட்ட மன்னர் பிறந்த மண்ணில் அவன்
பொட்டை அதிகாரம் பண்ண வாரான்

என்பது போன்று தெருக்கூத்துகளில் பாடப்பெற்ற பாடல்களுக்குப் பொழுது போக்குக் குறிக்கோள் இல்லை. இப்பாடல்கள் தெருக்கூத்துகளில் நாள்தோறும் கிராமம் கிராமமாக வளர்த்து வைத்த சுதந்திர உணர்ச்சிதான் பிற்காலத்தில் வீரவாஞ்சிநாதன், மாடசாமி, வேலுநாச்சி, மருது சகோதரர்கள், நீலகண்டசிவம், சுப்பிரமணிய சிவா, வ.வே.சு. ஐயர், தேசியக்கவி பாரதி, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளை போன்ற புரட்சி வீரர்களைத் தோற்றுவித்தன என்பதைக் குறிக்கோள் ஆய்வு முறை தெளிவுபடுத்தும்.

## 1.4.15.4. செயல்திறன் ஆய்வு

ஒரு பண்பாட்டை உருவாக்குவதில் நாட்டுப்புறவியல் பெறும் பங்கை செயல்திறன் ஆய்வு ஆராய்கிறது.

குறிப்பு

- கூழாயினும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
- கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்.
- தாயைப் போலப் பிள்ளை; நூலைப்போலச் சேலை.
- மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்.
- தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
- தை பிறந்தால் வழி பிறக்கும்.

போன்ற பழமொழி பழங்காலத்து அறிவுறுத்தல்கள் அச்சமூகத்தின் புறத்தூண்மைப் பண்பாட்டை விளக்குவன. புராணக் கதைகளின் அடிப்படைக் கருத்து இத்தகைய பண்பாட்டு மூலமாகவே அமையும். அரிச்சந்திரன் கதை,

“யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற”

என்ற குறள் தமிழர் பண்பாட்டுக் கூறாக விளங்குவதையே அக்கதை காட்டுகிறது. அரிச்சந்திர புராணத்தின் சரியான இலக்கை இந்த ஆய்வு முறையே வெளிக்கொணர்கிறது.

## 1.4.15.5. உளவியல் ஆய்வு

நாட்டுப்புற இலக்கிய வடிவங்களில் உளவியல் கூறுகள் பொதிந்து கிடக்கின்றன. பாலியல் உணர்வுகளின் எதிரொலியாகவே கனவுகள் வெளிப்படுகின்றன. ஒரு மலரைக் கனவில் கண்டால் அதனைப் பெண் ஒருத்தியின் குறியீடாக எண்ணினர். அவ்வாறு கொண்டு அந்தக் கனவு என்ன தெரிவிக்கின்றது, எந்தச் சிந்தனை மூலத்தின் விளைவாக அந்தக் கனவு அமைகிறது என்பதை உளவியல் முறையில் ஆராய்ச்சி செய்யலாம். மனிதனின் எதிர்பார்ப்புகளே கனவுகளாகவும் புராணக் கதைகளாகவும் வெளிப்படும் என்கின்றனர். இராமாயணத்தில் இரண்டு எதிர்முக ஆசைகள் பாத்திரங்காளக

குறிப்பு

உருப்பெற்றுள்ளன. ஒருவன் ஒருத்தி என்பதை வாழ்க்கை அறமாகக் கொண்ட இராமன். பன்னிரண்டாயிரம் மனைவியரை மணந்து வாழ்ந்த தயரதன் என இரு வகையான பாத்திரப் படைப்புக்களை ஒருவர் படைத்தளிப்பதன் உள்நோக்கத்தை உளவியல் ஆய்வு ஆராய்கிறது.

வாழ்க்கை நிகழ்வு ஒவ்வொன்றிற்கும் ஓர் உள்ளுறைக் கருத்து உள்ளது. அது காலப்போக்கில் அழிந்து, பழக்க வழக்கங்கள் மட்டும் அப்படியே எதற்கு ஏன் என்று அறியாமல் இன்றுவரை பின்பற்றப்படுகின்றன. திருமண வீட்டில் அரசாணிக்கால் ஏன் நடுகின்றனர்? பழங்காலத்தில் திருமண வீட்டிற்கு அரசன் வருவது உண்டு. வராத நிலையில், ஒருமரக் கொம்பைக் கொண்டு வந்து அரசனுக்குரிய மரியாதைகளை அக்கொம்புக்குச் செய்வர். இதனால் அரசுவழிப்பட்ட சமூக அமைப்பின் உளவியல் நோக்கை ஆராய்ந்துணர இயலும்.

## 1.4.15.6. அமைப்பியல் ஆய்வு

பல நூறு கதைகளை ஓர் அமைப்புக்குள் அடக்கி ஆய்வு செய்வது அமைப்பியல் ஆய்வு ஆகும். கொடுமைப்படுத்தப்பட்ட பெண் ஆவியாகவோ பேயாகவோ மாறித் தம்மைக் கொடுமைப்படுத்தியவர்களைப் பழிவாங்குவதாக அமைந்த பல நூறு கதைகளை ஒரு வகைக்குள் அடக்க இயலும். இவ்வமைப்பின் கூறுபாடுகளை விரிவாக ஆராய்வதற்கு அமைப்பியல் ஆய்வு பயன்படும்.

## 1.4.15.7. வாய்மொழி வாய்பாட்டு ஆய்வு

கிரேக்கப் பெருங்காவியங்களான இலியது, ஒடிசி என்பவை வாய்மொழியாக மலர்ந்தவை என்பர் அறிஞர். இவற்றில் சில சொற்களும் தொடர்களும் கதை சொல்பவரின் உணர்ச்சியை வெளிப்படுத்துவதை ஆராய்ச்சியாளர் எடுத்துக் காட்டுகின்றனர். கதை சொல்பவரின் உணர்வு, சொல்லும் முறை, கூறும் சொற்கள் ஆகியவற்றை இம்முறை ஆய்கிறது. இந்த ஆய்வு முறையில் ஒவ்வொரு சொல்லும் தொடரும் கூர்ந்து கவனிக்கப்பெறுகின்றன. வாய்பாட்டுத் தன்மையில் சொற்கள் அமையும் தன்மை

ஆராயப்பெறுகின்றது. இத்தகைய வாய்பாட்டுத் தொடர்களே இலக்கிய உருவாக்கத்திற்கும் பெரிதும் பயன்பட்டு இருக்கின்றன.

குறிப்பு

## 1.4.15.8. கலப்புப் பண்பாட்டு ஆய்வு

கலப்புப் பண்பாட்டு ஆய்வு என்பது மனிதர்களிடத்து மனித உணர்வுகளும் விலங்கின் உணர்வுகளும் கலந்து நிற்பதை எடுத்துரைக்கின்றது. வயலில் விளைச்சல் நன்றாக அமைய வேண்டுமென்று பலிகொடுக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. பல நூல்கள் இந்தப் பலி வழக்கத்தைப் போற்றுகின்றன. சமுதாயத்தில் நாகரிக நிலை அரும்ப அரும்பப் பலியிடும் வழக்கம் நின்றுவிட்டது. எனினும் இன்றும் கோயில்களில் பலிபீடங்கள் உள்ளன. அவற்றுக்குத் தத்துவ அடிப்படையில் பொருள் கூறும் முயற்சிகள் தோன்றிவிட்டன. இன்றும் ஆடு கோழி ஆகியவற்றைப் பலியிடுவதற்கு மாறாக அவற்றைப் போன்று மாவால் செய்து வெட்டுகின்ற பழக்கம் இன்றும் சில இடங்களில் காணப்படுகின்றன. நாகரிகமற்ற காலத்திலிருந்து நாகரிகக் காலத்திற்கு மாறும்போது இருவேறு காலப் பண்பாட்டுக் கூறுகளின் கலப்பு நிகழ்கிறது. அகழாய்வில் வெவ்வேறு உயர மண்படிவுகளைப் போலவே பண்பாட்டு ஆய்விலும் பல தர அடுக்குகள் உள்ள நிலையை இவ்வாய்வு முறையால் ஆய்ந்து காணலாம்.

## 1.4.15.9. நாட்டுப்புறப் பண்பாட்டாய்வு

நாட்டுப்புறப் பழக்க வழக்கங்களின் அடிப்படைகளை உணர்ந்து அவற்றின் பின்னணியில் நாட்டுப்புறப் பண்பாட்டை வரைய வேண்டும் என்பர். நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை ஒரு பொது வாழ்வியலாகக் கருதாமல், அவர்கள் வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் ஆராய்ந்து நாட்டுப்புறச் சமுதாயம் எனத் தனிப்பட அமைந்திருப்பதைக் காட்ட வேண்டும் என்று இந்த ஆய்வுமுறை காட்டுகின்றது. நாட்டுப்புற வாழ்வியல் என்பது பல கூறுகளைத் தன்னுள் கொண்டது. கதைகள், பழமொழிகள், கதைப்பாடல்கள், விடுகதைகள் போன்ற இலக்கியம் சார்ந்த வடிவங்களை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம். அவர்களின் தொழில், குடியிருப்பு, வேளாண் வாழ்வியல் சார்ந்த பழக்க வழக்கங்கள், பேச்சு, பேச்சுவழக்குள், உச்சரிப்பு முறைகள், உடைகள், சமயம் சார்ந்த நம்பிக்கைகள், மருத்துவம், கலைகள், கைவினைகள்

குறிப்பு

ஆகியவற்றையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதே நாட்டுப்புற வாழ்வியலாகும். சுருங்கக் கூறின் அவர்களின் வாய்மொழி, பொருளாதார ஆன்மீக நோக்கு ஆகிய பண்பாடு சார்ந்தவற்றைக் குறிப்பதே நாட்டுப்புற வாழ்வியலாகும்.

## 1.4.15.10. மக்கள் பண்பாட்டாய்வு

கிராமங்கள் மெல்ல மெல்ல அழிந்து வருகின்றன. அதன் புறநீர்மைகளில் பெருமாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மாட்டு வண்டிகளும், ஏர்க்கலப்பைகளும் மெல்ல விடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாட்டுப்புற மக்கள் நகரங்களில் குடியேறிக் கொண்டிருக்கின்றனர். நகரங்கள் கிராம வாழ்க்கைப் பாங்கைமாற்றிக் கொண்டிருக்கின்றன. எனினும் கிராமிய வளமைகளும், பாரம்பரிய குணங்களும், பழக்க வழக்கங்களும் நகரப் பண்பாட்டில் குடியேறி இருக்கின்றன. இவற்றின் மேல் பூச்சு மாற்றப்பட்டிருக்கிறது. நாட்டுப்புற மக்கள் வாழ்க்கை நெறியில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்த ஆய்வு முறையால் விளக்கப்படுகின்றன.

## 1.4.15.11. அரை உலகக் கோட்பாட்டாய்வு

நாட்டுப்புறவியல் ஒரு நாட்டின் தொன்றுதொட்டு வரும் கலை, பண்பாடு, வாழ்வியல் கூறுகளைக் கொண்டது. ஒரு நாட்டில் இன்னொரு நாட்டு மக்கள் குடியேறும் போதோ அல்லது குடியமர்த்தும் போதோ பண்பாட்டுக் கலப்புகள் நிகழ்கின்றன. பழைய உலகின் நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் குடியேறியபின் புதிய உலகின் நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகளோடு இணைகின்றன. தழுவிக் கொள்ளப்பெறுகின்றன, கலப்புறுகின்றன, புதியனவாக மாற்றிக்கொள்ளப் பெறுகின்றன, மறைகின்றன என்பதை நாட்டுப்புறவியலாளர் இம்முறையில் ஆராய்ந்தனர். இந்த முறையில் தமிழகத்தில் ஆராய்ந்த சு. சக்திவேல், “தமிழ் நாட்டில் பல கால கட்டத்தில் கன்னடியர், தெலுங்கர், மலையாளிகள், சௌராஷ்டிரர், மராட்டியர் போன்றோர் வந்து குடியேறியதால் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களை ஆராயலாம். கேரளாவை ஒட்டியுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலவும் மருமக்கள் மான்மியம் பண்பாட்டுக் கலப்பால் ஏற்பட்ட ஒன்றாகும். இதனைக் குறித்தும் விரிவாக ஆராயலாம். நமது பண்பாட்டில் இவர்களது

கொள்வினை கொடுப்பினை பற்றி இவ்வாய்வுக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு ஆராயலாம்” என்று கூறுகின்றார்.



## 1.4.15.12. சூழ்நிலைக் கோட்பாட்டாய்வு

குறிப்பு

நாட்டுப்புறவியல் பண்பாட்டை ஆராய்வதற்குப் பல துறை அறிஞர்களின் முயற்சி தேவை என்று கருதினர். சில தொன்மையான பழக்கங்களையும் இனம் சார்ந்த பண்புகளையும் மனிடவியலாளர் வழியே அறியலாம். சில சமூகப் பண்புகளைச் சமூகவியலாளர் வழியே பெறலாம். சில உளவியல் போக்குகளை உளவியலாளர் வழியே உணரலாம். சில பேச்சுக் கூறுகளை மொழியியலாளரிடமிருந்து அறியலாம். சில வரலாற்றுக் கூறுகளை வரலாற்றாய்வாளர் வழியே அறியலாம். எனவே சூழ்நிலைக் கோட்பாட்டாய்வுக்குப் பல்துறை அறிவாய்வு தேவை.

பாம்புக்குப் பல்லில் விஷம், பங்காளிக்குப் உடம்பெல்லாம் விஷம் என்ற பழமொழியை ஆராய்ந்தால் இந்தியப் பண்பாட்டுப் பின்புலம், உடன்பிறந்தாருக்குள் பகைத்துக் கொள்ளும் பண்பு, பாம்புகள் மிகுதியான நில இயற்கை, தொடர்ந்து ஒருவர் மற்றொருவரோடு ஒத்துப்போகாத சமூக இயல்பு, பகை வளர்க்கும் உள்ளப்பாங்கு ஆகியவற்றையெல்லாம் காணலாம்.

அம்மை நோயினால் இறந்துபட்ட ஒருவரின் பிணம் வீட்டில் கிடக்கின்றது. சூழ்ந்திருப்போர் அழவில்லை. ஏன்? அம்மை வார்த்துக் குளிர்ந்துபோய்விட்ட ஒருவரின் இறப்புக்கு அழக்கூடாது என்பது நம்பிக்கை. துயரத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அவர்கள் இறப்புச் சடங்கைச் செய்கின்றனர். மற்ற இறப்புக்களில் மாரடித்துக் கொண்டு அழுகின்றனர். இறந்தவர் வயது முதிர்ந்தவராயிலும், துக்கம் இல்லாத சூழலிலும் அழுகின்றனர். ஏன் எனில் அழாவிட்டால் பிணத்தைப் பேய்கள் அணுகும் என்பது நம்பிக்கை. இவ்வாறு சூழல்களுக்குத் தக்கவாறு நிகழ்ச்சிப் போக்குகள் அமைந்திருப்பதை இவ்வாய்வு முறையால் ஆராயலாம்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

17. வரலாற்றுப் புவியியல் ஆய்வு என்றால் என்ன?
18. வரலாற்று மீட்டுருவாக்க ஆய்வு என்றால் என்ன?

19. குறிக்கோள் ஆய்வு என்றால் என்ன?



20. உளவியல் ஆய்வு என்றால் என்ன?

21. கலப்புப் பண்பாட்டாய்வு குறித்துக் குறிப்பு தருக.

22. மக்கள் பண்பாட்டாய்வு குறித்துக் குறிப்பு தருக.



## 1.5. தொகுத்துக் காண்போம்

- ஆய்வு, ஆராய்ச்சி என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வேட்டின் வகைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- இலக்கிய ஆய்வேட்டின் வகைகள் பற்றி விரிவாகத்தெரிந்து கொண்டீர்கள்.

## 1.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 1.3. | 2. | 1.4.1. |
| 3. | 1.4.2. | 4. | 1.4.3. |
| 5. | 1.4.4. | 6. | 1.4.5. |
| 7. | 1.4.6. | 8. | 1.4.7. |
| 9. | 1.4.8. | 10. | 1.4.9. |
| 11. | 1.4.10. | 12. | 1.4.11. |
| 13. | 1.4.12. | 14. | 1.4.13. |
| 15. | 1.4.14. | 16. | 1.4.15. |
| 17. | 1.4.15.1. | 18. | 1.4.15.2. |
| 19. | 1.4.15.3. | 20. | 1.4.15.5. |
| 21. | 1.4.15.8. | 22. | 1.4.15.10. |

## 1.7. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. ஆய்வேட்டின் வகைகளில் ஏதேனும் மூன்றினை விளக்குக.
2. நாட்டுப்புறவியல் ஆய்வு வகைகள் பற்றிக் கட்டுரை வரைக.
3. இலக்கிய ஆய்வின் வகைகள் பற்றிக் கட்டுரை வரைக.

குறிப்பு

# கூறு 2. ஆய்வும் ஆய்வுப்பொருள் தேர்வும்

## 2.1. முன்னுரை

ஆய்வாளன் ஆய்வு உலகில் நுழைந்தவுடன், முதலில் ஒன்றுமே வழி புலப்படாமல், கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போலத்தான் தோன்றும். நாளாக, நாளாக ஆய்வாளர்க்குப் பயிற்சியும் நீளநினைத்து அதிலே உழன்று, அஞ்சிறைத் தும்பியாகி ஆய்வுப் பொருளில் கொங்குதேர் வாழ்க்கையை மேற்கொள்ளும் முனைப்பு கைவந்தபின் ஆய்வுக்களம் புலப்படும். ஆய்விற்குரிய தலைப்பினை ஆய்வாளர் தேர்வு செய்வது என்பது எளிதான செயலன்று. ஆய்வாளன் தன்னுடைய ஆய்வு தொடங்குவதற்கு, ஆய்வுக் கருதுகோளைத் திட்டமிடுவதற்கு ஓர் தலைப்பினைத் தேர்வு செய்யவேண்டும். அவ்வாறு ஆய்வுத் தலைப்பைத் தேர்வு செய்வதற்கு ஆய்வின் வகைக்கு ஏற்பத் தேர்வு முறைகள் அமையும். இப்பகுதியில் ஆய்வுப் பொருள் எவ்வாறு ஆய்வாளனால் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பற்றிக் காணலாம்.

## 2.2. குறிக்கோள்கள்

- ஆய்வுப் பொருள் எத்தமையது என்பது பற்றி அறிந்து கொள்வீர்கள்.
- ஆய்வுப் பொருள் எப்படி தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- தேர்ந்தெடுக்கப்படும் ஆய்வுப்பொருளை எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

➢ தலைப்புக்களின் வகைகள், ஆய்வுக்களம், சிக்கலை மையமிட்ட தலைப்புக்களைத் தேர்ந்தெடுக்க உதவும் செய்திகள் என்பன பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

குறிப்பு

## 2.3. ஆய்வும் ஆய்வுப்பொருள் தேர்வும்

ஆய்பொருளைத் தேர்ந்தெடுக்கும் ஆய்வாளருக்கு என்னென்ன தகுதிகள் வேண்டும், ஆய்வுத் தலைப்பின் முன்வரலாற்றை ஆய்வாளர் எவ்வாறு தெரிந்து வைத்திருக்க வேண்டும், ஆய்வுத் தலைப்புகளின் வகைகள் யாவை, ஆய்வுக் களம் எவ்வாறு ஆய்வாளரால் தீர்மானிக்க வேண்டும், சிக்கலை மையமிட்ட தலைப்புக்களைத் தேர்ந்தெடுக்க ஆய்வாளருக்கு உதவுவன யாவை என்பது பற்றியெல்லாம் இங்குக் காண்போம்.

### 2.3.1. ஆய்பொருள் தேர்ந்தெடுக்கும் ஆய்வாளரின் தகுதிகள்

ஒரு குறிப்பிட்ட பிரிவிலே நாட்டம் உடையவர், அப்பிரிவையே தம் ஆய்விற்குரிய களமாகத் தேர்வு செய்யவேண்டும். பெரும்பாலோர் ஆய்வுப் பொருள் பற்றியோ ஆய்வுத் தலைப்பு பற்றியோ எவ்விதமான முன்சிந்தனையும் இன்றி, மேற்பார்வையாளர்களை நாடி, “நீங்களே எனக்குத் தலைப்பு ஒன்று சொல்லுங்கள்” என்று கேட்கின்றனர். இத்தகையவர்கள் ஆய்வினை மேற்கொள்ளும் பக்குவம் பெறவில்லை என்றே கருதவேண்டும். முனைவர் பட்ட ஆய்விற்கு வரும் ஆய்வாளர், அவராகச் சிந்தித்து ஒரு தலைப்பினைத் தேர்ந்தெடுத்து வருதல் வேண்டும். அதற்கு அவர்தம் ஆய்வுக் களத்தில் மிகுதியும் படித்திருக்க வேண்டும்.

ஓர் ஆய்வாளன் ஆய்வுப் பொருளை நன்கு சிந்தித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். புதுமை காணக்கூடிய ஆய்வுப்பொருளைத் தேர்வு செய்ய வேண்டும். இலக்கியத்தில் ஆய்வு செய்வோர் தமது எல்லைகளை வரையறை செய்து கொள்ள வேண்டும். சிறப்புத் துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு துறையில் எப்பொருள் பற்றியும் ஆராயலாம். முனைவர் பட்ட ஆய்வுக்கு (Ph.D.) ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) பட்ட ஆய்வே முன்னோடி ஆய்வாக அமையும். ஒரு குறிப்பிட்ட சிக்கலுக்கு விளக்கம் தருவதாய் தீர்வு காண்பதாக

அமைவதே ஆய்வின் இன்றியமையாத அடிப்படைப் பண்பெனக் கருதப்படுகிறது. ஆய்வுக்குத் தேவைப்படும் சிக்கலுள்ள பகுதிகளைக் கண்டறிய வேண்டும். ஆய்வுத் தலைப்பு குறிப்பிட்டதொரு சிக்கலுக்குத் தீர்வு காண்பதாக அமைதல் வேண்டும். சிறப்புத் துறையும் அதில் ஆய்பொருள் பற்றிய அடிப்படையே ஆய்வுத் தலைப்பைத் தேர்வதற்குத் தேவையானவையாகும்.

ஆய்வுக்குரிய தலைப்பைத் தேர்ந்தெடுக்குமுன் ஆய்வாளர் பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு ஆய்வுத் தலைப்பினைத் தேர்வு செய்யவேண்டும்.

- ஆய்வுச் சிக்கல் தாம் தேர்ச்சிபெற்ற பாடப்பொருளோடு தொடர்பு உடையதா?
- இதற்கு முன் யாராலும் இச்சிக்கல் குறித்து எண்ணப்பட்டுள்ளதா?
- இதற்கு முன் இவ்வாய்வுச் சிக்கல் எண்ணப்பட்டு ஓரளவு முயற்சியுடன் நிற்பதா?
- ஆய்வுச் சிக்கலைத் தீர்ப்பதற்குரிய துணைக்கருவிகள், நூல்கள், அறிவுரைகள், வழிமுறைகள் கிடைக்குமா?
- ஆய்வுச் சிக்கலைக் குறித்து முழுமையாக எண்ணப்பட்டதா?
- ஆய்வு நெறியாளர் ஆய்வுக் சிக்கலை ஏற்றுக் கொள்பவராகவும், அது குறித்த அறிவுடையவராகவும் உள்ளாரா?
- காலச் சூழல், இட அமைவு, பொருளாதார வாய்ப்பு ஆகியன ஆய்வுச் சிக்கலை நன்கு அணுக இடந்தருமா?
- குறிப்பிட்ட கால எல்லைக்குள் தீர்வு காண முடியுமா?
- தீர்வு கண்டால் தனக்கும் சமுதாயத்திற்கும் அறிவுலகிற்கும் எந்த அளவு பயன் தரும்?

## 2.3.2. ஆய்வின் முன்வரலாற்றை அறிதல்

ஆய்வில் புதிய பார்வையும் எடுத்துச் சொல்வதில் புதுமையாகவும் இருக்கவேண்டும். குறிப்பிட்ட துறையில் அத்தலைப்பு சம்பந்தமாக இதுவரை யார் யார் ஆய்வு செய்துள்ளார்கள் என அந்த ஆய்வுகளை மதிப்பீடு செய்ய வேண்டும். ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து விட்டால் அது தொடர்பான நூல், கட்டுரைகளைத் தேடவேண்டும். முன் நடந்த ஆய்வை அறிந்தால்தான் நம் ஆய்வை எங்கே தொடங்க வேண்டும்

என்பது தெரியும். ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்ததும் அத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை வரலாற்றை அறியவேண்டும். ஆய்வு என்பது தொடரோட்டம் போல் ஆகும்.

குறிப்பு

### 2.3.3. தலைப்புக்களின் வகைகள்

ஆய்வாளர், தம்முடைய ஆய்வுக்களம் எதுவென்று எல்லையை வகுத்துக் கொள்வது முதற்கண் இன்றியமையாது. ஆய்வாளர்க்குப் பரந்துபட்ட கல்வியும், ஆர்வமும், நாட்டமும், தான் கலந்து பணிசெய்யும் கடின உழைப்பும் முதனிலையில் இன்றியமையாது ஆகும். ஆய்வாளருக்கு ஆய்வில் ஆர்வமும், ஈடுபாடும் இல்லையேல் ஆய்வுப்பணி செம்மையுற அமையாது.

தமிழ் இலக்கியப் பரப்பில் இலக்கிய ஆய்வை அல்லது இலக்கண ஆய்வை மேற்கொள்ள விரும்புபவர், ஈடுபாடுள்ள பகுதி எதுவெனத் தேர்ந்து முடிவு செய்வது முதற்பணி. அகப்பாடல்களில் ஆய்வு செய்ய வேண்டும் என்று விரும்பும் ஆய்வாளர், சங்க அகப்பாடல்களில் ஓர் ஆய்வு என்று பதிவு செய்வது பொருத்தமுடையதன்று. சங்க அகப்பாடல்களை எவ்வாறு ஆய்வு செய்யலாம் என்ற தெளிவு தொடக்கத்தில் இல்லை. உடனே, இவர்களைத் தாங்கள் என்ன கூறப்போகிறீர்கள் என்பதை இரண்டு பக்க அளவில் ஆய்வுச் சுருக்கம் ஒன்று எழுதிக்கொடுங்கள் என்று கேட்டால் விழிப்பார்கள். அவர்களுடைய தெளிவு இன்மை அப்போது புலப்படும். தொடக்க காலத்தில் இப்படித்தான் தலைப்புக்களைக் கொடுத்தார்கள். சங்க அகப்பாடல்கள் என்பது ஆய்வுக்களம். அப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட சிக்கலை உள்ளடக்கிய தலைப்பு ஒன்றைத் தேர்ந்தெடுப்பது அடுத்தநிலை. ஆய்வாளர் பலகாலும் சிந்தித்தும் மீண்டும் மீண்டும் படித்தும் சிக்கலை மையமிட்ட தலைப்பினைத் தேர்வு செய்ய வேண்டும். சங்க அகப்பாடல்கள் ஓர் ஆய்வு, சிற்றிலக்கியங்கள் ஓர் ஆய்வு, காப்பியங்கள் ஓர் ஆய்வு என்பன போன்ற ஆய்வுகள் விளக்கமுறை (Descriptive) ஆய்வாக அமையும். அவ்வாறன்றி, இதற்கு மறுதலையாக, ஏதேனும் ஒரு சிக்கலை மையமிட்டதாக (Problem Oriented) ஆய்வுத் தலைப்பைத் தேர்வு செய்ய வேண்டும்.

கம்பராமாயணத்தில் பெண்கள் என்பது விளக்கத்தலைப்பு. பெண்கள் - வால்மீகியும் கம்பனும் என்பது சிக்கலை மையமிட்ட தலைப்பு. கோவில்களை ஆய்வுக்களமாக எடுத்துக்கொண்டு ஆய்வு செய்யும் போக்கு தற்போது வளர்ந்து வருகிறது.

சங்க அகப்பாடல்களை ஆய்வுக் களமாகக் கொண்டு படிக்கின்ற ஆய்வாளர், அவைகளுக்குத் திணை, துறை ஆகியவற்றை எந்த அடிப்படையில் வகுத்தனர் என்று ஆராயப்புகின், அத்தகு ஆய்வின் தலைப்பு மேற்சுட்டியவாறு - சிக்கலை மையமிட்டதாகச் சங்க அகப்பாடல்களும் அகப்பொருள் இலக்கணமும் என்று அமையும். இவ்வாய்வில், ஆய்வாளர் தொல்காப்பிய அகப்பொருள் மரபைத்தான் அடிக்குறிப்பாளர் பின்பற்றி உள்ளார் என்றோ, பின்தோன்றிய இறையனார் அகப்பொருள் போன்ற அகப்பொருள் பின்பற்றியே சங்க அகப்பாடல்களுக்கு அடிக்குறிப்பு வரைந்துள்ளார் என்றோ அல்லது தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் ஆகிய நூல்களைப் பின்பற்றவில்லை என்றோ, அடிக்குறிப்பு வகுத்த சான்றோர் பின்பற்றிய அகப்பொருள் மரபு இவற்றினின்று முற்றிலும் மாறுபட்டு அமைவதால் அத்தகைய அகப்பொருள் இலக்கணநூல் இன்று நமக்குக் கிட்டவில்லை என்பதால் அதனை நாம் மீட்டுருவாக்கம் செய்தல் வேண்டும் என்றோ முடிவு கூறலாம். ஆய்வின் முடிவு புதுமையாக, பழைமையான இலக்கிய மரபின் ஆழ்ந்த உண்மைகளை வெளியிடுவதாக அமையும். இத்தகு, அறிவியல் நெறியிலான ஆய்விற்கு அடிப்படையாகத் தோற்றுவாயாக அமைவது ஆய்வுத் தலைப்பைத் தேர்வு செய்வது ஆகும். தலைப்பினைத் தேர்வு செய்வதிலே ஆய்வின் அடிப்படை உள்ளது என இதனால் தெளியலாம்.

ஆய்வுத் தலைப்புக்கள் இரு வகைப்படும். அவை, 1. விளக்கத் தலைப்பு, 2. சிக்கலை மையமிட்ட தலைப்பு என்பனவாகும்.

## 2.3.3.1. விளக்கத் தலைப்பு

அகநானூறு ஆராய்ச்சி, குறுந்தொகை ஒரு திறனாய்வு, சிலப்பதிகார ஆராய்ச்சி என்பனபோல் அமைவன தெளிவற்ற விளக்கத் தலைப்புக்கள் ஆகும். இவ்வாய்வுகள் சிறப்புடையன அல்ல என்பதல்ல. இதன்பொருள், தன்னகத்தே ஏதேனும் சிக்கலை மையமிட்டுச் செல்லும்

குறிப்பு

ஆய்வாக இவை அமையவில்லை. பொதுவாகப் பரந்த அளவில் அனைத்துச் செய்திகளையும் திரட்டித் தந்து விளக்கம் நல்குவனவாக இவை அமைவதால் இவை விளக்கத் தலைப்புடையன. இத்தகு ஆய்வுகளில், ஆய்வாளர் முடிவுகளைச் சொல்லும் நாட்டத்தை விடவும், குறிப்பிட்ட அப்பொருள் பற்றிய அனைத்துச் செய்திகளையும் ஒருங்கு திரட்டிப் பல்வேறு தலைப்புகளில் வகுத்தும் தொகுத்தும் தரும் விளக்கமுறை ஆய்வுப் போக்கே மிக்கிருக்கும். இத்தகு ஆய்வுகள் ஒரு நிலையில் அடிப்படை ஆய்வுகள் ஆகும். தமிழ் இலக்கிய ஆய்வு தளர்நடையிட்ட தொடக்க காலத்தில் இவற்றின் தேவைப்பாடு துணை செய்யும். ஆனால் ஆய்வுநெறிகள் வளர்ந்து, அறிவியல் நெறியில் ஆராய்ந்து புதுப்புது உண்மைகளை வெளியிடும் அறிவியல் யுகத்தில், விளக்கத்தலைப்புகளைத் தேர்வு செய்வது பொருளுடையதன்று. எனவே, சிக்கலை மையமிட்ட தலைப்பு ஒன்றைத் தேர்வு செய்வதும், பின்னர் அதில் ஆய்வதும் இன்று தமிழ் இலக்கிய ஆய்விற்கு இன்றியமையாது வேண்டுவனவாகும்.

## 2.3.3.2. சிக்கலை மையமிட்ட தலைப்பு

அம்மூவனாரின் பாடல்கள் - மொழி ஆய்வு, பெரிய புராணம் காட்டும் காப்பிய நெறி, திருவிளையாடற்புராணம் காட்டும் தலபுராணக் கூறுகள் என்பன போன்று அமையும் தலைப்புகள் சிக்கலை மையமிட்ட ஆய்வுத் தலைப்புக்களாகும். இவ்வாய்வுகளில் ஆய்வாளர், ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சிக்கலைத் தேர்ந்து எடுத்து, அந்த வினாவிற்கு இயையுமாற தரவுகளைத் திரட்டி வகைப்படுத்தி, அறிவியல் நெறியில் ஆய்வை மேற்கொள்ள வேண்டும். தண்டியாசிரியர் வழியிலே தமிழ்க் காப்பியக் கொள்கைகளை விரித்துக் கூறுவதும், அதற்குப் பொருந்தாவிடில் அந்த இலக்கியம் காப்பியமன்று என்றும் ஆராயாமல், குறிப்பிட்ட காப்பியங்களில் இருந்து காப்பியக் கூறுகளைத் திரட்டி, அவற்றின் அடிப்படையில் காப்பியக் கொள்கைகளை வகுப்பது இங்கு ஆய்வாளரின் பணியாகின்றது.

சங்ககால மக்கள் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர். அவர்களின் பல்வேறு நம்பிக்கைகள் அகநானூற்றில் காணக்கிடக்கின்றன என்று மீண்டும் மீண்டும் கூறுவது விளக்கமுறை ஆய்வு. மானுடவியல், சமூகவியல், நாட்டுப்புறவியல் போன்ற பல்துறை அறிஞர்கள் மக்களின்

பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் பற்றிக் கூறும் கருத்துக்கள், விளக்கங்கள் ஆகியவற்றைத் துணை ஆதாரமாக வைத்துக் கொண்டு, அகநானூற்றில் காணப்படும் மக்களின் நம்பிக்கைகளை ஆராய்ந்து கோட்பாடுகளை உருவாக்குவது புதிய நோக்கில் அமைவதுடன், அறிவியல் நெறியில் புதிய செய்திகளையும் வெளிப்படுத்தும். அத்துடன் இவை பிறதுறை அறிவைக் கொண்டு செயல்படுத்தும் செய்முறை ஆய்வாக அமையும். மேலும், உலகம் தழுவிய நெறியில் பிறதுறை அறிஞர் கூறும் பண்பாட்டு விளக்கங்களை வெளிப்படுத்தும் தன்வயமற்ற ஆய்வாக இது மலரும். அதுவே, அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் புதிய மெய்ம்மைகளை வெளிப்படுத்தும் அறிவியல்நெறி சார்ந்த ஆய்வாகும். மாறாக, சமூகவியல், மானுடவியல் இவைகளில் சிறிதும் பயிற்சி இல்லாமல் சங்காலச் சமூகம், பெரியபுராணம் காட்டும் சமூகம் என்று ஆராய முன்வருதல் கூடாது.

### முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. ஆய்வின் முன்வரலாற்றை அறிவதன் நோக்கம் யாது?
2. ஆய்வுத் தலைப்பின் வகைகள் யாவை?
3. விளக்கத் தலைப்பு என்றால் என்ன?
4. சிக்கலை மையமிட்ட தலைப்பு என்றால் என்ன?

### 2.3.3.3. ஆய்வாளர்க்குரிய ஆய்வுக்களம்

ஆய்வாளர் தமக்கு ஈடுபாடும் நாட்டமும் உள்ள துறை அல்லது பகுதி எதுவென்று முதலில் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதிலே தம்முடைய ஆய்வை மேற்கொள்ள விரும்புவதால் அது அவருடைய ஆய்வுக்களம் என்றாகின்றது. அதில் புகுந்து தரவுகளைத் திரட்ட முனைகையில்தான் ஆய்விற்குரிய சிக்கல் புலப்படும் சங்க அகப்பாடல்களில் ஆர்வமும் நாட்டமும் உள்ளவர்க்கு அகப்பாடல்கள் ஆய்வுக் களமாக அமைகின்றது. ஆய்வுக் களத்தில் புகுந்து, பல்காலும் அதனைப் பயின்று வருகையில்தான் சிக்கல் ஏதேனும் புலப்படும். சங்க அகப்பாடல்களைப் பலமுறை துருவித் துருவி ஆராய்ந்தபின், ஒருவாறு சில சிந்தனைகள் புலப்படும். வரன்முறைப்படுத்தி, பலவாறு மீண்டும் மீண்டும் சிந்திக்கையில் ஆய்விற்குரிய சிக்கல் புலப்படும். புறப்பாடல்களின் திணை, துறை அமைப்பு என்பதாக ஆராய எண்ணும்

குறிப்பு

ஆய்வாளர் தம் ஆர்வம் காரணமாகப் பல்லாற்றானும் பயின்ற புறப்பாடல்களைத் தம் ஆய்வுக் களமாக வரையறுக்கின்றார். ஆய்வுக்களம் பரந்தும் விரிந்தும் இருக்கலாம். ஆய்வுக் களத்தைத் தேர்ந்தெடுக்க ஆய்வாளர்க்குரிய நாட்டம், ஈடுபாடு, புதியன காண விழையும் போக்கு என்பன அடிப்படை பண்புகளாக அமைகின்றன. சிக்கலை மையமிட்ட தலைப்புகளைத் தேர்ந்தெடுப்பதற்குச் சில வரன்முறைகள் உண்டு. அவை பின்வருமாறு:

- ஆய்வாளர் தம்முடைய ஆய்வுக் களத்தினைத் தேர்ந்து எடுத்த பின் தலைப்பினைத் தெரிவு செய்யவேண்டும்.
- ஆய்வாளருக்குத் தம் ஆய்வுக்களத்தில் உள்ள பரந்துபட்ட அறிவும் ஆழங்காற்பட்ட தோய்வும் இடையறாது கற்றலும் இருந்தால்தான் நல்லதொரு தலைப்பினைத் தேர்வு செய்ய முடியும். அத்துடன் அத்தலைப்பில் அவருக்கு புதுமை நாட்டமும் இருக்கவேண்டும்.
- சிக்கலை மையமிட்ட தலைப்பு ஒன்றைத் தேர்வு செய்வதற்கு அப்படியே உதவும் வண்ணம் உள்ள ஆயத்த விதி எதுவும் இல்லை. ஆய்வு தொடர்பான நூல்களைப் படித்தும் ஆய்வுக்களத்தில் பன்முறை தோய்ந்தும் வெளியாகியுள்ள அத்துறை தொடர்பான ஆய்வறிக்கைகள், ஆய்வேடுகள், ஆய்வு இதழ்கள், ஆய்வு மாநாடு மற்றும் கருத்தரங்கம் வெளியிடும் கட்டுரைத் தொகுப்புகள் போன்றவற்றைப் பலகாலம் துருவி ஆய்ந்தும் இதனைச் செய்திடல் வேண்டும்.
- சிக்கலை மையமிட்ட தலைப்பாகத் தேர்வு செய்வதால், ஆய்வை நடைமுறைக்கு ஏற்றதாகவும், எல்லை வகுத்துக் கொண்டதாகவும் அமைக்க உதவும். மேலும், கருதுகோள் ஒன்றை உருவாக்கவும், ஆய்வு முறைகளை வரையறுத்துக் கொள்ளவும், ஆய்விற்குரிய உத்திகளையும், அவற்றிற்குத் துணைநிற்கும் கருவிகளையும் கண்டறியவும் உதவும்.
- ஆய்வாளர், தம்முடைய ஆய்வுக் களத்தினை வரையறுத்துக் கொண்டபின் அத்துறையில் இதுகாறும் நிகழ்ந்துள்ள ஆய்வுகள் அனைத்தையும் கற்றிட வேண்டும். அதனால் கூறியது கூறல் தவிர்க்கப்படும். புதியன காணும் வழி ஏற்படும்.

குறிப்பு

- ஆய்வாளர் மேற்கொள்ளப் போகும் ஆய்வு இதற்கு முன்னால் பிறரால் மேற்கொள்ளப்பெறாத ஆய்வா எனக் கவனமுடன் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.
- ஆய்வுத் தலைப்பைத் தேர்வு செய்தபின் அதற்குரிய தரவுகளை முழுமையாகத் திரட்டி ஆராயும் வேட்கை ஆய்வாளருக்கு இன்றியமையாதது.
- ஆய்வுக்களத்தில் இதுவரை நிகழ்ந்துள்ள ஆய்வுகள், அவை தொடர்பான செய்திகள் ஆகியவற்றை ஆய்வாளர் அறிய வேண்டுவது இன்றியமையாததாகும். முன்னோடிகளின் தடத்திலே செல்கையில், அவர்களின் முடிவுகளை மீண்டும் சோதித்து அறியவும் இடைவெளிகளை அலசி ஆயவும் முடியும். பெரும்பாலும், தம் ஆய்வுக்களத்தில் ஆய்வாளருக்குரிய பரந்துபட்டதும் ஆழங்காற்பட்டதுமான அறிவே, அக்களத்தில் உள்ள இடைவெளிகள் எனை என்பதைப் புலப்படுத்தி, ஆய்வு மேற்கொள்ள வேண்டிய களங்களைச் சுட்டி வெளிப்படுத்தும். எனவே, சிக்கலை மையமிட்ட தலைப்பு உருவாக்க இப்படறிவு ஆய்வாளர்க்குத் தேவைப்படும்.
- இதுவரை வழங்கப்பட்டுள்ள ஆய்வேடுகள், வெளியாகியுள்ள ஆய்வறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுச் சிக்கல்களுக்கு ஆய்வாளர் ஆய்வு செய்யப்புகும்போது முன்னதில் அறிவு ஆய்வாளர் முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும். ஆய்வேடு முழுவதிலும் இலக்கியத்தை மதிப்புரை செய்யும் கடுமையான பணியை ஆய்வாளர் மேற்கொள்ளுகின்றார். ஆய்வேட்டின் தலையாய நோக்கமாக அமைவது புதிய சிந்தனைகளை, நிறுவப்படும் கோட்பாடுகளை நல்குவதாக அமைவதால், ஆய்வாளர் மேற்கொள்ளப் போகும் ஆய்வு இதற்கு முன்னால் பிறரால் மேற்கொள்ளப் பெறாத ஒன்றாக உள்ளதா என்பதைக் கவனமாகச் சரிபார்த்துக் கொண்டு ஆய்வுத் தலைப்பைத் தேர்வு செய்ய வேண்டும்.
- ஆய்விற்குரிய தலைப்பைத் தேர்வு செய்த பின்னர் அதற்குரிய தரவுகளை முழுமையாகத் திரட்டி ஆராயும் வேட்கை ஆய்வாளருக்கு இன்றியமையாதது ஆகும்.

- ஆய்வுக் களத்தை வரையறுத்து ஆய்வாளர்தம் தலைப்பை, சிக்கலை மையமிட்டதாகத் தேர்வு செய்த பின்னர், முந்தைய ஆய்வுகளுடன் எவ்வாறு இந்தக் குறிப்பிட்ட ஆய்வுச் சிக்கல் தொடர்பு பெறுகிறது என்பதை உணர்த்துவது ஆய்வாளருக்கு இன்றியமையாத ஒன்றாகும்.
- ஆய்வு நெறியாளரின் துணையுடன் தம்முடைய ஆழ்ந்த ஈடுபாட்டிற்கு உட்பட்ட ஆய்வுக் களத்தை ஆய்வாளர் தேர்வு செய்தால் நன்மை பயக்கும்.
- ஆய்விற்குரிய தலைப்பைத் தேர்வு செய்யும்போது ஆய்வாளர் இரண்டு இன்றியமையாத செய்திகளைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஒன்று, மனத்தில் எளிதில் பற்றிக்கொள்ளும் ஆற்றல் மிக்கதாக ஆய்வுத் தலைப்பு அமைதல் வேண்டும். மற்றொன்று, கால எல்லைக்குட்பட்டதாக ஆய்வுத் தலைப்பு அமைதல் வேண்டும்.
- அனுபவமும், திறமையும் வாய்ந்த ஆய்வாளர்களால் முன்னமே அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத துறையாக இருப்பின், தகவல் பெறும் வாயிலகள் வரையறைக்குட்பட்டனவாக விளங்கும். அந்நிலையில் ஆய்வாளரின் பணி தகவல்களைத் திரட்டி வகுத்துவரும் அடிப்படை ஆய்வையும் உள்ளடக்கியதாக அமையும். ஓலைச்சுவடிகளில் உள்ள நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சி இந்நிலையில் அமையும்.
- ஏற்கெனவே மேற்கொள்ளப்பெற்ற ஆய்வின் உத்திகள் பொருத்தமற்றவை என்றோ, முந்தைய ஆய்வின் முடிவுகள் அல்லது கண்டுபிடிப்புகள் ஐயத்திற்கு உட்பட்டவை என்றோ, புதிய தகவல்கள் வெளிக்கொணரப்பட்டு அவற்றின் அடிப்படையில் முந்தைய ஆய்வின் சிக்கல்களில் புதிய பாதை உருவாக்கப்படும் என்றோ திட்டவட்டமாக முடிவு செய்யாதபோது, முந்தைய ஆய்வுகளை மீண்டும் மீண்டும் அப்படியே தொடர்ந்து கூறுவது கூறியது கூறலாகும். இக்குற்றத்தினை ஆய்வாளர் மேற்கொள்ளக் கூடாது.

## 2.4. தொகுத்துக் காண்போம்

குறிப்பு

- ஆய்வுப் பொருள் எத்தமையது என்பது பற்றி அறிந்து கொண்டீர்கள்.
- ஆய்வுப் பொருள் எப்படி தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- தேர்ந்தெடுக்கப்படும் ஆய்வுப்பொருளை எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- தலைப்புக்களின் வகைகள், ஆய்வுக்களம், சிக்கலை மையமிட்ட தலைப்புக்களைத் தேர்ந்தெடுக்க உதவும் செய்திகள் என்பன பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 2.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 2.3.2. | 2. | 2.3.3. |
| 3. | 2.3.3.1. | 4. | 2.3.3.2. |

## 2.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. ஆய்பொருள் தேர்ந்தெடுக்கும் ஆய்வாளரின் தகுதிகள் எவையெவை என்பது பற்றிக் கட்டுரை வரைக.
2. ஆய்வுத் தலைப்பின் வகைகள் பற்றிக் கட்டுரை வரைக.
3. ஆய்வாளருக்குரிய ஆய்வுக் களம் எவ்வாறெல்லாம் அமையலாம் என்பது பற்றிக் கட்டுரை வரைக.

# கூறு 3. ஆய்வாளருக்குரிய தகுதிகள் - ஆய்வுக்குரிய காலம்

## 3.1. முன்னுரை

அறிவு, உண்மை என்ற இரண்டையும் தன்னுடைய உயரிய பண்புகளாகக் கொண்டு இருக்கவேண்டியவர் ஆய்வாளர். ஆராய்ச்சி என்பது ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக உண்மைகளைத் தேடித் துருவி ஆராயும் ஒரு கவனம் மிக்கது ஆகும். ஆராய்ச்சிப் பணியில்

*Self-Instructional Material*

ஈடுபடுபவர்களுக்கு இடையூறுகளும், துன்பங்களும், கொடுமைகளும், இன்பங்களும் நிகழலாம். பொருள் இழப்பும், அவமதிப்பும், சிறை வாழ்வும், இறப்பும்கூட நேரிடலாம். இவற்றைப் பொருட்படுத்தாமல் ஆய்வாளன் ஆய்வின் முடிவை நோக்கிய பயணத்தில் தளராமல் செல்ல வேண்டும். ஆய்வுப் பயணம் ஆய்வாளருக்குத் தொய்வில்லாமல் தொடர வேண்டுமானால் ஆய்வாளருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பற்றியும், ஆய்வு செய்வதற்கான காலம் குறித்தும் இப்பகுதியில் காணலாம்.

## 3.2. குறிக்கோள்கள்

- ஆய்வாளர்க்குரிய தகுதிகள் என்னென்ன என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வாளர் தன்னுடைய ஆய்வு செய்வதற்கான காலம் எதுவென பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 3.3. ஆய்வாளருக்குரிய தகுதிகள்

ஓர் ஆய்வாளர்க்குப் மைக்கல் பாரடேயின் ஆர்வமும், ஆல்பர்ட் சுவைட்சரின் கடுமையான உழைப்பும், கொலம்பசின் சலியா மனமும், கோப்பர்னிகசின் நுண்ணோக்கும், ரைட் சகோதரர்களின் விடாமுயற்சியும், கலிலியோவின் அஞ்சாநெஞ்சமும் வேண்டும் என்பர். படிப்பில் தன்னைக் கரைத்துக் கொண்டே செய்தித்தாள் பையனாக, புத்தகங்களைக் கட்டும் சிறுவனாக, கண்ணாடிப் புட்டிகளைக் கழுவும் பணியாளராகப் பல்லாண்டுகள் பணியாற்றி, ஆர்வத்தாலும், முயற்சியாலும் உழைப்பாலும் அறிவியல் அறிஞராக உருவாகியவர் மைக்கல் பாரடே. இருண்ட கண்டமாயிருந்த ஆப்பிரிக்காவில் தன் தொண்டு வெளிச்சத்தைப் பரப்பி, மருத்துவத்தால் அங்குள்ள மக்களின் கொடுநோய் களைந்தவர் சுவைட்சர். மனந்தளராது பல இடையூறுகளை எதிர்கொண்டு தொல்லையான கடற்பயணத்தின் பின் அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் கொலம்பஸ். பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது எனச் சோதனைகளால் நிறுவியவர் கோப்பர்னிகஸ். இல்லறவாழ்வு ஏற்காமல், காலம் முழுவதும் வானூர்தி ஆராய்ச்சியில் இறங்கித் தோற்றுத் தோற்று இறுதியில் வெற்றியும் பெருமையும் பெற்றவர்கள் ரைட் சகோதரர்கள். போப்பாண்டவரின் கட்டளைக்குப் பணிய மறுத்து சூரியன் பூமியைச் சுற்றவில்லை எனக் கூறிய தீரமிக்க அறிஞராகத் திகழ்ந்தவர் கலிலியோ.

இந்த அறிஞர்களின் பண்புகள் ஒவ்வோர் ஆராய்ச்சியாளருக்கும் இருக்க வேண்டும். இதுபோல் பெறுவதற்கான தகுதிகளைப் பின்வருமாறு காணலாம்.

குறிப்பு

### 3.3.1. ஆய்வுப் பொருள் பற்றிய அறிவு

எந்தவொரு ஆராய்ச்சியாளருக்கும் தான் செய்யும் ஆய்வு, ஆய்வுப்பொருள் பற்றித் தெளிவான அறிவு இருக்க வேண்டும். ஒரு சமூகத்துக்கு முற்றிலும் அப்பாற்பட்ட, அதனைப் பற்றிப் படித்தும் கேட்டும் அறிந்திராத ஒருவன் அச்சமூகம் பற்றிய ஆய்வைச் செய்யக் கூடாது. ஓர் இலக்கியத்தைக் கற்காதவன் அதனைப் பற்றி உடனே ஆராய்ச்சியில் இறங்கக் கூடாது. ஒரு நூலைப் பல முறை படித்தறிந்து பொருள் உணர்ந்து கொண்ட பின்புதான் அதனைக் குறித்த ஆராய்ச்சியில் ஆய்வாளர் இறங்க வேண்டும். திருவள்ளுவர்,

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்

என விளையாடுகின்றனவன் அதற்குரிய ஆட்டக் களத்தை வரைந்து கொள்ளாது ஆடினால் எப்படியிருக்கும் என்று கேட்கின்றார். நூலறிவு மிக்கு வாய்க்கப் பெற்றவனே அவற்றைப் பற்றிப் பேசுவதற்கு இயலும். ஆராய்ச்சியும் அதுபோன்றதுதான்.

### 3.3.2. ஆய்வாளருக்கு ஆய்வில் பற்று

ஆய்வாளர் ஒருவருக்குத் தான் செய்யும் ஆய்வு மீது பற்று இருக்க வேண்டும். ஏதோ கடமைக்காக செய்திகளைத் திரட்டுதலும், வகைப்படுத்துதலும், விளக்கலும் கூடாது. உள்ளத்துணர்வு ஆய்வாளருக்கு ஆய்வின்பால் உந்துதல் வேண்டும். அறிதொறும் அறியாமை கண்டற்றால் என்பது போல ஒவ்வொன்றையும் புதியதாக அறியும்போது மகிழ்ச்சியும் நிறைவும் எய்தும் உள்ளம் வேண்டும். மனவெழுச்சி இல்லாத ஆராய்ச்சி பயன்தராது. ஆய்வாளர் தாம் ஆராய்ச்சி செய்யும் முன் தன்னைத்தானே சோதித்துக் கொள்ளவேண்டும். அதாவது, ஆராயும் துறை தமது ஆர்வத்திற்கு உரியதா? ஆய்வுப் பொருளில் உள்ள ஆர்வம் அறிவு சார்ந்ததா? வருவாய் மிகுதிக்காகவோ, பதவி உயர்வுக்காகவோ தம்முடைய ஆய்வு நிகழ்த்தப்படுகிறதா என்ற

குறிப்பு

வினாக்களுக்கு விடை தெரிந்து கொண்டு ஆய்வுக்குள் புகுதல் வேண்டும். ஒவ்வொரு ஆராய்சியாளரும் தன்னுடைய அறிவினால் மனித குலத்திற்குப் புதிய ஒன்றைப் படைக்கப் போகிறோம் என்ற உணர்வு இருப்பின் அதுவே நல்லதொரு ஆராய்ச்சிக்கு அடிப்படையாகலாம்.

### 3.3.3. விடாமுயற்சி

மனம் சலியாமையும் விடாமுயற்சியும் ஆய்வாளர்க்குத் தம்முடைய ஆய்வில் இருக்க வேண்டும். ஆராயுங் காலத்து அடுக்கடுக்காய்த் தோல்விகளே வரினும் தொடரும் ஆய்வாளல் வெற்றி கிட்டும் என்கிற விடாமுயச்சி வேண்டும்.

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்

என்ற திருவள்ளுவத்திற்கேற்பத் தொடர்ந்து முயலுதலில் பின்வாங்கக் கூடாது. இராபர்ட் புரூஸ் பலமுறை பகைவர்களிடம் தோற்று நாடு இழந்து மலைக்குகைகளில் ஒளிந்து வாழ்ந்தபோது ஒரு சிலந்தி தனக்குரிய வலையைப் பின்னுவதில் தோற்றுத் தோற்று இழையறுந்து அறுந்து கீழே நழுவிய நிலையிலும் விடாது முயன்று கடைசியில் வலையை அமைத்துக் கொண்டதைக் காண்கின்றான். அப்போதுதான் அவன் உள்ளத்தில் தன்னம்பிக்கை குடி புகுந்து, பின்பு பகைவென்று நாட்டைப் பெறுகின்றான். கஜினி முகம்மதுவும் பதினெட்டு முறை தோல்வி கண்டு வெற்றி பெற்ற வரலாறு நம்மிடமும் உண்டு. ஆய்வில் இதுபோன்ற விடாமுயற்சி ஒவ்வொரு ஆய்வாளருக்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

### 3.3.4. நுண்ணோக்குப் பார்வை

ஒரு பொருளை நுண்மையாக நோக்குவது அறிவின் அடையாளம் என்பார் திருவள்ளுவர். நோக்கு என்பதற்குத் தொல்காப்பியர்,

மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே

என்று மாத்திரை அளவிலிருந்து செய்யுளின் அனைத்து அடிகளும் விரித்துப் பார்ப்பதற்கு உரியவாய் அமையும் என்பர். ஆய்வாளர் நுணித்தறியும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். செய்யுளின்

ஒவ்வோர் உறுப்பும், உரைநடையின் ஒவ்வோர் சொல்லும் என்ன உரைக்கின்றன என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மரத்தில் என்ன தெரிகிறது என்று துரோணர் அருச்சுனனைப் பார்த்துக் கேட்கிறார். அருச்சுனன், கிளை தெரிகிறது என்றும், இலை தெரிகிறது என்றும், சிறுகுருவி தெரிகிறது என்றும், குருவியின் கண் தெரிகிறது என்றும் ஒவ்வொன்றாய் சொல்லிச் சென்றவன் கடைசியில் குருவியின் கண் மட்டுமே தெரிகிறது என்கின்றான். ஆய்வாளர் எதை நோக்குகின்றாரோ அது மட்டுமே கண்ணுக்குத் தெரியவேண்டும். எப்படி அருச்சுனனுக்கு மரத்தில் உட்கார்ந்திருந்த குருவியின் கண் மட்டும் நுண்ணியதாய்த் தெரிந்ததோ அதுபோல் ஆய்வாளருக்கு ஆய்வின் நுண்மை புலப்படுதல் வேண்டும். ஆய்வாளர் ஒருமுகப்படுத்தி உள்ளத்தை ஒன்றில் ஈடுபடுத்தி நுட்பம் காணும் திறம் ஆய்வாளருக்கு வேண்டும். இதனையே திருவள்ளுவர் நுண்மாண் நுழைபுலம் என்றுரைக்கின்றார்.

## 3.3.5. ஆய்வு நேர்மை

ஆய்வாளர் ஆய்வில் நேர்மையைக் கடைபிடிக்க வேண்டும். பிறர் செய்த ஆய்வுகளை தன்னுடைய ஆய்வுகளாகக் கருதுதல் கூடாது. தனக்கு முன் பலர் செய்த ஆய்வுகளையும் அவற்றின் தீர்வுகளையும் மறைக்காமல், அவற்றையும் தம்முடைய ஆய்வில் எடுத்துக்காட்டி இன்னின்னவர் கூறிய கருத்துக்கள் இவையிவை எனத் தெரிவிக்கும் நேர்மை ஆய்வாளருக்கு வேண்டும். விருப்பு வெறுப்புகளை ஆய்வாளர் முற்றிலும் கைவிட்டுப் பெற்ற செய்திகளை எடுத்து வைக்கும் நல்ல உள்ளம் வேண்டும். தம் ஆய்வு எதிர்பார்த்த பயனையோ முடிவையோ தராவிடின் அதனை ஒளிக்காமல் கூறுகின்ற மனவலிமையைப் பெற்றிருக்க வேண்டும். ஆய்வாளர் தனக்கு வலிமை தருகின்ற சான்றுகளை மட்டும் எடுத்துக் கொள்ளுதல், பிறவற்றைத் புறக்கணித்தல், பிற ஆய்வாளர்களைத் தனிப்பட்ட விருப்பு வெறுப்பில் போற்றுதல், தூற்றுதல் ஆகிய ஆய்வாளருக்கு உதவாத பண்புகள் ஆகும். எழுத்துத்திருட்டு, கருத்துத்திருட்டு என்பதற்கு ஆய்வாளர் ஒருபோதும் இடம் தருதல் கூடாது.

## 3.3.6. நடுவு நிலைமை

குறிப்பு

ஆய்வாளர் எச்சார்பும் இல்லாமல் நடுவுநிலையில் நின்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும். அதாவது, மதச் சார்பு, சாதிச் சார்பு, அரசியல் சார்பு, வட்டாரச் சார்பு என்பன ஆராய்ச்சியின் சரியான முடிவுகளைத் தரவல்லதல்ல. ஆய்வாளருக்கு மதம் எனப்படுவது அவரது ஆய்வுப் பொருளேயாகும். அவருக்குச் சாதி என்பது அவரையொத்த ஆய்வாளர்களின் தொகுதியே ஆகும். இனம், குலம், குடி, மொழி, நாடு ஆகிய சார்புகளைவிட்டு நடுவு நிலைமை நின்று உண்மைகளைக் காணும் மனப்பாங்கு ஆய்வாளருக்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்ற அஞ்சா நெஞ்சம் கொண்ட நக்கீரரின் நடுவு நிலை ஆய்வாளருக்கு சிறந்த அணிகலன்கள்.

## 3.3.7. ஆய்வு நாகரிகம்

சான்றோருக்குரிய பண்புகள் பலவும் ஆய்வாளர் பெற்றிருக்க வேண்டும். பிறர் கருத்தை மறுக்க நேருமிடங்களில் நாகரிகம் வழுவாமல் மறுக்க வேண்டும். பிறர் கருத்துக்குத் தக்க மதிப்பளித்து, மறுக்க வேண்டிய இடத்துத் தக்க சான்றாதாரம் காட்டி மறுக்க வேண்டும். அவ்வாறு மறுக்கும்போது அவர் உரை போலியுரை என்க, அறியாது கூறினார், அறிவுமடம்பட்டார், தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் உரைத்துத் தடுமாறுவர் போன்ற தொடர்களை ஆய்வாளர் பிறர் கருத்தை மறுக்கும் போது தவிர்த்தல் நலம் பயக்கும். இவ்வாறும் ஒரு கருத்துண்டு, தக்கதேல் கொள்க, என்று உரைப்பாரும் உளர், என்பார் கருத்தையும் எண்ணிப் பார்க்க போன்ற சொற்களால் ஆய்வாளர் பிறர் கருத்தை மறுக்கும் போது சுட்டுதல் நல்லது. தம்முடைய ஆய்வுக்கு உறுதுணையானவற்றைக் குறிப்பிட மறவாமையும், ஆய்வில் தமக்குத் துணை நின்றவரைக் குறிப்பிடலும், நேர்காணலில் கூறியவற்றில் தமக்கு உடன்படாதவற்றை நீக்கிவிட்டு உடன்பட்டவற்றை மட்டும் காட்டாமல் அனைத்துத் தரவுகளையும் காட்டுதலும், தனக்குப் பலவாறு துணைசெய்தவர்கள், நிறுவனங்கள், நூலகங்கள், வழிகாட்டி ஆகிய அனைத்துப் பிரிவினருக்கும் ஆய்வேட்டில் நன்றிதெரிவித்தல் ஆகியவை ஆய்வு நாகரிகம் ஆகும்.

## 3.3.8. கடும் உழைப்பு

ஆய்வாளர் தம்முடைய ஆய்வுக் காலத்தில் ஆய்வுப்பொருள் தொடர்பான தீர்வு காண கடுமையாக உழைக்க வேண்டும். ஆய்வாளர்,

குறிப்பு

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்

என்ற கூற்றுப்படி ஆய்வுப்பணி நிறைவடையும் வரை அயராத உழைப்பு உடையவராய் இருத்தல் வேண்டும். தனக்குக் கிடைக்கக் கூடிய ஒவ்வொரு நொடியையும் அறிவின் தேட்டத்திற்குப் பயன்படுத்தும் உள்ளம் ஆய்வாளருக்கு வேண்டும்.

### 3.3.9. பொறுமை

தம்முடைய ஆய்வுக் கருத்தை ஆய்வாளர் வெளியிடுவதில் அவசரம் காட்டாமல் நின்று நிதானித்துப் பொறுமையாக வெளியிடுதல் வேண்டும். ஆய்வாளர்தம் ஆய்வுக் கருத்துக்களைத் தேடிக் காண்பதிலும், பிறர் அதை ஏற்க வேண்டும் என்ற எதிர்நோக்குவதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். சில செய்திகள், குறிப்புகள் அவ்வளவு எளிதாகக் கிடைத்துவிடாது. செய்திகளைப் பெறுவதில் ஓரிரு முறை முயன்ற நிலையில் பொறுமை இழத்தல் ஆய்வாளருக்கு அழகல்ல. நெடும்பனையின் காய்களைத் துறட்டியால் பெறமுடியாது. மழைப் பருவத்தில் கடல் முத்து கொள்ள இயலாது. குறிஞ்சிமலர் நாம் வேண்டும்போது பூக்காது. ஒவ்வொன்றையும் காலம் அறிந்து இடம் அறிந்து தக்க உதவியுடன் பயன்பெற வேண்டும். தம்முடைய ஆய்வு முடிவுகளை நம் காலத்திற்குப் பிறகு அல்லது சில தலைமுறைகளுக்குப் பின்னர் உலகம் ஏற்றுக் கொள்ளலாம். தம் காலத்திலேயே அதற்கு உரிய ஏற்பு கிடைக்கவில்லையே என்று எண்ணல் கூடாது. கள ஆய்வு, நேர்காணல் போன்ற இடங்களில் ஆய்வாளர் பொறுமையை இழந்துவிடக் கூடாது. நாளைக்கு நாளைக்கு என்று சொல்லிக்கொண்டு இருந்த நந்தனார் இறுதியில் ஒரு நாள் தில்லைக்குப் புறப்பட்டுவிட்டார். அதுபோல ஒத்திப் போடப்படுவதால் ஒரு செயல் நடக்காது எனப் பொறுமையைக் கை நெகிழ்க்கக் கூடாது.

குறிப்பு

## 3.3.10. ஆய்வு ஒழுக்கம்

ஆய்வுக்கு ஒரு ஒழுக்கம் உண்டு. மணமகன், மணமகள், வேலைவாய்ப்புக்கு உரியவர், இல்லத்தரசி, கணவன், நாட்டின் தலைவன் ஆகியோருக்கெல்லாம் சில தகுதிகள் அமைந்த ஒழுகலாறு உள்ளதுபோல ஆய்வாளருக்கும் ஓர் ஒழுகலாறு உண்டு. அதாவது, குறிக்கோள் மிக்க தேடல், பொருட்கள் அல்லது செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் உண்மைகளை அறில், கல்வி பட்டறிவு ஆகியன நிரம்புதல், கருதுகோளைத் தெளிவுற சமைத்துக் கொள்ளுதல், உடன்பாட்டு எதிர்மறைப் பகுதிகள் உட்கொண்டு முடிவுக்கு வருதல் ஆகியன ஆய்வாளரின் ஆய்வொழுக்க ஒழுகலாறுகள் ஆகும்.

மேலும், பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லாமை, களவினாலாகிய ஆக்கம் கருதாமை, உள்ளத்தாற் பொய்யா தொழுகுதல், வெகுளி மறத்தல், ஐயத்தின் நீங்கித் தெளிதல், ஏக்கற்றுங் கற்றல், நுணங்கிய கேள்வியர் ஆதல், நுண்பொருள் காணல், எண்பொருளவாகச் செலல் சொல்லுதல், இடிக்கும் துணையாரை ஆளுதல், எண்ணித்துணிதல், தெளிவிலதனைத் தொடங்காமை, குணம் நாடிக் குற்றமும் நாடுதல் போன்ற பல குறட்பாக்களில் அறிவுறுத்தப்பட்ட நெறிகள் எல்லாம் ஆய்வு ஒழுக்க நெறிகளாகக் கொள்ளத்தக்கனவாகும்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. மைக்கேல் பாரடேயின் ஆய்வுத்திறன் எத்தன்மைத்து?
2. அறிவின் அடையாளமாகத் திருவள்ளுவர் சுட்டுவது யாது?
3. ஆய்வாளருக்குரிய சிறந்த அணிகலன்கள் யாவை?
4. ஆய்வு நாகரிகம் என்பது எது?
5. மெய்வருத்தம் பாராதவர் யார்?
6. ஆய்வு ஒழுக்கம் - சிறுகுறிப்பு வரைக.

## 3.4. ஆய்வுக்குரிய காலம்

ஆய்வு செய்வதற்குக் காலம் ஏதுமில்லை. ஆய்வாளர் ஆய்வு செய்வதற்கு எக்காலம் உகந்ததாகக் கருதுகின்றாரோ அக்காலத்தினை ஆய்வுக்குரிய காலமாகக் கொள்ளலாம். ஆய்வுப் பொருண்மைக்கேற்ப ஆய்வுக்குரிய காலம் அமையும். ஒரு அறிவியல் முறை ஆய்வுக்கூடச்

குறிப்பு

சோதனை ஆய்வில் பகல் இரவு என்று பாராமல் எந்நேரமும் ஆய்வினை மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படலாம். இது ஆய்வின் தன்மையைப் பொருத்து அமையும். இதுபோல் இலக்கிய ஆய்வு மற்றும் வரலாற்று ஆய்வுகளிலும் அமையும். சில ஆய்வுகளில் மட்டும் பகல் பொழுதில் மட்டுமே செய்யக் கூடியன உண்டு. குறிப்பாக, ஆய்வாளர் தான் மட்டும் ஆய்வு செய்யாமல் பிறரை அணுகிச் செய்யக் கூடிய எவ்வாய்வானாலும் அதற்குக் காலம் ஒரு கட்டாயம் ஆகும். பிறரையோ பிற பொருள்களைக் கொண்டோ செய்யும் ஆய்வுக்கு ஆய்வின் பொருண்மைக்கு ஏற்ப காலம் அவசியம் தேவைப்படுகிறது. இதில் பிறரின் ஒத்துழைப்பு நேரம் இங்குக் கருதப்படுகிறது. ஓர் ஆய்வாளன் களப்பணியில் பிறரை நேர்காணல் செய்யப்புகின் நேர்காணல் கொடுப்பவரின் காலம் முன்கூட்டியே நிர்ணயம் செய்த பின் ஆய்வாளர் செல்லவேண்டுதல் உண்டு. அதுபோல் தீர்மானிக்கப்பட்ட ஆய்வுத் தரவுகளைத் திரட்டுவதற்கும் காலம் அவசியம் தேவை. பகல் நேரத்தில் விளையக் கூடிய பொருள்களைப் பற்றி ஆய்வு செய்பவனுக்கு இராக் காலம் பயன்படாது. அதுபோல் இரவுக் காலத்தில் விளையக் கூடிய பொருள்களைப் பற்றி ஆய்வு செய்பவனுக்கு பகல் காலம் பயன்படாது. தேசிய நெடுஞ்சாலையில் நெரிசல் நிறைந்த நேரம் எது? என்பது பற்றி ஆய்வு செய்யும் ஒருவனுக்கு பகல் - இரவு இரண்டு வேளைகளிலும் வாகனங்கள் செல்லும் எண்ணிக்கையைக் கணக்கிட்டு ஆய்வு செய்ய வேண்டும். இவ்வகையான ஆய்வுகளுக்குப் பகலிரவு நேரம் உட்படுத்தப்படும்.

## 3.5. தொகுத்துக் காண்போம்

- ஆய்வாளர்க்குரிய தகுதிகள் என்னென்ன என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வாளர் தன்னுடைய ஆய்வு செய்வதற்கான காலம் எதுவென பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 3.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 3.3. 2. 3.3.4.

| | | | |
|---|---|---|---|
| 2. | 3.3.6. | 4. | 3.3.7. |
| 5. | 3.3.8. | 6. | 3.3.10. |

குறிப்பு

## 3.7. பாடம் பயிறன்றபின் செய்யும் பயிற்சிகள்

1. ஆய்வாளருக்குரிய தகுதிகள் யாவை? அவற்றைப் பற்றிக் கட்டுரை வரைக.
2. ஆய்வுக்குரிய காலத்தினை ஆய்வாளர் எவ்வாறெல்லாம் தேர்ந்தெடுக்ககலாம் என்பது பற்றி விளக்குக.

# கூறு 4. ஆய்வு நோக்கினைச் சுட்டல் - ஆய்வுச் சிக்கல் - ஆய்வுப் பொருள் பற்றிச் செய்யப்பட்ட ஆய்வுகள்

## 4.1. முன்னுரை

ஆய்வாளன் ஆய்வுக்குள் புகும் முன் தன்னுடைய ஆய்வு எந்த நோக்கத்தினை நோக்கிச் செல்கிறது என்பதை முதலில் தீர்மானம் செய்து கொண்டு அதற்குரிய கருதுகோளை வகுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு வகுத்துக்கொண்ட கருதுகோளுக்கிணங்க ஆய்வுச்சிக்கலை தேட வேண்டும். ஆய்வுக் கருதுகோளுக்குகிணங்க செய்யப்பெற்ற முந்தைய ஆய்வுகள் பற்றிய தெளிவு வேண்டும். இவற்றைப் பற்றி இப்பகுதியில் காண்போம்.

## 4.2. குறிக்கோள்கள்

- ஆய்வு நோக்கம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

- ஆய்வு நோக்கத்தினை மையமிட்ட ஆய்வுச் சிக்கல் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வாளன் மேற்கொள்ளும் ஆய்வுப் பொருள் பற்றி ஏற்கெனவே செய்யப்பெற்ற ஆய்வுகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

குறிப்பு

## 4.3. ஆய்வு நோக்கினைச் சுட்டல்

ஆய்வு நோக்கம் என்பது, ஆய்வு ஆய்வாளரின் ஆய்வுத் தன்மையைப் பிரதிபலிப்பனவாகும். பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள் என்ற ஆய்வுத் தலைப்பு காலந்தோறும் வெளிவந்த பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப் பதிப்புகள் பற்றியும் அவற்றின் வரலாறு பற்றியும் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமையும். இவ்வாறு ஒரு நோக்கத்தினைக் கொண்டு ஆய்வைத் தொடங்கும் முன் இவ்வாய்வின் இலக்கு அல்லது கொள்கை அல்லது குறிக்கோள் ஆகியன எவ்வாறு அமையவேண்டும் என்று தற்காலிகத் தீர்வை அமைத்துக்கொள்ளுதல் “கருதுகோள்” ஆகும். இக்கருதுகோள் ஆய்வாளரின் ஊகத்தாலும், அனுபவத்தாலும், அனுமானத்தாலும், முன்மொழி உரையாலும் நிகழக்கூடியது. இக்கருதுகோள் ஆய்வு செய்யப் புகும்முன் உருவாக்கிக் கொள்வதாகும். ஆய்வுப் பொருளுக்கு விடை காண முற்பட்ட போது, ஆய்வாளர் கொண்ட கருதுகோள் சரியாகவும் அமையலாம்; தவறாகவும் அமையலாம். ஆய்வு இத்தகையதாக இருக்கலாம் என்று எண்ணித் தொடங்குவதே “கருதுகோள்”. இதனை ஆங்கிலத்தில் 'Hypothesis' என்பர்.

### 4.3.1. கருதுகோளின் தேவை

ஆய்வில் மெய்ம்மையைத் தேடிக் காண்பதற்கான ஒரு கருவியே கருதுகோள். கருதுகோள் இல்லாத ஆய்வு கடிவாளம் இல்லாத குதிரை போன்றது. கருதுகோள் என்பது, ஆய்வின் ஊகம் என்றாலும், இவ்வூகமே ஆய்வுக்குத் தேவையான தரவுகள் திரட்டுவதற்கும் தேவையற்ற தரவுகளைச் சேகரிப்பதைத் தடுப்பதற்கும் உறுதுணையாகிறது. எனவே, ஆய்வாளனுக்குக் கருதுகோள் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கின்றது.

குறிப்பு

ஒரு கொள்கை அல்லது கோட்பாடு அல்லது ஆய்வு குறித்து இறங்கும்போது நம் உள்ளத்தில் அதன் முடிவு குறிப்பிட்ட ஒன்றாக இருக்கக் கூடும் என்று கருதும்போது கருதுகோள் இங்குத் துணைநிற்கும். ஆராய்ச்சியில் ஒரு மெய்ம்மையைக் காண்பதற்கு என அமைந்த கருவியே கருதுகோள் எனலாம்.

கருதுகோள் என்பது ஆய்வளரின் ஊகமான கருத்து எனினும், அவரைத் தரவுகள் திரட்ட வழிகோலவும், தொடர்ந்த தேடலுக்கு வாய்ப்பளிக்கவும் செய்கிறது. கையில் ஒரு முகவரியை வைத்துக்கொண்டு இனம்புரியாத ஊரில் நாம் மேற்கொள்ளும் தேடல் போன்றதே கருதுகோளுடன் செய்யும் ஆய்வு என்பதை அறிதல் வேண்டும். மனித உள்ளத்தில் கனவுகள் போன்று சில சமயங்களில் சில எண்ண எழுச்சிகள் ஏற்படும். பறவைகள் பறந்து செல்லும் நிலையைக் கண்டு தானும் அவ்வாறு பறக்கக் கூடும் என்று கருதியதன் விளைவே வானூர்தி. வானத்தில் பறக்கலாம் என்ற கருதுகோள் ரைட் சகோதரர்களின் உள்ளத்தில் தோன்றியது. பல சோதனைகளுக்குப் பின் அக்கருதுகோள் உண்மை ஆயிற்று. ஆய்வாளனுக்குத் தன் கருதுகோள் மீது தெளிவும் நம்பிக்கையும் இருக்க வேண்டும். அப்போதுதான் ஆய்வு சிறக்கும்.

## 4.3.2. கருதுகோளின் தகுதிகள்

ஆய்வாளர் தம் ஆய்வுக்கு ஊகமாக அமையும் ஒரு முடிவைக் குறித்து எண்ணும் போது, சில தகுதிகளைப் பெற்றதாகக் கருதுகோள் அமையவேண்டும். அதாவது, செயன்முறையால் சோதிக்கத்தக்கதாகவும், கோட்பாட்டளவில் தெளிவுடையதாகவும், ஆய்வுப்பொருளோடு நெருங்கிய தொடர்புடையதாகவும், பொதுத்தன்மை நீங்கிய சிறப்புடையதாகவும், கிடைக்கும் உத்தியோடு தொடர்புடையதாகவும், எளிமையானதாகவும், தரவுகளை வகைப்படுத்த உதவுவதாகவும், தொடர்ந்து தரவுகள் திரட்ட உந்துவதாகவும் கருதுகோள் அமைந்திருக்கவேண்டும்.

## 4.3.3. கருதுகோள் உருவாக்கம்

கருதுகோள் உருவாக்காத நிலையில் ஆய்வாளரின் பணி கடுமையாக இருக்கும்; காலம் தேவையின்றி வீணழியும்; கருத்துத் தெளிவின்மை உருவாகும். எனவே, ஒரு ஆய்வாளன் கருதுகோளை

குறிப்பு

உருவாக்கிக் கொள்ள வேண்டும். கருதுகோள் உருவாக்கிக் கொள்வதற்கு ஆய்வாளர் ஆய்வுப் பொருள் குறித்த ஆழ்ந்த சிந்தனையைப் பெற்றிருக்கவேண்டும். அதாவது, ஆய்வாளன் ஆய்வுப் பொருள் குறித்து கூர்மையான உற்றுநோக்கல் தன்மை பெற்றவராகவும், ஒழுங்குபடுத்தப்பெற்ற கற்பனை மற்றும் படைப்புச் சிந்தனை அமையப் பெற்றவராகவும், வாய்பாடு வடிவமாகக் கொள்ளப்பட்ட வரையறை உருவாக்குபவராகவும் இருக்கவேண்டும்.

## 4.3.4. கருதுகோளின் வகைகள்

கருதுகோளின் வகைகளை எளிய கருதுகோள், மாற்றுக் கருதுகோள், பயனில் கருதுகோள், எதிர்மறைக் கருதுகோள் என நான்கு வகையாகப் பகுக்கலாம்.

### 4.3.4.1. எளிய கருதுகோள்

எத்தரப்பினரும் புரிந்துகொள்ளுவதற்கு உகந்த வகையில் அமைத்துக் கொள்ளும் கருதுகோள் “எளிய கருதுகோள்” ஆகும்.

### 4.3.4.2. மாற்றுக் கருதுகோள்

தேர்ந்தெடுத்த கருதுகோள் பயன்படாது என்றறிந்த நிலையில் வேறொரு கருதுகோள் உருவாக்கிக் கொள்வது “மாற்றுக் கருதுகோள்” ஆகும்.

### 4.3.4.3. பயனில் கருதுகோள்

தேர்ந்தெடுக்கப்பட்ட கருதுகோள் தொடக்க நிலையிலோ, இடையிலோ பயன்தராமல் போவது “பயனில் கருதுகோள்” ஆகும்.

### 4.3.4.4. எதிர்மறைக் கருதுகோள்

நடைமுறைக்கு ஒவ்வாத வகையில் அமையக் கூடிய கருதுகோள் “எதிர்மறைக் கருதுகோள்” ஆகும்.

ஆய்வாளன் தேர்ந்தெடுக்கப்படும் கருதுகோள் ஆய்வுப் பொருளாகிறது. இவ்வாய்வுப் பொருளானது ஆய்வுச் சிக்கல் நிறைந்ததாக இருக்கவேண்டும். அதாவது, கொள்கை அளவிலோ

செயல்முறை அளவிலோ ஒரு சிக்கலைத் தோற்றுவிப்பதே ஆய்வுப் பொருளாகும்.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**

1. ஆய்வு நோக்கம் என்பது யாது?
2. கருதுகோள் என்றால் என்ன?
3. கருதுகோளின் தகுதிகள் யாவை?
4. கருதுகோளின் வகைகள் யாவை?

## 4.4. ஆய்வுச் சிக்கல்

ஆய்வுக்கு அடிப்படையானது "ஆய்வுச் சிக்கல்" ஆகும். இவ்வாய்வுச் சிக்கல் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை உட்வொர்த்து "சிக்கல் என்பது எதுவென்றால், எதற்கு நாம் நம் உள்ளுணர்வின் மூலம் உடனடியாகவும் வெற்றிகரமாகவும் விடைகாண முடியாத நிலையுளதோ; எது நமக்குப் பழக்கப்பட்ட முறைகளினால் எளிதில் தீர்வுகாண முடியாததாகவுளதோ அதுவே" என்கின்றார்.

### 4.4.1. ஆய்வுச் சிக்கல் தேர்வில் எண்ணத்தக்கன

ஆய்வுக்குரிய சிக்கலைத் தேர்ந்தெடுக்கும் முன் ஆய்வாளர் பின்வருமாறு எண்ணுதல் வேண்டும்.

- ஆய்விற்குத் தேர்ந்துகொண்ட துறை தனக்கு ஆர்வமுடையதா?
- சிக்கல் தம் பாடப்பொருளோடு இயைந்ததா?
- ஆய்வுச் சிக்கலைத் தீர்ப்பதற்கான ஆர்வம் தன்னுடைய அறிவு வேட்கையால் பிறந்ததா?
- ஆய்வு பண வருவாயைக் கருதியதா?
- பதவி, செல்வாக்கு உயர்வைக் கருதியதா?
- இச்சிக்கல் ஏற்கெனவே வேறொருவரால் எண்ணப்பட்டதா?
- இதற்குமுன் எண்ணப்பெற்று நிறைவேறாமல் உள்ளதா?
- சிக்கலைத் தீர்ப்பதற்குரிய முதன்மை மற்றும் துணைமை ஆதார நூல்கள் கிடைக்குமா?
- சிக்கல் தீர்வுக்கான அறிவுரைகள் மற்றும் வழிமுறைகள் கிடைக்குமா?
- சிக்கலுக்குகந்தவாறு ஆய்வு வழிகாட்டி நெறிப்படுத்துவாரா?

- காலச்சூழல், இட அமைவு, பொருளாதார வாய்ப்பு ஆகியன சிக்கலை அணுக இடந்தருமா?
- குறிப்பிட்ட கால எல்லைக்குள் தீர்வுகாண முடியுமா?
- சிக்கல் தீர்வால் தனக்கும் சமுதாயத்திற்கும் அறிவுலகிற்கும் பயனுண்டா?
- இன்றைய அறிவுத்துறையில் நிறைவு செய்யப்பட வேண்டிய இடைவெளிகளைக் காட்டுகின்ற துறையா? இடைவெளிகள் உள்ளனவா? இணைப்பு அவசியமா?
- திரும்பப் பார்க்கவேண்டிய, ஆய வேண்டிய, செம்மை செய்யவேண்டிய நிலை ஆய்வுச் சிக்கல் தேர்ந்தெடுக்கும் துறையில் உள்ளதா?
- இன்றைய ஆய்வுத்துறை சார்ந்த அறிவுப் பரப்பு எல்லைகட்கு அப்பால் மேலும் ஆராய இடம் உள்ளதா?
- தொடங்கும் ஆய்வு நிறைவு செய்யவிருக்கும் முடிவுகள், இன்றைய உடனடியான தேவைக்கு உகந்தவைதானா?
- மொழி, இலக்கியத் துறையிலுள்ள நிறைவுறாத இடைவெளிகளை இது போக்குமா?
- இவ்வாய்வால் மொழிப்பயன்பாடு ஏற்படுமா?
- பிற்கால ஆய்வுக்கு வழிகாட்டியாக அமையுமா?

போன்ற வினாக்களுக்கு விடை கிடைக்கும் ஆய்வுச் சிக்கலை ஆய்வாளர் தேர்ந்துகொள்ளவேண்டும்.

## 4.4.2. ஆய்வுச் சிக்கல் தேர்வு முறைகள்

ஒரு குறிப்பிட்ட சிக்கலை விடுவிப்பதற்கான நோக்கம் என்ன என்பதை மனதிற்கொண்டே சிக்கலைத் தேர்ந்தெடுக்கின்றனர். பெரும்பாலும் பட்டம் பெறுவதை நோக்கமாகக் கொண்டே ஆய்வாளர்கள் சிக்கலைத் தேர்வு செய்கின்றனர். என்றாலும் ஆய்வுக்குச் சிக்கல் அவசியமாகிறது. இவ்வகையில் தேர்ந்தெடுக்கும் முறைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- தனது சொந்த ஆர்வத்தை அல்லது முயற்சி ஆர்வத்தை நிறைவு செய்வதற்கு வேண்டியவாறு சிக்கலைத் தேர்ந்தெடுத்தல்.

குறிப்பு

- முன்னிகழ்ந்த ஆய்வுகளில் குறைபாடு கண்டால், அவற்றின் முறைகளிலோ முடிவுகளிலோ குழப்பமிருந்தால் அவற்றைக் களைவது. புதிய சான்றுகளாலும் வேறு முறைகளினாலும் ஏற்கெனவே கண்ட மெய்ம்மையை நிறுவுதற்குரிய ஒன்றைத் தேர்ந்தெடுத்தல்.
- சமுதாயத்தின் தேவையை நிறைவு செய்யும் சிக்கலைத் தேர்ந்தெடுத்தல்.
- எதிர்கால ஆய்வுக்கு வித்திடும் சிக்கலைத் தேர்ந்தெடுத்தல்.
- பயன்பாடு கருதிய சிக்கலைத் தேர்ந்தெடுத்தல்.
- ஆய்வாளருக்குத் தெரிந்துள்ள அனைத்தையும் வரலாற்றுச் சான்றுகளோடு அலசி ஆய்வுச் சிக்கலைத் தேர்ந்தெடுத்தல்.
- ஆய்வுச் சிக்கலில் முரண்பாடான இடங்களைத் தேர்ந்தெடுத்தல்.

## 4.4.3. ஆய்வுச் சிக்கலை வரையறுத்தல்

ஆய்வாளர் தேர்ந்தெடுக்கும் ஆய்வுச் சிக்கலானது ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டதாக இருக்கவேண்டும். எல்லையகன்ற ஆய்வுச் சிக்கலைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு இடர்ப்படக் கூடாது. ஆய்வுச் சிக்கலை வரையறுக்கத் தேவையான சில எண்ணங்கள் பின்வருமாறு:-

- ஆய்வு எல்லையை வரையறுத்தல்
- ஆய்வாளர் சிக்கலைத் தீர்க்கும் அறிவு பெற்றவராக இருத்தல்
- ஆய்வுக் காலத்திற்கு ஏற்ப ஆய்வுப் பரப்பை அமைத்தல்

## 4.4.4. ஆய்வுச் சிக்கலின் தோற்றுவாய்கள்

ஆய்வுச் சிக்கலை உருவாக்குவதற்குப் பல்வேறு தோற்றுவாய்கள் உள்ளன. அவை பின்வருமாறு:-

- வகுப்பறைகளில் எடுக்கப்படும் பாடங்களில் உருவாகும் சிக்கல்.
- கருத்தரங்குகளில் அரங்கேறும் கட்டுரைகளில் எழுப்பப்படும் வினாக்களில் உருவாகும் சிக்கல்.
- பல்வேறு நூல்களில் உருவான கருத்து மாறுபாடுகளினால் உருவாகும் சிக்கல்.
- முன் ஆய்வேடுகள் விட்டுச்சென்ற சிக்கல்.
- முன் ஆய்வேடுகள் சுட்டிச் சென்ற சிக்கல்

- முன் ஆய்வேடுகள் சுட்டத் தயங்கிய சிக்கல்.
- காலமுறை இதழ்கள் வாயிலாக வெளியான கருத்துக்களின் அடிப்படையில் எழுந்த சிக்கல்.
- கட்டுரைத் தொகுப்புகளில் காணப்படும் சிக்கல்.
- ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டும் குறிப்பிடப் பெறாது மறைமுகமாக உணர்த்தும் சிக்கல்.
- மாநாட்டு உரைத் தொகுப்புக்களில் காணத்தகும் சிக்கல்

எனச் சிக்கலின் தோற்றுவாய்கள் அமைகின்றன.

## 4.4.5. ஆய்வுச் சிக்கலைத் தேர்ந்தபின் செய்யவேண்டுவன

ஆய்வுச் சிக்கலைத் தேர்ந்துகொண்டு அதன் காலம் மற்றும் பரப்பு எல்லைகளை வரையறுக்கப்பட்ட பின் ஆய்வாளர் செய்யவேண்டிய கடமைகள் பலவுண்டு. அவற்றுள் சில பின்வருமாறு:-

- ஆய்வாளர் பட்டம் பெறுவதற்கான ஆய்வில் ஈடுபடும்போது ஆய்வாளர் சில ஆய்வுத் தாள்களையோ ஆய்வுக் கட்டுரைகளையோ வெளியிட்டிருக்க வேண்டும்.
- ஆய்வைத் தொடங்கும் முன்பு ஆய்வாளர் தாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான முதன்மை மற்றும் துணைமை ஆதாரங்களை தக்க வல்லுநர்களைக் கொண்டோ ஆய்வு நெறிகாட்டியைக் கொண்டோ உருவாக்கிக் கொள்ளவேண்டும்.
- ஆய்வுக்குரிய தரவுகளைத் தொகுப்பதற்கு ஒரு திட்டமிட்ட செயற்குறிப்பை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.
- காண வேண்டிய நூலகங்கள், பார்க்கவேண்டிய களங்கள், காணவேண்டிய வல்லுநர்கள், சந்திக்கவேண்டிய அலுவலகங்கள், பதிவு செய்ய வேண்டிய நேர்காணல்கள், எடுக்கவேண்டிய புகைப்படங்கள், தயாரிக்க வேண்டிய வரைபடங்கள் ஆகியவற்றைத் தொடக்கத்திலேயே திட்டமிட்டுக்கொண்டு உரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

## 4.4.6. ஆய்வுச் சிக்கல் தேடுவதில் ஏற்படும் தவறுகள்

குறிப்பு

ஆய்வாளர் தாம் செய்யப்புகும் ஆய்வுச் சிக்கலைத் தேர்ந்தெடுக்கும் போது சில தவறுகளும் நடைபெறுவதுண்டு. அவை பின்வருமாறு:-

- தன் அறிவெல்லையையும், முயற்சியின் பரிமாணத்தையும் உணராமல் மிக விரிவான தலைப்பைத் தேர்ந்தெடுத்துவிட்டுப் பின் வருந்துதல்.
- ஆய்வுக்குத் தேவையான பொருட்செலவு பற்றி எண்ணாமல் அகலக் கால்வைத்துவிட்டு திண்டாடுதல்.
- ஆய்வு மேற்கொள்ளும் கால அளவைக் கருத்தில் கொள்ளாது ஆய்வில் ஈடுபடுதல்.
- ஆய்வுக்குத் துணைசேர்க்கும் தரவுகளின் வலிமையைக் கருத்தில் கொள்ளாமல் ஆய்வில் ஈடுபடுதல்.
- ஆய்வு முடிந்த நிலையில் இவ்வாய்வால் தனக்கும் சமுதாயத்திற்கும் எந்தப் பயனும் இல்லையே என்ற ஆய்வு.
- முன்னாய்வை அடியொற்றி பொய்த்தோற்றத்தை உருவாக்கும் ஆய்வு.
- ஆய்வுலகம் ஏற்றுக்கொள்ளாத ஆய்வு.

**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**

5. ஆய்வுச் சிக்கல் எத்தகையது?
6. ஆய்வுச் சிக்கலை எவ்வாறு வரையறுப்பது?
7. ஆய்வுச் சிக்கலின் தோற்றுவாய்கள் யாவை?
8. ஆய்வுச் சிக்கல் தேர்ந்தபின் செய்யத்தக்கன யாவை?

## 4.5. ஆய்வுப் பொருள் பற்றிச் செய்யப்பட்ட ஆய்வுகள்

ஆய்வாளனுக்குத் தாம் மேக்கொள்ளும் ஆய்வுப் பொருள் பற்றி ஏற்கெனவே செய்யப்பெற்ற ஆய்வுகள் பற்றியும் அவ்வாய்வு முடிவுகள் பற்றியும் தெரிந்திருந்தால்தான் தன்னுடைய ஆய்வை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியும்.

திருக்குறள் வெண்பா நூல்கள் என்னும் ஆய்வுக்குத் திருக்குறளின் ஆளுமையைத் திருக்குறள் வெண்பா நூல்கள் வழி இனங்காணும் ஆய்விற்கு, இரா. சாரங்கபாணி எழுதிய திருக்குறள் உரை

வேற்றுமைகள், கி.வா. ஜகந்நாதன் பதிப்பித்த திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு ஆகியனவும் திருவள்ளுவர் திருநாள் மலர், உலகத் திருக்குறள் மாநாட்டுக் கருத்தரங்க மலர், ஆய்வுக் கட்டுரைத் தொகுதிகள் ஆகியனவும் பொதுநிலையில் முன்னாய்வுகளாக அமையும். திருக்குறள் வெண்பா நூல்களில் ஒன்றான இரங்கேச வெண்பா பற்றி வெளிவந்த முதுகலை ஆய்வுத் திட்டக்கட்டுரை ஒன்றும். எனினும் இவ்வகை நூல்களைக் குறித்த முதலாய்வு, இலக்கிய வகைகள் என்னும் நூலில் திருக்குறள் விளக்க இலக்கியங்கள் என்னும் தலைப்பில் மு. சண்முகம் பிள்ளை படைத்த ஆய்வுரையாகும். இவற்றுடன் திருக்குறள் வெண்பா நூல்களைப் பதிப்பித்த உ.வே.சாமிநாதையர், ச. வையாபுரிப்பிள்ளை, செகவீரபாண்டியனார், கழகப் புலவர் குழுவினர் ஆகியோரின் நூல் முன்னுரைகளும் குறிப்பிடத்தக்க முன்னாய்வுகளேயாகும்.

ஆழ்வார் பாடல்களில் அகப்பொருள் கூறுகள் என்னும் ஆய்வுக்கு சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆழ்வார் பாடல்களில் சிற்றிலக்கியக் கூறுகள் என்னும் தலைப்பில் தி.தா. கீதாராணி முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார். பெரிய திருமொழி ஓர் ஆய்வு என்னும் தலைப்பில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் து. லலிதா என்பவர் முனைவர் பட்ட ஆய்வு செய்துள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பக்தி நெறியில் மணிவாசகரும் திருமங்கையாழ்வாரும் என்னும் தலைப்பில் இரா. மதன்குமார் என்பவர் முனைவர் பட்ட ஆய்வு செய்துள்ளார். பாரதியார் பல்கலைக்கழகத்தில் திருவிருத்தம் - திருவாய்மொழி ஒப்பீடு என்ற தலைப்பில் தா. லோகநாயகி என்பவர் முனைவர் பட்ட ஆய்வு செய்துள்ளார். இவ்வாய்வுகளையெல்லாம் முன்னிருத்தி இவ்வாய்வினை இவ்வாய்வாளர் மேக்கொள்ள வேண்டும்.

சங்க இலக்கியப் பதிப்புகளும் பாடவேறுபாடுகளும் என்னும் தலைப்பினைத் தேர்வு செய்த ஆய்வாளர் எட்டுத்தொகை குறித்த நூல்கள் பதிப்புகள் குறித்த விவரங்களையும் அவற்றுக்கான ஓலைச்சுவடிகள் இருக்குமிடங்களையும் தெரிந்து கொண்டு ஆய்வாளரின் ஆய்வுப் பொருண்மைக்கு ஏற்ப முன்னரே வெளிவந்த பதிப்புகளையும் சுவடிகளையும் பயன்படுத்தவேண்டும். எட்டுத்தொகை நூல்கள்

வெளிவந்த விவரங்களையும் அவற்றுக்கான சுவடிகள் இருக்குமிடங்களையும் பின்வருமாறு காணலாம்.



### 4.5.1. நற்றிணை

எட்டுத் தொகையுள் முதலாவதாகிய நற்றிணை பதிப்பைப் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் 1914ஆம் ஆண்டு தம்முடைய உரையுடன் பதிப்பித்துள்ளார். உ.வே. சாமிநாதையரின் சுவடி இரண்டு, தி.த. கனகசுந்தரம் பிள்ளையின் சுவடி இரண்டு ஆகிய நான்கு சுவடிகளையும், சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலக காகிதச் சுவடியையும் கொண்டு பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் இப்பதிப்பைக் கொணர்ந்துள்ளார். இப்பதிப்பு 1952, 1956, 1962ஆம் ஆண்டுகளில் முறையே மறுபதிப்புகளாக சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது.

பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனாரின் நற்றிணை ஆய்வுரையுடன் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரின் பதிப்பைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1967ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் நற்றிணை விளக்கவுரையை சென்னை அருணா பப்ளிகேஷன்ஸ் 1966ஆம் ஆண்டு முதலிருநூறு பாடல்களை ஒரு தொகுதியாகவும், அடுத்த இருநூறு பாடல்களை மற்றொரு தொகுதியாகவும் என இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலையச் சுவடி, மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடி, டொம்மிச்சேரி கருப்பையா தேவரின் சுவடி, புதுப்பட்டி சிவ.மு. முத்தையா செட்டியாரின் சுவடி ஆகிய நான்கு நற்றிணைச் சுவடிகளையும், பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரின் அச்சுப் பதிப்பு, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை பதிப்பித்த சென்னை சைவசித்தாந்த மகாசமாசப் பதிப்பு ஆகிய இரண்டு நற்றிணை அச்சுப் பிரதிகளையும் கொண்டு இப்பதிப்பை வெளியிட்டுள்ளார்.

புலியூர்க்கேசிகனின் நற்றிணை தெளிவுரையைப் பாரி நிலையம் 1967ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. பிறகு இது பல பதிப்புகளைப் பெற்றுள்ளது.

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தவை பின்னத்தூர் அ. நாராயணசாமி பதிப்பும், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பதிப்பும் ஆகும்.

குறிப்பு

தற்போது நற்றிணைச் சுவடிகள் உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் ஒன்றும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றும் இருப்பதை அறியமுடிகிறது.

## 4.5.2. குறுந்தொகை

திருக்கண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப்பெருமாளரங்கனார் தம்முடைய உரையுடன் குறுந்தொகையை 1915ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடி, முத்துரத்தின முதலியார் வருவித்துக் கொடுத்த சுவடி, மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடி என மூன்று சுவடிகளைக் கொண்டு இப்பதிப்பைக் கொணர்ந்துள்ளார்.

குறுந்தொகை மூலம் மட்டும் 1920ஆம் ஆண்டு கா. நமச்சிவாய முதலியார் வெளியிட்டுள்ளார்.

இராமரத்தின ஐயரின் குறுந்தொகை புத்துரையைக் கலாநிலையம் வார இதழில் 1930ஆம் ஆண்டு ஏப்ரல் மாதந் தொடங்கி டிசம்பர் மாதம் வரை வெளியிட்டுள்ளது. இவ்வுரை தனிநூலாக வெளிவரவில்லை.

திருக்கண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப்பெருமாளரங்கனாரின் குறுந்தொகை அச்சுப் பதிப்பை அடிப்படையாகக் கொண்டு குறுந்தொகை மூலம் மட்டும் புரசைவாக்கம் சோ. அருணாசல தேசிகர் 1933ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் தம்முடைய பதவுரை, விளக்கவுரையுடன் குறுந்தொகையை 1937ஆம் ஆண்டு பதிப்பித் திருக்கின்றார். திருவாவடுதுறை ஆதீனச் சுவடி, திருநெல்வேலி அம்பலவாண கவிராயர் சுவடி, மந்தித்தோப்பு மடத்துச் சுவடி, செங்கோல் மடத்துச் சுவடி, திருமயிலை சண்முகம் பிள்ளை காகிதச் சுவடி, சோடாசவதானம் சுப்பராய செட்டியார் சுவடி, தொழூவூர் வேலாயுத முதலியார் சுவடி, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக காகிதச் சுவடி, புதுக்கோட்டை ராதாகிருஷ்ணையர் காகிதச் சுவடி,

**குறிப்பு**

திருக்கோணமலை த. கனகசுந்தரம் பிள்ளை காகிதச் சுவடி எனப் பத்து மூலச் சுவடிகளைக் கொண்டு குறுந்தொகைப் பதிப்பை உ.வே. சாமிநாதையர் பதிப்பித்திருக்கின்றார். இதன் இரண்டாம் பதிப்பு 1947ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

மகாவித்துவான் ரா. இராகவையங்காரின் குறுந்தொகை விளக்கவுரையை (முதல் 112 பாடல்கள்) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1946ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

உ.வே. சாமிநாதையரின் விளக்கவுரைப் பதிப்பை அடியொற்றி பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் எழுதிய குறுந்தொகை விளக்கவுரையைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1955இல் வெளியிட்டுள்ளது.

புலியூர்க்கேசிகனின் குறுந்தொகை தெளிவுரையைப் பாரிநிலையம் 1965ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இது பல பதிப்புகளைக் கண்டுள்ளது.

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையின் குறுந்தொகை 1985ஆம் ஆண்டு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இலண்டனிலிருந்து வரவழைக்கப்பெற்ற காகிதச் சுவடியின் நுண்படம் (எழுதப்பெற்ற ஆண்டு 1894), அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திருந்து வரவழைக்கப்பட்ட மகாவித்துவான் ரா. இராகவையங்காரின் கையெழுத்துப்படி (மதுரையில் 1899இல் எழுதப்பெற்றது), மதுரைப் புலவர் இளங்குமரனிடமிருந்து பெறப்பெற்ற பூண்டியப்பப் புலவரின் ஏட்டுக் குறிப்பு, திரு. அடிகளாசிரியரின் வழியாகக் கிடைத்த 226 பாடல்களுக்கான காகிதச்சுவடி ஆகிய நான்கு சுவடிகளையும், திருக்கண்ணபுரம் சௌரிப்பெருமாளரங்கனாரின் பதிப்பு, புரசைவாக்கம் சோ. அருணாசல தேசிகரின் மூலப்பதிப்பு, கலாநிலையம் இதழில் வெளியான இராமரத்தின ஐயரின் உரை, உ.வே. சாமிநாதையரின் பதிப்பு, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பு ஆகிய ஐந்து குறுந்தொகைப் பதிப்புகளையும் அடியொற்றிப் பொழிப்புரையாக, ஆய்வுப்பாட நுண்பதிப்பாக வெளியிட்டுள்ளார்.

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தவை திருக்கண்ணபுரம் சௌரிப்பெருமாளரங்கனார் பதிப்பும்,

உ.வே. சாமிநாதையர் பதிப்பும், பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை ஆய்வுப்பாட நுண்பதிப்பும் ஆகும்.

குறிப்பு

தற்போது குறுந்தொகைச் சுவடிகள் உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் ஒன்றும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றும், சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் ஒன்றும், திருவாவடுதுறை ஆதீனத்தில் ஒன்றும் இருப்பதை அறியமுடிகிறது. இங்குள்ள சுவடிகளை உ.வே. சாமிநாதையரும், மு. சண்முகம் பிள்ளையும் பயன்படுத்தி உள்ளதால் இனிக் குறுந்தொகைச் சுவடிகள் இருக்காது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், பல தமிழறிஞர்கள் வீடுகளில் இருக்கலாம். மாற்றுச் சுவடி கிடைக்கும் நிலையில் குறுந்தொகைக்கு வேறொரு பதிப்பு தேவையாகிறது.

## 4.5.3. ஐங்குறுநூறு

மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை எனும் திணை வைப்பு முறையில் முறையே நூறு நூறு பாடல்கள் கொண்டதாக உ.வே. சாமிநாதையர் ஐங்குறுநூறு பதிப்பை 1903ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். இதன் இரண்டாம் பதிப்பு 1920ஆம் ஆண்டும், மூன்றாம் பதிப்பு 1944ஆம் ஆண்டும் வெளிவந்துள்ளது. திருவாவடுதுறை ஆதீனச் சுவடி, கே.எம். வேலுப்பிள்ளை சுவடி, திருமயிலை சண்முகம் பிள்ளை சுவடி ஆக மூன்று மூலம் மற்றும் கருத்துரை கொண்ட சுவடிகளும், ஆழ்வார் திருநகரி தே. இலட்சுமணக் கவிராயரின் மூலம், கருத்துரை மற்றும் பழைய உரை கொண்ட சுவடியும் கொண்டு இப்பதிப்பைப் பதிப்பித்திருக்கின்றார்.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் முதல் நூறு பாடல்களுக்கான ஐங்குறுநூறு உரையை 1938ஆம் ஆண்டு கா. கோவிந்தன் வெளியிட்டுள்ளார். அதன்பிறகு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக மருதம் மற்றும் நெய்தல் ஒரு தொகுதியாகவும், குறிஞ்சி மற்றும் பாலை ஒரு தொகுதியாகவும், முல்லை ஒரு தொகுதியாகவும் என மூன்று தொகுதிகளாக ஐங்குறுநூறு பதிப்பை 1957ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். இப்பதிப்பிற்கு உ.வே. சாமிநாதையரின் பதிப்பும், சீர்காழி கோவிந்தசாமி ரெட்டியாரின் சுவடியும் துணைபுரிந்திருக்கின்றன.

பொ.வே. சோமசுந்தரனாரின் ஐங்குறுநூறு விளக்கவுரையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1961ஆம் ஆண்டு வெளியிட்டு உள்ளது. இதன் மறுபதிப்பு 1966ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தவை உ.வே. சாமிநாதையரின் பதிப்பும், ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் பதிப்பும் ஆகும்.

தற்போது ஐங்குறுநூறு சுவடிகள் உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் ஒன்றும், திருவாவடுதுறை ஆதீனத்தில் ஒன்றும் இருப்பதை அறியமுடிகிறது.

## 4.5.4. பதிற்றுப்பத்து

உ.வே. சாமிநாதையர் பழைய உரையுடன் 1904ஆம் ஆண்டு பதிற்றுப்பத்தைப் பதிப்பித்துள்ளார். இதன் இரண்டாம் பதிப்பு 1920ஆம் ஆண்டும், மூன்றாம் பதிப்பு 1941ஆம் ஆண்டும், நான்காம் பதிப்பு 1945ஆம் ஆண்டும், ஐந்தாம் பதிப்பு 1949ஆம் ஆண்டும், ஆறாம் பதிப்பு 1957ஆம் ஆண்டும் வெளிவந்துள்ளது. திருவாவடுதுறை ஆதீனச் சுவடிகள் இரண்டு, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடி, ஆழ்வார் திருநகரி தே. இலட்சுமணக் கவிராயரின் சுவடி, ஜே.எம். வேலுப்பிள்ளையின் சுவடி, தி.த. கனகசுந்தரம் பிள்ளையின் சுவடி, திருமயிலை சண்முகம் பிள்ளையின் சுவடி ஆக ஏழு சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு இப்பதிப்பைக் கொணர்ந்துள்ளார்.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் பதிற்றுப்பத்து விளக்கவுரையை 1950ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது. இப்பதிப்பிற்கு இரண்டு ஏட்டுச் சுவடிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடும் அவர், யாரிடமிருந்து சுவடி பெற்ற செய்தியைக் குறிப்பிடவில்லை. இதன் இரண்டாம் பதிப்பு 1955ஆம் ஆண்டும், மூன்றாம் பதிப்பு 1958ஆம் ஆண்டும், நான்காம் பதிப்பு 1963ஆம் ஆண்டும், ஐந்தாம் பதிப்பு 1968ஆம் ஆண்டும் வெளிவந்துள்ளது.

பண்டிதர் சு. அருளம்பலத்தின் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையை யாழ்ப்பாணத்துக் காரைநகர் அ. சிவானந்தநாதன் 1960ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

குறிப்பு

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தவை உ.வே. சாமிநாதையர் பதிப்பும், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பதிப்பும் ஆகும்.

தற்போது மூலமும் உரையும் கொண்ட பதிற்றுப்பத்துச் சுவடிகள் உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் ஒன்றும், கொல்கத்தா இந்திய தேசிய நூலகத்தில் ஒன்றும் இருப்பதை அறியமுடிகிறது.

## 4.5.5. பரிபாடல்

பரிமேலழகர் உரையுடன் கூடிய பரிபாடல் பதிப்பை உ.வே. சாமிநாதையர் 1918ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். இதன் மறுபதிப்பு 1935ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. திருவாவடுதுறை ஆதீனச் சுவடி (முதற்பாட்டுரை முதல் 19ஆம் பாட்டு 38ஆம் அடி மூலம் வரை), ஆழ்வார் திருநகரி தே. இலட்சுமணக் கவிராயரின் சுவடி (இரண்டாவது முதல் 22ஆவது பாடல் உரை வரை) இரண்டு, தருமபுர ஆதீன ஒற்றை ஏடுகள் (பாயிரம், பனிக்கடல் (5) எனும் பாடல் மட்டும் எழுதிய ஏடுகள்) இரண்டு, இரா. இராகவையங்கார் உதவிய மூல ஒற்றை ஏடுகள் இரண்டு ஆகியன கொண்டு உ.வே. சாமிநாதையர் இப்பதிப்பைக் கொணர்ந்துள்ளார்.

பொ.வே. சோமசுந்தரனாரின் பரிபாடல் விளக்கவுரையை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1957ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இதன் இரண்டாம் பதிப்பு 1964ஆம் ஆண்டும், மூன்றாம் பதிப்பு 1969ஆம் ஆண்டும் வெளிவந்துள்ளது.

புலியூர்க்கேசிகனின் தெளிவுரையை பாரி நிலையம் 1971ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இது பல பதிப்புகளைப் பெற்றுள்ளது.

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தது உ.வே. சாமிநாதையரின் பதிப்பு மட்டுமே.

தற்போது பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும் கொண்ட சுவடிகள் உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் ஒன்றும், அண்ணாமலைப்

பல்கலைக்கழகத்தில் ஒன்றும், திருவாவடுதுறை ஆதீனத்தில் ஒன்றும் இருப்பதை அறியமுடிகிறது.



### 4.5.6. கலித்தொகை

குறிப்பு

சி.வை. தாமோதரம் பிள்ளை கி.பி.1887ஆம் ஆண்டு கலித்தொகை நச்சினார்க்கினியர் உரையைப் பதிப்பித்திருக்கின்றார். யாழ்ப்பாணம் வி. கனகசபைப் பிள்ளை, திருமணம் கேசவ சுப்பராய முதலியார், மயிலை இராமலிங்கம் பிள்ளை, புதுச்சேரி நெல்லித்தோப்பு சொக்கலிங்கம் பிள்ளை பேத்தி ஆகியோருடைய சுவடிகள், தஞ்சை சரஸ்வதிமகால் நூலகம், சென்னை பிராசிய கிரந்த மண்டபம் ஆகிய நிறுவனச் சுவடிகள், பெயர் தெரியாத திண்டிவன நண்பரின் சுவடி ஆகிய நச்சினார்க்கினியரின் உரைச் சுவடிகளையும், புதுவை நயனப்ப முதலியார், ஆறுமுக நாவலர், திருவாவடுதுறை ஆதீனம் (2 சுவடிகள்), திருவாவடுதுறை ஆதீன உதவியுடன் பெற்ற (2 சுவடிகள்) சுவடிகள் ஆகிய மூலச் சுவடிகளையும் அடிப்படையாகக் கொண்டு சி.வை. தாமோதரனார் கலித்தொகையைப் பதிப்பித்திருக்கின்றார்.

இ.வை. அனந்தராமையர் சி.வை.தாமோதரம் பிள்ளையின் பதிப்பில் இருந்த சில குறைபாடுகளை நீக்கும் பொருட்டு 1925ஆம் ஆண்டு பாலைக்கலி மற்றும் குறிஞ்சிக் கலியும், மருதக்கலி மற்றும் முல்லைக்கலியும், 1931ஆம் ஆண்டு நெய்தற்கலியும் என மூன்று தொகுதிகளாகப் பதிப்பித்திருக்கின்றார். இப்பதிப்பு நச்சினார்க்கினியர் உரையுடன் கூடியதாகும். இம்மூன்று தொகுதிகளின் இணைந்த நிழற்படப் பதிப்பை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1984ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

உ.வே.சாமிநாதையர் கொடுத்த சி.வை.தா.வின் கலித்தொகை அச்சுநூல் ஒன்று மற்றும் ஏட்டுச் சுவடி இரண்டு கொண்டும், அனவரத விநாயகம் பிள்ளை மற்றும் கா. நமச்சிவாய முதலியார் ஆகியோர் சில கலித்தொகை சுவடிகளை ஒப்பிட்டு திருத்தம் மேற்கொண்டிருந்த சி.வை.தா.வின் அச்சுநூல்கள் கொண்டும் இப்பதிப்பை இ.வை. அனந்தராமையர் பதிப்பித்திருக்கின்றார். மூலம் மட்டும் கொண்ட ஒரு பதிப்பை 1930ஆம் ஆண்டு இ.வை. அனந்தராமையர் பதிப்பித்து இருக்கின்றார்.

அதன் பிறகு திரு.தை.ஆ. கனகசபாபதி பாலைக்கலிக்குப் புத்துரையொன்றியற்றி 1937ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

பாகனேரி வெ.பெரி.பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியாரின் பொருளுதவியுடன் இளவழகனார் ஆராய்ச்சி முன்னுரையும் நச்சினார்க்கினியர் உரையும் சேர்ந்த ஒரு பதிப்பை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1938ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இப்பதிப்பு 1943, 1949, 1955, 1958, 1962, 1967ஆம் ஆண்டுகளில் முறையே வெளிவந்துள்ளது.

சக்திதாசன் சுப்பிரமணியத்தின் விளக்கவுரையைச் சென்னை, ரமா பப்ளிகேஷன்ஸ் 1958ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

புலியூர்க்கேசிகனின் தெளிவுரையைச் சென்னை, தேனருவிப் பதிப்பகம் 1958ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இதன் இரண்டாம் பதிப்பை இப்பதிப்பகம் 1965ஆம் ஆண்டும், இதன் மூன்றாம் பதிப்பை பாரி நிலையம் 1971ஆம் ஆண்டும் வெளியிட்டுள்ளது.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வள்ளுவப் பண்ணை வழியாக 1958ஆம் ஆண்டு ஒரு பதிப்பைக் கொணர்ந்துள்ளார்.

பொ.வே. சோமசுந்தரனாரின் விளக்கவுரையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1969ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இதன் மறுபதிப்பு 1970ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தவை சி.வை. தாமோதரம் பிள்ளையின் பதிப்பும், இ.வை. அனந்தராமையரின் பதிப்பும் ஆகும்.

தற்போது கலித்தொகைச் சுவடிகள் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் இரண்டும், உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் மூன்றும், திருப்பதி ஸ்ரீவெங்கடேசுவரா பல்கலைக்கழகத்தில் ஒன்றும் இருப்பதை அறியமுடிகிறது.

## 4.5.7. அகநானூறு

அகநானூற்றின் முதற்பதிப்பை ரா. இராகவையங்கார் கி.பி.1920இல் மயிலாப்பூர் கம்பர் விலாசம் வே. இராசகோபாலன் உதவியுடன் பதிப்பித்திருக்கின்றார். பொ. பாண்டித்துரைத் தேவர்

உதவிய பெரும்பழனை ஏட்டுச் சுவடி, திருநெல்வேலி ஸ்ரீமான் நெல்லையப்பக் கவிராயர், சென்னை ஸ்ரீமான் தி.த. கனகசுந்தரம் பிள்ளை (ஏட்டுச் சுவடி மற்றும் காகிதச் சுவடி), சென்னை மேரி ராணியார் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் கா.ரா. நமச்சிவாய முதலியார், திருமயிலை வித்துவான் ஸ்ரீமான் சண்முகம் பிள்ளை ஆகியோரின் சுவடிகளையும், சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலையச் சுவடியையும் அடிப்படையாகக் கொண்டு ரா. இராகவையங்கார் இப்பதிப்பைக் கொணர்ந்துள்ளார். 1923ஆம் ஆண்டில் அகநானூற்றின் இரண்டாம் பதிப்பும், 1935ஆம் ஆண்டில் மூன்றாம் பதிப்பும், 1926ஆம் ஆண்டில் களிற்றியானைநிரை மட்டும் இவரால் வெளியிடப் பெற்றுள்ளது.

அகநானூறு களிற்றியானைநிரையின் முதல் தொண்ணூறு பாக்களுக்குப் பழைய குறிப்புரையும், எஞ்சிய முப்பது பாக்களுக்கு வே. இராசகோபாலன் விளக்கவுரை எழுதியும் 1926ஆம் ஆண்டு வெளியிட்டார். மணிமிடைபவளத்தில் முதல்நாற்பது பாக்களுக்கு மட்டும் விளக்கவுரை எழுதி நூல் முழுமையும் 1933 வெளியிட்டார். இவர் உரை எழுபது பாக்களுக்கு மட்டுமே (91-160) அமைந்துள்ளது.

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை ஆகியோர் நூல் முழுமைக்கும் விளக்கவுரை வரைந்துள்ளனர். இவ்வுரைப் பதிப்பு களிற்றியானைநிரை 1943இலும், நித்திலக்கோவை 1944இலும், மணிமிடைபவளம் 1946இலும் வெளிவந்துள்ளன. பாகனேரி வெ.பெரி.பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்களின் பொருளுதவியுடன் இவற்றைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியிட்டுள்ளது. பின்னர், நூல் முழுமையும் இவர்கள் உரையுடன் ஒரு தொகுதியாக மறுபதிப்பு 1961, 1965, 1968ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளது.

புலியூர்க்கேசிகனின் களிற்றியானைநிரை தெளிவுரை மற்றும் மணிமிடைபவளம் தெளிவுரைகளை 1960இலும், நித்திலக்கோவை தெளிவுரையை 1962இலும் பாரி நிலையம் வெளியிட்டுள்ளது. இதன் பிறகு பல பதிப்புகளை இந்நூல் கொண்டுள்ளது.

பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் களிற்றியானை நிரையின் முதல் ஐம்பது பாக்களுக்கு எழுதிய விளக்கவுரையை 1966இலும், முதல் நூறு பாக்களுக்கு எழுதிய விளக்கவுரையை

1974இலும், நூல் முழுமைக்கும் எழுதிய விளக்கவுரையை 1970இலும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது.



யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர் சி. கணேசையர் ஈழகேசரி இதழில் 1956-1958இல் களிற்றியானை நிரைக்கு மட்டும் எழுதிய உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா சிறந்த முன்னுரையுடன் 2002இல் வெளியிட்டுள்ளார்.

அகநானூறு முழுமைக்கும் உரிய உரையினைப் பேராசிரியர் மயிலம் வே. சிவசுப்பிரமணியன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சென்னை உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம் 1990இல் வெளியிட்டுள்ளது.

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தது இரா. இராகவையங்காரின் பதிப்பு மட்டுமே.

தற்போது அகநானூற்றுச் சுவடிகள் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையத்தில் 6(மூலம் - 3, உரை 2, மூலமும் உரையும் 1)ம், திருவாவடுதுறை ஆதீனத்தில் ஒன்றும், கொல்கத்தா இந்திய தேசிய நூலகத்தில் ஒன்றும் இருப்பதை அறியமுடிகிறது.

## 4.5.8. புறநானூறு

எட்டுத் தொகை நூல்களில் எட்டாவதாக எண்ணத்தக்க புறநானூற்றின் முதற் பதிப்பை மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் பழைய உரையுடன் 1894ஆம் ஆண்டு பதிப்பித்து இருக்கின்றார். திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தேசிகர், திருத்தணிகை சரவணப் பெருமாளையர், யாழ்ப்பாணம் நல்லூர் சதாசிவப் பிள்ளை மற்றும் த. கனகசுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாணம் வி. கனகசபைப்பிள்ளை, மந்தித்தோப்பு சங்கர சுப்பிரமணிய தத்த சுவாமிகள், திருநெல்வேலி கவிராச ஈசுவரமூர்த்திப் பிள்ளை ஆகியோரின் மூலச ¢சுவடிகளையும், அரியூர் சாமிநதையர், திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தேசிகர், திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர், ஆழ்வார் திருநகரி தாயவலந்தீர்த்த கவிராயர், மிதிலைப்பட்டி அழகிய

சிற்றம்பலக் கவிராயர் (இரண்டு சுவடிகள்), வண்ணார்பேட்டை திருப்பாற்கடனாத கவிராயர், தென்காசி சுப்பையா பிள்ளை, தூத்துக்குடி குமாரசாமிப் பிள்ளை, யாழ்ப்பாணம் வண்ணைநகர் சுவாமிநாத பண்டிதர் ஆகியோரின் மூலமும் உரையும் கொண்ட சுவடிகளையும், மதுரைத் தமிழ்ச் சங்க மூலமும் உரையும் கொண்ட சுவடியையும் அடிப்படையாகக் கொண்டு உ.வே. சாமிநாதையர் இப்பதிப்பைக் கொணர்ந்துள்ளார். இதன் இரண்டாம் பதிப்பு 1923லும், மூன்றாம் பதிப்பு 1935லும், நான்காம் பதிப்பு 1950லும், ஐந்தாம் பரிரப்பு, 1956லும், ஆறாம் பதிப்பு 1963லும், ஏழாம் பதிப்பு, 1971லும் உ.வே. சா. நூல் நிலையம் வெளியிட, இதற் நிழற்படப் பதிப்பைத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் 1985ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. மூலம் மட்டும் கொண்ட புறநானூற்றுப் பதிப்பை உ.வே. சாமிநாதையர் அவர்கள் 1936ஆம் ஆண்டு கொணர்ந்துள்ளார்.

ஔவை சு. துரைசாமி பிள்ளையின் புறநானூறு விளக்கவுரையின் முதல் இரு நூறு பாடல்களை ஒரு தொகுதியாகவும், பின் இருநூறு பாடல்களை மற்றொரு தொகுதியாகவும் எனச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1947 மற்றும் 1951ஆம் ஆண்டுகளில் முறையே வெளியிட்டுள்ளது. பல சுவடிகளை ஒப்பிட்டு ஆய்ந்து வெளிவந்த உ.வே. சாமிநாதையரின் இரண்டாம் பதிப்பு அச்சு நூலையும், அரித்துவார மங்களம் வா. கோபாலசாமி ரகுநாத ராசாளியார் சுவடியையும் அடிப்படையாகக் கொண்டு இப்பதிப்பை வெளியிட்டுள்ளார். இவ்விரண்டின் இணைந்த மறுபதிப்பு 1952ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனாரின் புறநானூறு விளக்கவுரையைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1955ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

புலியூர்க்கேசிகனின் தெளிவுரையைச் சென்னை, கேசிகன் பதிப்பகம் 1958ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இதன் மறுபதிப்பு 1959ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

புறநானூறு மூலமும் உரையும் - முன் செம்பாகமாக முதல் இருநூறு பாடல்களை தஞ்சை வடிவேல் பதிப்பகம் வழியாக 2003ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார்.

முனைவர் கி. இராசா "புறநானூறு மூலமும் உரையும் திணை துறைப் பதிப்பு" என்ற பதிப்பு 2007ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இப்பதிப்பிற்கு உ.வே.சாமிநாதையரின் பதிப்பும், எஸ். வையாபுரிப்பிள்ளையின் பதிப்பும் துணை புரிந்திருக்கின்றன. திணை - துறை வாரியாக புறநானூறு பிரிக்கப்பெற்று முறைப்படுத்தி பதிப்பிக்கப்பெற்ற சிறப்பினை இப்பதிப்பு பெற்றுள்ளது. இதுவரை வெளிவந்த பதிப்புகளின் போக்கை இப்பதிப்பு சிறிது திசை திருப்புகிறது.

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தவை உ.வே.சாமிநாதையரின் பதிப்பும், ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் பதிப்பும் ஆகும்.

தற்போது புறநானூற்றுச் சுவடிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் (மூலம் 3, மூலமும் உரையும் 7), பேரூர் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் ஆகிய இடங்களில் இருப்பதை அறியமுடிகிறது.

## 4.5.9. பத்துப்பாட்டு

உ.வே. சாமிநாதையர், பத்துப்பாட்டு நச்சினார்க்கினியர் உரையுடன் 1889ஆம் ஆண்டு முதன் முதலாகப் பதிப்பித்திருக்கின்றார். இப்பதிப்பே பத்துப்பாட்டு முழுமையும் வெளிவந்த முதற் பதிப்பாகும்.

திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வேலூர் குமாரசாமி ஐயர், ஆறுமுகமங்கலம் குமாரசாமி பிள்ளை, திருநெல்வேலி கவிராச நெல்லையப்பப் பிள்ளை, வண்ணாரப்பேட்டை திருப்பாற்கடனாத கவிராயர், ஆழ்வார் திருநகரி தேவர்பிரான் கவிராயர், பொள்ளாச்சி வித்துவான் சிவன் பிள்ளை, திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை, ம.வி. கனகசபைப் பிள்ளை, களக்காடு சாமிநாத தேசிகர் ஆகியோரின் சுவடிகளையும், தருமபுர ஆதீனப் புத்தகசாலை, சென்னை அரசாங்கக் கையெழுத்து நூல்நிலையம் ஆகிய இடங்களில் உள்ள சுவடிகளையும் அடிப்படையாகக் கொண்டு உ.வே.சா. இப்பதிப்பைப் பதிப்பித்திருக்கின்றார். இதனையடுத்து மேலும் சில திருத்தங்களுடன் உ.வே.சா. அவர்கள் 1918ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பைக்

குறிப்பு

கொணர்ந்துள்ளார். இதன் மூன்றாம் பதிப்பு 1961ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இம்மூன்றாம் பதிப்பை நிழற்படப் பதிப்பாக தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1986ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. 1931ஆம் ஆண்டு மூலம் மட்டும் கொண்ட பதிப்பை உ..வே. சாமிநாதையர் வெளியிட்டுள்ளார்.

பொ.வே. சோமசுந்தரனாரின் பத்துப்பாட்டு விளக்கவுரையை இரு தொகுதிகளாக சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1956ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இதன் மறுபதிப்புகள் 1962, 1966, 1968, 1971... என வெளிவந்திருக்கின்றன.

இப்பதிப்புகளில் சுவடியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தது உ.வே.சாமிநாதையரின் பதிப்பு மட்டுமே.

தற்போது பத்துப்பாட்டுச் சுவடிகள் திருவனந்தபுரம் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், இந்திய தேசிய நூலகம் - கொல்கத்தா, திருவாவடுதுறை ஆதீனம், உ.வே.சா. நூலகம் (மூலம் 1, நச்சினார்க்கினர் உரை 1) ஆகிய இடங்களில் இருப்பதை அறியமுடிகிறது.

பத்துப் பாட்டில் இருக்கக் கூடிய திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகியன தனித்தனிப் பதிப்புகள் பல பெற்றிருக்கின்றன.

## 4.5.10. சங்க இலக்கியம் - தொகுப்புப் பதிப்புகள்

சங்க இலக்கியத்தினை தனித்தனி நூல்களாக வெளியிட்ட நிலையில் இருந்து மாறி தொகுப்புப் பதிப்புகளாகவும் வெளியிட்டிருக்கின்றனர். இனி அவற்றைப் பற்றிக் காண்போம்.

### 4.5.10.1. வையாபுரிப்பிள்ளை பதிப்பு

பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை மேற்பார்வையில் சைவ சித்தாந்த மகாசமாசம் 1940ஆம் ஆண்டு “சங்க இலக்கியம்“ என்ற தலைப்பில் ஒரு பதிப்பை உருவாகியுள்ளது. பாடிய புலவர்களை அடிப்படையாகக் கொண்டு அகர வரிசைப்படி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றின் பாக்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இது ஒரு

புதிய முயற்சி எனலாம். புலவருடைய பாடல்கள் அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, பரிபாடல், புறநானூறு என்ற அகர நிரலில் எடுத்துத் தொகுக்கப் பெற்றுள்ளன. இதன் இரண்டாம் பதிப்பினை 1967இல் பாரி நிலையமும், மூன்றாம் பதிப்பினை 2006 முல்லை நிலையமும் வெளியிட்டுள்ளது.

அகநானூற்றுக்குக் கம்பர் விலாசம் வே. இராசகோபால ஐயங்காரின் ஏட்டுச்சுவடி மற்றும் காகிதச் சுவடி, சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் காகிதச் சுவடி, பவானந்தர் கழகக் காசிதச் சுவடி; ஐங்குறுநூற்றுக்கு சென்னை அரசாங்க நூல் நிலையச் சுவடி; கலித்தொகைக்கு நெல்லை அம்பலவாணக் கவிராயரின் சுவடி, பவானந்தர் கழகக் காகிதச் சுவடி; குறுந்தொகைக்கு மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடி, தி.த. கனகசுந்தரம் பிள்ளையின் காகிதச் சுவடி, இரா. இராகவையங்காரின் காகிதச் சுவடி, முத்துரத்தின முதலியாரின் காகிதச் சுவடி, சென்னை அரசாங்க நூல் நிலையச் சுவடி; நற்றிணைக்கு மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடி, இரா. இராகவையங்காரின் காகிதச் சுவடி, சென்னை அரசாங்க நூல் நிலையச் சுவடி, பவானந்தர் கழகக் காகிதச் சுவடி; பதிற்றுப்பத்துக்கு இரா. இராகவையங்காரின் காகிதச் சுவடி, தி.த. கனகசுந்தரம் பிள்ளையின் காகிதச் சுவடி; பரிபாடலுக்கு தி.த. கனகசுந்தரம்பிள்ளையின் காகிதச் சுவடி, புறநானூற்றுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடி, சென்னை அரசாங்க நூல் நிலைய காகிதச் சுவடி, தி.த. கனகசுந்தரம் பிள்ளையின் காகிதச் சுவடி, மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளையின் காகிதச் சுவடி; பத்துப்பாட்டு மூலம் மட்டும் கொண்ட கா.ரா. நமச்சிவாய முதலியாரின் காகிதச் சுவடி, திருமுருகாற்றுப்படைக்கு எம்.பி.எஸ். துரைசாமி முதலியாரின் சுவடி, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிற்கு முறையே அம்பலவாணக் கவிராயரின் சுவடி, சென்னை அரசாங்க நூல் நிலைய காகிதச் சுவடி; மதுரைக் காஞ்சி மற்றும் பட்டினப்பாலைக்கு சென்னை அரசாங்க நூல் நிலைய காகிதச் சுவடி, மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளையின் காகிதச் சுவடி; நெடுநல்வாடை மற்றும் குறிஞ்சிப் பாட்டுக்கு மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளையின் சுவடி; மலைபடுகடாத்திற்கு சென்னை அரசாங்க நூல்

குறிப்பு

நிலைய காகிதச் சுவடி ஆகிய சுவடிகளைக் கொண்டு இப்பதிப்பை எஸ். வையாபுரிப்பிள்ளை வெளியிட்டுள்ளார்.

## 4.5.10.2. மர்ரே எஸ். இராஜம் பதிப்பு

மர்ரே எஸ். இராஜம் அவர்கள் 1957ஆம் ஆண்டு சங்க இலக்கியத்தை தனித்தனி நூல்களாக வெளியிட்டுள்ளார். இத்தொகுப்புடன் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஒரு தொகுதியாகவும், தொல்காப்பியம் ஒரு தொகுதியாகவும் வெளிவந்துள்ளன.

சங்க இலக்கியங்களைத் தக்க அறிஞர்களைக் கொண்டு ஆராய்ந்து எளியோரும் கல்வியாளரும் புரிந்துகொள்ளுதற்குரிய செம்பதிப்பாகவும் மலிவுப் பதிப்பாகவும் வெளியிடுதலை முதன்மை நோக்கமாகக் கொண்டு அறிஞர் குழுவின் உதவியுடன் மர்ரே எஸ். இராஜம் இப்பதிப்பை வெளியிட்டுள்ளார். இதன் தனிச்சிறப்பு, பாக்கள் சந்தி பிரித்துப் பதிப்பிக்கப்பெற்றிருப்பதுதான். தேவையான இடங்களில் நிறுத்தக்குறி, மேற்கோள் குறி, வியப்புக்குறி, வினாக்குறி முதலானவை இப்பதிப்பில் சுட்டத்தக்கதாகும். பெரும்பான்மையும் கம்பர் விலாசம் வே. இராசகோபாலன் அவர்கள் பதிப்பினையே இப்பதிப்பாசிரியர் குழு பின்பற்றியுள்ளதென்பதை பேராசிரியர் சோ.ந. கந்தசாமி அவர்கள் தெரிவிக்கின்றார். மேலும், பாட்டு தொகைகளைப் பயில்வார்க்குப் பல வகையிலும் உதவியாக உள்ள புலவர்கள் அகராதி, பாடப்பட்டோர் பெயர் வரிசை, சொல் - தொடர் விளக்கம், கதைகளும் வரலாற்றுக் குறிப்புகளும், பழக்க வழக்கங்கள், கட்டுரைத் தொடர்கள், உவமைகள், வருணனைகள் போன்றவற்றைக் குறிப்பிடும் “பாட்டும் தொகையும்“ என்ற சங்க இலக்கியக் கருவி நூல் ஒன்றையும் இத்தொகுப்புடன் வெளியிட்டுள்ளார். இதன் இரண்டாம் பதிப்பை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் 1981ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

## 4.5.10.3. பழந்தமிழ் இலக்கியப் பேழை

பழந்தமிழ் இலக்கண இலக்கிய காவிய நூல்களை எல்லாம் உரைகளுடன் ஒருங்கே பெற்றுப் பயன்பெறும் வகையில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் 1970ஆம் ஆண்டு “பழந்தமிழ் இலக்கியப் பேழை“ என்ற ஒன்றை வெளியிட்டது. இப்பதிப்பிற்குச் சுவடிகள் எதுவும்

பயன்படுத்தவில்லை. ஏற்கெனவே வெளிவந்த நல்ல பதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு இப்பேழையைக் கழகம் வெளியிட்டுள்ளது.

தொல்காப்பிய உரைகள் பதினொரு தொகுதிகளாகவும், பத்துப்பாட்டு இரண்டு தொகுதிகளாகவும், எட்டுத்தொகை பதினொரு தொகுதிகளாகவும், பதினெண் கீழ்க்கணக்கு ஏழு தொகுதிகளாகவும், காப்பியங்கள் (சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி, வளையாபதி, குண்டலகேசி, உதயணகுமார காவியம், நீலகேசி, யசோதர காவியம்) பதினொரு தொகுதிகளாகவும் இப்பேழை அமைந்திருந்தது.

## 4.5.10.4. வர்த்தமானன் பதிப்பு

புலவர் அ. மாணிக்கம் உரையினைச் சென்னை வர்த்தமானன் பதிப்பகம் முதற்பதிப்பாக 1999ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நற்றிணை | - | புலவர் நா. இராமையா பிள்ளை |
| குறுந்தொகை | - | முனைவர் இரா. பிரேமா |
| ஐங்குறுநூறு | - | புலவர் அ. மாணிக்கனார் |
| பதிற்றுப்பத்து | - | புலவர் அ. மாணிக்கனார் |
| பரிபாடல் | - | புலவர் அ. மாணிக்கனார் |
| கலித்தொகை | - | புலவர் அ. மாணிக்கனார் |
| அகநானூறு | - | புலவர் அ. மாணிக்கனார் |
| புறநானூறு | - | புலவர் அ. மாணிக்கனார் |
| பத்துப்பாட்டு | - | புலவர் அ. மாணிக்கனார் |

போன்றோர் இச் சங்க இலக்கியத் தொகுதிக்குப் புத்துரை எழுதி இருக்கின்றனர்.

## 4.5.10.5. நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பதிப்பு

முனைவர் அ.அ. பரிமணம் மற்றும் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் ஆகியோரைத் தலைமைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு “சங்க இலக்கியம்“ பதினான்கு தொகுதிகளாக சென்னை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் முதற்பதிப்பை 2004இலும், இரண்டாம் பதிப்பை 2006ஆம் ஆண்டிலும், மூன்றாம் பதிப்பை 2007லும் வெளியிட்டுள்ளது.

நற்றிணை - முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்

குறுந்தொகை - முனைவர் வி. நாகராசன்

ஐங்குறுநூறு - முனைவர் அ. தட்சிணாமூர்த்தி

பதிற்றுப்பத்து - முனைவர் அ. ஆலிஸ்

பரிபாடல் - முனைவர் பெ. சுப்பிரமணியன்

முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்

முனைவர் அ. தட்சிணாமூர்த்தி

கலித்தொகை - முனைவர் அ. விசுவநாதன்

அகநானூறு - முனைவர் இரா. செயபால்

புறநானூறு - முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்

முனைவர் அ. விசுவநாதன்

முனைவர் வி. நாகராசன்

முனைவர் இரா. ஆரோக்கியசாமி

முனைவர் க. திலகவதி

முனைவர் வெ. சத்தியநாராயணன்

பத்துப்பாட்டு - முனைவர் வி. நாகராசன்

போன்றோர் இச் சங்க இலக்கியத் தொகுதிக்கு பழைய உரைகளுடன் தழுவிய புத்துரை எழுதி இருக்கின்றனர்.

### 4.5.10.6. திருக்கோயிலூர் மடாலயப் பதிப்பு

பேராசிரியர்கள் தெ.முருகசாமி, நா. மீனவன், சுப. அண்ணாமலை, தமிழண்ணல் ஆகியோரின் கூட்டு முயற்சியால் வரையப்பெற்ற உரையினைக் காரைக்குடியினைச் சார்ந்த கோவிலூர் மடலாயம் 2004இலும் வெளியிட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

### 4.5.10.7. முனைவர் சு.வே. சுப்பிரமணியம் பதிப்பு

முனைவர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள் 2006ஆம் ஆண்டு மூலம் மட்டும் கொண்ட சங்க இலக்கியத்தை மணிவாசகர் பதிப்பகம்

வழி வெளியிட்டுள்ளார். இப்பதிப்பின் தனிச் சிறப்புக்களைக் க.ப. அறவாணன்,"இதுகாறும் பிரதிகளில் அகப்படாத தொல்காப்பிய உரைகளாலும், புறத்திரட்டாலும் தெரிய வருகின்ற சில செய்யுட் பகுதிகளைத் தந்துள்ளமை, அடிவரையறை அடிப்படையில் அகநூல்கள் ஐந்தினையும் அமைத்துள்ளமை, சொற்களைப் பிரித்துத் தெளிவாகப் பாடல்களைப் பதிப்பித்துள்ளமை, 473 புலவல்களையும், அகர வரிசையில் நல்கி, அவர்கள் பாடியுள்ள பாடல் எண்களையும் நல்கியுள்ளமை, புறத்திணைத் துறைகள், பாடல் எண்கள், அட்டவணையாக வழங்கப் பெற்றுள்ளமை" என்று இந்நூலின் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

## 4.5.10.8. இணையதளப் பதிப்பு

உலகம் முழுதும் உள்ள தமிழர்கள் இணையதளத்தின் மூலம் தமிழிலக்கியங்களைத் தெரிந்துகொள்ள, சென்னையில் இயங்கி வரும் தமிழ் இணையப் பல்கலைக்கழக இணைய தளத்தில் (றறற.வயஅடைஎர.ழசப) நூலகம் என்ற பகுதியில் "சங்க இலக்கியம்" இடம்பெற்றுள்ளது. இதில் நூலாசிரியர் அடிப்படையிலோ, பாடல் முதற்குறிப்பு அடிப்படையிலோ, பாடலில் இடம்பெற்றுள்ள சொற்களின் அடிப்படையிலோ, திணை, துறை அடிப்படையிலோ சங்க இலக்கியப் பாடல்களைத் தெரிவு செய்து படித்துக்கொள்ள வழி செய்திருக்கின்றனர்.

சங்க இலக்கியப் பதிப்புகளும் பாடவேறுபாடுகளும் என்னும் ஆய்வினை மேற்கொள்ளும்போது இப்பதிப்புகளும் சுவடிகளும் ஆய்வாளருக்கு முன்நிகழ்ந்த பதிப்புகளிள் உள்ள பாடவேறுபாடு அறிவதற்கு துணைசெய்வனவாகும். இவ்வாய்வின் மேல் அடுத்த ஆய்வினை மேற்கொள்வதற்கு வெவ்வேறு சுவடி நூலகங்களில் உள்ள சங்க இலக்கியச் சுவடிகள் உறுதுணையாகும்.

### முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

9. குறுந்தொகையின் முதற்பதிப்பு யாரால் எப்போது பதிப்பிக்கப்பெற்றது?
10. பதிற்றுப்பத்தின் முதற்பதிப்பை வெளியிட்டவர் யார்?
11. புறநானூறு மூலமும் உரையும் திணை துறைப் பதிப்பை வெளியிட்டவர் யார்?

12. சங்க இலக்கியத் தொகுப்புப் பதிப்பு இரண்டினைக் கூறுக.



## 4.6. தொகுத்துக் காண்போம்

குறிப்பு

- ஆய்வு நோக்கம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வு நோக்கத்தினை மையமிட்ட ஆய்வுச் சிக்கல் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வாளன் மேற்கொள்ளும் ஆய்வுப் பொருள் பற்றி ஏற்கெனவே செய்யப்பெற்ற ஆய்வுகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 4.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 4.3. | 2. | 4.3. |
| 3. | 4.3.2. | 4. | 4.3.4. |
| 5. | 4.4. | 6. | 4.4.3. |
| 7. | 4.4.4. | 8. | 4.4.5. |
| 9. | 4.5.2. | 10. | 4.5.4. |
| 11. | 4.5.8. | 12. | 4.5.10. |

## 4.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. ஆய்வாளர் எதிர்கொள்ளும் ஆய்வுச் சிக்கல்கள் பற்றிக் கட்டுரை வரைக.
2. ஆய்வாளர் கருதுகோளைத் தேர்ந்தெடுக்கும் விதங்களை விவரி.
3. ஆய்வுப் பொருள் பற்றிச் செய்யப்பட்ட ஆய்வுகளை ஆய்வாளர் எவ்வாறு தேர்வார்?
4. அகநானூற்றின் பதிப்பு வரலாறு கூறுக.
5. பத்துப்பாட்டின் பதிப்பு வரலாறு கூறுக.

குறிப்பு

# பிரிவு 2. கூறுகள் - அணுகுமுறைகள்

# கூறு 5. முதன்மைக் கூறுகள் - துணைநிலைக் கூறுகள்

## 5.1. முன்னுரை

சான்றுகளைத் தொகுப்பதே ஆய்வின் மையமான, மிகக் கடினமான செயல். மூளை உழைப்பு, உடல் உழைப்பு என இருவகையாலும் தேவைப்படும். முனைவர் பட்டத்தைப் பரிந்துரை

குறிப்பு

செய்யும்போது, உழைப்புக் கருதிப் பட்டம் வழங்கலாம் என்றும், தரவுகளை அடிப்படையாக வைத்து வெளியீட்டுத் திறங்கருதிப் பட்டம் வழங்கலாம் என்றும், சிறு குறைவிருந்தாலும் நிறுவியுள்ள முடிவுகள் மிகச் சிறப்புடையன வாயிருத்தலின் பட்டம் வழங்கத் தகுதியுடையதென்றும் ஆய்வேடுகள் பற்றிக் குறிப்பெழுதுவர். இது சான்று மூலங்களைத் தேடித் தரவுகளைத் தொகுக்கும் பணி மிகச் சிறந்தது என்பதை வலியுறுத்துகின்றது. இத்தரவுகள் பற்றி இப்பகுதியில் காண்போம்.

## 5.2. குறிக்கோள்கள்

- ஆய்வுக்கு அடிப்படையான முதன்மைக் கூறுகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- முதன்மைக் கூறுகளை வலியுறுத்தச் சொல்லும் துணைநிலைக் கூறுகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 5.3. சான்று மூலங்கள்

சான்று மூலம் என்பது நாம் சான்றுகளைத் தேடுமிடமாகும். அது நூலாகவோ, கட்டுரையாகவோ, ஓலைச்சுவடியாகவோ, கல்வெட்டாகவோ, பட்டயமாகவோ, கடிதமாகவோ இருக்கலாம். அதிலிருந்து சான்றுகள், தரவுகள் பெறப்படுதல் ஆதலின் சான்று மூலம் என்றாயிற்று என்பர். ஓர் ஆய்வாளர் தனது முனைவர் பட்ட முன்னுரையில் சான்று மூலங்களைக் குறிப்பிடுவார். கோயிலைப் பற்றி ஆய்வு செய்பவர் கல்வெட்டுக்கள் தொகுத்ததைப் பற்றி வினாநிரல் வழிக் கருத்துத் தொகுத்ததையும் குறிப்பிட்டிருப்பார். நாட்டுப்புறவியல் ஆய்வாளர் எப்படி நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்தார் என்பதைக் குறிப்பிட்டிருப்பார். மொழியியல் ஆய்வாளராயிருப்பின் மொழி பற்றிய செய்திகளை எப்படியெல்லாம் தொகுத்தார் என்பதைக் கூறியிருப்பார். சுவடியியல் துறையில் பதிப்பாய்வு செய்பவராயின் பதிப்புக்கு எடுத்துக்கொண்ட சுவடிகள் பற்றியும் ஏற்கெனவே வெளிவநந்த பதிப்புகள் பற்றியும் குறிப்பிட்டிருப்பார். வினாநிரல், நேர்முக ஆய்வு, தனிநிலை ஆய்வு என்பதும் சான்று மூலங்களே ஆகும். சான்று மூலங்கள்தான் நமது அடிப்படை ஆதரங்களாகும். அம்மூலங்களோடு தொடர்புடையவை துணைநிலை

ஆதாரங்களாகும். ஓரளவு வழிகாட்டக் கூடிய பொதுவானவை சார்பு ஆதாரங்களாகும்.

குறிப்பு

### 5.3.1. முதன்மைக் கூறுகள்

அடிப்படை ஆதாரங்களை முதன்மை ஆதாரங்கள் என்பர். நேரில் தேடிக் கண்டுபிடித்த நேரடிச் சான்றுகளே முதன்மை ஆதாரங்களாகும். நூல்வழி ஆராய்வார்க்கு நூல்வழித் தொகுப்புக்கள் முதன்மைச் சான்றாதாரங்களாகும். அறிவியலில் செய்முறை ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்படுபவை சான்றுகளாகக் கொள்ளப்படும். சமூகவியல், நாட்டுப்புறவியல் போன்ற துறைகளில் எல்லாம் கள ஆய்வில் பெறுவன மூலச் சான்றுகளாகக் கொள்ளப்பெறும். பழங்குடியினர் ஆய்வுக்குக் களத்தில் சேகரிக்கக் கூடிய கருத்துக்களே பயன்படும். இது கள ஆய்வு எனப்படும். பழங்குடி மொழியியல் பிரிவில் கள ஆய்வு மிக முக்கியமானதாகும். பழங்குடி மொழி கள ஆய்வில் புதுப்புதுச் சொற்கள் கிடைக்கும். அந்தந்த மொழியின் அமைப்பும் கிடைக்கும். கள ஆய்வின்றி நாட்டுப்புறவியலிலும் மானிடவியலிலும் எந்த ஆய்வும் சேகரிக்க முடியாது. எனவே கள ஆய்வு நாட்டுப்புறவியல் துறைக்கும் மானிடவியல் துறைக்கும் மிகவும் இன்றியமையாததாகும். கள ஆய்வில் சேகரிக்கும் சான்றுகளைக் கொண்டு மொழியின் அமைப்பையும் நாட்டுப்புறவியல் சான்றுகளைக் கொண்டு நாட்டுப்புறச் சமுதாயத்தைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ளலாம். நேர்முகப் பேட்டி, வினா நிரல்கள், தன் வரலாறு போன்றவை இதன்கண் அடங்கும். நாடாளுமன்ற நடைமுறை அறிக்கைகள், நீதிமன்றச் சான்றுகள், அரசுத்துறை அறிக்கைகள், நிகழ்ச்சிப் பதிவுகள், கல்வெட்டு, ஓலைச்சுவடிகள், ஆவணம் போனறவை அனைத்தும் முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்படும்.

### 5.3.2. துணைநிலைக் கூறுகள்

அடிப்படைச் சான்றுகளான முதன்மை ஆதாரங்களில் இருந்து எடுக்கப்பட்ட சுருக்கங்கள், ஆய்வு பற்றிய மதிப்புரை, கருத்துரை, வழிகாட்டி நூல்கள் போன்றவை இதனைச் சார்ந்ததாகும். முனைவர் பட்ட ஆய்வேடும் இதன்பாற்படும்.

குறிப்பு

பாட நூல்கள், இதழ்கள் போன்றவற்றைச் சார்பாதாரங்களாகக் கொள்ளலாம்.

சான்று மூலங்களிலிருந்து சான்றுகள், தரவுகள், மெய்ம்மைகள் தொகுக்கப்படுகின்றன. ஆதாரமாகும் ஒரு கருத்து தரவு என்றும், நாம் நிலைநாட்ட விரும்பும் கருத்துக்கு அது உதவுவதால் சான்று என்றும், முடிபு ஒன்றைத் தர அடிப்படையாக உள்ளதால் மெய்ம்மை என்றும் கூறப்படுகின்றது. தரவும் சான்றும் அடிப்படையில் இரண்டும் சிறிதே வேறுபடுகிறது. மெய்ம்மைவழி முடிவுக்குக் வரலாம்.

## 5.3.3. தரவுகளின் ஒழுங்கு

முதன்மை மற்றும் துணைநிலைக் கூறுகளில் இருந்து தொகுக்கப்பெற்ற தரவுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் அவசியமாகிறது. அரிசியைக் களைந்து வைத்துக் கொள்ளாமல் உலைமூட்டக் கூடாது. நாற்றங்காலைப் பதப்படுத்தாமல் விதையை ஊறப்போடக் கூடாது. இவை போலவே தரவுகளைச் சரிப்படுத்திக் கொள்ளாமல் ஆய்வைத் தொடங்குதல் கூடாது. தரவுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும்போது பின்வருவனவற்றைக் கவனிக்க வேண்டும்.

- தரவுகள் சரியானவையா; ஆதாரம் காட்டக் கூடியனவா? செவிவழிச் செய்திகளா? பதிவு செய்யப்பட்டவனவா?
- இயல் பிரிப்பு நிலையில் தரவு எப்பிரிவிற்கு உரியது என்பது.
- தரவு பெறப்பட்ட முழுவிவரம் - நூல்/ஆசிரியர்/வெளியீடு/ ஆண்டு/ பதிப்பு/தரவு இடம்பெற்ற பக்கம்.
- தரவுகள் எக்கருத்தை நிறுவ, வலியுறுத்த, மறுக்க, ஒப்புமைக்காகக் காட்டத் தேவை என்பது.
- தரவின் அருமைப்பாடு, மதிப்பு, ஆய்வுக்கு மிகவும் இன்றியமையாத நிலையில் வேண்டப்படுவது என்பது.
- இத்தரவின் கருத்து முன்னர் யாராலும் காட்டப்பட்டதா, ஆதாரமாகக் கொள்ளப்பட்டதா, மறுக்கப்பட்டதா என்பது.

இந்த ஆறு நிலைகளில் தரவுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். மேலும், தரவு வேண்டப்படும் இடங்கள், தரவுகளின் போதாமையால்

நிறைவு பெறாது நிற்கக்கூடும் இடைவெளிகள் ஆகியன குறித்துக் கணித்துக் கொள்ள வேண்டும்.

ஆய்வேட்டை எழுதுவதற்குத் தரவுகளின் ஒழுங்கு இன்றியமையாதது. கால வரிசை, நிகழ்ச்சிகளின் வரிசை, பெயர்களின் வரிசை ஆகியவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். கழற்சிக்காய்களைப் போட்ட குடம்போலத் தலை கீழாய்ச் செய்திகளைக் கொட்டக் கூடாது. திரு.வி.க. தம் வாழ்க்கைக் குறிப்புகள் என்ற நூலின் முன்னுரையில், "எனது வாழ்க்கை வரலாற்றை எழுதுதல் வேண்டுமென்னும் எண்ணம் அணித்தே என்பால் எழுந்தது. அவ்வெண்ணம் முன்னரே எழுந்திருந்தால் நிகழ்ச்சிக் குறிப்புக்களை அவ்வப்போது திரட்டிச் சேமித்து வைத்திருப்பேன். யான் அவற்றைத் திரட்டினேனில்லை" என்று குறிப்பிடுவது எண்ணத்தக்கது. ஆனால் அவர் எழுதிய மற்றை நூல்களுக்கெல்லாம் குறிப்புகளை ஒழுங்குற அமைத்துக் கொண்டு எழுதியிருப்பது காணலாம். மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் என்ற நூலில் சத்தியாக்கிரகம் என்றோர் உட்பிரிவு உள்ளது. அதனை நவசக்தியில் தொடர்ந்து எழுதுவதற்குத் திரு.வி.க. குறிப்புகளைத் திரட்டி ஒழுங்குபடுத்திக் கொண்டார்.

> "பொருள்-காலம்-தோற்றம்-சத்விளக்கம்-திருத்த வழி முறைகள் - சத்தியாக்கிரகி யார்? - குறைபாடுகள் உயிர் உடல் வாழ்வு - சத்தியாக்கிரகம் - சத்தியாக்கிரமும் அடிகளும்-கூர்ஜரப் பாட்டு - கிறிஸ்துவின் மலைப்பொழிவு - சத்தியாக்கிரக ஆசிரம விதிகள் - சம்மமும் சத்தியாக்கிரகமும் - தென்னாப்பிரிக்கா - நீதிமன்றமேறல் - சட்டமீறல் - சாம்பரான் கெய்ரா-ரௌலட் சட்டம் - சத்தியாக்கிரக நாள் - அறிக்கைகள் - அடிகளின் ஆன்ம சக்தி விழுப்பம் - பாஞ்சால எழுச்சியும் கொலையும் - பகைவர்பால் காழ்ப்பின்மை - ஒத்துழையாமை - அதன்இயல் - அடிப்படை அன்பு ஆக்க அழிவு முறைகள் - ஒழுங்கு - தாகூரும் அடிகளும் - அடிகள் இயற்கைப் பாவலர் - சத்தியாக்கிரக விரதம் பகைமையை அன்பால் மாற்றல் - சட்டமும் அறமும் சட்டவரம்பு-சிறைப்பாகுபாடுகள் - சிறையும் உரிமையும் - ஒத்துழையாமையின் தோல்விக்குக் காரணம் - சத்தியாக்கிரக மொழிகள்"

இந்த வகைக் குறிப்புகளைத் தரவுகளை, ஒழுங்குபடுத்திக் கொண்ட நிலையிலேயே அமைத்துக் கொள்ள இயலும். கல்கி, அமரதாரா நாவலை எழுதிக் கொண்டிருக்கும்போது உயிர் நீத்தார். கல்கி பத்திரிகையில் ஆயிரக் கணக்கானோர் நாவலைப் படித்துக் கொண்டிருந்த நேரம். பேராசிரியர் கல்வி அந்நாவலுக்குரிய தரவுகள் அனைத்தையும் தொகுத்துக் குறிப்புகளாக வடிவமைத்து வைத்திருந்தார். கல்கியின் மகளார் ஆனந்தி அக்குறிப்புகளைக் கொண்டு நாவலைத் தொடர்ந்தார். ஆய்வாளர்கள் தரவுகளை ஒழுங்குபடுத்திக் குறிப்புகள் சமைத்துக் கொண்டால் ஆய்வேடு எழுதுதல் மிகவும் எளிதாகும்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. சான்று மூலம் என்றால் என்ன?
2. முதன்மை மற்றும் துணைமை ஆதாரங்கள் என்றால் என்ன?
3. துணைநிலைக் கூறுகள் யாவை?
4. தரவுகளின் ஒழுங்கு எத்தன்மைத்து?

## 5.4. தொகுத்துக் காண்போம்

- ஆய்வுக்கு அடிப்படையான முதன்மைக் கூறுகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- முதன்மைக் கூறுகளை வலியுறுத்தச் சொல்லும் துணைநிலைக் கூறுகள் பற்றித் தெரிந்துகொண்டீர்கள்.

## 5.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 5.3. | 2. | 5.3.1. |
| 3. | 5.3.2. | 4. | 5.3.3. |

## 5.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. முதன்மை மற்றும் துணைமைக் கூறுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

2. தரவுகளின் ஒழுங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

குறிப்பு

# கூறு 6. தொகுத்தல் - பகுத்தல் - உற்றுநோக்கல்

## 6.1. முன்னுரை

ஆய்வாளர் தன்னுடைய ஆய்வுக்குத் தேவையான முதன்மை மற்றும் துணைநிலைக் கூறுகளை தேர்ந்து எடுத்துக்கொண்ட பின்னர் அவற்றைத் தொகுத்தலும் பகுத்தலும் தொகுத்துப் பகுத்ததை உற்றுநோக்கலும் வேண்டும். இந்நிலைகள் பற்றி இப்பகுதியில் காணலாம்.

## 6.2. குறிக்கோள்கள்

- ஆய்வுத் தரவுகள் தொகுத்தல் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- தொகுத்த ஆய்வுத்தரவுகளை எவ்வாறு பகுப்பீர்கள் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- தொகுத்துப் பகுத்த ஆய்வுத் தரவுகளை ஆய்வாளர் எவ்வாறு உற்று நோக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- உற்றுநோக்கலின் வகைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 6.3. தொகுத்தல்

ஆய்வுகளில் செயல்துணை நூற்பட்டியல் தொகுத்தலே முதல் வேலையாகும். ஆய்வு நூல்களில் சான்று ஆதாரங்களைத் தொகுத்தலே மிகவும் முக்கியமாகும். சான்று தேடும் ஒவ்வொரு நூலைப் பற்றியும் மூன்று அங்குல அகலமும் ஐந்து அங்குல நீளமும் உள்ள அட்டைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் நூலாசிரியர் பெயர், நூலின் பெயர், பதிப்பக விவரம், பதிப்பாண்டு முதலியவற்றைக் குறித்துக் கொள்ள வேண்டும். தனித்தனி அட்டைகளில் எழுதினால்தான் பின்னால் அவற்றைத் தொகுப்பதற்கு வசதியாக இருக்கும். பழைய காலத்தைப்

போன்று இனியும் நோட்டுகளில் குறித்துக் கொள்ளக் கூடாது. ஆய்வைத் தொடங்கும்போதே இச்செயலையும் தொடங்க வேண்டும். எனவேதான் இதனைச் செயல்துணைப் பட்டியல் என்று கூறுவர்.

குறிப்பு

ஆய்வாளனுக்கு மூன்றுவிதமான அட்டைகள் தேவைப்படுகின்றன. ஒன்று துணைநூல் பட்டியலுக்கென்று தேவைப்படும். ஒவ்வோர் இயலின் இறுதியிலும் ஆய்வேடு முழுமைக்குமெனப் பொது நிலையில், இறுதியில் என இரண்டு இடங்களில் சுட்டப்படுகின்றன. எது எப்படியிருப்பினும் ஒரு நூலுக்கு ஒரு அட்டை என்பதை மறத்தல் கூடாது. மற்றும் ஏதேனும் நூலிலிருந்து குறிப்புக்கள் எடுத்தால், அவற்றையும் குறிப்பிற்கு ஓர் அட்டை என்றவாறு குறிக்க வேண்டும். குறிப்பட்டையை வைத்துத்தான் ஆய்வேடு எழுதுதல் வேண்டும். எனவே ஆய்வேட்டிற்குத் தேவையான சான்றுகளை அவற்றிலிருந்து பெறவேண்டும். மூன்றாவது மேற்கோள் அட்டைகளாகும். பிறர் கருத்துக்களை ஏற்கவோ மறுக்கவோ இவ்வட்டைகள் பெரிதும் பயன்படும். ஆனால், ஒரு மேற்கோளுக்கு ஒரு அட்டை என்று ஒதுக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொன்றிற்கும் வேறு வேறு வண்ண அட்டைகளைப் பயன்படுத்தினால், காரியங்களைச் சுலபமாக முடிக்கலாம்.

துணைநூற்பட்டியல் அட்டைகள் மேற்கண்டவாறு இருத்தல் நன்மையாகும். விவரம் தெரிவித்தல் என்பதோடு தேவைப்படுவனவற்றைக் குறிக்கவும் பயன்படும். நூலகக் குறியீட்டெண்ணை அட்டையின் பின்பக்கத்தில் குறித்து வைத்துக் கொண்டால், எப்பொழுது நூலைப் பற்றி ஐயம் வரினும் பின்பக்கத்தைப் பார்த்துக் கொள்ளலாம். நூலாசிரியர் பெயர், பதிப்பு விவரம், ஆண்டு இம்மூன்றையும் குறித்துக் கொள்ள வேண்டும். இன்ன நூல் எனவும் இன்ன தொகுதி என்பதைப் பற்றிப் பதிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் பெயர் முதலில் வரவேண்டும். நூலாசிரியர் பதிப்பாளராயிருந்தால் (பதி.) என்றும், தொகுப்பாசிரியராயிருந்தால் (தொகு.) என்றும், மொழிபெயர்ப்பாளராயிருந்தால் (மொ.பெ.) என்றும் குறிக்க வேண்டும். அடுத்து நூல், கட்டுரைத் தலைப்பின்கீழ் அடிக்கோடிட வேண்டும். கட்டுரையாயிருப்பின் மேற்கோள் குறிக்குள் சுட்ட வேண்டும். அடுத்து, பதிப்பு விவரம் சுட்ட வேண்டும். பதிப்பின்

குறிப்பு

பெயரும் ஆண்டும் குறிக்க வேண்டும். பல பதிப்புகள் வெளிவந்திருப்பின் எந்தப் பதிப்பு என்று குறிப்பிட வேண்டும். நாளிதழாயின் இதழ்ப் பெயர், நாள், மாதம், ஆண்டு இவற்றைக் குறிப்பிட வேண்டும். இடம் குறிக்கப்படவில்லையாயின் இ.இ. (இடம் இல்லை) என்றும், தேதி குறிக்கப்படவில்லையாயின் தே.இ. (தேதி இல்லை) என்றும் குறிக்கப்படவேண்டும். பெயருக்குப் பின்தான் முன்னெழுத்தை எழுதவேண்டும்.

இவற்றில் முன்கூட்டியே நூல் விவரம் மட்டுமின்றிச் சில ஆய்வுக் குறிப்புக்களையும் ஆய்வாளர் குறித்து வைத்திருப்பர். நூலின் மொத்தப் பக்கங்கள், உள்ளுறை, பின்பற்றப்படும் நெறிமுறைகள், அவற்றின் மதிப்பீடு பற்றி மிகச் சுருக்கமாகக் குறியிட்டு எழுதவேண்டும். இத்தகைய திறனாய்வு ஆய்வடங்கலைக் குறிக்கக் கீழ்க்கண்ட விவரங்கள் தேவைப்படுகின்றன. குறிப்பிட்ட ஆசிரியர் எடுத்துக்கொண்ட சிக்கல், ஆய்வுமுறை, மூலம், முக்கிய முடிபு, வெளியீட்டு முழுமைகள் குறித்தும் எழுதப்படவேண்டும். இத்தகைய விவரங்கள் எழுத, பெரிய அட்டைகளைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

அடுத்து, தொகுத்தலில் குறிப்பெடுத்தல் முக்கிய அங்கம் வகிக்கிறது. கருத்துக் குறிப்புக்களை எழுதி வைத்துக் கொள்வதையே குறிப்பெடுத்தல் என்பர். முன்னொரு காலத்தில் நீண்ட நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டு சென்றனர். இன்று அவ்வாறு எழுதுவது நல்லதல்ல என்பதால் இம்முறை முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறது. இன்று ஒரு கருத்திற்கு ஒரு அட்டை என்பதே ஆய்வு நெறியாகக் கொள்ளப்படுகின்றது. கருத்துக் குறிப்பு அட்டவணையில் நம் சிந்தனைகளை உடன் குறிக்க இடம் இருப்பதால், அவ்வாறே செய்யலாம். குறிப்பட்டைகளை வைத்துக் கொண்டு ஆய்வேடு எழுதும்போது மாற்றியும் வரிசைப்படுத்திக் கொண்டுதான் உட்தலைப்பிட்டு ஆய்வேடு வரைவதென முடிவு சுட்டலாம். இப்படிச் செய்தால் ஆய்வேட்டில் விரித்தல் வராது. ஆய்வேடு நிரல்பட அமையக் குறிப்பட்டைகளே காரணம் எனின் மிகையல்ல. ஆய்வு பற்றிய தகவலும் சான்றுகளும் துணைசெய்யவல்ல மேற்கோளும் இவ்வட்டைகளில் அடங்கியிருக்கும். குறிப்பெடுத்தலில் சில பகுதிகளை எழுதிக் கொள்ளுதல், சூத்திர அடிகளை எழுதுதல், மேற்கோள் காட்டல்,

ஓரிதழில் கண்டவற்றை மறவாமல் குறித்து வைத்தல் எனப் பல வகைகள் உள்ளன. இதற்கு உதிரித்தாள்களைப் பயன்படுத்தலாம். அதைக்காட்டிலும் உதிரி அட்டைகளே மிகச் சிறந்தனவாகும்.

குறிப்பு

ஓர் அட்டையில் ஒரு கருத்துக் குறிப்புதான் எழுதப்பட வேண்டும். அதாவது ஒரு தரவுதான் எழுதப்படவேண்டும். ஒரு தாளில் மேற்கோள், மற்றொன்றில் பிறிதொரு கருத்து எனத் தனித்தனியே எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். நூலில் உள்ளவாறே எழுதினால் மேற்கோள் இடல் வேண்டும். மேற்கோளை எழுதிக்கொண்டு வரும்போது இரண்டு மூன்று வாக்கியங்களை விட்டால் அதனைப் புள்ளியிட்டுக் காட்ட வேண்டும். எனவே மேற்கோள், சுருக்கம், கருத்துரை எதுவாயினும் ஒரு தாள்தான் பயன்படுத்த வேண்டும். துணைநூற்பட்டியல் முழு விவரமும் தருவதால் இங்க ஆசிரியர் பெயரும் நூற்பெயரும் தந்தால் போதுமானது. உள்ளே உள்ள பகுதியை அவ்வாறே எழுதிக் கொள்வது நல்லது. மேற்கோள் பகுதியையும் அவ்வாறே எழுதிக் கொள்வதுதான் நல்லது. பாடல் போன்றவற்றைச் சான்றுகளாகப் பயன்படுத்தும்போது இவ்வாறு எடுத்தாள வேண்டும். ஆங்கிலப் பகுதியாயின் ஆய்வேட்டின் உள்பதியில் தமிழ்மொழி பெயர்ப்புத்தான் கொடுக்க வேண்டும். ஆங்கிலப்படியை அடிக்குறிப்பில் அவ்வாறே தரலாம். ஆய்வேட்டில் ஆங்கில மொழிபெயர்ப்பை அவ்வாறே தரவேண்டும். குறிப்பட்டைகளை அடிக்கடி எடுத்துப் படிக்க வேண்டும். கள ஆய்வுகளில் நேர்காணல், உற்றுநோக்கல், வினாநிரல் போன்றவற்றில் தொகுக்கப்பட்ட செய்திகளே தரவுகளாக அமையும். ஓர் ஆய்வின் மையப்பகுதி இத்தரவுத் தொகுப்பே ஆகும். ஆய்வேட்டின் உயிரூட்டு சான்றுத் தொகுப்பு முயற்சியே ஆகும்.

## 6.4. பகுத்தல்

மேற்கண்ட முறைகளில் தொகுக்கப்பெற்ற தரவுகளை ஆய்வாளர் தன்னுடைய ஆய்வுக்குத் தக்கவாறு பகுத்தல் அவசியமாகிறது. தரவுகளைத் தொகுக்கும்போதே இயல் வாரியாக தனித்தனித் தொகுப்புக்களாகத் தரவுகளைத் பிரித்துக்கொள்ள வேண்டும். ஆய்வுக்குத் தேவையான தரவுகளைப் பின்வரும் நிலைகளில் பகுக்கலாம்.

- வரலாற்றின் அடிப்படையில் பகுத்தல் வேண்டும்.
- தரவுகள் கால அடிப்படையில் பகுத்தல் வேண்டும்.
- தொகுக்கப்பெற்ற தரவுகளை நிறுவப்படவேண்டிய கருதுகோளுக்கு ஏற்ப படிப்படியாக எடுத்துத் செல்லும் விதமாகப் பகுக்க வேண்டும்.
- ஆய்வுப் பொருண்மை அடிப்படையில் முறைப்படி பகுக்க வேண்டும்.
- அறிவியல் ஆய்வில் முன்னாய்வுகளின் அடிப்படையில் முறையே பகுக்க வேண்டும்.
- புள்ளி விவர ஆய்வில் தொடக்கம் முதல் படிப்படியாக புள்ளி விவரங்களைப் பகுக்க வேண்டும்.
- திணை அடிப்படையிலான ஆய்வில் ஒவ்வொரு திணை பற்றியும் முறையே பகுக்க வேண்டும்.
- பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள் என்ற பொருண்மையிலான ஆய்வில் சுவடிப் பதிப்புகள் வெளியிட்ட பருவ இதழ்களையும், அவ்விதழ்களில் வெளிவந்த சுவடிப் பதிப்புகளையும் கால முறைப்படி முதலில் பகுக்க வேண்டும். அதன்பிறகு அச்சுவடிப் பதிப்புகள் எப்பொருண்மைகளில் அமைந்திருக்கின்றன என்பதைக் கண்டு, அப்பொருண்மைக்கேற்றவாறு அச்சுவடிப் பதிப்புகளைப் பகுத்தல் வேண்டும்.
- ஆய்வாளன் தலைப்பினைத் தேர்வு செய்தபின், இயல் தலைப்புகளை நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட இயல் தலைப்புக்குள் உட்தலைப்புகள் பகுக்க வேண்டும். இப்பகுப்புகள் எல்லாம் தொகுக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையிலேயே அமைய வேண்டும்.
- முன்னாய்வுகளில் சொல்லப்பட்ட கருத்துக்களை முதலில் முறைப்படிப் பகுத்துக் கூறி, அதன்பின் ஆய்வாளன் வலியுறுத்தும் கருத்துக்கு வரவேண்டும்.

குறிப்பு

## 6.5. உற்றுநோக்கல்

**குறிப்பு**

குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை மனத்தில் வைத்துக்கொண்டு ஒன்றை நுணுக்கமாக நோக்குவது - உற்று நோக்குவது உற்றுநோக்கல் எனப்படும். சாதாரணமாக நாம் பார்ப்பதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாகும். ஏதேனும் ஒரு குறிக்கோளுடன் உற்றுநோக்குவது என்பது இதன் சிறப்பு. முழுமையாக ஒன்றை நுணுக்கமாகப் பார்ப்பது, பார்க்கும் போது நோக்கத்துடன் பார்ப்பது, பார்க்கின்றவர் தம்மை முழுமையாக அதில் இழந்துவிடாமல் பார்ப்பது என்று உற்றுநோக்கலை விளக்குவர்.

சிறிது தொலைவிலிருந்து நோக்கினாலும்கூட மனித நடத்தையைப் பற்றி உற்று நோக்கலின் வழியே மிகுதியாக அறிந்துகொள்ளலாம். உருவாக்கப்பட்ட கருதுகோள், ஆய்வின் பொதுவான திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படும் பொழுது உற்று நோக்கல் மிகுதியும் பொருளுடைய ஒன்றாகிறது. எனினும், முற்றிலும் சரியான உற்று நோக்கலை மேற்கொள்வது இயலாதது. ஏனெனில்,

- நமக்கு உற்று நோக்குவது சிக்கலான ஒன்றாகும்.
- ஒன்றுடன் ஒன்று அகத்தொடர்புடைய பல்வேறு செய்திகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.
- தவறுகளிலிருந்து விடுபட்டவைகளாக நம்முடைய புலன்கள் அமையவில்லை.
- மெய்ம்மையையும் கண்டறிவதையும் தனித்தனியே பிரித்து வைத்திருக்க வேண்டும்.

இக்காரணங்களால் உற்றுநோக்கல் முழுவதும் சரியாக அமைவதில்லை.

முன்கூட்டியே உருவாக்கிக்கொண்ட எண்ணங்களை விலக்கிவிட்டு ஆய்வாளர் உற்றுநோக்க வேண்டும். யாரும் வெறுமையான சிந்தனையுடன் கள ஆய்வை மேற்கொள்ள இயலாது. எனினும், முன்னர் முன்னோடிகள் நிகழ்த்திய ஆய்வில் ஏற்பட்ட தவறுகளுக்கு மீண்டும் இடங்கொடுத்தல் கூடாது. ஆழ்ந்து கூர்மையாக நோக்குதலும் தொடர் முயற்சியுமே தொகுத்துள்ள தரவுகளில் காணப்படும் தவறுகளைக் குறைக்கும். முதன்முதலில் கண்களின் வழியே நிகழும் கல்வியாக - பங்கு பெறா உற்நோக்கலாக - அவ்வுற்று நோக்கல் அமையும். பின்னர், தொடர்ச்சியான பட்டறிவின் தொடர்பால் அதுவே பங்குபெறும் உற்றுநோக்கலாக மலரும். பங்குபெறா உற்றுநோக்கலின்

குறிப்பு

வழியே திரட்ட முடியாத பல செய்திகளை, ஏற்படும் ஐயங்களை திரட்டியவற்றில் காணப்படும் தொடர்பின்மைகளை விளங்கிக் கொள்ளப் பங்குபெறும் உற்றுநோக்கல் துணைசெய்யும். இதற்கு, ஆய்வாளர் அக்குறிப்பிட்ட மக்களுடன் ஒருசில நாட்கள் அவர்களுள் ஒருவராக இருந்து அவர்களின் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கம், பண்பாடு, நடையுடை பாவனைகள் ஆகிய அனைத்தையும் அறிய வேண்டும். உற்றுநோக்கலில் திரட்டும் அனைத்துச் செய்திகளையும் குறிப்பேட்டில் குறித்துக் கொள்வதுடன், உற்றுநோக்கலில் பெற்ற அனுபவங்களையும் சந்தித்த இடர்ப்பாடுகளையும் தனியே குறித்துக்கொள்ள வேண்டும். இவை பின்வரும் ஆய்வாளர்க்குப் பேருதவியாக இருக்கும்.

தனித்தனியே பகுக்கக் கூடிய மூன்று கூறுகளைக் கொண்டது உற்றுநோக்கல். அவை: புலனுணர்வு, கவனம், பொறியறிவு. புலன்களின் வழயே உணர்வது முதல்படியாகும். எவ்வளவிற்குப் புலன்கள் நுண்மையாகச் செயல்படுமோ அவ்வளவிற்கு ஆய்வாளர்க்குச் சிறந்த செய்திகள் கிட்டுவதை உற்றுநோக்கலில் காணலாம். தொல்காப்பியர் கூறிய, “கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதின் உணரும் உணர்வு” என்பது உற்றுநோக்கலின் முதல்படியாக அமைவதைக் காணலாம். எனவே, உற்றுநோக்கலில் ஈடுபடுகின்ற ஆய்வாளருக்குப் புலன்களின் செயல்பாடு சிறந்ததாக, திண்ணியதாக இருத்தல் வேண்டும்.

உற்றுநோக்கலின் இரண்டாவது கூறான கவனம் ஆய்வுப் பொருளில் ஆய்வாளர் செலுத்தும் ஆழ்ந்த ஆர்வத்தால் வெளிப்படும் சரியான பயிற்சி, ஆழ்ந்த புலமை, சுறுசுறுப்பு மிக்க செயல்பாடு, செயல்புரியும் ஊக்கத்திறன் ஆகியன உற்றுநோக்கலின் தொடக்க நிலையில் ஆய்வாளருக்குத் துணைசெய்யும். மூன்றாவது கூறான பொறியறிவு என்பது புலனுணர்வுடன் தொடர்புடையது. புலன்கள் உணர்வதை மனத்தில் பதிவு செய்து அறிவால் ஆராய, விளக்க உதவுவது பொறியறிவு. உணர்வது மட்டுமே முதற்கூறு. மூன்றாம் கூறான பொறியறிவு உணர்ந்த மெய்ம்மைகளை வகைப்படுத்தவும், இனங்காணவும், கடந்த கால அனுபவம், கற்பனை, எண்ணம் ஆகியவற்றால் ஒன்றோடொன்று பொருத்திப் பார்த்துச் சரிபார்க்கவும் உதவும். இவ்வாறு உற்றுநோக்கலின் கூறுகள் அமையும்.

குறிப்பு

### 6.5.1. உற்று நோக்கலின் பயன்கள்

தரவுகளைத் திரட்டுவற்குப் பிற ஆய்வு முறைகளை விடவும் உற்றுநோக்கலைப் பயன்படுத்துவதால் மிகுதியான பயன்கிட்டுகின்றது. வெளிப்படும் வண்ணமே பண்புகளை அறிவதற்கு உற்றுநோக்கல் துணைசெய்கிறது. பேட்டி, வினாநிரல், பட்டியல் போன்ற பிற ஆய்வு முறைகளைப் பயன்படுத்தும்போது, தகவலாளி தன்னைப் பற்றியும் தன் இயல்பைப் பற்றியும் தானே சொல்லுகின்றான். ஆய்வாளரின் வினாக்களுக்குத் தகவலாளி விடை தருகின்றான். ஆனால் உற்றுநோக்கலில் ஆய்வாளர்தாமே தம் புலன்களால் உற்றுநோக்கிப் பதிவுசெய்து கொள்கிறார். தகவலாளியாக இருந்து செயல்படும்போது, ஆய்வாளர் தம்மை மதிக்க வேண்டும் என்பதற்காகத் தன் இயல்பான சில பண்புகளை மறைத்து, உயர்வாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடும். உற்றுநோக்கலில் அவ்விடர்ப்பாடு ஏற்படுவதில்லை. ஆய்வாளர் தம் புலன்களால் உற்றுநோக்கி உணர்வதால் உள்ளதை உள்ளவாறே பதிவுசெய்து கொள்கின்றார். தகவளாளியாக இருந்து செயல்படும்போது, ஆய்வாளர் தம்மை மதிக்க வேண்டும் என்பதற்காக இயல்பான சில பண்புகளை மறைத்து, உயர்வாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடும். உற்றுநோக்கலில் அவ்விடர்ப்பாடு ஏற்படுவதில்லை. ஆய்வாளர் தம் புலன்களால் உற்றுநோக்கி உணர்வதால் உள்ளதை உள்ளவாறே பதிவு செய்து கொள்கின்றார்.

பெரும்பாலான சமயங்களில் நம் இயல்புகள் பழக்க வழக்கங்களைச் சார்ந்து நின்று விளக்குகின்றன. மனித இயல்புகள் பலவற்றைச் சொற்களில் வடித்துவிட முடியாது. உற்றுநோக்கலின் மூலம் ஆராயும் ஆய்வாளர்களால் இத்தகைய நுண்ணிய கூறுகள் பலவற்றை வெளிக்கொணர முடிந்தது என்று மானுடவியலார் கூறுகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம் ஆய்வாளர் பிறருடைய பண்பாட்டுக் கூறுகளைக் கண்டு உணர்வதே ஆகும்.

தம்முடைய உணர்வு, இயல்பு, பழக்க வழக்கம் போன்றவற்றை மொழியால் நமக்கு உணர்த்த முடியாத சூழலில் ஆய்வாளர் பெரிதும் பயன்படுத்துவது உற்றுநோக்கல் முறையையே யாகும். சிறுகுழந்தைகள், விலங்குகள் போன்றவற்றின் இயல்புகளை ஆராயும் ஆய்வுகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். பாலர் பள்ளிக்

குழந்தைகளுக்குக் கவி கற்றுத்தருவதில் ஈடுபடும் ஆசிரியைகளுக்குப் புதிய வழிமுறைகளை எடுத்துக்கூற மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கு உற்றுநோக்கல் நன்கு துணைசெய்கின்றது.





ஆய்வு செய்யப்பெறும் தகவலாளிகளை அவர்களுடைய விருப்பத்தைச் சாராமல் ஆய்வாளர் ஆய்வு மேற்கொள்ள உற்றுநோக்கல் பெரிதும் பயன்படுகின்றது. தகவலாளியிடமிருந்து பேட்டி, வினாநிரல் போன்ற பிற ஆய்வு நெறிமுறைகளால் தகவல் திரட்டவியலாத நிலையில் இம்முறையே சிறந்ததாக அமைகின்றது. பிற முறைகளில் உள்ளதைவிடவும் உற்றுநோக்கலில் தகவலாளியின் பங்கு மிகக் குறைவானதே ஆகும்.

## 6.5.2. கருதுகோளும் உற்றுநோக்கலும்

உற்றுநோக்க இருப்பது எதை என்று முன்னதாகவே ஆய்வாளர் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். கருதுகோளை உருவாக்கிக் கொண்டு விட்டால் அதற்கு ஏற்றவாறு, அதனை நிறுவ உறுதுணையாக அமையும் கூறுகளை உற்றுநோக்கலாம். கருதுகோளை உருவாக்கிக் கொண்டு உற்றுநோக்குவதைச் செய்வது மிகுந்த பயனை விளைவிக்கும். ஆய்வை நேரிதாகவும் தேர்ந்தெடுத்ததாகவும் ஆக்க கருதுகோள் உதவும். கருதுகோளை உருவாக்கிக் கொள்ளாமல் உற்றுநோக்கத் தலைப்படின் அது குறிக்கோளின்றித் திரிவதாக, வெறும் நிகழ்வாக, குவிமையம் அற்ற ஆய்வாக அமையும் என்பர். கருதுகோளின் துணையுடன் உற்றுநோக்க வேண்டியதன் இன்றியமையாமையினை உணரப் பின்வரும் சான்று உதவும். சாலைப் போக்குவரத்தில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறக் காரணம் வண்டிகளின் வேகம் என்பது கருதுகோள் என்று கொள்வோம். அந்த ஆய்வில் பெருவழிச் சாலையா குறுகலான சாலையா என்று சாலைகளின் தன்மையை உற்றுநோக்குதல் வேண்டாம். வண்டிகள் செல்லும் வேகத்தை மட்டுமே உற்றுநோக்குதல் வேண்டும். ஆய்வின் தலைப்பு, கருதுகோள் ஆகியவற்றை மையமிட்டதாகக் குறிக்கோளுடையதாக உற்றுநோக்கல் அமையவேண்டும்.

தெருக்கூத்தில் இடம்பெறும் இசைபற்றி ஆராயும் ஆய்வாளர், இசைக்கூறுகளை மட்டும் உற்றுநோக்க வேண்டும். அதைவிடுத்துக் கூத்தர்களின் ஆடை, ஒப்பனை, நடிப்பு போன்றவற்றை உற்றுநோக்கக்

கூடாது. உற்று நோக்குகையில் பின்னணி பரந்ததாக உள்ளதா என்பதையும் ஆய்வின் பொதுச்சூழல் என்ன என்பதையும் அறிந்து உற்றுநோக்கல் வேண்டும்.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**

1. தொகுத்தல் என்றால் என்ன?
2. பகுத்தல் என்றால் என்ன?
3. உற்றுநோக்கல் என்றால் என்ன?
4. உற்றுநோக்கலின் பயன்கள் யாவை?

## 6.5.3. உற்றுநோக்கலின் வகைகள்

உற்றுநோக்குக் கலையைக் கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல், கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல், ஆய்வாளர் பங்குபெறும் உற்றுநோக்கல், ஆய்வாளர் பங்குபெறா உற்றுநோக்கல், கள உற்றுநோக்கல், தன்னை உற்றுநோக்கல், சமூக ஆய்வில் உற்றுநோக்கல் ஆகிய ஏழு நிலைகளில் உற்றுநோக்கலின் வகைகளைச் சுட்டலாம்.

### 6.5.3.1. கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல்

கட்டுப்பாடற்ற உற்றுநோக்கலில் ஆய்வாளர் கருவிகளைப் பயன்படுத்துவது இல்லை. மெய்ம்மைகளைப் பதிவு செய்யவும், அளக்கவும், அவற்றைச் சரிபார்க்கவும் கருவிகளை இவ்வகை உற்றுநோக்கலில் பயன்படுத்துதில்லை. கருவிகளை நம்பாமலும் மாதிரிகளை வைத்து ஆராய் முற்படாமலும் ஆய்விற்குரிய சிக்கலிற்கும் ஆய்வுக் குழுக்களுக்குமிடையில் வேறுபாடு இல்லாமல் அமைவது கட்டுப்பாடற்ற உற்நோக்கல். சுருங்கக்கூறின், ஆய்வாளர் தாம் கண்முன்னே காண்பதை விடவும் தமக்கு மிகுதியாகத் தெரியும் என்று எண்ணுபவராக இவ்வகை உற்றுநோக்கலில் காணப்படுவார். இயற்கையாக உள்ளபடியே பிற கருவிகளின் துணையின்றி உற்றுநோக்குவது கட்டுப்பாடற்ற உற்று நோக்கலின் இயல்பாகும். சேரியில் சென்று மக்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள் இவற்றை ஆராய்வது இவ்வகைக்கு எடுத்துக்காட்டாகும். இவ்வகை உற்றுநோக்கலில் ஆய்வாளர் தற்சார்புடன் விளக்கம் தர இடம் ஏற்படும்.

குறிப்பு

குறிக்கோள் ஏதுமில்லாது மேலோட்டமாக உற்றுநோக்குவதாக அமையும். நோக்கப்படும் தகவலாளியின் அல்லது அக்குழுவின் சமூக நிலை, மனநிலை ஆகியவற்றை நோக்காமல் ஆய்வாளர்தம் மதிப்பிற்கேற்ப நோக்கக்கூடிய வாய்ப்பு இவ்வகையில் உண்டு.

கட்டுப்பாடற்ற உற்றுநோக்கலை முழுவதுமாக நம்ப இயலாது. பார்த்தவற்றைச் சரியாக ஒத்திட்டுப் பார்க்கவோ, சில முடிவுகளுக்கு வரவோ வாய்ப்பின்றிக் குறிக்கோளற்றதாக அவ்வகை உற்றுநோக்கல் வழிசெய்யும். பார்வையாளரின் நோக்கலின் காரணமாக உற்றுநோக்கலே வண்ணம் பெற்றதாக, விருப்பு-வெறுப்புகளுக்கு ஆட்பட்டதாக ஆகிவிடம். சரிதானா என்று ஒத்திட்டுக் காண இவ்வகை உற்றுநோக்கலில் வழியில்லாததே இதற்குக் காரணமாகும். உற்றுநோக்கி அறியப்பட்ட மெய்ம்மைகள் உண்மையாக இல்லாத போதிலும் அவை உண்மையென்று ஆய்வாளர் முடிவிற்கு வர இக்கட்டுப்பாடற்ற உற்றுநோக்கலில் வாய்ப்புண்டு.

இத்தனை தடைகள் இருந்தபோதிலும் சமூக உண்மைகள் பலவற்றை அறிய இவ்வகை உற்றுநோக்கலே துணைசெய்கிறது. பல்வேறான சமூகக் கொள்கைகளையும் தனிமனிதர்களையும் வைத்து ஆராய உதவும் ஆய்வுக் கருவிகள் நம்மிடம் இல்லாததால் அவற்றை இயற்கைச் சூழலிலே ஆராய வேண்டியுள்ளது. எனவே, ஆய்வில் கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல் பெரிதும் தேவைப்படுகிறது.

### 6.5.3.2. கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல்

கட்டுப்பாடற்ற உற்றுநோக்கலில் காணப்படும் இடையூறுகளைக் களைவதற்காகக் கட்டுப்பாடுடைய உற்றுநோக்கலைப் பின்பற்றத் தலைப்பட்டனர். கட்டுப்பாடுடைய உற்றுநோக்கலுக்குப் புறநோக்கும் நுணுக்கமான பார்வையும் தேவைப்படும். இவ்வகை உற்றுநோக்கலைப் பன்முறை நிகழ்த்தலாம். உற்றுநோக்கும் ஆய்வாளரின் சொந்த விருப்பு வெறுப்பு, ஆய்வைப் பாதித்ததா என்று கண்டறிவதற்குத் தவறான தரவுகள் திரட்டப்பட்டதா என்று சரிபார்த்துக் கொள்ளவும். புறக்கூறுகளால் பாதிப்பு ஏதும் ஆய்வில் ஏற்பட்டதா என்று கண்டறியவும் இவ்வகை உற்றுநோக்கல் துணைசெய்கிறது. தரவுகளைத் துல்லியமாகத் திரட்டிக் கருவிகளைப் பயன்படுத்துவது கட்டுப்பாட்டுடைய

உற்றுநோக்கலின் சிறப்பாகும். உற்றுநோக்கும் சூழல் முறைப்படுத்தப்படும். பிரதிநிதிப்படுத்துவதாக அமையும். மாதிரி கிடைக்கும்வரை பலவாறான முயற்சிகள் செய்யப்படுவதையும் மாதிரிகளில் ஏற்படக்கூடிய தவறுகளைத் திருத்துவதில் கவனம் செலுத்துவதையும் உற்று நோக்குவது இவ்வகையின் தனித்தன்மையாகும். வினாநிரல், பட்டியல், குறிப்புக்கள், புகைப்படங்கள், நிலப்படங்கள் போன்ற பல்வகைக் கருவிகளைப் பயன்படுத்திக் கட்டுப்பாடுடைய உற்றுநோக்கலை ஆய்வாளர் மேற்கொள்ளுவர். வசதியும் வாய்ப்பும் இருப்பின் பரந்த ஆய்வுக் கூடங்களையும் இதற்குப் பயன்படுத்துவர்.

### 6.5.3.3. ஆய்வாளர் பங்குபெறும் உற்றுநோக்கல்

மேற்கொள்ளும் ஆய்வுக் களத்தில் ஆய்வாளர் தாமும் ஒருவராக இருந்து அப்பொருளில் தம்மையும் கலந்து, வாழ்ந்து, பெறும் அனுபவம் இவ்வகையில் சிறப்பான ஒன்று. கரகாட்டம் என்று ஆராயும் ஒருவர் தாமும் அக்கலையைக் கற்று அக்குழுவில் ஒருவராக இருந்து ஆடிப் பற்பல அனுபவங்களைப் பெற்று, அக்கலையையும் கலைஞர்களையும் உற்றுநோக்கித் தம் ஆய்விற்குரிய தரவுகளைத் திரட்டிக் கொள்கின்றார். தாம் கலைஞராக இருந்துகொண்டே தம் கூரிய நோக்கால் உற்றுநோக்கித் தரவுகளைத் திரட்டுகையில் அவர் ஆய்வு மிக்க பயன் விளைவிக்கின்றது. வரலாற்றாளர் ஆகவோ அல்லது பத்திரிகை நிருபராகவோ அல்லது ஆய்வாளர் தனித்திறமையுடன் ஆய்வில் தாம் கலந்து பங்குபெறுவது இவ்வகை உற்றுநோக்கலில் இடம்பெறுகிறது. ஆய்விற்கு ஒரு குழுவை எடுத்துக்கொண்டால், அவர்களின் இயல்பான பணிகள், சமூகச் செயல்பாடுகள், நிகழ்ச்சிகள், விழாக்கள் ஆகியவற்றில் எல்லாம் பார்வையாளராக அல்லாமல் தாமும் அவர்களுள் ஒருவராக ஆய்வாளர் பங்கேற்று வாழ்கிறார். புறத்தே நின்று செயல்படும் வெறும் ஆய்வாளராக அல்லாமல் அவர்களின் பணிகளில் விருப்புடன் அகத்தே நின்று பங்கேற்றவராகிறார்.

ஆய்வாளர் பங்கேற்று உற்றுநோக்குகையில் உணர்ச்சி வயப்பட்டுவிடக் கூடாது. நடுநிலையுடன் விளங்குபவராகவோ விருப்பு வெறுப்பற்றவராகவோ இருத்தலைவிடவும், ஆய்வாளர், பங்கேற்கும் குழுவில் ஒருவராகத் தம்மை எண்ணிக் கொள்ள வேண்டும். பங்கேற்கும்

குறிப்பு

நோக்கற்குரிய தன்மைக்கு மாறுபட்ட செய்திகளைப் பதிவு செய்யாது விட்டுவிடுதல் நல்லது. நாள் செல்லச்செல்ல ஆய்வாளர் தம்மை உற்றுநோக்கலுக்குரிய குழுவுடன் ஒன்றுபடுத்திக் கொள்கிறார். இதனால் அத்தகைய சந்தர்ப்பங்களில் அக்குழுவினரின் செயல்களைத் தம்முடைய சொந்த எண்ணங்களினூடே பார்த்திடலாமே அன்றி எப்போதும் ஆய்வாளராகவே பார்த்தல் கூடாது. உற்றுநோக்கலுக்குரிய குழுவுடன் இணைத்துக் கொண்டுவிடுவதால் பல சந்தர்ப்பங்களில் இன்றியமையாச் செய்திகளை விட்டு விடக்கூடும். வெறும் பார்வையாளராக வரும் புதியவன் ஒருவனைவிடவும் பங்கு பெறும் உற்றுநோக்கலை மேற்கொள்ளும் ஆய்வாளர் தவறிவிடுவதை இதனால் அறியலாம். குழுவில் ஒரு சிலரைப் பழகி வைத்துக்கொண்டு பங்குபெறும் உற்றுநோக்கலை மேற்கொள்வதால் ஆய்வாளரின் அனுபவம் வரையறைக்குட்பட்டதாகிவிடும். இடர்ப்பாடு இவ்வகையில் உள்ளது. குழுவின் உட்பூசல்களை உருவாக்குபவராக ஆய்வாளர் அமைந்துவிடின் ஆய்வின் நோக்கமே பிறழ்ந்துவிடும். இவ்வகையில் உற்றுநோக்கலில் அதற்கு வாய்ப்புண்டு.

விருப்புக்களைக் குறைத்துக்கொண்டு, உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு நடுநிலையில் நின்று செயல்படுபவராக ஆய்வாளர் இருப்பின் மேற்கூறிய இடர்ப்பாடுகளைக் கடந்து வெற்றிகரமானதாக இவ்வகை உற்றுநோக்கலை மேற்கொள்ளலாம். மனிதாபிமான உணர்வுகளையும் பழக்கவழக்கங்களையும் முற்றிலுமாகக் கண்டறிவதற்கு இவ்வகை உற்றுநோக்கல் முறையை உளவியலார் வற்புறுத்துகின்றனர். மலைவாழ் மக்கள் பற்றிய ஆய்விற்கு இம்முறையை மிகுதியும் பயன்படுத்திக் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றதை இந்தியச் சமூகவியலார் தத்தம் ஆய்வுகளில் மிகுதியும் கூறிப்பிடுகின்றனர்.

## 6.5.3.4. ஆய்வாளர் பங்குபெறா உற்றுநோக்கல்

ஆய்விற்குரிய குழுவில் தாமும் ஒருவராகப் பங்கேற்காமல் விலகியே இருந்து அவர்களை ஆய்வாளர் உற்றுநோக்குவது ஆய்வாளர் பங்குபெறா உற்றுநோக்கல் ஆகும். முழுவதும் பங்குபெறாது உற்றுநோக்குவது கடினமானதாகும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அங்கிருந்துகொண்டு, ஆனால் அதில் பங்குபெறாமல், ஒருவர் இருக்க

முடியுமா என்பது ஐயத்திற்கிடமானது. இதனால் ஆய்வாளர்க்கும் ஆய்விற்குரிய குழுவிற்கும் இடையூறுகள் நிகழும். எனவே, பங்குபெறா உற்றுநோக்கலை ஆய்வாளர் மேற்கொள்ளினும் ஒருசில பொழுதுகளிலாவது அவர் பங்குபெறவேண்டிய தேவை ஏற்படும். பங்குபெறா உற்றுநோக்கல் என்பது ஓரளவிற்குத்தான் இயலும் என்று இதனால் அறியலாம்.

புறநோக்கும் அறிவியல் நோக்கும் இவ்வகை உற்றுநோக்கலில் ஆய்வாளருக்கு இன்றியமையாதன. நடுநிலையும் உணர்வு வயப்படாத போக்கும் வேண்டற்பாலன. அப்போதுதான் அனைத்து உறுப்பினர்களிடமும் ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியும். ஆய்விற்குரிய குழுவிற்குப் புதியவராக ஆய்வாளர் தம்மை வைத்துக் கொள்வதால் அக்குழுவினரின் நுணுக்கமான விவரங்களையும் அறியலாம். குழுவில் இருந்து தம்மை விலக்கிக் கொண்டவராகவும் பற்றறுத்தவராகவும் ஆய்வாளர் இருத்தல் வேண்டும். எளிதாக உற்றுநோக்க இத்தன்மை உதவும்.

பங்குபெறாமல் ஒதுங்கி நின்று தொலைவிலிருந்தே நோக்குவதால் குழுவினரின் செயல்களையும் இயல்புகளையும் பாராட்டுவதற்கு ஆய்வாளர் தவறிவிடுகிறார். இதனால் சில சமயங்களில் ஆய்விற்குரிய பல தகவல்களைத் திரட்டாது ஆய்வாளர் விட்டுவிடக்கூடிய வாய்ப்பு இவ்வகை உற்று நோக்கலில் உள்ளது. தொலைவிலிருந்து பங்குபெறாமல் இருப்பதால் வரையறுத்த சிலவற்றையே ஆய்வாளர் நோக்குகிறார். எனவே, பங்குபெறும் உற்றுநோக்கலை மேற்கொள்ளும் ஆய்வாளர்க்குக் கிட்டும் அனுபவப் பரப்பும் தகவல் அளவும் பங்குபெறா உற்றுநோக்கலை மேற்கொள்பவர்களுக்குக் கிட்டுவதில்லை. ஆய்வாளர் தம்முள் ஒருவராகக் கலக்காமல், பட்டும்படாமல் புதியவராக இருப்பதைப் பல பொழுதுகளில் ஆய்விற்குரிய குழுவினர் விரும்பமாட்டார்கள். இவ்வாறு சில இடர்ப்பாடுகள் இவ்வகை உற்றுநோக்கலில் உள்ளன.

### 6.5.3.5. கள உற்றுநோக்கல்

ஆய்வாளர் தாமே கள ஆய்வில் உற்றுநோக்கிக் கண்டறிய வேண்டும். ஆய்வுக்குழு ஒன்றை உற்று நோக்கலுக்கு ஆய்வாளர் பயன்படுத்தினால், முன்கூட்டியே ஆய்வுக்குழு உறுப்பினர்களுக்குப்

குறிப்பு

பயிற்சி நல்கவேண்டும். எவ்வாறு உற்றுநோக்குவது, எவ்வளவு தகவல்களைத் திரட்டுவது, செய்திகளைக் குறிப்பது எவ்வாறு, எந்த நோக்கத்திற்காக உற்றுநோக்குவது என்ற அனைத்துச் செய்திகளையும் ஆய்வுக் குழுவிற்கு முதலிலே எடுத்துக்கூறி அவர்களுக்கு முதன்மை ஆய்வாளர் பயிற்சி தர வேண்டும். சான்றாக, பட்டிமன்றம் குறித்து ஆராயும் ஆய்வாளர், வினாநிரலை அல்லது பட்டியலைத் தந்து பல்வேறு வினாக்களுக்குரிய விடைகளைக் குறித்துத் தருவதற்காக ஆய்வுக்குழு ஒன்றை முன்கூட்டியே பயிற்சி அளித்துக் கள ஆய்விற்கு அழைத்துச் சென்று உற்றுநோக்கச் செய்து தகவல்களைத் திரட்டுவதைக் கூறலாம். இவ்வாறு ஆய்வுக்குழுவின் உதவியைப் பயன்படுத்தும் ஆய்வாளர் அக்குழுவினருக்கு நல்கும் கருவிகளை இயக்கும் முறை பற்றி நன்கு விளக்க வேண்டும். அவ்வாறே வினாநிரல், பட்டியல் போன்றவற்றை உருவாக்குவதிலும் முதன்மை ஆய்வாளர் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்.

முதன்மை ஆய்வாளர் தாம் மட்டும் உற்று நோக்குகையில் அனைத்துச் செய்திகளையும் ஒன்றுவிடாமல் திரட்டிக் குறித்துக்கொண்டு பின்னர் அவற்றை வகைப்படுத்த வேண்டும். சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்றவராக ஆய்வாளர் இருப்பது பல சமயங்களில் பயன் நல்கும். ஆய்வாளரின் சொந்த விருப்பு வெறுப்புக்கள் இடம்பெற்றுவிடாமல் இருக்கும்படி அவர் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஆய்வாளர் தம்மை உற்றுநோக்கித் தம் குறைநிறைகளைக் கண்டறிந்து ஆய்விற்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வது நல்லது. முன்னரே திட்டமிட்டபடி ஆய்வாளர் உற்றுநோக்கித் தரவுகளைத் திரட்ட வேண்டும். ஆய்வாளரின் திட்டத்தில் இடம்பெறாமல் கள ஆய்வில் கண்டறியும் சிறப்பான தகவல்களையும் அவ்வப்போது அவர் குறித்துக்கொள்ள வேண்டும். அதற்காக முற்றிலும் திட்டத்தை விடுத்து வேறானவற்றை நோக்குதல் கூடாது.

கள ஆய்வில் உற்றுநோக்கி முழுவதுமாகத் தரவுகளைத் திரட்டியபின் அவற்றை வகைப்படுத்திப் பலவாறு பட்டியல் இடும் பணியைச் செய்யவேண்டும். கள ஆய்வு நடைபெற்று வருகையிலே வகுப்பதும் தொகுப்பதும் நடைபெறினும் அவை இறுதியிலே முழு

வடிவம் பெறும். இடையில் தவறு அல்லது விடுகை இருப்பின் மீண்டும் சரி செய்து கொள்ள இது உதவும்.





### 6.5.3.6. தன்னை உற்றுநோக்கல்

பிறரை உற்றுநோக்குவதற்கு முன் ஆய்வாளர் தம்மையே உற்றுநோக்கி உணர வேண்டும். ஆய்வாளர் தம் சொந்த விருப்பு, வெறுப்பு, உணர்வு வயப்படும் பாங்கு, சார்புத்தன்மை ஆகியவற்றைக் கண்டறிந்து அவை தலைகாட்டா வண்ணம் இருக்கப் பழக்கிக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, பட்டிமன்றம் என்றும் பொருள் பற்றி ஆராயும் ஆய்வாளர் தாமே பட்டிமன்றப் பேச்சாளராக இருக்கிறார் என்று கொள்வோம். அவருக்கென்று விருப்பமான தலைப்புக்கள், தம் கட்சிப் பேச்சாளர்கள், எதிர்க்கட்டிப் பேச்சாளர்கள், நடுவர், தீர்ப்பு வழங்கப்பட வேண்டியமுறை, எதிர்பார்ப்பு, தம் செல்வாக்கை விரிவாக்கித் தம் ஆளுமையை வெளிப்படுத்தத் துடிக்கும் முனைப்பு ஆகியவற்றை ஆய்ந்து அவை உற்றுநோக்கலில் குறுக்கிடாமல் அவர் கவனமாகப் பார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறே அவருக்குப் பிடிக்காத பொருள், பேச்சாளர், நடுவர் என்பன எவ்வாறு உற்றுநோக்கலில் தாக்கம் செய்கின்றன எனவும் கண்டறிய வேண்டும். இவை எல்லாவற்றையும் நன்கு அறிந்து இடர்களைக் களைந்து தம்மையே சுயவிமர்சனம் செய்துகொள்ளும் ஆற்றல்மிக்க ஆய்வாளர்கள் கூடச் சில சமயங்களில் உணர்ச்சி வயப்பட்டு, தம் ஆய்வைப் பாதிக்கும்.

உறுதியான தன்னை அறியும் திறனும், பிறரது திறனாய்வும் சேர்ந்து ஆய்வாளரின் சொந்த விருப்பு வெறுப்புக்கள் உற்றுநோக்கலைப் பாதிப்பதைத் தடுத்து, ஆய்வை வளமிக்கதாக்கும். சமூக ஆய்வின் இயக்குநர்களில் சிலர் தத்தம் துறை ஆய்வாளர்களிடம் அவர்தம் சொந்த வாழ்க்கை வரலாறுகளைச் சுயசரிதைகளை எழுதச் சொல்லி, அவற்றை நன்கு திறனாய்ந்து அவர்களிடமுள்ள விருப்பு வெறுப்புக்கள், உணர்வு வயப்பட்ட இடங்கள், எதிர்ச்செயல்கள் ஆகியவற்றைக் கண்டறிந்தனர். இவை பின்வரும் ஆய்வாளர்களுக்கும் பயன் விளைவித்தன. தம்மைத் திருத்திக்கொள்ள உதவின.

ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வு அனுபவங்களையும், குறிப்பாகக் கள ஆய்வு மேற்கொள்ளும் அனுபவங்களையும், ஆய்வில் ஏற்பட்ட

குறிப்பு

இடர்ப்பாடுகளையும் அவற்றை எதிர்த்து வெற்றிகொண்ட பாங்கையும் குறித்து வைத்துக்கொள்ளுதல் நலம். பின்வரும் ஆய்வாளர்களுக்கு அவை வழிகாட்டியாக அமையும். ஒரே மாதிரியான சூழலில் எப்படிச் செயல்படுவது என்று அறிந்து அதற்கு ஏற்பச் செயல்பட உதவும். மக்களின் பழக்க வழக்கங்களை ஒரே மாதிரியான சூழல்களிலும் பண்பாட்டுப் பின்னணிகளிலும் அறிந்துகொள்ள உதவும். இதனால் உற்றுநோக்கலில் முன்னோருக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள் பின்வருபவருக்கு ஏற்படாமல் உற்றுநோக்கல் சிறப்புமிக்கதாக அமைந்து ஆய்வு சிறக்கும்.

### 6.5.3.7. சமூக ஆய்வில் உற்றுநோக்கல்

சமூக ஆய்வில் கருதுகோளை உருவாக்குவதற்கு உற்றுநோக்கல் துணைசெய்கிறது. சமூக ஆய்வாளர் தம்மைச் சுற்றியுள்ள மனிதர்களை இடைவிடாமல் உற்றுநோக்கி அவர்களின் இயல்புகளையும் சமூகப் போக்குகளையும் அறிந்துகொள்கின்றனர். திட்டமிட்டுச் செயல்படாமல் இயல்பாக நோக்குவதே இப்பட்டறிவை நல்குவதால், கருதுகோளை இதனால் அவர்கள் உருவாக்கிக் கொள்கின்றனர். எனவே, சமூக ஆய்வாளர் நன்கு உற்றுநோக்குபவராகவும் விளங்க வேண்டும்.

பிற முறைகளை விடவும் மிகவும் சரியானதாக அமைவது உற்றுநோக்கல் முறையாகும். பேட்டி, நிகழ்வு, வரலாறு போன்ற பிற முறைகளில் ஆய்வாளர் குழுவைச் சார்ந்தவரையும் தகவலாளியையும் நம்பவேண்டி உள்ளது. எனவே ஆய்வாளர் அத்தகவல்களை ஒப்பிட்டு அவை சரியானவையா என்று பார்க்க வழியின்றிப் போகிறது. உற்றுநோக்களில் அவ்விடர்ப்பாடு இல்லை. ஆய்வாளர் தாமே நேரில் கண்டு அறியவும் ஐயம் ஏற்பட்டவிடத்து அவற்றைச் சரிபார்க்கவும் வழி இம்முறையில் உள்ளது. பிற முறைகளில் திரட்டப்படும் தரவுகளைவிடவும் உற்றுநோக்கலின்வழி ஆய்வாளர் திரட்டுபவை மதிப்பு மிக்கதாயும் நம்பகத்தன்மை மிகுந்ததாயும் உள்ளவை. இதனால் கிடைக்கும் ஆய்வு முடிவுகள் பிறரால் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாக இம்முறையில் அமைகின்றன. கருதுகோளைச் சோதித்துப் பார்த்து உதவுவதிலும் உற்றுநோக்கல் பெரிதும் துணைபுரிகிறது.

### முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

குறிப்பு

5. உற்றுநோக்கலின் வகைகள் யாவை?
6. கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல் என்பது யாது?
7. கட்டுப்பாடுடைய உற்றுநோக்கல் என்பது யாது?
8. கள உற்றுநோக்கல் எவ்வாறு அமைதல் வேண்டும்?

## 6.5.4. உற்றுநோக்கலில் உள்ள இடர்ப்பாடுகள்

இயற்கை மாறுதலுக்கு உட்பட்டது. எனவே, ஒன்று நடைபெற்ற இடத்தில் உற்றுநோக்குவது முழுவதும் எதிர்பார்த்த பயனை நல்குவதில்லை. திட்டமிட்ட முன்னரே ஏற்பாடு செய்த ஒன்றாக இதனைச் செய்வது எளிய செயலன்று. அனைத்துமே உற்றுநோக்குவதற்கு ஏற்றனவாக இருப்பதில்லை. தம்முடைய செயல்களை வெளியார் ஒருவர் கண்காணித்து உற்றுநோக்க, அந்தக் குறிப்பிட்ட குழுவினரோ, மனிதனோ இடம் தருவதில்லை. எனவே பெரும்பாலான தனிமனிதச் செயல்கள் வெளியாரின் உற்றுநோக்கலுக்கு இடந்தருவன அல்ல. எடுத்துக்காட்டாக, மலைவாழ் மக்களின் மணவாழ்க்கை பற்றி அறிய ஒருவர் சென்றால், தம்முடைய அந்தரங்கங்களை ஆய்வாளர் உற்றுநோக்க எந்த மணக்களும் அனுமதிக்க மாட்டார்கள். குழுக்களாகக் கூடும் பொது நிகழ்ச்சிகளின் போது மட்டுமே ஆய்வாளர் அவர்களை உற்றுநோக்க முடியும். இதனால் உற்றுநோக்கல் வரையறைக்குட்பட்டதாகிறது.

ஆய்வாளர் முன்கூட்டியே திட்டமிட்டு உற்றுநோக்கக் காத்திருப்பினும் கூட அவர் எதிர்பார்த்த நேரத்தில், இடத்தில் நிகழ்ச்சிகள் நிகழா. எல்லாவற்றையும் ஆய்வாளர் உற்றுநோக்க இயலாது. அவர் காத்திருக்கையில் அவை நிகழாததும், அவை நிகழ்கையில் அவர் அங்கு இல்லாததும் இயற்கையாகப் பல சமயம் நிகழும். சான்றாக, பெற்றோர்கள் திட்டும்போது அல்லது அடிக்கும்போது சிறு குழந்தைகளின் எதிர்ச்செயல்கள் எப்படி உள்ளன என்று ஒருவர் ஆராய்வதாகக் கொள்வோம். பெற்றோர் ஒருவித மறுப்புமின்றி இவற்றை உற்றுநோக்க ஆய்வாளரை அனுமதித்தாலும், அச்சந்தர்ப்பத்தில் குழந்தை ஒருவித எதிர்ச்செயலும் செய்யவில்லை என்பது அடிக்கடி

நிகழும். ஆய்வாளர் இல்லாத சில சமயங்களில் குழந்தைகள் எதிர்ச்செயல் புரியும்.

குறிப்பு

மனித மன உணர்வுகள், மெய்ப்பாடுகள், எதிர்ச்செயல்கள் போல்வனவற்றை உற்றுநோக்கலால் அறியமுடியாது. எனவே, அங்கு இம்முறை பயன்படாது. அத்தகையனவற்றை அறிய, பேட்டியோ, நிகழ்வு ஆய்வோதான் பயன்படும். இத்தகு இடர்ப்பாடுகள் இருப்பினும் இவற்றை எதிர்நோக்கி வெற்றி கண்டபின் இம்முறை ஆய்விற்குப் பெரிதும் பயன்படுகின்றது. எனவேதான் அனைத்து ஆய்வுகளிலும் இம்முறை பலராலும் வலியுறுத்தப்படுகிறது.

## 6.6. தொகுத்துக் காண்போம்

- ஆய்வுத் தரவுகள் தொகுத்தல் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- தொகுத்த ஆய்வுத்தரவுகளை எவ்வாறு பகுப்பீர்கள் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- தொகுத்துப் பகுத்த ஆய்வுத் தரவுகளை ஆய்வாளர் எவ்வாறு உற்று நோக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- உற்றுநோக்கலின் வகைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 6.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 6.3. | 2. | 6.4. |
| 3. | 6.5. | 4. | 6.5.1. |
| 5. | 6.5.3. | 6. | 6.5.3.1. |
| 7. | 6.5.3.2. | 8. | 6.5.3.5. |

## 6.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. ஆய்வில் தொகுத்தலின் பங்களிப்பு பற்றிக் கட்டுரை வரைக.
2. ஆய்வில் பகுத்தல் பற்றிக் கட்டுரை வரைக.
3. உற்றுநோக்கலின் வகைகள் யாவை? ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. உற்றுநோக்குதலில் உள்ள இடர்ப்பாடுகள் யாவை?

குறிப்பு

# கூறு 7. உற்று நோக்குவாரின் அணுகுமுறைகள்

## 7.1. முன்னுரை

உற்றுநோக்குபவர் என்பவர் ஆய்வாளரே ஆகும். ஆய்வாளர் தம்முடைய ஆய்வினை எந்த முறையில் ஆய்வினை அணுகுகின்றாரோ அதுவே ஆய்வு அணுகுமுறை எனப்படும். ஒவ்வொரு ஆய்வு முறைக்கும் ஏற்றாற்போல் ஆய்வு அணுகுமுறை மாறுபடும். இதனைப் பற்றி இந்தப் பகுதியில் காணலாம்.

## 7.2. குறிக்கோள்கள்

- ஆய்வாளரின் ஆய்வுத் தன்மைக்கு ஏற்ப ஆய்வு அணுகுமுறை மாறுபடும் என்பது பற்றித் தெரிந்துகொள்வீர்கள்.
- அறிவியல் ஆய்வு முறையின் தொடக்கநிலை ஆய்வு வடிவங்களின் ஆய்வு அணுகுமுறைகள் பற்றித் தெரிந்துகொள்வீர்கள்.
- அறிவியல் ஆய்வு முறையல்லாத தொடக்கநிலை ஆய்வு வடிவங்களின் ஆய்வு அணுகுமுறைகள் பற்றித் தெரிந்துகொள்வீர்கள்.
- கோட்பாட்டு ஆய்வு அணுகுமுறைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 7.3. உற்று நோக்குவாரின் அணுகுமுறைகள்

வரலாற்று ஆய்வு அணுகுமுறை, ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறை, சோதனை ஆய்வு அணுகுமுறை, உய்த்துணர் ஆய்வு அணுகுமுறை,

செலுத்துநிலை ஆய்வு அணுகுமுறை, அமைப்பியல் ஆய்வு அணுகுமுறை, நடைமுறைசார் ஆய்வு அணுகுமுறை ஆகிய அறிவியல் ஆய்வு அணுகுமுறைகளும், அறிவியல் ஆய்வு அணுகுமுறைசாராத மாதிரி ஆய்வு அணுகுமுறை, அளந்தறி ஆய்வு அணுகுமுறை, மதிப்பீட்டாய்வு அணுகுமுறை, புள்ளிவிவர ஆய்வு அணுகுமுறை, விளக்கவியல் ஆய்வு அணுகுமுறை, செயல்முறை ஆய்வு அணுகுமுறை, மரபியல் ஆய்வு அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகளும், கோட்பாட்டாய்வு அணுகுமுறை, நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறை என ஆய்வு அணுகுமுறைகள் அமையும்.

## 7.3.1. வரலாற்று ஆய்வு அணுகுமுறை

ஆய்வாளர் கடந்த கால நிகழ்ச்சிகளில் இருந்து உண்மைகளை அறிந்து கால வரிசைப்படி பொதுமைப்படுத்திக் காணும் ஆய்வு அணுகுமுறையே வரலாற்று ஆய்வு அணுகுமுறை ஆகும். வரலாற்று ஆய்வாளர் பின்வரும் ஆய்வு அணுகுமுறைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

- சமூக நிகழ்வுகளிணன் காரண காரியத் தொடர்பைச் சரியாக அறியும் சமூக நோக்கோடு அணுகுதல்.
- முடிவுகளை எய்து முன்னர் நிகழ்வுகளையும் உண்மைகளையும் வரலாற்று நோக்கில் அணுகுதல்.
- வரலாற்று நிகழ்வுகளை அறியும்போது அவற்றை ஒரு சார்புபட அணுகுதல்.
- முன்னர் நிகழ்ந்த நிகழ்வின் முழுப் பரிமாணத்தையும் அறிந்து இப்போதுள்ள சிக்கலை அணுகுதல்.
- பரந்துபட்ட வரலாற்றுலகில் தேவையான சிறிய பகுதியைத் தேர்ந்து தெளிந்து அதற்கேற்ப தன்னுடைய ஆய்வு அணுகுமுறையை அமைத்தல்.
- பொருத்தமான பகுதியைத் தேர்வதை விட்டுவிட்டுக் கிடைக்கும் பகுதியைப் பொருத்தும் செயற்கையை மேற்கொள்ளாமை.
- தவறான பொருள் கற்பித்துக் காணல், உணர்ச்சி நோக்கில் மதிப்பிடுதல், கற்பனை மீக்கூர்ந்த நிலையில் ஆய்வினை அணுகாமல் இருத்தல்.

போன்ற ஆய்வு அணுகுமுறைகள் வரலாற்றாய்வாளன் பின்பற்றப்பட வேண்டும்.

குறிப்பு

வானூர்தியின் கண்டுபிடிப்பு உடனடியாக நிகழவில்லை. பலருடைய முயற்சிகளின் தோல்விகளையும், சிறுசிறு முன்னேற்றங்களையும் உட்கொண்டே ரைட் சகோதரர்கள் விமானம் கண்டனர். ரைட் சகோதரர்கள் தம் கண்டுபிடிப்புக்கு முன் ஒரு வரலாற்று ஆய்வு நிகழ்த்திய பின்பே புதிய விமானத்தை உருவாக்க முடிந்தது. நிகழ்காலத்தில் உள்ள ஒவ்வொன்றின் வளர்ச்சி, தேய்வுகளை மதிப்பீடு செய்ய வரலாற்றியல் ஆய்வு அணுகுமுறை தேவையானதாகும். இந்தியாவின் மக்கள் தொகை நூறு கோடிக்கும் மேலாக வளர்ந்துள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாடு குறித்து ஆராயும் எவரும் கடந்த கால நிலைகளைக் குறித்து ஆராய்ந்தே ஆகவேண்டும். ஏணியின் மேல்படியை ஒரே எட்டில் அடைய முடியாதது போலவே, வரலாற்றியல ஆய்வில் தேவையான படிநிலையை உடனடியாகக் கண்டுவிட முடியாது. கொத்தடிமை நிலை பற்றிய ஆய்வு, பூச்சிக்கொல்லிகளின் வீரியக் குறைவு, கடல்வாழ் உயிரினங்களின் எண்ணிக்கை அருகி வருதல், வீட்டுவசதிக்கடன் பெருக்கம், கூட்டுறவுச் சங்கங்களின் தோல்விக்கான காரணங்கள், கையூட்டுக் குற்றங்களின் பெருக்கத்திற்கான அடிப்படைகள், அரசியல் சட்டப்பிரிவில் 356ஆம் பிரிவைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள், மகளிர் முன்னேற்றத்தில் இட ஒதுக்கீட்டின் பங்கு, பால்வினை நோய்களின் அதிகரிப்பிற்கான சமூகப் பின்னணி, கணிப்பொறியின் வளர்ச்சியும் வேலைவாய்ப்பு நிலைகளும் ஆகிய பலதுறை சார்ந்த தலைப்புகளுக்கெல்லாம் வரலாற்று ஆய்வு அணுகுமுறை அவசியம் தேவைப்படும்.

## 7.3.2. ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறை

ஒரு சிக்கலுக்கு இருவேறு துறையினர் ஒன்றுபட்டு விடைகாண முற்பட்டு ஆய்வது ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறை ஆகும். இருதுறை ஆய்வில் இருவேறுபட்ட துறைகள் ஒரு சிக்கலைக் குறித்து ஆராயும். இலக்கியவியலும் சமூகவியலும், சமூகவியலும் பொருளியலும், பொருளியலும் குற்றவியலும், குற்றவியலும் உளவியலும், உளவியலும்

மானிடவியலும் என இருவேறுபட்ட துறைகள் இணைந்து ஆராயும் ஆய்வுக் களங்கள் பெருகியுள்ளனர். பலதுறை அறிஞர்கள் ஒன்றிணைந்து ஒரு சிக்கலுக்குத் தீர்வு காணும் ஆராய்ச்சி மனித இன முன்னேற்றத்திற்கு வழி கோலுவதாகும். ஆனால் பெரும்பாலும் இவ்வகை ஆய்வுகள் ஒருதுறை சார்ந்தவராலேயே செய்யப்படுகின்றன. இலக்கியமும் கலையியலும் பற்றிய சிக்கலை இலக்கிய ஆய்வாளரே மேற்கொள்வது கலையியல் பற்றிய நிறைவான முயற்சியைத் தராது. அறிஞர் இருவர் இருதுறை வல்லவராயமைந்த நிலையில் இப்படிப்பட்ட ஆய்வு செய்ய வேண்டும். வெவ்வேறு துறையிலிருந்து சிறிது சிறிதாக அள்ளிச் சேர்த்து உருவாக்கப்படுவதன்று இவ்வகை ஆய்வு. பல்துறை வித்தகமும் அறிவும் வேதியிற்கலப்பாக அமைந்து பயன்மிக்க முடிவைத் தரும் நிலையில் இருதுறைபட்ட அணுகுமுறையோடு இவ்வாய்வை உருவாக்க வேண்டும். இத்தகைய ஒப்பிலக்கிய ஆய்வு இலக்கிய அளவில் நில்லாமல் இலக்கியத்தைக் கலையோடு ஒப்பிட்டு நோக்குவதையும் உள்ளடக்கி அணுகுவதாக இருக்க வேண்டும். ஓவியம், சிற்பம், இசை, சமயம், அறிவியல் போன்ற துறைகளில் ஒன்றனோடு ஒன்றைத் தொடர்புப்படுத்தி அணுகி ஆய்வது இம்முறை ஆய்வாகும்.

### 7.3.3. சோதனை ஆய்வு அணுகுமுறை

சோதனை செய்து பார்த்தல் என்பது ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நாளுக்கு நாள் பல துறைகளிலும் நிகழும் ஒன்று. மனிதர்களுக்குக் கொடுப்பதற்கு முன் எலி, முயல், குரங்கு ஆகியவற்றிற்குக் கொடுத்து மருந்துகளில் பயனையும் விளைவையும் கண்டறியும் வழக்கம் சோதனை ஆய்வு அணுகுமுறை ஆகும். சோதனை ஆய்வு அணுகுமுறையில் பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு இவ்வாய்வு அணுகுமுறையில் ஆய்வினைச் செய்திடல் வேண்டும்.

- பலவேறு மாதிரிகளில் ஒன்றைத் தேர்ந்து அணுகுதல்.
- தேர்ந்ததைச் சோதனைக்கு உட்டுபத்தும் முன் சோதனையின் விளைவுகளை அனுமானித்தல்.
- எதிர்பார்த்த முடிவு வராத நிலையில் அடுத்த மாதியச் சோதனைக்கு உட்படுத்துதல்.

- சோதனைக் களச் சூழலைக் கணித்துக் கொள்ளுதல்.
- சோதனையில் பல்வேறு படிநிலை வளர்ச்சிகளைப் பதிவு செய்தல்.
- முடிவை அறிந்து விளைவு இன்னதெனக் குறித்துக்கொள்ளல்.
- முடிவைச் சரிபார்த்தல்.
- முடிவு அறிக்கையாகப் படைத்தளித்தல்



என்ற நிலைகளில் ஒரு சோதனை ஆய்வு நிகழும். இத்தகைய சோதனை ஆய்வு அணுகுமுறையில் உடன்பாட்டு அணுகுமுறை, வேறுபடுத்து அணுகுமுறை, கூட்டு அணுகுமுறை, எச்ச அணுகுமுறை, இணைந்தியங்கி மாறுபடும் அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகள் பின்னப்படுகின்றன.

இவற்றுள் உடன்பாட்டு அணுகுமுறை என்பது ஒரு நிகழ்ச்சிக்கான காரணம் எதுவென ஆராய்ந்து பலவற்றுள் உடன்படத்தக்கதைத் தேர்வு செய்யும் முறையாகும். வேறுபடுத்து அணுகுமுறையில் பல்வேறு காரணங்கள் ஆராயப்படு ஆராயப்படுவதில்லை. ஒன்றையொன்று ஒத்திருக்கும் இரு காரணங்கள் எடுத்துக் கொள்ளப்பெற்று அவற்றில் உள்ள வேறுபாட்டுக் கூறு ஆராயும் முறையாகும். கூட்டு அணுகுமுறையில் ஒரு நிகழ்வு நிகழ்வதற்குரிய காரணங்கள் ஆராயப்படும்போதே அந்தக் குறிப்பிட்ட நிகழ்வு நிகழாததற்குரிய காரணங்களும் ஆராயப் பெறும். எச்ச அணுகுமுறை என்பது ஒன்றிலிருந்து ஒன்றைக் கழித்து மீதியிருப்பதிலிருந்து அறியும் முறையாகும். இணைந்தியங்கி மாறுபடும் அணுகுமுறை என்பது ஒற்றுமையுடைய நிகழ்ச்சிகளில் குறிப்பிட்ட சில வகைகளில் மாறுபாடு அமைவதைக் காண்பதாகும்.

சோதனை ஆய்வு அணுகுமுறையில் ஆய்வாளர் கொள்ளத்தகும் படிநிலைகள் பின்வருமாறு:

- சிக்கலுக்குரிய மூலத்தைக் குறித்த சரியான விவரம் அறிதல்.
- சிக்கலைத் தேர்ந்து விளங்கிக் கொள்ளுதல்.
- கருதுகோளைக் கணித்தல்.
- செய்முறையைத் திட்டமிடுதல்.
- செய்முறை மாதிரிகளைத் தேர்தல்.

- செய்முறைக்குரிய கட்டுப்பாடுகளையும் சூழல்களையும் உருவாக்கல்.
- செய்முறையைப் பதிவு செய்தல்.
- செய்முறை முடிவை விளக்குதல்.

குறிப்பு

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. உற்றுநோக்கலின் அணுகுமுறைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. வரலாற்றாய்வு அணுகுமுறை என்றால் என்ன?
3. ஒப்பீட்டாய்வு அணுகுமுறை என்றால் என்ன?
4. சோதனை ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?

## 7.3.4. உய்த்துணர் ஆய்வு அணுகுமுறை

ஒப்புக்கொள்ளப்பட்ட மெய்ம்மையில் இருந்து வருவிக்கப்படும் செய்திகளைப் பெறும் ஆய்வு அணுகுமுறையே உய்த்துணர் ஆய்வு அணுகுமுறை ஆகும். பல ஆய்வுக் குறிப்புக்கள் ஆய்வாளரிடம் இருக்கும்போது அவற்றில் இ∴தன்று, இ∴தன்று என்று கழித்துக் கொண்டே வந்த ஒரு மெய்ம்மையை அடையும் அணுகுமுறையே இந்த உய்த்துணர் ஆய்வு அணுகுமுறை. இந்த உய்த்துணர் ஆய்வு அணுகுமுறையான கருதுகோளைச் சோதிப்பதற்கு மிகப் பயன்படுவதாகும். சேகரிக்கப்பட்ட தரவுகள் சரியானவை என்று காணுதற்கும் இந்த முறை பயன்படும்.

உய்த்துணர் ஆய்வு அணுகுமுறையானது, ஆராய்ச்சியில் ஒரு எளிமையையும் காலச் சிக்கனத்தையும் அளிப்பதாகும். மிக ஆழமாகவும் நுண்மையாகவும் ஆராய வாய்ப்பில்லாத சூழலிலும், நெடிய காலத்தைச் செலவிட முடியாத நிலையிலும் இந்த ஆய்வு அணுகுமுறையில் ஆராயலாம். இந்த ஆய்வு முறையில் பெறப்படும் முடிவுகள் பொது மதிப்பீடுகள் என்ற அளவிலேயே அமையும். இவை பேராய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாறுபட்ட முடிவுகள் தோன்ற வழிவகுக்கும். இந்த ஆய்வு அணுகுமுறைக்கு ஆய்வாளருக்கு ஆழ்ந்த கல்வியறிவு, நுண்ணோக்கு, புள்ளிவிவரத் தொகுப்பு ஆகியவை தேவையில்லை. இயல்பான அறிவுக் கூர்மை, கற்பனையாக எண்ணிப்

குறிப்பு

பார்க்கும் இயல்பு, அனுமானங்கள் ஆகியன மட்டும் இருந்தாலே ஆய்வாளர் இந்த முறையில் ஆய்வினை அணுகலாம்.

## 7.3.5. செலுத்துநிலை ஆய்வு அணுகுமுறை

ஏற்கெனவே பெறப்பட்ட சில முடிவுகளின் அடிப்படையில் மேலும் ஆராய்ச்சி செய்யும் ஆய்வு அணுகுமுறையே செலுத்துநிலை ஆய்வு அணுகுமுறை ஆகும். முன்பே பெற்ற முடிவுகளின் அடிப்படையில் செய்யப்பெறும் மேல்நிலை ஆய்வாக இது அமையும். பழைய முடிவுகளை மறு ஆய்வு செய்துகொள்ள வேண்டிய பொறுப்பு ஆய்வாளருக்கு உள்ளது. முன்பு பெறப்பட்ட மெய்ம்மைகளில் பிழையிருக்குமாயின் இந்த ஆய்வும் பயனற்றுப் போகும். எனவே, இவ்வாய்வு அணுகுமுறையில் ஆய்வாளர் முன்புள்ள ஆய்வுகளின் மெய்ம்மைகளை நன்கு நுணுகி அணுகுதல் வேண்டும்.

## 7.3.6. அமைப்பியல் ஆய்வு அணுகுமுறை

ஒரு நூல் அல்லது ஓர் அமைப்பு எந்த முறையில், வரிசையில், தரத்தில், நெறியில் அமைந்துள்ளது என்ற முறையில் ஆய்வு செய்ய அணுகுவது அமைப்பியல் ஆய்வு அணுகுமுறை ஆகும். அவ்வமைப்பியல் ஆய்வு அணுகுமுறையானது சிலப்பதிகாரக் கதையமைப்பில் அமைந்திருப்பதைக் காணலாம். சேரன்செங்குட்டுவன் தன் மனைவி வேண்மாளோடு மலைவளம் காணச் செல்கிறான். குன்றக் குறவர்கள் வேந்தனை வந்து வணங்கி மலையிடத்தே வேங்கை மரநிழலில் கண்ணீரொடு வந்து நின்ற மங்கை ஒருத்தி குறித்துக் கூறுகின்றனர். எந்நாட்டாள் கொல்லோ யார் மகள் கொல்லோ என ஐயுறுகையில் சீத்தலைச் சாத்தனார் ‘யானறிகுவன் அவள்பட்டது’ எனக் கண்ணகியின் கதையைக் கூறுகிறார். பின்பு இளங்கோ கண்ணகியின் கதையைப் பாடுகிறார். தாம் ஏன் கண்ணகியின் கதையைப் பாடவேண்டும் என்பதற்குரிய காரணத்தை இறுதியில் அவர் எடுத்துரைக்கிறார். “வஞ்சி மாநகர அரசவையில் நீ உன் தந்தையோடு அமர்ந்திருந்தாய். அப்போது நிமித்திகன் ஒருவன் வந்தான். நீ அரசனாக ஆவாய் எனக் கூறினான். உடனே அவன்மீது சினம் கொண்டு எழுந்தாய். தமையன் செங்குட்டுவன் துயரம் நீங்க நீ துறவு பூண்டாய். முடிவில்லாத பேரின்பத்தை ஆளும் அரசனாக நீ மாறினாய். இவ்வாறு

என் கதையைக் கூறிய கண்ணகியின் கதையை யான் கூறினேன்" என்று இளங்கோவடிகள் கூறுகின்றார். காப்பிய அமைப்பாய்வு பல செய்திகளைத் தெளிவுபடுத்துகின்றது. உலகக் காப்பியங்களில் அவற்றைப் படைத்தோர் தம்மை ஒரு பாத்திரமாக ஆக்கிக் கொள்ளும் மரபு உலகியல் நிகழ்வுகளை ஒரு கோவையாகப் படைக்கும் பாங்கு, இயல்வைப்பு, கூற்று, தனிமொழிகளும் கனவுகளும் இடம்பெறல் ஆகியன குறித்து அமைப்பியல் நெறியில் அணுகி ஆய்வு செய்வர்.

## 7.3.7. நடைமுறைசார் ஆய்வு அணுகுமுறை

ஒவ்வொன்றையும் எப்படி ஏன் என்று அணுகி ஆராய்வது நடைமுறைசார் ஆய்வு அணுகுமுறை ஆகும். இலக்கிய நிகழ்வு ஒவ்வொன்றையும் ஏன் எவ்வாறு என்றும் புலவன் இவ்வாறு படைக்க அடிப்படை யாதென்று வினவும் வகையிலும் அணுகி இம்முறையில் ஆய்வு செய்யவேண்டும்.

## 7.3.8. மாதிரி ஆய்வு அணுகுமுறை

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது பழமொழி. மாதிரி ஆய்வும் இவ்வகைப்பட்டதே. மெய்ப்பிக்கக் கூடிய மாதிரி ஆய்வு அணுகுமுறை, மெய்ப்பிக்க இயலாத மாதிரி ஆய்வு அணுகுமுறை என்று இரண்டு வகைகள் உண்டு. இவற்றில் அங்கொன்றும் இங்கொன்றுமான மாதிரி ஆய்வு அணுகுமுறை, ஒழுங்கான மாதிரி ஆய்வு அணுகுமுறை, அடுக்கடுக்கான மாதிரி ஆய்வு அணுகுமுறை, தொகுதி மாதிரி ஆய்வு அணுகுமுறை ஆகிய மெய்ப்பிக்கக் கூடிய மாதிரி அணுகுமுறைகளும்; தன்னிகழ்வான மாதிரி ஆய்வு அணுகுமுறை, ஒதுக்கீட்டு மாதிரி ஆய்வு அணுகுமுறை, குறித்த நோக்குடைய மாதிரி ஆய்வு அணுகுமுறை ஆகிய மெய்ப்பிக்கவியலாத மாதிரி அணுகுமுறைகளும் என மாதிரி ஆய்வு அணுகுமுறைகள் அமையும்.

ஒத்த மதிப்பெண்களைப் பெறும் பத்து மாணவர்களில் மூவரைத் தேர்ந்தெடுக்க அவர்கள் பெயர்களை எழுதிய சீட்டுகளைக் குலுக்கி அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்து மூவரைத் தேர்ந்தெடுப்பது அங்கொன்றும் இங்கொன்றுமான மாதிரி ஆய்வு அணுகுமுறையாகும்.

குறிப்பு

அங்கொன்றும் இங்கொன்றுமான மாதிரி ஆய்வு அணுகுமுறை போலவே அதில் ஒரு ஒழுங்கு முறையைப் பின்பற்றிச் செய்யும் ஆய்வு அணுகுமுறையை இது குறிக்கும். அதாவது, பத்துப் பேரில் ஐவரைத் தேர்ந்துகொள்ளும்போது 2, 4, 6, 8, 10 என்ற எண்ணுடையவர்களைத் தேர்ந்து கொள்ளும் அணுகுமுறையே ஆகும்.

நூறு மாணவர்களில் பத்துப் பேரைத் தேர்ந்து கொள்ள வேண்டிய சூழலில், உள்ளூர் மாணவர்கள், வெளியூர் மாணவர்கள், விடுதி மாணவர்கள் என்ற வெவ்வேறு தரப்பிரிவுகளாகப் பிரித்து அவற்றில் ஒவ்வொன்றிலும் சிலரைத் தேர்வு செய்யப்படும் அணுகுமுறையே அடுக்கடுக்கான மாதிரி ஆய்வு அணுகுமுறை ஆகும்.

கல்லூரிகளில் மாணவர் தேர்ச்சி விழுக்காடு பற்றிய ஆய்விற்கு நாட்டில் உள்ள எல்லாக் கல்லூரிகளின் விவரங்களையும் கொள்ளாது ஒரு கல்லூரின் மாணவர் தொகுதியைக் கொண்டு ஆராய்வதே தொகுதி மாதிரி ஆய்வு அணுகுமுறை ஆகும்.

தெருவில் செல்பவரை வழிமறித்து ஒவ்வொருவரையும் வினாக்கேட்டுப் பதிவு செய்யும் ஆய்வு அணுகுமுறையே தன்னிகழ்வான மாதிரி ஆய்வு அணுகுமுறை ஆகும்.

குறிப்பிட்ட பண்புகளை உடைய சிலர் ஓர் ஒதுக்கீட்டு அடிப்படையில் அழைத்து நேர்காணல் உறுவோர் அவர்களை வினவும் முறையே ஒதுக்கிட்டு ஆய்வு அணுகுமுறை ஆகும். அதாவது உழைக்கும் மகளிர் ஐம்பதின்மர் செல்வக் குடியினராக மகளிர் ஐம்பதின்மர் என்ற பாகுபாட்டில் அழைக்கப்பட்டு அவர்களிடம் ஒரு பொதுவான கேள்வி கேட்டு ஆராயும் அணுகுமுறையே ஒதுக்கீட்டு ஆய்வு அணுகுமுறை.

சிறைக் கைதிகளில் பாலியல் குற்றத்திற்காகத் தண்டனை பெற்றவர்களை ஆராய்ந்து, சமூகத்தில் ஒழுக்கக்கேடு உண்டாவதற்கான காரணங்களை எடுத்துரைக்கும் ஆய்வு அணுகுமுறையே குறித்த நோக்குடைய மாதிரி ஆய்வு அணுகுமுறை ஆகும்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

5. உய்த்துணர் ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?
6. செலுத்துநிலை ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?

7. அமைப்பியல் ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?
8. மாதிரி ஆய்வு அணுகுமுறையின் வகைகள் யாவை?

குறிப்பு

## 7.3.9. அளந்தறி ஆய்வு அணுகுமுறை

மக்களின் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை மதிப்புக்கள், நம்பிக்கைகள், விருப்பு வெறுப்புக்கள் குறித்துப் பலரை உசாவி, தரவுகள் திரட்டி ஆய்கின்ற அணுகுமுறையே அளந்தறி ஆய்வு அணுகுமுறை ஆகும். இவ்வாய்வு அணுகுமுறைக்கு சில அணுகுமுறைகளை ஆய்வாளர் பின்பற்ற வேண்டும். அவை பின்வருமாறு:

- வினாநிரல் உருவாக்கல்.
- அளந்தறிதலுக்கு மாதிரி ஒன்று காணல்.
- தரவு திரட்ட உத்திகள் வகுத்தல்.
- அளந்தறிதலைச் செயற்படுத்துதல்.
- தரவுகளைப் பகுத்தாய்தல்.
- முடிவுகளை வகுத்தல்.

இந்த நடைமுறைகளை வரிசையுறப் பின்பற்றப்படுதல் என்பது கட்டாயம் இல்லை. தேவைக்கு ஏற்ப இவற்றில் மாற்றம் செய்துகொள்ள ஆய்வாளருக்கு உரிமை உண்டு.

## 7.3.10. மதிப்பீட்டாய்வு அணுகுமுறை

நாட்டில் நிகழும் நிகழ்வுகளில் ஆங்காங்கே மறைவாகவும் நேரடியாகவும் கடைப்பிடிக்கப்படுவதை மதிப்பீடு செய்து ஆய்வு செய்யும் அணுகுமுறையே மதிப்பீட்டாய்வு அணுகுமுறை ஆகும். நேர்காணல்கள், வினாநிரல்கள், உற்றுநோக்கல்கள், விழுக்காட்டு அளவில் செய்து கொண்ட கணிப்புக்கள், விருப்பு வெறுப்பு முன்னுரிமை, ஆளுமை நோக்குக் குறித்த தகவல்கள், நிறுவன ஆவணங்கள், அரசாங்கப் புள்ளி விவரங்கள், சோதனைகள் பற்றிய முடிவுகள், சூழல் பற்றிய மதிப்பீடுகள், நாட்குறிப்புத் தகவல்கள், வெளிப்படையான ஆதாரங்கள், மருத்துவ ஆய்வு முடிவுகள், நிதிநிலைக் கணக்கீடுகள், நிர்வாகக்குழு அறிக்கைகள், செய்தித்தாள் குறிப்புகள், வழக்கு முடிவுகள் போன்ற

தகவல்களைத் திரட்டி அவற்றுக்குள் மதிப்பீடு செய்யும் ஆய்வு அணுகுமுறையே மதிப்பீட்டாய்வு அணுகுமுறை.

குறிப்பு

## 7.3.11. புள்ளிவிவர ஆய்வு அணுகுமுறை

தகவல்களைத் துல்லியமாக அளவிட்டுக் கூறும் ஆய்வு அணுகுமுறையே புள்ளிவிவர ஆய்வு அணுகுமுறை ஆகும். புள்ளிவிவர ஆய்வில் ஆய்வாளர், அடையாளமிட்டுக் கூறத்தக்க தன்மை, வரிசைப்படுத்தக் கூடிய தன்மை, பிறவற்றோடு கூட்டவும் கழிக்கவும் வசதியான தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் புள்ளிவிவரங்களைப் பிரித்து அணுகுவது புள்ளிவிவர ஆய்வு அணுகுமுறையாகும். மேலும், இவ்வாறு பிரிக்கும்போது வகைமை அடிப்படையில் அளவிடல், அளவுகளின் அடிப்படையில் மதிப்பிடல், ஒன்றற்கொன்று வேறுபடும் தன்மையில் மதிப்பிடல், விழுக்காட்டு முறையில் கணித்தல் என்ற நான்கு வகையில் கிடைக்கும் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தியும் ஆய்வாளர் புள்ளிவிவர ஆய்வு அணுகுமுறையில் ஆராயலாம்.

## 7.3.12. விளக்கவியல் ஆய்வு அணுகுமுறை

விளக்கவியல் ஆய்வு அணுகுமுறை என்பது பொதுவான முடிவுகளை அடைவதற்கும், சுருக்கமாகவும் தெளிவாகவும் கோட்பாடுகளை அறிந்து கொள்வதற்கும் துணை நிற்பதோடு உண்மைகளைக் கண்டுபிடித்துக் கூறுவது என்பதைவிட, அறிவுலகில் தோன்றியுள்ள சிக்கல்களைக் குறித்து விளக்கி அவற்றை அணுகுவதற்குரிய ஆய்வு முறையே ஆகும். இந்த விளக்கவியல் ஆய்வு முறையை ஆய்வாளர் நான்கு நிலைகளில் அணுகலாம். அவை, அளந்தறிதல், ஒப்பிட்டு அறிதல், வளர்ச்சியின் அடிப்படையில் அறிதல், உள்ளடக்கத்தை அறிதல் என அவை அமையும். விளக்கவியல் ஆய்வில் நிகழ்காலச் சிக்கல்களே பேரிடம் பெறும். அதாவது,

- ஒரு மாவட்டம் முழுவதும் உடல்நலத்தில் பின்தங்கிய நோயாளிகளின் எண்ணிக்கை மிகுதியாயிருப்பதன் காரணங்கள்.
- ஒரு தொழிற்சாலையில் உற்பத்திப் பொருளைச் சந்தைப் படுத்துவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் வழிகள்.
- வகுப்பறைகளில் போதிக்கப்படும் ஆங்கிலம் எந்த அளவிற்கு மாணவர்களுக்குப் பயன் தருகின்றது?

- தாய்மொழி வழியாகக் கற்பிக்கும் போது புரிந்துகொள்ளுதலில் சிக்கலின்மைகளும் பிறமொழி வழியே கற்பிக்கும்போது கற்பிப்பவரும், கற்பவரும் எதிர்கொள்ளும் தடைகளும்.
- பெற்றோர் தொடக்கக் கல்வி நிலையில் ஆங்கிலப் பள்ளிகளை விரும்புவதன் பின்புலம்

குறிப்பு

போன்ற தலைப்புகளை மேற்கொள்ள விளக்கவியல் ஆய்வு அணுகுமுறையே சரியானதாகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**

9. அளந்தறி ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?
10. மதிப்பீட்டாய்வு அணுகுமுறை என்றால் என்ன?
11. புள்ளிவிவர ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?
12. விளக்கவியல் ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?

## 7.3.13. செயல்முறை ஆய்வு அணுகுமுறை

ஓர் அமைப்பின் செயல்களை விளக்குவது மட்டுமன்றி அதற்கான காரணங்களையும் ஆராயும் அணுகுமுறையே செயல்முறை ஆய்வு அணுகுமுறை ஆகும். உறுப்புகள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்று மருத்துவ உடலியங்கியல் துறை ஆய்வு நடத்துகிறது. இதுவொரு செயல்முறை ஆய்வு அணுகுமுறையாகும். ஏன் எவ்வாறு ஒன்றன் இயக்கம் அமைகிறது என்று காண்பதே செயல்முறை ஆய்வின் நோக்கமாகும். இலக்கியப் படைப்புக்களில் ஒரு பாத்திரத்தின் இயக்கம், செயல்முறை எவ்வாறு அமைகின்றன என்பதை செயல்முறை ஆய்வு அணுகுமுறை மூலம் ஆய்ந்து விளைவுகளைக் கணித்துரைக்க இவ்வாய்வு முறை பயன்படும்.

## 7.3.14. மரபியல் ஆய்வு அணுகுமுறை

வாழ்க்கையின் இயல்பான பண்பு, இதனை மேலும் கூர்மைப்படுத்தி மனித இனம் அறிந்திராத பல பேருண்மைகளை நோக்கிக் காலந்தோறும் ஆராயும் அணுகுமுறையே மரபியல் ஆய்வு அணுகுமுறை. தரையில் ஓரிடத்தில் தண்ணீர் கிடைக்குமா என ஆராய்வதில் இரு நடைமுறைகள் உள்ளன. ஒன்றில் நுட்பமான இயந்திரப் பொறிகள் கொண்டு ஆராயப்பெறும் ஆய்வு. மற்றொன்றில்

குறிப்பு

ஓர் ஆள் வளைவான பிரம்பைக் கையில் ஏந்திக்கொண்டு நடக்கத் திடீரென்று அவர் கையிலுள்ள பிரம்பு சுற்ற அதுவே தண்ணீர் உள்ள இடம் என்று முடிவு செய்யும் ஆய்வு. இந்த இரண்டாவது முறையைப் போன்ற பல நிகழ்வுகள் நம்மிடம் நிறைய உள்ளன. இவ்வாறு இரண்டாவது முறையைப்போல் காணும் ஆய்வு அணுகுமுறையே மரபியல் ஆய்வு அணுகுமுறை.

## 7.3.15. கோட்பாட்டாய்வு அணுகுமுறை

ஒப்பீடு, ஒப்பாய்வு என்ற இரு சொற்கள் வேறுபட்ட பொருளுடையன. இரண்டு பொருட்களின் தோற்றம், பண்பு, பயன் ஆகியவற்றை ஒப்பிட்டுக் காண்பது ஒப்பீட்டாய்வு எனப்படும். ஒப்பாய்வு என்பது ஆழமானது. ஒரு பொதுக்கோட்பாடு இருவேறுபட்ட சமுதாயங்களில், மொழிகளில், பண்பாடுகளில், இலக்கியங்களில் எவ்வாறு ஒத்து அமைந்துள்ளன. அவ்வொப்புமை எப்படி நிகழ்ந்தது. அவ்வொப்புமையின் பின்புலம், பயன், நோக்கு ஆகியவற்றை ஆராய்வது ஒப்பாய்வு ஆகும். இலக்கிய ஒப்பாய்வுக் களங்களாக இலக்கியப் படைப்புகளை ஒப்பிடுதல், ஆசிரியர்களின் படைப்புத்திறன், உத்திகளை ஒப்பிடுதல், வகைமை ஒப்பாய்வு செய்தல் என்பன போன்றவை கொள்ளப்பெறும் இவ்வாய்வு அணுகுமுறையில் தாக்கக் கோட்பாட்டாய்வு அணுகுமுறை, இணைநிலைக் கோட்பாட்டாய்வு அணுகுமுறை என்ற இரண்டு ஆய்வு அணுகுமுறைகள் உண்டு.

ஓர் இலக்கியம் அல்லது கலை அல்லது கலைவடிவம் மற்றொன்றின் மீது உண்டாக்கிய தாக்கத்தைக் கண்டறியும் ஆய்வு அணுகுமுறையே தாக்கக் கோட்பாட்டாய்வு அணுகுமுறையாகும். இரண்டு இலக்கியங்களுக்கிடையே, ஒரு கலை வடிவங்களுக்குமிடையே, இலக்கியம் மற்றும் கலைவடிவங்களுக்கிடையே உள்ள இணைத்து மொழியத்தக்க கூறுகளைக் காணும் அணுகுமுறையே இணைநிலைக் கோட்பாட்டாய்வு அணுகுமுறையாகும்.

## 7.3.16. நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறை

ஏனைய ஆய்வு அணுகுமுறையில் இருந்து மாறுபட்ட ஆய்வு அணுகுமுறைகளைக் கொண்டது நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறை. இந்த நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறை பல்வேறு நிலைகளில்

குறிப்பு

அமைந்திருக்கிறது. குறிப்பாக, வரலாற்றுப் புவியியல் ஆய்வு அணுகுமுறை, வராற்று மீட்டுருவாக்க ஆய்வு அணுகுமுறை, குறிக்கோள் ஆய்வு அணுகுமுறை, செயல்திறன் ஆய்வு அணுகுமுறை, உளவியல் ஆய்வு அணுகுமுறை, அமைப்பியல் ஆய்வு அணுகுமுறை, வாய்மொழி வாய்பாட்டு ஆய்வு அணுகுமுறை, கலப்புப் பண்பாட்டாய்வு அணுகுமுறை, நாட்டுப்புறப் பண்பாட்டு ஆய்வு அணுகுமுறை, மக்கள் பண்பாட்டு ஆய்வு அணுகுமுறை, அரை உலகக் கோட்பாட்டு ஆய்வு அணுகுமுறை, சூழ்நிலைக் கோட்பாட்டு ஆய்வு அணுகுமுறை போன்ற அணுகுமுறைகளில் நாட்டுப்புறவியல் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

13. செயல்முறை ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?
14. மரபியல் ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?
15. கோட்பாட்டாய்வு அணுகுமுறை என்றால் என்ன?
16. நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறை என்றால் என்ன?

## 7.4. தொகுத்துக் காண்போம்

- ஆய்வாளரின் ஆய்வுத் தன்மைக்கு ஏற்ப ஆய்வு அணுகுமுறை மாறுபடும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- அறிவியல் ஆய்வு முறையின் தொடக்கநிலை ஆய்வு வடிவங்களின் ஆய்வு அணுகுமுறைகள் பற்றித் தெரிந்துகொண்டீர்கள்.
- அறிவியல் ஆய்வு முறையல்லாத தொடக்கநிலை ஆய்வு வடிவங்களின் ஆய்வு அணுகுமுறைகள் பற்றித் தெரிந்துகொண்டீர்கள்.
- கோட்பாட்டு ஆய்வு அணுகுமுறைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 7.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 7.3.
2. 7.3.1.

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| 3. | 7.3.2. | 4. | 7.3.3. |
| 5. | 7.3.4. | 6. | 7.3.5. |
| 7. | 7.3.6. | 8. | 7.3.8. |
| 9. | 7.3.9. | 10. | 7.3.10. |
| 11. | 7.3.11. | 12. | 7.3.12. |
| 13. | 7.3.13. | 14. | 7.3.14. |
| 15. | 7.3.15. | 16. | 7.3.16. |

## 7.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. விளக்கவியல் ஆய்வு அணுகுமுறை பற்றிக் கட்டுரை வரைக.
2. மாதிரி ஆய்வு அணுகுமுறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. கோட்பாட்டாய்வு பற்றி விளக்குக.
4. நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறைகள் பற்றிக் கட்டுரை வரைக.

# கூறு 8. நேர்காணல் - நேர்காணலின் வகைகள் - வினாத் தொகுதி

## 8.1. முன்னுரை

நேர்காணல் என்பது கேட்பவருக்கும் விடை கூறுபவர்க்கும் இடையில் அமைந்த வெறும் இருவழி உரையாடல் அன்று. சைகைகள், பார்வைகள், மெய்ப்பாடுகள், பேச்சில் நிறுத்தங்கள் ஆகியன கூட மெல்லிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடியவை என்பதை நேர்காணல் எடுத்துரைக்கும். இந்நேர்காணல் பற்றியும் அவற்றின் வகைகள் பற்றியும் வினாத் தொகுதி பற்றியும் இப்பகுதியில் காணலாம்.

## 8.2. குறிக்கோள்கள்

- நேர்காணல் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- நேர்காணல் உத்தி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- நேர்காணல் பயன் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

- ➢ நேர்காணல் வகைகள் பற்றித்தெரிந்து கொள்வீர்கள்.
- ➢ வினாத்தொகுதி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 8.3. நேர்காணல்

நேர்காணல் என்பதை பலரும் பலவாறு கூறுகின்றனர். அதாவது, இரு சாராருக்கு இடையில் தொடர்பு ஏற்படுத்தும் ஒரு செயல்முறை என்றும், ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாறிக்கொள்ளும் வாயில் என்றும், ஒவ்வொரு சொல்லும் செயலில் கூறும் புதிய எண்ணக் கோவைகளின் பால் நம் உள்ளத்தைச் செலுத்தும் கருவி என்றும் கூறுவர். ஆய்வாளர், தகவலாளியை நேரே கண்டு உரையாடுவது நேர்காணல் ஆகும். நேரடியாகத் தகவல் தருபவர்களை மட்டுமன்றி, ஆய்வுப்பொருளிற்குத் தொடர்பான பலரையும் கண்டு உரையாடித் தரவுகளைப் பெறுவதும் நேர்காணலுள் அடக்கம். நேர்காணல் என்பதில் ஆய்வாளர் வினாக்களைத் தொடுக்க, தகவலாளி விடைகளைத் தருவது மட்டும் அடங்குவதில்லை. ஆய்வாளரும் தகவலாளியும் முகத்திற்கு முகம் கலந்துரையாடிப் பல செய்திகளை அதன் வாயிலாக ஆய்வாளர் திரட்டுவது நேர்காணல் எனப்படும். அது ஓர் உயிர்த்துடிப்பு மிக்க கலை. நேர்காணல் என்பது ஆய்வாளருக்கும் தகவலாளிக்கும் இடையே நிகழும் இருவழி உரையாடல் மட்டுமன்று. முத்திரைகள், பாவங்கள், சிறுகுறிப்புகள், உடல் அசைவுகள், உணர்வு வெளிப்பாடுகள், உள்ளார்ந்த உணர்வுகளை வெளியிட வழியில்லாத மௌனங்கள் போன்ற பலவற்றையும் நேர்காணலில் காணலாம். சொற்களால் வெளியிடுவது ஒரு பகுதியைத்தான். எஞ்சியவை இவ்வாறு பல வழிகளில் வெளியிடப்பெறும். எனவே, ஆய்வாளர் ஒருவரை நேர்காணல் காணச் செல்கையில் உரையாடிப் பெறுவதையும், பேசாத பேச்சாக, குறியீடுகளால் புலப்படுத்தப்படுவதையும் ஒருசேர அறியவும் உணரவும் வேண்டும். ஒவ்வொரு நேர்காணலிலும் உணர்த்தப்பட்டது போகத் தகவலாளியிடம் எஞ்சியவை உண்டு.

பொதுவாக மக்கள் எவ்வாறு உணர்கின்றனர், எவ்வாறு அனுபவிக்கின்றனர், எவற்றை நினைத்துப் பார்க்கின்றனர், அவர்களுடைய நோக்கம் என்ன, அவர்கள் செயல்படுவதற்குரிய காரணம் என்ன என்பன போன்ற பற்பல வினாக்களுக்குரிய விடைகளை அறியும் ஒரே வழி அவர்களிடம் உரையாடுவதுதான். நேர்காணல் காணச் செல்லும்

ஆய்வாளர், தகவலாளியிடம் முதன்முதலில் பொதுவான சில வினாக்களைக் கேட்டு நேர்காணலைத் தொடங்குகிறார். தகவலாளி பல செய்திகளை அடுத்தடுத்துக் கூறுகிறார். தம் ஆய்வு நோக்கத்திற்கு ஏற்ப, வரையறுத்துக்கொண்டு, அங்கங்கு திசை திரும்பாமல் நெறிப்படுத்தித் தகவலாளியிடம் இருந்து மிகுதியான தரவுகளை ஆய்வாளர் பெறுகிறார். சில சமயங்களில் நேர்காணல் காண்பவரிடம் பேட்டியளிப்பவர் வினாக்களை எழுப்புவதும் உண்டு. நேர்காணலில் ஆய்வாளரே வினவுபவராக எப்போதும் இருக்க முடியாது. எனவேதான், கலந்துரையாடல் என்றும் இதனைக் கூறுவர். பெரும்பாலும், ஆய்வாளர் தம் ஆய்வின் நோக்கிற்கு ஏற்ப வினவுவதால், அவர் மிகுதியும் வினாக்களைக் கேட்பவராகத் திகழ்வார். தகவலாளி விடை அளிப்பவராக அமைவர். இதுவே நேர்காணல் நிகழும் முறை.

தேர்ந்தெடுத்த, குறிப்பிட்ட பொருளைப் பற்றியதாக நேர்காணல் அமைகிறது. இதனால் புறம்பான தரவுகள் எதுவுமின்றி, வரையறுத்த எல்லைக்குட்பட்டதாக அது அமையும். நேர்காணலின் அடிப்படை நோக்கமே, தகவலாளியிடம் இருந்து மிகுதியான தரவுகளையும் அவருடைய தனிப்பட்ட அனுபவங்களையும் திரட்டுவதாகும். நேர்காணலின் வழியே மிகுதியான செய்திகளை அறியலாம். நேர்காணல் காணும் ஆய்வாளரும் தம் எண்ணங்களை நேர்காணலின் இடையிடையே கூறுவதால், நேர்காணலில் முழுமையாகக் கருத்துப் பரிமாற்றம் நிகழும். நேர்காணல் என்பது வெறும் வினாவிடை நிகழ்ச்சி அல்ல. ஆய்வாளருக்குப் புதிய சிந்தனைச் சிதறல்களை ஏற்படுத்துமாறு தகவலாளியின் ஒவ்வொரு சொல்லும் செயலும் அமையும். ஆய்வாளர் எழுப்பிய வினாவிற்கு நேர்காணல் தருபவர் தரும் விடை என்பது வெறும் பதிலுரையாக மட்டும் அமைவதில்லை. ஆய்வு தொடர்பான பல்வேறு தகவல்களை அறியத் தூண்டும் வண்ணம் அது அமையும்.

தகவலாளிக்கு மட்டும் தெரிந்து, அவரிடம் தவிர வேறு எங்கும் பெற முடியாத தரவுகள் பலவற்றை அறிவது நேர்காணலின் தலையாய நோக்கம். தகவலாளி குறிப்பிட்ட அப்பொருள் பற்றித் தமக்குத் தெரிந்த தகவல்கள், தம் வாழ்க்கையில் நடைபெற்ற அது தொடர்பான நிகழ்ச்சிகள், உணர்வுகள், அது தொடர்பான எதிர்ச்செயல்கள் போன்ற பலவற்றையும் எடுத்துரைப்பர். ஆய்வாளர் இவை அனைத்தையும்

ஒன்றுவிடாமல் முழுமையாகக் கவனித்துக் கேட்பார். தம் ஆய்வின் நோக்கம், கருதுகோள் ஆகியவற்றிற்கு ஏற்ப வினாக்களை இடையிடையே எழுப்பி, அவை தொடர்பான தம் எண்ணங்களைக் கூறி, ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெற்று நேர்காணலைச் சுவைபடவும் பயனுடையதாகவும் ஆக்கிக் கொள்வார். தம்முடைய ஆய்வுப்பொருளிற்கு ஏற்றவாறு தகவலாளியிடம் வினாக்களைத் தொடுத்து, கவனம் சிதறாமல், குறிப்பிட்ட சூழல்களில் நிகழும் சொற்கள் பற்றிய ஆய்வுக்கூட ஆய்வாக நேர்காணல் அமையும். இவ்வாறு அமையும் நேர்காணல்களில் நேர்காணல் காணும் ஆய்வாளர், உளவியலார் போலச் செயல்படுகிறார் தகவலாளியின் செயல், எதிர்ச்செயல், எண்ண மாற்றம், அங்க அசைவு போன்ற அனைத்தையும் நுணுக்கமாக உற்றுநோக்குவது ஆய்வளரின் பணியாகும்.





## 8.3.1. நேர்காணல் உத்திகள்

நேர்காணலுக்குச் செல்லும் முன் பின்பற்றத்தக்கன, நேர்காணலில் பின்பற்றத்தக்கன, நேர்காணலுக்குப் பின் மேற்கொள்ளத்தக்கன என நேர்காணல் உத்திகளை மூன்றாகப் பகுக்கலாம். நேர்காணலுக்குச் செல்லும்முன்,

- நேர்காணப் பெறுபவரிடம் இசைவு, இடம், நேரம் ஆகியவற்றை உறுதி செய்து கொள்ளல்.
- தம்முடன் வருவோர், அவர் பங்கு பற்றித் திட்டமிட்டுக் கொள்ளல்.
- கேட்க வேண்டியவற்றை மனத்தில் உருவகப்படுத்திக் கொள்ளல்.
- நேர்காணல் எவ்வளவு நேரம், மறுமுறை நேர்காணல் உண்டா என்பவற்றைத் திட்டமிட்டுக் கொள்ளல்.
- நேர்காணலுக்குரிய மொழி, மொழிநடை ஆகியவற்றை முடிவு செய்து கொள்ளல்

ஆகியனவற்றைத் தெளிவான வரையறை செய்துகொள்ள வேண்டும்.

நேர்காணலின் போது நேர்காணப்பெறுபவர்க்குத் தலைமையும் முதன்மையும் கொடுக்க வேண்டும். அவரைக் கண்டபின் மேற்கொள்ளத்தக்கன பின்வருமாறு:

- நேர்காணப் பெறுபவரின் மனநிலை மற்றும் உடல்நிலை நேர்காணற்கு ஏற்றனவா என்பதை அறிதல்.

குறிப்பு

- நேர்காணும் முறையை அவர் விருப்பிற்கு ஏற்ப மாற்றிக் கொள்ளுதல்.
- நேர்காணப் பெறுபவரையே வினாக்கள் கேட்கவேண்டும் என்ற நிலையை மாற்றி அவரும் கேட்கவும், கருத்துப் பரிமாறிக் கொள்ளவுமான கலந்துரையாடலை அனுமதித்தல்.
- எந்த வெறுப்புக்கும் கசப்புக்கும் இடங்கொடாமை.
- அதிகாரம் நிறைந்த குரல், விடை கூறியே ஆகவேண்டுமென்ற பிடிவாதம் ஆகியவற்றைத் தவிர்த்தல்.
- ஓர் அலுவலக முறையில் அல்லாமல் இயல்பான நிலையில் நேர்காணல் நடைமுறை அமையச் செய்தல்.
- ஆய்வுப் பொருளுக்குத் தொடர்பானவற்றை விட்டு மற்றவற்றைப் பேசுதலைத் தவிர்த்தல்.
- இணக்கமான மனப்பாங்கை நேர்காணல் முழுவதும் கடைப்பிடித்தல்
- ஆகியவற்றை மேற்கொள்ளுதல் ஆய்வுக்கும் ஆய்வாளருக்கும் நல்லது.
- நேர்காணலுக்குப்பின், பதிவு செய்த செய்திகளை மறுபடி மறுபடி கேட்டு வகை செய்து ஆய்வுக் போக்கிற்கு உரிய வகையில் பயன்படுத்துதல்.
- உடன்பாடானவற்றைப் போற்றி ஏற்றுக்கொள்ளுதல்.
- உடன்பாடல்லன என்று கருதுகின்றவற்றை அதற்கான காரணங்களோடு சுட்டுதல்.
- ஆய்வுக்கு இந்நேர்காணல் எந்த அளவு உதவிற்கு என மறவாமல் குறித்தல்.
- திருத்தமற்ற விளக்கமற்ற இடங்கள் எனக் கருதப்படுமாயின் மறுநேர்காணலுக்குத் திட்டமிடுதல்

ஆகியன ஆய்வாளரால் செய்யத்தக்கனவாகும்.

## 8.3.2. நேர்காணலின் பயன்

உலகில் எவருக்கும் அறிமுகமின்றி வாழும் மாமனிதர்களின் முகவரிகளையும் அருஞ்செயல்களையும் அம்பலத்துக்குக் கொண்டுவருவது நேர்காணல் மூலம்தான். தன்னடக்கம் என்ற

சிமிழுக்குள் அடங்கி நிற்கும் வைரங்களின் ஒளிவீச்சை உலகிற்கு அறிமுகப்படுத்துவது நேர்காணலின் மிகப்பெரிய பயனாகும். பழைய வரலாறுகள், புதிய கண்டுபிடிப்புகள், உழைப்பின் கடுமையால் தீண்டப்பட்ட உயர்நிலைகளுக்கு உந்திய சூழல்கள், சமூகக் கட்டுப்பாடுகளில் சிக்கித் தவிக்கும் வாயில்லாப் பூச்சிகளின் எளிய நிலைகள், அதிகாரக் கொடும்பசியின் தினவுக்கு ஆட்பட்டவர்களின் அவலங்கள், சோதனைகளில் வெற்றி ஈட்டியோர் அனுபவங்கள், படைத்தற்கரியவற்றைப் பாருக்கு அறிமுகம் செய்த படைப்பாளிகளின் திறன் ஆகியவற்றையெல்லாம் நேர்காணலின் வழியாகவே உலக மக்களின் மன அரங்குகளில் இடம்பெறச் செய்கின்றன.

பல ஆண்டுகள் ஒருவர் பெற்ற அனுபவத்தைச் சிறிது நேரத்தில் அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது நேர்காணல். மனித புத்தகங்கள் நம்முன் திறந்து வைக்கப்படும் இடம் நேர்காணல். பல எதிர்காலச் சிக்கல்களை நேர்காணல் தீர்த்துவைக்கக் கூடியனவாக இருக்கும். ஆராய்ச்சிப் பயணத்தில் மூடியிருக்கும் கதவுகளைத் திறக்கக் கூடிய ஆற்றல் நேர்காணல்களுக்கு உண்டு. பழங்குடிகளைப் பற்றிய வரலாறும், அவற்றின் சமூக அமைப்புகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவையெல்லாம் நேர்காணல் வழி அறியப்பெற்றவையே ஆகும்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. நேர்காணல் என்பது யாது?
2. நேர்காணலில் ஆய்வாளர் காணத்தகுவன யாவை?
3. நேர்காணல் உத்திகள் யாவை?
4. நேர்காணலின் பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

## 8.4. நேர்காணல் வகைகள்

ஒருவரை ஒருவர் முகம்நோக்கி நேர்காணல் பல வகைகளில் அமைந்திருக்கின்றன. அவை ஆணைவழியிட்ட நேர்காணல், ஆணைவழிப்படா நேர்காணல், கட்டமைப்புடைய நேர்காணல், கட்டமைப்பற்ற நேர்காணல், ஒருமுக நேர்காணல், ஆழ்நிலை நேர்காணல், அடுத்தடுத்து நேர்காணல் எனப்படும். அவற்றைப் பற்றி இனிக் காணலாம்.

### 8.4.1. ஆணைவழியிட்ட நேர்காணல்

ஆணைவழியிட்ட நேர்காணல் என்பது இன்ன வினாக்களைத் தான்கேட்க வேண்டுமென்ற அலுவலக கட்டளையின்படிச் செலுத்தப்பெற்ற நேர்காணலாகும். இந்த ஆய்வுமுறை நிர்வாகத் துறைகளிலும், பொருள் விற்பனை குறித்த ஆய்வுகளிலும் மிகவும் பயன்படுவதாகும். ஓர் அலுவலகம் அல்லது நிறுவனம் தன்னிடமிருந்து சிலரை நேர்காணலுக்கு அனுப்பும்போது அதன் எதிர்பார்ப்புகள் சில இருக்கும். தம் நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்கள் விற்பனையாவதற்குரிய வழிகளையும், மக்களைத் தம் உற்பத்திப் பொருளின்பால் ஈர்ப்பதற்குரிய உத்திகளையும் கண்டறிந்து வர அவர்கள் அனுப்பப்பெறலாம். விலை குறைப்பு, அளவைப் பெரிதாக்கல், தரத்தைக் கூட்டுதல், விளம்பரத்தைப் பெருக்குதல், விற்பனைக் கழிவு மிகுதியாக்கல், அன்பளிப்பை இணைத்தல், பெரிய நிறுவனங்களோடு கூட்டுச் சேரல் போன்ற உத்திமுறைகள் ஒவ்பொருளின் விற்பனையைக் கூட்ட வல்லன. எனினும் இத்தகைய நேர்காணல் எல்லாத் துறைகளுக்கும் பொருந்தமுடையதாகாது.

### 8.4.2. ஆணைவழிப்படா நேர்காணல்

ஆணைவழிப்படா நேர்காணல் என்பது கட்டமைப்பற்ற நேர்காணலைப் போன்றதே. எனினும் ஆணைவழிப்படா நேர்காணல் ஒருவரின் தன்னார்வத்தையும் முயற்சியையும் தெளிவாகக் குறிப்பது. வேறு வேறு அலுவல்கள் செய்தாலும் ஆர்வத்தின் வழிப்பட்டுத் தமிழிலக்கிய ஆய்வு மேற்கொள்வோர், நாட்டுப் பாடல்களைச் சேகரிப்போர், கோயிற்கலை சிற்ப ஆய்வு செய்வோர், சமூகப் பழக்கங்களைக் குறித்து ஆராய்வோர், இசையிலக்கண மரபுகளைத் துருவுவோர் பலர் உள்ளனர். துறைசார்ந்தவர்களுக்குத் தொழிலாகவும் கடமையாகவும் அமைய, யாரும் செலுத்தாத நிலையில் தன்னார்வ அடிப்படையில் செய்வோர்க்குக் கலையாகவும், புகழ் விருப்பிற்குரிய அருஞ்செயலாகவும் அமைகிறது. இவ்வகையில் முன்னரே தீர்மானிக்கப்பட்ட வினாக்களோ திட்ட வரைவுகளோ இருப்பதில்லை.

### 8.4.3. கட்டமைப்புடைய நேர்காணல்

ஆய்வாளர் தகவலாளியிடம் கேட்க வேண்டிய தரவுகள் பற்றி முன்கூட்டியே சிந்தித்து, தெளிவாக, வரையறுத்த வினாக்கள் உருவாக்கிக்கொண்டு நேர்காணல் நிகழ்த்தினால் அது கட்டமைப்புடைய நேர்காணல் ஆகும். திட்டமிட்டு உருவாக்கிப் பட்டியல் ஒன்றைத் தகவலாயியிடம் கொடுத்து விடைகளை நிறைவுசெய்து தருமாறு கேட்பதைப் போன்றது இது. ஆய்வாளர்தம் நிலையிலிருந்து வேறு வினாக்களையோ செய்திகளையோ கேட்கமாட்டார். தகவலாளிக்குத் தெளிவு வேண்டிய இடங்களில் மட்டும் வினாக்களை ஆய்வாளர் விளக்கிப் பேசுவார். வினாக்களை ஒவ்வொன்றாகக் கூறிவிட்டுத் தகவலாளி விடை தருகையில் அவற்றை ஒலிப்பதிவு செய்து கொள்வார். எழுத்தாளர், கலைஞர், அரசியல்வாதி போன்ற பலரை நேர்காணல் காண்பதற்குப் பெரும்பாலான இதழ்கள் இம்முறையைப் பயன்படுத்துகின்றன. வினாக்களை முன்கூட்டியே உருவாக்கித் தகவலாளிக்கு இதழாசிரியர் அனுப்பிவிடுவார்.

நேர்காணல் காணும் நாளன்று, இதழ் சார்பில் அதன் நிருபர் சென்று வினாக்களை ஒவ்வொன்றாகக் கேட்க, நேர்காணல் தருபவர் விடைகளைக் கூறுவர். நேர்காணல் காண்பவர் அவற்றை எழுதிக்கொள்வார். நேர்காணல் தருபவர் பரந்துபட்ட அலுவல்களில் ஈடுபட்டு இருக்கும் ஒருவராக இருப்பதால் அப்பொருள் பற்றி முன்கூட்டியே சிந்தித்து வைப்பதற்கு வாய்ப்பாக அமைய இவ்வாறு முன்பே வினாக்களை அனுப்பி வைக்கின்றனர்.

தஞ்சாவூர் மாவட்டச் சுவடியாளர்கள் என்ற ஆய்வுத் தலைப்புத் தேர்ந்தெடுத்த ஆய்வாளர் ஒருவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் சுவடிகளைக் கையாண்டவர்களின் பட்டியலைத் தயாரித்து, அவர்களிடம் இன்ன இன்ன வினாக்கள் கேட்க வேண்டும் என்று முன்கூட்டியே தீர்மானம் செய்கின்றார். தகவலாளியின் மூத்தோர், அவர்களின் தொழில், அவர்கள் சுவடிகள் பயன்படுத்தியதன் காரணம், நோக்கம், செயற்பாடு போன்றவற்றையும், இன்றைய நிலை பற்றியும் எடுத்தியம்பும் வகையில் வினாக்களைத் தொகுத்துக் கொண்டு நேர்காணல் காண்கின்றார். இந்த ஆய்வாளர் பயன்படுத்தும் நேர்காணல் கட்டமைப்புடைய நேர்காணல் ஆகும். இதனை முறைப்படுத்தப்பட்ட நேர்காணல் என்றும் அழைப்பர்.

முறையான ஒலிப்பதிவு, கால ஒழுங்கு, நேர்காணலில் மரபு வழியாகக் கையாளப்பெறும் வழிகள், முறைகள் ஆகியன இந்த நேர்காணலில் இருக்கும். இம்முறையில் நேர்காணப் பெறுபவர் இன்னது கூறினால், அவ்விடையின் அடிப்படையில் அடுத்த இன்ன வினாவைக் கேட்க வேண்டுமென்ற முறை முற்றிலும் சரியாக வரும் என்று கூறமுடியாது. நேர்காணல் அமைப்பில் ஒரு நெகிழ்வுத்தன்மை இருந்தாலொழிய நேர்காணல் நிறைந்த பயனைத்தராது. வரையறுக்கப்பெற்ற விதிமுறைகளை உடைய இந்நேர்காணலை விதிமுறை நேர்காணல் எனவும் கூறலாம். எளிதில் அணுக முடியாத பெருநிலையில் இருப்போர், அரசு நீதித்துறை ஆகியவற்றின் வரம்பிலும் கட்டுப்பாட்டிலும் உள்ளோர் ஆகியோர் இவ்வகை நேர்காணலிலேயே பங்குகொள்ள இயலும். தொலைக்காட்சி வானொலிகளில் பரப்பப்பெறும் நேர்காணல்கள் கட்டமைப்பற்றவை போலத் தோன்றினாலும் அவை முன்னரே முடிவு செய்து கொண்ட வரையறைகளின் வழ நடப்பவையே யாகும்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

5. நேர்காணல் வகைகள் யாவை?
6. ஆணைவழியிட்ட நேர்காணல் பற்றிச் சிறுகுறிப்பு தருக.
7. ஆணைவழிப்படா நேர்காணல் என்றால் என்ன?
8. கட்டமைப்புடைய நேர்காணல் பற்றி விளக்குக.

## 8.4.4. கட்டமைப்பற்ற நேர்காணல்

ஆய்வாளர் முன்கூட்டியே வினாக்களை உருவாக்காமல் தகவலாளியை அணுகி, நேர்காணலைத் தொடங்கி, அப்போதைக்கு அப்போது வினாக்களை வினவுவது கட்டமைப்பற்ற நேர்காணல் ஆகும். நேர்காணல் தருபவரின் வசதிக்காக இன்ன பொருள் பற்றி நேர்காணல் காணத் தாம் வந்துள்ளதாக ஆய்வாளர் கூறிவிட்டு நேர்காணலைத் தொடங்கிவிடுவார். பெரும்பாலும் இவ்வகை நேர்காணலில் எவ்விதமான கட்டுப்பாடும் இன்றித் தங்கு தடையின்றிக் கலந்துரையாடல் நிகழும். பரந்த அளவில் தகவலாளி தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள், தம் எண்ணங்கள், உணர்வுகள் போன்ற பலவற்றை விரிவாகவும்

விளக்கமாகவும் எடுத்துரைப்பார். அவற்றிலிருந்து ஆய்வாளர் தமக்கு வண்டியவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

தகவலாளியிடம் வினாக்களைத் தொடுப்பதில் உள்ள நெகிழ்வுத்தன்மை - கட்டுப்பாடு அல்லது வரையறை எதுவுமற்றதன்மை- இவ்வகையின் அடிப்படைச் சிறப்பு ஆகும். முன்கூட்டியே வினாக்களை உருவாக்கிக் கொண்டு, ஆய்வாளர் தகவலாளியை இவ்வகை நேர்காணலில் அணுகுவது இல்லை. அவர்கள் விருப்பம்போல் வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் நேர்காணல் அளிக்க வகை செய்து கட்டமைப்பில்லா நேர்காணலின் சிறப்பு. ஆய்வாளர் ஏதேனும் ஒன்றை மையமிட்டுத் தூண்டிவிடத் தகவலாளி தம் அனுபவ வீச்சால் ஒளியூட்டப்பட்ட தகவல்களை மிகுதியும் கூறுவார். இவ்வகை நேர்காணலில் அடிப்படையான கட்டுப்பாடற்ற அமைப்பை நன்கு உணர்ந்து பயன்படுத்தினால், தகவலாளியிடமிருந்து ஆய்வாளர் மிகுதியான செய்திகளைப் பெறமுடியும். நுணுக்கமான செய்திகளையும் சொந்த அனுபவங்களையும் தகவலாளியிடமிருந்து பெறலாம். நம்பிக்கைகள், உணர்வுகள் ஆகியவற்றுடன் கூடிய தனிப்பட்ட மனிதன் உறவு, சமுதாய நிலைத் தொடர்பு ஆகியவற்றை அறிய இவ்வகை நேர்காணல் பெரிதும் துணைசெய்யும்.

இவ்வகை நேர்காணலில் தகவலாளிக்கு விளக்கம் வேண்டிய இடங்களில் மட்டுமே ஆய்வாளர் குறுக்கிட்டு விளக்குவார். தம் வினாக்களில் ஒரு சிலவற்றைக் கூறி, மேற்கொண்டு தரவுகளைத் தருமாறு தகவலாளியைத் தூண்டிவிடும் அளவே ஆய்வாளர் இவ்வகை நேர்காணலில் செயல்படுவார். தகவலாளி தரும் தகவல்களை அப்படியே பதிவு செய்து, ஆய்விற்கு ஏற்றவற்றைத் தொகுப்பது, ஒவ்வாதவற்றை விட்டுவிடுவது, அழுத்தமான வலுவானவற்றை ஆய்வில் வெளிப்படுத்திக் காட்டுவது போன்ற பணிகளைச் செய்யும் உரிமை இவ்வகை நேர்காணலில் ஆய்வாளருக்கு உள்ளது. இத்தகைய உரிமையும் கட்டுப்பாடற்ற தன்மையும் சில சமயங்களில் ஆய்வில் இடையூறுகளையும் விளைவிக்கும் கட்டமைப்பில்லா நேர்காணாலால் பெற்ற தரவுகளை ஒத்திட்டுக் காண்பதோ, மேற்கொண்டு பகுத்தாய்வதோ, ஆய்வாளருக்கு மிகவும் இடர்ப்பாடான பணிகளாகும். பன்முறை நிகழ்த்தும் நேர்காணல் வழி ஓரளவிற்கு இவற்றை ஆய்வாளர் நீக்கலாம்.

கட்டமைப்பில்லா நேர்காணலை மேற்கொள்ளும் ஆய்வாளருக்கு ஆய்வுப் பொருளில் ஆழ்ந்த புலமை, நுணுக்கமான தகவல்களை வெளிக்கொணரவல்ல வினாக்களை அடுத்தடுத்து எழுப்பக் கூடிய திறமை, கூர்த்த மதிநுட்பம் ஆகியன வேண்டற்பாலன. பணிவுடன் கேட்டு அனைத்தையும் குறிப்பெடுக்கக் கூடிய திறமை மட்டும் ஆய்வாளருக்குப் போதாது. அத்துடன் தகவலாளியின் உணர்வு, நம்பிக்கை ஆகியவற்றுடன் தற்காலிகமாகவாயினும் தம்மை ஒருசேர வைத்துக்கொள்ளத்தக்க சிறப்பாகச் செயல்படும் ஆற்றலும் இவ்வகை நேர்காணலில் ஆய்வாளருக்கு வேண்டும். தகவலாளி அப்போதுதான், இயல்பாகத் தங்கு தடையின்றிச் செய்திகளைக் கூறுவார். ஆய்வாளரின் ஆய்வு வேட்கையை உணர்ந்து கொள்வதுடன், தம்முள் ஒருவராகக் கலந்து இலங்கும் நெருக்க உணர்வையும் தகவலாளி புரிந்துகொள்வார். தகவலாளியிடமிருந்து மிகுதியான தகவல்களை அறியவேண்டும் என்பதே ஆய்வாளரின் நோக்கம். ஆகவே, தகவலாளியின் சொல், செயல் ஆகியவற்றுடன் தம்மை இசைய வைத்துக்கொண்டு ஆய்வாளர் செயல்பட வேண்டும். தகவலாளியின் பேச்சு வழக்கு, மரபுத் தொடர்களைத் தாமும் கையாண்டு ஆய்வாளர் வினாக்களை எழுப்புவது தகவலாளிக்கு ஒத்த உணர்வைத் தரும். அப்பாங்கு இவ்வகை நேர்காலில் வெற்றியைத் தரும்.

பிறர் புகாத துறைகளில் ஆய்வை மேற்கொண்டு முதல் ஆய்வை நடத்தும் ஆய்வாளர், ஆய்வுப்பொருள் பற்றிய விரிவான செய்திகளை அறியக் கட்டமைப்பில்லா நேர்காணலைப் பயன்படுத்தலாம். அப்பொருளுடன் ஆய்வாளருக்கு நெருக்கமான பிணைப்பு ஏற்படுகிறது. ஆய்வுச் சிக்கலின் பல்வேறு தன்மைகளை ஆய்வாளர் உணருகிறார். தகவலாளியின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் ஆய்வாளர் குறித்துக்கொள்கிறார். இவ்வாறு தம் ஆய்வுப்பொருளில் நுணுக்கமான அறிவை ஆய்வாளர் பெறுவதற்கு இவ்வகை நேர்காணல் பெரிதும் துணைபுரிகிறது. மேன்மேலும் இப்பொருள் பற்றி யார்யாரை நேர்காணல் காணலாம் என்று அறிய ஆய்வாளருக்கு இது உதவும். பின்னர், கட்டமைப்புடைய நேர்காணலை மேற்கொள்ளவோ, பன்முறை நிகழும் நேர்காணலை மேற்கொள்ளவோ இவ்வகை துணைசெய்யும். தெருக்கூத்து, கரகம் போன்ற கலைகளை ஆராயும் ஆய்வாளர் கட்டமைப்பில்லா நேர்காணலைப் பயன்படுத்திக் கலைஞர்களிடமிருந்து

பெரிதும் தகவல்களைப் பெறலாம். இதனை முறைப்படுத்தப்படாத நேர்காணல் என்றும் அழைக்கலாம்.

குறிப்பு

## 8.4.5. ஒருமுக நேர்காணல்

ஒருமுக நேர்காணல் என்பது, குறிப்பிட்ட சூழல் ஒன்றில் பங்கேற்று இருந்தவர்களுக்கிடையே நிகழும் நேர்காணலாகும். குறிப்பிட்ட திரைப்படம் ஒன்றைப் பார்த்தவர்களிடையே நிகழும் கலந்துரையாடல், குறிப்பிட்ட வானொலி நிகழ்ச்சி ஒன்றைக் குறித்து அதைக் கேட்டவர்களிடையே நிகழும் கலந்துரையாடல் போல்வன ஒருமுகப்படுத்தும் நேர்காணலாகும். சில வார இதழ்கள், திரைப்பட விமர்சனத்திற்கு இம்முறையைக் கையாண்டு, அந்நேர்காணலைத் தங்கள் இதழ்களில் வெளியிடுகின்றன. திரைப்படத்தை முதலிலே பார்க்கச் செய்து, வரையறுத்த சில வினாக்களுக்கு உட்பட்டே இவ்வகை நேர்காணல் நிகழும். எனவே, உரையாடலில் பங்கேற்கும் மனிதர்களுக்குள்ள சுதந்திரம் கட்டுப்பாடுடையதாகிறது. பெரும்பாலும், இதழ்களில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடலில் அந்நேர்காணலை வழிநடத்திச் செல்பவராக அத்திரைப்படத்துடன் தொடர்புடைய ஒருவர் அல்லது இதழின் ஆசிரியர் இருப்பார். அவர் பெரும்பாலும் அக்குறிப்பிட்ட படத்தின் நல்ல அம்சங்களைக் குறித்தே அக்கலந்துரையாடலை நடத்துவதில் கவனமாக இருப்பார். ஒரு சில சமயங்களில் படத்தின் பிற கூறுகளைப் பற்றி உரையாட முற்படின், இவர் அவ்விடத்தில் புகுந்து திசைதிருப்புவார். இதற்குக் காணரம், அவர் படத்தின் விளம்பரத்திற்காகவே இதனைச் செய்வது ஆகும். குறிப்பிட்ட ஒன்றைப் பார்த்தவுடன் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட மன உணர்வுகள், ஆளுமைச் செயல்பாடுகள், மனப் பாதிப்புகள் போன்ற அகமன ஆய்வை நிகழ்த்தி உண்மையை வெளியிடுவது இவ்வகை நேர்காணலின் தலையாய நோக்கம். ஆயின், இந்நேர்காணலைப் பயன்படுத்துபவர்களில் சிலர் இந்த நுட்பங்களை உணர்ந்து செயல்படுவதில்லை என்பதை, இதழ்கள் விளம்பரத்திற்காகவும் வியாபாரத்திற்காகவும் நடத்தும் கலந்துரையாடல்களில் காணலாம்.

## 8.4.6. ஆழ்நிலை நேர்காணல்

மனித மனத்தில் ஆழ்ந்து கிடக்கும் உணர்வு, எண்ணங்கள், ஆசைகள், நிறைவேறாத சபலங்கள் போன்றவற்றை ஆராய உதவுவது ஆழ்ந்த நேர்காணலாகும்.மருத்துவ உளவியலாரும் சமூக ஆய்வாளரும் இம்முறையைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். நன்கு பயிற்சி பெற்ற திறமைவாய்ந்த ஆய்வாளர்கள் கவனமுடன் நீண்டநேரம் ஒலிப்பதிவுக் கருவிகளுடன் இவ்வகை நேர்காணலை மேற்கொள்ளலாம். இவ்வாறு செய்தால் மிகுந்த பயன் விளையும்.

## 8.4.7. அடுத்தடுத்து நேர்காணல்

சமூக, உளவியல் இயக்கங்கள் படிப்படியாக எவ்வாறு செல்வாக்கு பெறுகின்றன என்று கண்டறிய அடுத்தடுத்து நேர்காணல் நிகழ்த்தப்படும். முறையான கால இடையீடுகளில் தொடர்ந்து மீண்டும் நிகழ்த்தப் பெறுவது இது. இது மிகவும் பொருட் செலவும் மனித உழைப்பும் உடைய முறை. நிலையான அமைப்பை உருவாக்கிக் கொண்டு, செயற்பட்டு இந்நேர்காணலை நிகழ்த்தவேண்டும். தகவலாளிகள் நிரந்தரமானவர்களாக இருந்தால்தான், பல்வேறு சமயங்களில் மீண்டும் மீண்டும் அவர்களை நேர்காணல் காணலாம். சான்றாக, தேர்தல் காலங்களில், வாக்குப் பதிவிற்குமுன் வாக்காளர்களிடம் இம்முறையில் நேர்காணல் காண்பதைக் கூறலாம். பல்வேறு காரணங்களால் அடுத்தடுத்து வரும் தேர்தல்களில், தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் வாக்காளர்களின் மனநிலையை அறிய இம்முறை உதவும். மிக்க பொருட்செலவு, மனித ஆற்றல், உழைப்பு, காலம் இவற்றைக் கொண்டு நிகழ்த்த வேண்டிய முறை இது. எனினும் இவ்வகை நேர்காணலால் திரட்டப்பெறும் தரவுகள் திட்டவட்டமானவை. மேற்கொண்டு பகுத்தாய, அட்டவணைப்படுத்த, அளந்தறிய ஏற்றதாக விளங்கும் மெய்ம்மைகள் இவை. எனவே, அடுத்தடுத்து நிகழும் நேர்காணலால் பெறும் தரவுகளின் மதிப்பு மிகுதியானது.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

9. கட்டமைப்பற்ற நேர்காணல் பற்றி விளக்குக.
10. ஒருமுக நேர்காணல் என்றால் என்ன?
11. ஆழ்நிலை நேர்காணல் என்றால் என்ன?
12. அடுத்தடுத்து நேர்காணல் என்றால் என்ன?

## 8.5. வினாத்தொகுதி

குறிப்பு

வினாத்தொகுதி என்பது வினாநிரலைக் குறிக்கும். வினாநிரல் என்பது, தகவலாளியிடமிருந்து செய்தி பெறுவதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாக்களின் தொகுப்பாகும். இவற்றுக்குரிய விடைகளைத் தகவலாளி வாய்மொழியாகச் சொல்லலாம். அல்லது வினாநிரலில் அவரே எழுதியும் கொடுக்கலாம். எழுத்தறிவு இல்லாதவர்களிடமிருந்து வாய்மொழியாகவும், எழுத்தறிவு உடையவர்களிடமிருந்து எழுதியும் இவ்விடைகளைப் பெறக்கூடும். ஒரு சமூகத்தின் பல்வேறுபட்ட படித்தர நிலைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள், பாரம்பரிய நெறிகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றை அறிய நேர்காணலோடு வினாநிரலும் பயனுடையதாய் அமையும். வினாநிரல் நேர்காணலைவிடச் சரியான ஓர் அணுகுமுறைக் கருவியாக அமையும். வினாநிரல் பல்வேறிடங்களில் சிதறிக்கிடக்கும் மக்களிடமிருந்து பயன்தரும் தகவல்களைத் திரட்டுதல், நம்பகத்தகுந்ததும் கொள்ளத்தக்கதுமான புள்ளி விவரங்களைப் பெறக் கூடிய மூலமாக உள்ளவற்றிலிருந்து அவற்றைப் பெறுதல் ஆகிய இரு செயல்களை உள்ளடக்கியது.

வினாநிரல் ஆராய்ச்சியில் பெரிதும் உதவும் தன்மையுடையது. ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு உலகின் வெவ்வேறு தொலைவான இடங்களில் உள்ளவர்களின் கருத்துக்களை ஆராய்ந்து காண்பது இவ்வினாநிரலில் எளிதாகிறது.

### 8.5.1. வினாநிரலின் சிறப்புக் கூறுகள்

வினாநிரலில் நிறைகளும் குறைகளும் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு காணலாம்.

#### 8.5.1.1. வினாநிரலின் நிறைகள்

ஆய்வாளர் வினாநிரலில் பெறப்படும் நிறைகள் பற்றிப் பின்வருமாறு காணலாம்.

- வினாநிரல் தெளிவாக இருக்கும் நிலையில், அதனால் வேண்டப்படும் செய்திகள் மிக எளிதில் கிடைக்கும் வாய்ப்புள்ளது. வினாநிரலை எந்த ஆய்வாளரும் ஓரளவு

குறிப்பு

பயிற்சியின் அடிப்படையில் உருவாக்கிவிடலாம். இதற்கெனத் தனிப்பயிற்சி வேண்டியதில்லை.

- பலதரப்பட்ட மக்களை அளந்தறியப் பயன்படும் ஒரு பொது அளவுகோல் வினாநிரல். ஒரு வினாவுக்குப் பத்துப் பேர் பத்துவகையான விடை சொல்லும் நிலை வரலாம். அந்நிலையில் மாறுபட்ட கருத்துக்கள் ஒரு பகுதியில் இருப்பது உணரப்படும்.
- ஆயிரக்கணக்கான மக்களைக் கூட வினாநிரல் வழியாகத் தொடர்பு கொள்ள முடியும். இதனால் காலச்சிக்கனம், பொருட்சிக்கனம், உழைப்புச் சிக்கனம் ஆகியன ஏற்பட இடமுண்டு.
- எழுதித் தருமாறு கேட்கப்படும் வினாநிரல், எந்தக் கட்டாயத்தையும் தகவலாளிக்கு ஏற்படுத்துவதில்லை. சிந்திக்கத் தேவையான காலம் கொடுக்கப்படுகிறது. நேர்காணலில் அவ்வப்போது மனம் இருக்கும் சூழலில் விடைகள் பொருத்தமற்றவையாக வர வாய்ப்புண்டு. குறிப்புக்களைத் தம்பெயர் தெரிவிக்காமல் இரகசியமாகக் கொடுக்கவும் வினாநிரலில் வாய்ப்புள்ளது. தங்கள் பெயர் வெளியிடப்படாது என்ற நிலையில் செய்திகளைத் தடையின்றி வழங்கும் போக்கு வினாநிரலில் காணப்படும்.

## 8.5.1.2. வினாநிரலின் குறைகள்

ஆய்வாளர் வினாநிரலில் பெறப்படும் குறைகள் பற்றிப் பின்வருமாறு காணலாம்.

- கல்வியறிவு உள்ளவர்களிடமே வினாநிரல் செல்லுபடியாகும். கல்வியறிவு இருந்தால் மட்டும் போதாது, தெளிவான சிந்தனைத்திறம் அமைந்தவர்களிடமே இது பெருகிய பயன் தரும். பலர் சிந்திக்கும் திறன்பெற்றிருந்தும், எழுதிக் கொடுக்க மாட்டார்கள். இந்த முயற்சியில் தங்கள் ஏன் உட்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கருதுவர்.
- பெரும்பாலும் அஞ்சல் வழி அனுப்பிக் கேட்கப்பெறும் வினாநிரலில் ஒரு சோதனை ஆய்வுப்படி 11.2 விழுக்காட்டினரே

குறிப்பு

நிறைவு செய்து அனுப்புகின்றனர். பெரும்பாலோர் இதனைத் தாம் செய்ய வேண்டிய செயலென்றோ, ஓர் ஆராய்ச்சிக்குத் தாம் துணை நிற்பதால், ஒரு தீர்வு கிடைக்கத் தம் பங்கை அளிக்கலாமென்றோ கருதுவதில்லை.

- வினா நிரலில், தகவலாளி வினாக்களைச் சரியாக உணராமலோ, விளையாட்டாகவோ ஏதோ விடை என்று குறித்து அனுப்பினால் வினாநிரல் எதிர்மறைப் பயனை அளிக்கும். சில வினாக்களுக்குத் தகவலாளி தெளிவை எதிர்பார்த்தால் வினாநிரலில் அதற்கு இடமிராது. எழுதிப் பெற்ற விடைகளில் தகவலாளியின் மன உணர்ச்சி புலனாகாது. மனத்தை மறைத்திருக்கிறாரா, வெளிப்படுத்தி இருக்கிறாரா என்பது கூற விளங்காது.

- சடங்கு நிலையில் ஏதோ நிரப்பிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பலர் வினாநிரலை நிரப்பக்கூடும். இந்நிலையில் அது எதிர்பார்த்த பயன் தராது. மேலும் வினாநிரலின் எல்லை வரையறுக்கப்பட்டது. உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? அவற்றில் ஆண் எத்தனை? பெண் எத்தனை? என்று கேட்கும் நிலையில், ஒருவர் தனக்குக் குழந்தைகள் இல்லாத நிலையில் தெருவில் கிடந்த குழந்தையை எடுத்து வளர்க்கிறேன் என்று கூற வாய்ப்பில்லை. உங்களுக்குச் சர்க்கரை நோய் இருக்கிறதா? ஆம், இல்லை எனத் தெரிவியுங்கள் என்பதில் இதுவரை சோதனை செய்துகொள்ளவில்லை என்று கூற இடமில்லை. அல்லது மருத்துவர் ஒருவர் சர்க்கரை நோய் இருப்பதாகவும் மற்றொருவர் இல்லை என்று கூறியவற்றைத் தெரிவிக்க வாய்ப்பில்லை.

- பல சமயத்தில் ஒரு சில பக்கங்களில் தயாரிக்கப் பெறும் வினாநிரல் முழுமையானதாக இருப்பதில்லை. ஒரு வினாவுக்கு வரும் விடைக்கேற்ப அடுத்த வினாவைத் தொடுக்கும் வாய்ப்பு நேர்காணலில் இருப்பதைப் போல் வினாநிரலில் இல்லை. விடை கூறுபவர், என்ன மனநிலையில் இருந்தார் என்பதையோ, அவரே விடைகளைக் குறித்தாரா என்பதையோ, வினாநிரலில் அறிய வாய்ப்பில்லை. ஒலியலைகளை விடாது தொடுக்கும் கூட்டிசை

போன்றது நேர்காணல் என்றும், திரைச்சீலையில் எழுதப்பெறற வண்ண ஓவியம் போன்றது வினாநிரல் என்றும் கூறுவர்.

குறிப்பு

## 8.5.2. வினாநிரலின் நோக்கம்

தற்சார்பின்மையை அடைவதை நோக்கமாகக் கொண்டது வினாநிரல். தகவலாளிகள் அனைவரிடமும் கொடுக்கப்பெறும் வினாநிரலில் ஒரே மாதிரியான வினாக்கள் ஒரே மாதிரியான மொழியில் கொடுக்கப்பட்டிருக்கும். வினாக்களை அமைத்திருக்கும் வரிசை முறையும் ஒரே தன்மையில் இருக்கும். எனவே, கிடைக்கும் விடைகளை ஒப்பிட்டுக் காணவும், உறழ்ந்து காணவும் இயலும். வினாக்களின் வரிசை முறையையோ வினாக்கள் அமைத்துள்ள மொழியையோ சிறிது மாற்றினாலும், ஒரே வினாவிற்கு மாறுபட்ட மக்களிடம் இருந்து மாறுபட்ட விடைகள் கிடைப்பதாக நிறுவியுள்ளனர். எனவே, மாற்றம் செய்தல் கூடாது.

வினாநிரல் இன்றி வெறுமனே வினாக்களைக் கேட்கத் தலைப்பட்டால், கேட்கும் ஆய்வாளர் பதிலிறுக்கும் தகவலாளி ஆகிய இருவருமே கூறுவதற்கு முற்படலாம். தேவையான, இன்றியமையாச் செய்திகள் விடுபட்டுப் போகலாம். தேவையற்ற தரவுகள் திரட்டப்படலாம்.

பெற்ற தரவுகளை அட்டவணைப்படுத்த, பகுத்து ஆராய ஆகியவற்றிற்கு வினாநிரல் பெரிதும் துணைசெய்யும். வினாநிரல்முறையிலன்றி வெறுமனே உரையாடித் தரவுகளைத் திரட்டியவர் அவற்றைப் பகுப்பதும் அட்டவணைப்படுத்துவதும் கடினமான பணிகளாகிவிடும்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

13. வினாத்தொகுதி என்பது யாது?
14. வினாநிரலின் நிறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
15. வினாநிரலின் குறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
16. வினாநிரலின் நோக்கம் யாது?

## 8.5.3. வினாத்தொகுதி வகைகள்

கட்டமைப்புடைய வினாத்தொகுதி, கட்டமைப்பற்ற வினாத்தொகுதி, வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதி, வரையறுக்கப்படாத வினாத்தொகுதி, கலவை வினாத்தொகுதி, உண்மையறி வினாத்தொகுதி, கருத்தறி வினாத்தொகுதி, படம் சார் வினாத்தொகுதி, ஒரு நோக்கு வினாத்தொகுதி என வினாத்தொகுதிகள் பல வகைகப்படும். இவ்வொவ்வொரு வகை பற்றி இனிக் காணலாம்.

### 8.5.3.1. கட்டமைப்புடைய வினாத்தொகுதி

முன்கூட்டியே ஆழமாகச் சிந்தித்து, ஆய்வாளர் வினாக்களை அமைத்து அவற்றை வகை தொகை செய்து கொண்டு ஆய்வுக் களத்திற்குச் சென்றால், அவ்வகை வினாத்தொகுதி கட்டமைப்புடைய வினாத்தொகுதி என்பர். தெளிவான, வரையறுத்த, முன்னரே உருவாக்கப்பட்ட வினாக்களைக் கொண்டது கட்டமைப்புடைய வினாத்தொகுதி ஆகும். இத்துடன், போதுமானதாக அமையாத அல்லது மிகுதியும் விளக்கமானதாக அமைந்து குறைக்கப்பட வேண்டிய விடைகளை உடைய வினாக்களையும், கூடுதலான வினாக்களையும் இவ்வகை வினாத்தொகுதியில் காணலாம். தேவை ஏற்படும்பொழுது இக்கூடுதல் வினாக்களை ஆய்வாளர் பயன்படுத்திக் கொள்வார். முதன்முதலாக மேற்கொள்ளும் விசாரணையிலும், திரட்டப்பட்ட தகவல்களை ஒத்திட்டுக் காண்பதற்காக மேற்கொள்ளும் ஆய்விலும் பரந்த அளவை உடைய ஆய்வுத் திட்டங்களிலும் கட்டுப்பாடுடைய வினாத்தொகுதி பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. சமூக, பொருளாதார ஆய்வுகளிலும் பொது நிகழ்ச்சிகள் பற்றிய மக்களின் கருத்துகளைத் திரட்டுவதற்குரிய ஆய்வுகளிலும், நடைமுறை அரசியல்-அரசியல் மாற்றம் பற்றிய ஆய்வுகளிலும் இவ்வகை வினாத்தொகுதி பயன்படும். மேலும், மக்களின் வாழ்க்கைத்தரம் குறித்து மேற்கொள்ளப்பெறும் ஆய்வு, நுகர்வோர் செலவுக் குறியீட்டு எண் பற்றிய ஆய்வு, குழந்தைகள் நலம், பொதுமக்களின் நல்வாழ்வு போன்ற எண்ணற்ற ஆய்வுகள் ஆகியவற்றிலும் இவ்வகை வினாத்தொகுதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மக்களிடையே காணப்படும் நாளிதழ் படிக்கும் ஆர்வம் பற்றிய ஆய்வு, நாளிதழ், வாரஇதழ், மாதஇதழ் போன்ற இதழ்களில் வெளியாகும் பல்வேறு பகுதிகள் பற்றிய பொதுவான, சிறப்பான ஆய்வுகள்,

இதழ்களில் வெளியாகும் குறிப்பிட்ட சிக்கலைப் பற்றிய சிறுகதை, நாவல், கவிதை பற்றிய ஆய்வுகள், விளம்பரங்களில் மகளிர் இடம்பெறும் போக்கு பற்றி வாசகர்-பெண்வாசகர், ஆண்வாசகர், எண்ணங்களைத் திரட்ட மேற்கொள்ளும் ஆய்வு ஆகிய பல தன்மைகளில் நிகழ்த்தப்பெறும் இதழியல் சார்ந்த இலக்கிய ஆய்வுகளுக்கு இவ்வகை வினாத்தொகுதி முறையைப் பயன்படுத்தி வருகின்றனர். சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் பற்றிய ஆய்வுகளுக்கும், தெருக்கூத்து, கரகம், வில்லுப்பாட்டு, பொய்க்கால் குதிரை ஆட்டம் போன்ற நாட்டுப்புறக் கலைகள் பற்றிய ஆய்வுகளுக்கும், பார்வையாளர், கலைஞர் ஆகிய இருவர்தம் சிந்தனைகளையும் அறிய இவ்வகை வினாத்தொகுதி பயன்படுத்தலாம். இலக்கிய ஆய்வில் கூறப்படும் முடிவுகளைச் சான்றாதாரங்களுடன் புள்ளிவிவர முறையில் கூறி, ஆய்வாளர் தம் கருத்தை நிறுவுவதற்கும், அறிவியல் நெறியில் நிலைநாட்டுவதற்கு கட்டமைப்புடைய வினாத்தொகுதி ஆராய்ச்சி முறை துணைசெய்யும்.

ஒவ்வொரு வினாவின் எல்லையும் வரையறுக்கப்பட்டதாக இருக்கவேண்டும். இரண்டு வகையான விடைகளுக்கு இடம் அளிப்பதாகவும் தகவலாளி நீண்ட உரை நிகழ்த்துவதாகவும் அமையக் கூடாது. வினாத்தொகுதி பலருக்கும் ஒன்றாகவே இருக்க வேண்டும். ஆளுக்கு ஆள் மாறுபடக் கூடாது. ஒருவர் விடையிலிருந்து மற்றவர் விடை எப்படி மாறுபடுகிறது என்று காண்பதற்கும் ஒரு சிக்கலைக் குறித்து மொத்தத்தில் எத்தனை விழுக்காட்டினர் எவ்வகையான கருத்து கொண்டுள்ளனர் என்பதைக் கணக்கிட்டறியவும் இவ்வினாத்தொகுதி பயன்படும்.

## 8.5.3.2. கட்டமைக்கப்படாத வினாத்தொகுதி

கட்டமைக்கப்படாத வினாத்தொகுதி என்பதைப் பேட்டியின் வழிகாட்டி என்று பெரும்பாலும் குறிப்பிடுவர். வளைந்து கொடுக்கும் தன்மை இவ்வகை வினாத்தொகுதியின் அடிப்படைப் பண்பாகும். மிகவும் எளிதாகத் தரவுகளைத் திரட்ட இவ்வகை பயன்படுகிறது. ஆய்வாளர், களத்திற்குச் சென்றவுடன் அந்த நேரத்தில் வினாக்களைக் கேட்பது இவ்வகை வினாத்தொகுதியின் இயல்பாகும். களச்சூழலுக்கு ஏற்றவாறும், மக்களின்-தகவலாளிகளின்-விருப்பு வெறுப்புகளைப் புரிந்துகொண்டும்

கொள்வனவற்றைக் கொண்டு தள்வனவற்றைத் தள்ளி வினாக்களைக் கேட்க இவ்வகை வினாத்தொகுதி வழிசெய்கிறது. அதனால்தான் வளைந்து கொடுக்கும் தன்மையே இதன் தலையாய பண்பு என்று கூறுவர். தேர்ந்தெடுத்த, குறிப்பிட்ட எண்ணிக்கைகளை உடைய வரையறுத்த நிகழ்வுகளுக்கே இவ்வகை வினாத்தொகுதி துணைசெய்யும். ஆயினும் ஆழமான தரவுகளைத் திரட்டும் நுணுக்க ஆய்வுகளில் இவ்வகை வினாத்தொகுதி பயன்படுத்தப்பட்டு வருகிறது. குடும்பக் குழுக்களிடையே காணப்படும் இணைவு, தனிப்பட்ட அனுபவங்கள், நம்பிக்கைகள், போக்குகள் ஆகியன பற்றிய ஆய்வுகளுக்கு இவ்வகை வினாத்தொகுதி பயன்படுகிறது. வினாக்களை அமைப்பதில் திட்டமிட்ட தன்மை காணப்படாததால், ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய முறையில் தரவுகளைத் திரட்டுவது என்பது இவ்வகை வினாத்தொகுதியில் இயலாத ஒன்றாகும். பயன்படாத தரவுகள், ஆய்விற்குத் துணைநிற்காத தரவுகளைத் திரட்டும் இடர்ப்பாடும் கட்டமைப்பில்லா வினாத்தொகுதி முறையில் உள்ளது.

கட்டமைப்புடைய வினாத்தொகுதியில் வினாக்கள் முன்கூட்டியே உருவாக்கப்பட்டு ஆய்வுத் தரவுகளை நல்குபவர்களுக்கு அனுப்பப்படும். எனவே, அதில் அனைத்துத் தகவலாளிகளுக்கும் வினாக்கள், அவற்றைத் தொகுத்துள்ள முறை, வரிசை எண், வைப்புமுறை, வினாக்களில் பயன்படுத்தியுள்ள மொழி, சொல்லமைப்பு என்ற அனைத்துக் கூறுகளும் ஒன்றுபோல இருக்கும். ஆனால் கட்டமைப்பில்லா வினாத்தொகுதியில் இம்முறை மாறுபடலாம். தகவலாளிகளைக் கண்டதும் வினாக்களை உருவாக்கிக் கொடுப்பதால் இத்தகு கட்டமைப்பு, திட்டமிட்ட உருவாக்கமுறை இதில் இடம்பெறாது.

### 8.5.3.3. வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதி

தகவலாளியின் விடை தரும் வாய்ப்பை ஓர் எல்லைக்கு உட்படுத்துவது வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதி ஆகும். வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதியில், வினாக்களுக்குக் கீழே அவற்றிற்குரிய விடைகள் பல வரிசையாகத் தரப்பட்டிருக்கும். பொருத்தமான விடையைத் தகவலாளி, குறியிட்டோ (*****), எண் இட்டோ காட்ட வேண்டும். வகைப்படுத்த வேண்டிய நிலையில் தரவுகளைத் திரட்டுவதற்கு இவ்வகை வினாத்தொகுதி பயன்படும்.

குறிப்பு

தெளிவான, வரையறுத்த வகைகளில் தரவுகளை அமைக்க ஆய்வாளர் இவ்வகையினைப் பயன்படுத்துவர். முதனிலையில் திரட்டிய தரவுகளை மேலும் வகைசெய்ய, ஒத்திட்டுச் சரிபார்க்க இவ்வகை வினாநிரலைப் பயன்படுத்துவர். பதிலிறுக்கும் தகவலாளி, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் கீழுள்ள விடைகளுள் சரியான ஒன்றை, அச்சூழலுக்கு ஏற்பக் குறியிடுவர். இதற்கு மட்டும் இவ்வகை வினாநிரல் வாய்ப்புண்டே தவிர, தகவலாளி தன் கருத்துகளைக் கூற இவ்வகையில் இடம் இல்லை. மக்கள் கணக்கெடுப்பு, வீட்டு வசதிகள் பற்றிய ஆய்வு போன்றவற்றில் இம்முறை பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. சான்றாக, குமுதம் வார இதழில் உங்களைக் கவர்ந்த பகுதி

- தலையங்கம்
- தொடர்கதை
- சிறுகதை
- நகைச்சுவைத் துணுக்குகள்
- பிற துணுக்குகள்
- கேலிச் சித்திரம்
- அரசு கேள்வி பதி

என்று உருவாக்கப்படும் வினாத்தொகுதியைக் கூறலாம். முற்கூறிய அனைத்து இலக்கிய ஆய்வுகளுக்கும் இவ்வகை வினாத்தொகுதியைப் பயன்படுத்தலாம். குறிப்பிட்ட ஆசிரியர் ஒருவரின் நடையை எவ்வாறு இனம் காணுகின்றனர் என்று ஆராயும் ஆய்வாளர் இவ்வகை வினாத்தொகுதியைப் பயன்படுத்துவர்.

ஆய்வை மேற்கொண்டவுடன், கருதுகோள் சரியாக உருவாக்கப்படாத நிலையில், எவ்வகையில் தரவுகளைத் திரட்டுவது என்று முடிவு செய்யாதபோது, பரந்த வடிவமுடைய வகையைப் பயன்படுத்தலாம். தெளிவாக வரையறுத்துக் கொண்டு செயல்படா நிலையில், ஆய்விற்கு விளக்கக் கருவியாக இவ்வகை பயன்படும். வளர்ந்த நிலையில் ஆய்விற்குப் பெரிதும் பயன்படுவது வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதியே ஆகும்.

### 8.5.3.4. வரையறுக்கப்படாத வினாத்தொகுதி

வரையறுக்கப்படாத வினாத்தொகுதி என்பது செய்தி தருபவருக்கு முழு உரிமை அளிப்பதாகும். ஆம், இல்லை என்பவற்றில் ஒன்றைக் குறிப்பிடுக என் இங்கு வினா அமையாது. அதற்கு மாறாக,

- அண்மையில் நிகழ்ந்த மதக்கலவரத்திற்கு அடிப்படை எதுவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?
- இதுபோன்ற நிகழ்ச்சிகளில் முன்னெச்சரிக்கையாக எவ்வகை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?

என்பன போன்ற வினாக்கள் இங்கு அமையும். இப்படிப்பட்ட செய்தி தருபவர் மிகுதியான செய்திகளைத் தருவார். ஆய்வாளர் தம் ஆய்வுப் பொருளுக்கேற்ப அவற்றில் தேர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஒரு சிக்கலை எழுப்புவதோடு ஆய்வாளர் நின்றுவிடத் தகவல் தருபவர் அதனைக் குறித்துக் கருத்துத் தெரிவிப்பதாக அமைவதை இந்நிரல் காட்டுகின்றது. விடை கூறுபவருக்கு எந்தக் குறிப்பும் கைகொடுப்பதில்லை. உங்களுடைய கருத்து உரிமையோடு சொல்லலாம் என்று தகவலாளி ஊக்குவிக்கப்படுவார். ஆராய்ச்சி செய்பவர், தகவலாளியிடம் எதிர்பாராத கருதுகோளுக்கு மாறான கருத்தைக்கூட வழங்கலாம். எனவே, ஆராய்ச்சிக்கு இந்நிரல் ஒரு திறவுகோல் என்றும் குறிப்பிடலாம். விடை கூறுபவரின் ஆளுமை வெளிப்படக்கூடிய வாய்ப்பும் இந்நிரலில் உண்டு. நேர்காண்பவர், தகவலாளியை வற்புறுத்தி, பொது நன்மையைக் கருத்தில் கொண்டு அஞ்சாமல் விடைகூற வேண்டியது கடமை என அறிவுறுத்தி, போற்றிப் புகழ்ந்து உரிய விடையைப் பெறுவதற்கும் இம்முறையில் இடமுண்டு.

### 8.5.3.5. கலவை வினாத்தொகுதி

வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதியின் தன்மைகளையும் வரையறுக்கப்படாட வினாத்தொகுதியின் தன்மைகளையும் உட்கொண்டது கலவை வினாத்தொகுதி. பல ஆய்வுகளில் இவ்வினா முறையே பெரும்பாலும் பயன்படுத்தப் பெறுகின்றது.

1. பெட்ரோல் விலை உயர்வு சரியானதா? தவறானதா? இது வரையறுக்கப்பட்ட வினா. இவ்வினாவுடன்,
2. சரியானது என்று நீங்கள் கருதக் காரணம்?
3. தவறானது என்று நீங்கள் கருத அடிப்படை?

குறிப்பு

என்று வரையறுக்கப்படாத வினாக்களில் ஒன்று, முதல் வினாவின் விடைக்கேற்பக் கேட்கப்படும். எனவே இருவகை அமைப்பும் இந்நிரலில் இடம்பெறும். சமூக ஆய்வில் கலவை வினாநிரல் எதிர்பார்க்கும் பயன்களைக் கொடுக்கும்.

1. திருவள்ளுவர் சங்க காலத்துக்கு முற்பட்டவர் என்று கருதுகின்றீர்களா? ஆம்/இல்லை.
2. முற்பட்டவர் என்று கருதுவதற்குரிய காரணங்களைச் சுருங்கக் கூறுக.
3. பிற்பட்டவர் என்பதற்குரிய சான்றுகளைத் தருக.
4. காலத்தால் முற்பட்ட திருக்குறள் பிற்பட்ட அறநூல்களோடு கீழ்க்கணக்கில் வைக்கப்பட்டது. சரி/சரியன்று
5. முப்பால் என்னும் பெயர் திருக்குறளையே குறிக்கும்/குறிக்காது.
6. அறநூல்களில் திருக்குறள் பெறும் இடம் பற்றி நும் கருத்து யாது?

இவ்வகையில் இலக்கிய ஆராய்ச்சியில் கலவை வினாநிரல் இடம்பெறும். தகவலாளியைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் பாங்கும் இங்கு இல்லை. அறவே கடிவாளம் இல்லாமல் போகவிடும் போக்கும் இங்கு இல்லை. நேர்காண்பவர், தகவலாளி ஆகிய இருவருக்கும் இம்முறையில் சம வாய்ப்பு உள்ளது.

## 8.5.3.6. உண்மையறி வினாத்தொகுதி

எல்லா வகை வினாத்தொகுதிகளும் உண்மையறியும் கருத்தினவே. இவ்வினாத்தொகுதி சிறப்பாக அவ்வாறு குறிக்கப்படுவதற்குக் காரணம் தகவலாளியின் கருத்துக்கோ, விருப்பத்திற்கோ இடந்தராமல் உண்மையை அறிவதே இதன் நோக்கம் என்பதாகும். தகவலாளிக்கு உடன்பாடு இல்லையெனினும் அவர் அறிந்த விவரம் கேட்கும் வகையில் வினாத்தொகுதி அமையும். மதுக்கடை நடத்திப் பொருள் ஈட்டுபவரிடம், மதுப்பழக்கம் கொடுமையானது என்ற கருத்தினடிப்படையில் ஊரார் கட்டுப்பாடாக மது அருந்தாமல் இருப்பதை முறியடிக்க முயற்சிகள் உள்ளதாகச் சொல்கிறார்களே, உங்கள் கருத்து யாது என்று கேட்கப்படலாம். அரசியல்வாதிகளின் முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகள் செயல்கள்

ஆகியவற்றை இதழ்கள், தொலைக்காட்சி ஆகியவற்றின் நிருபர்கள் இவ்வகையான வினாத்தொகுதி வழி வெளிக்காட்டுவர். விசாரணைக் குழுக்களின் ஆய்வு இத்தகைய வினாத்தொகுதி கொண்டதாகவே இருக்கும். தகவலாளியின் சார்புநிலை, நேர்காண்பவரின் சார்புநிலை ஆகிய இரண்டையும் கடந்து உண்மையறிதல் வேண்டுமென்ற கருத்துடன் வினாத்தொகுதியைச் சமைக்க ஒரு நடுவுநிலை வேண்டும். நேர்காணலின் சார்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். நேர்காணலுக்கென அனுப்பப்பெறுவோரும் மனிதர்களே யாதலின் ஒரு சார்புக் கருத்துடையோராக இருக்கக் கூடும். அதேபோலத் தகவலாளிகளும் குறித்த சில நோக்கங்கள், மதிப்புக்கள், கருத்துக்கள் கொண்டவராக இருக்கலாம். எனவே ஆய்வுக்கு இவர்களை உட்படுத்தி ஆராய்பவர் இச்சார்புகளை அறவே நீக்கி உண்மைகளைக் கண்டுணரவேண்டும். சல்லடைக் கண்களின் துளைகளைப் போலச் சரியானவற்றைப் பிரித்துக் காணும் திறம் ஆய்வாருக்கு வேண்டும் என்பதே உண்மை வினாத்தொகுதி வற்புறுத்துகின்றது.

## 8.5.3.7. கருத்தறி வினாத்தொதி

கருத்தறி வினாத்தொகுதி என்பது, உண்மைகளை அறிய இன்றியமையாமை தராமல் தகவலாளியின் கருத்தை அறியும் அளவில் அமையும் வினாத்தொகுதி ஆகும். தேர்தலுக்கு முன் பலரால் நிகழ்த்தப்படும் கருத்துக் கணிப்பு இத்தகைய வினாத்தொகுதியை உடையது. பெரும்பான்மையான மக்களின் கருத்தைக் கணித்தல், தேர்ந்த சிலரின் கருத்தைக் கேட்டறிதல் என்ற வகையில் விடைகள் பெறப்படும். இவ்வினாத்தொகுதி சமூகத்தின் அறம் எது? உண்மை எது? என்று அறியும் கோட்பாடு உடையதில்லை. மக்களின் மனப்போக்கை வெளிப்படுத்தத் தகுதியான வினாத்தொகுதியாக இது அமையும்.

## 8.5.3.8. படம்சார் வினாத்தொகுதி

படம்சார் வினாத்தொகுதியில் வினாக்களின் கீழே விடைகளாகப் பல படங்கள் தரப்பெற்றிருக்கும். சரியான விடையாக அமையவல்ல படத்திற்கு நேரே குறியிடவோ அல்லது அப்பட எண்ணைக் குறிக்கவோ வேண்டும் என்று தகவலாளிக்கு ஆய்வாளர் வேண்டுகோள் குறிப்பு எழுதியிருப்பார். வினாக்களுக்கு விடைதரும் தகவலாளிக்கு

விடைதருவதில் ஒருவித ஆர்வம் ஏற்படுவதை இவ்வகை வினாத்தொகுதியில் காணலாம். முற்கூறிய வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதியின் துணைவகை என்று இதனைக் கூறலாம். வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதியில் எழுத்து வடிவில் விடைகள் இருக்க, இவ்வகையில் படங்களாக விடைகள் அமைந்திருக்கும். தகவலாளி, படிக்கத் தெரியாதவராக இருப்பின் அவரிடம் இருந்து தரவுகள் திரட்ட இப்பட வினாத்தொகுதி பெரிதும் துணைசெய்யும். சிறுவர், சிறுமியர்களிடம் தரவுகளைத் திரட்ட இவ்வகை பெரிதும் துணைசெய்யும். தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டுகளில் வேட்பாளர் பெயரும் சின்னமும் இருக்க, படங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து முத்திரையிடும் முறை இதற்குச் சரியான சான்றாகக் கருதலாம்.

## 8.5.3.9. ஒரு நோக்கு வினாத்தொகுதி

ஒருவருடைய குறிப்பிட்ட அனுபவம், அதன் விளைவுகள் குறித்து அனைத்து வினாக்களும் மையப்படுத்தப்பெற்ற நிலையில் அமைவது ஒரு நோக்கு வினாத்தொகுதி ஆகும். ஓர் ஆய்வுச் சிக்கலை மையமிட்டதாக ஒருநோக்கு வினாத்தொகுதி அமையும். ஒரு தீவிபத்தில் சிக்கிக்கொண்ட ஒருவரின் அனுபவம், வெள்ளத்திலிருந்து பலரைக் கரையேற்றிய ஒருவரின் செயல், ஒரு கலவரத்தை நேரில் கண்ட ஒருவரின் மனநிலை ஆகியன குறித்து இவ்வகை வினாத்தொகுதி அமையும்.

கருதுகோளை வளர்த்துச் செல்வதற்கு இவ்வினாத்தொகுதி பயன்படும். வெளியே நிகழும் நிகழ்ச்சி ஒருவருடைய மனத்தை எந்த அளவு பாதித்திருக்கிறது என்பதை இதனால் அறியமுடியும். ஒரு படத்தில், ஒரு வீட்டின் பல சிதைந்த நிலைகள் தெரிகின்றன. மாடிப்படி இடிந்து கிடக்கிறது. சுவர்ப்பூச்சு பெயர்ந்திருக்கிறது. எலிகள் சுவரில் துளையிட்டு இருக்கின்றன. இப்படம், வீட்டுக்குரியவர் வீட்டைச் சரியாகப் பழுது பார்க்காமையைக் காட்ட எடுக்கப்பெற்றது. ஆனால் இதனைப் பார்த்த ஒருவர் குடியிருப்பவர் வீட்டைச் சரியாக வைத்துக் கொள்ளவில்லை எனக் கருதினர். இத்தகைய ஒருவரை ஒருமுக வினாத்தொகுதிக்கு உட்படுத்துவதன் வழி பலவேறு கோணங்களிலிருந்து வீட்டின் நிலையைக் கணித்த அறிவு ஆய்வாளருக்குக் கிடைக்கும்.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**

17. வினாத்தொகுதியின் வகைகள் யாவை?
18. கட்டமைப்புடைய வினாத்தொகுதி பற்றி விளக்குக.·.
19. வரையறுக்கப்பட்ட வினாத்தொகுதி என்பது யாது?
20. கலவை வினாத்தொகுதி என்றால் என்ன?
21. கருத்தறி வினாத்தொகுதி யாது?
22. ஒரு நோக்கு வினாத்தொகுதி என்பது யாது?

## 8.6. தொகுத்துக் காண்போம்

- நேர்காணல் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- நேர்காணல் உத்தி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- நேர்காணல் பயன் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- நேர்காணல் வகைகள் பற்றித்தெரிந்து கொண்டீர்கள்.
- வினாத்தொகுதி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 8.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 8.3. | 2. | 8.3. |
| 3. | 8.3.1. | 4. | 8.3.2. |
| 5. | 8.4. | 6. | 8.4.1. |
| 7. | 8.4.2. | 8. | 8.4.3. |
| 9. | 8.4.4. | 10. | 8.4.5. |
| 11. | 8.4.6. | 12. | 8.4.7. |
| 13. | 8.5. | 14. | 8.4.1.1. |
| 15. | 8.5.1.2. | 16. | 8.5.2. |
| 17. | 8.5.3. | 18. | 8.5.3.1. |
| 19. | 8.5.3.3. | 20. | 8.5.3.5. |
| 21. | 8.5.3.7. | 22. | 8.5.3.9. |

## 8.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. நேர்காணல் உத்திகள் பற்றிக் கட்டுரை வரைக.

குறிப்பு

2. நேர்காணல் வகைகள் யாவை? அவற்றில் இரண்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. வினாத்தொகுதியின் வகைகள் யாவை? அவற்றில் இரண்டினை விளக்குக.

# பிரிவு 3. ஆய்வேடு - உருவாக்கம்

## கூறு 9. மாதிரிகள் - கள ஆய்வுக்குத் தேவையான பொருட்கள்

குறிப்பு

## 9.1. முன்னுரை

நாட்டுப்புறவியலும் மானிடவியலும் கள ஆய்வு சார்ந்த துறைகளாகும். இவ்விரண்டு துறைகளும் கள ஆய்வை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். கள ஆய்வு இன்றி நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வே செய்ய இயலாது. ஏனென்றால் நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழி, விடுகதை, நாட்டுப்புறக்கலை, நாட்டுப்புறத் தெய்வங்கள், நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் அனைத்தும் நாட்டுப்புற மக்களிடையே தலைமுறை தலைமுறையாக, வாழையடி வாழையாக நிலவி வருகின்றன. அவை பல்லாண்டுக் காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. அவற்றைச் சேகரித்தால்தான் இத்துறையில் ஆய்வு மேற்கொள்ள முடியும். இவ்வாறு களப்பணி மேற்கொள்வதற்குத் தேவையான மாதிரி ஆய்வுகள் பற்றியும், கள ஆய்வுக்குத் தேவையானவற்றைப் பற்றியும் இப்பகுதியில் காணலாம்.

## 9.2. குறிக்கோள்கள்

- களப்பணியின் மாதிரி ஆய்வுகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- களப்பணிக்குத் தேவையானவை எவையெவை என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 9.3. மாதிரிகள்

நூல்களில், அறிக்கைகளில், செய்தித் தாள்களில் காணப்பெறும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி குறித்த செய்தி முழுமையானதாகவும், எல்லாப் பக்கங்களிலிருந்தும் காணப்பட்டதாகவும் இல்லாமல் போகலாம். எனவே, நேரடியாகக் கலத்துக்கே ஒருவர் சென்று பலரையும் நேர்காணல் வழி அறிந்து, உற்றுநோக்கி, உடன் தங்கியிருந்து உண்மைகளை நேரடியாக அறிந்து கொள்ளக் கள ஆய்வே பேருதவி புரியும். ஆய்வாளனுக்குப் பயன்படும் முன்னாய்வுகள் மாதிரி ஆய்வுகள் எனலாம். இது எல்லா வகையான ஆய்வு வகைகளுக்கும் பொருந்தும். ஆய்வாளனுக்கு முன்னுள்ள எவ்வகைப்பட்ட தரவுகளாயினும் அவனுக்குப் பொருந்தக் கூடியவை அவனுக்கு மாதிரி ஆய்வாகக் கொள்ளலாம்.

குறிப்பு

நாட்டுப்புறவியலில் ஆய்வு செய்யும் ஒரு ஆய்வாளன் களப்பணி மேற்கொள்ளப் புகுமுன் வினாநிரலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அவனுடைய ஆய்வுக்குத் தேவையான தரவுகளைத் திரட்டும் வகையில் மாதிரி வினாநிரல் உருவாக்கிக் கொள்ள வேண்டும். நாட்டுப்புறவியல் தெய்வம் பற்றிய மாதிரி வினாநிரல் பின்வருமாறு அமைக்கலாம்.

- உங்கள் ஊரில் எத்தனை சதவீதத்தினர் மாரியம்மன், காளி, அய்யனார் போன்ற நாட்டுப்புறத் தெய்வங்களை வணங்குகின்றனர்?
- மாரியம்மன் பொது இடத்தில் ஒரு குடும்பத்தினராலோ அல்லது ஒரு குறிப்பிட்ட இனத்தினராலோ வழிபடப்படுகிறதா?
- இந்துக்களிலுள்ள உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதியினரில் எப்பிரிவினர் அதிகமாக மாரியம்மனை வழிபடுகின்றனர்?
- வழிபாடு பிராமண பூசாரியார் நடத்தப்படுகிறதா? அல்லது பிராமணரல்லாத பூசாரியால் நடத்தப்படுகிறதா?
- உருவம் வைத்து வழிபடுகின்றனரா?
- என்னென்ன பொருட்களை வைத்து வழிபாடு நடத்துகின்றனர்?
- மரத்தினடியில் உள்ளதா? அல்லது கோயிலில் உள்ளதா?
- மாரியம்மன் முன்னே ஆடு, கோழி பலியிடப்படுவதுண்டா?
- எப்பொழுது வழிபடுவர்?
- மாரியம்மனை வழிபடுவதற்குரிய காரணங்கள் எவை?
- மாரியம்மன் வழிபாட்டின்போது அக்கினிச்சட்டி எடுப்பதுண்டா?
- நெருப்பின் மீது நடப்பதுண்டா?
- மாரியம்மன் வேறு ஏதேனும் பெயரில் வழிபடப்படுகின்றதா?
- உங்கள் ஊரில் இதுவரை வேறு ஏதேனும் சிலை தோண்டி எடுக்கப்பட்டுள்ளதா?
- மாரியம்மன் விழாவின்போது முளைப்பாரி எடுப்பதுண்டா?

போன்ற வினாக்களை நிரல்பட மாதிரியாகக் கொள்ளலாம்.

நாட்டுப்புற விளையாட்டு பற்றிய மாதிரி வினாநிரல் பின்வருமாறு அமைக்கலாம்.

- விளையாட்டினை எப்பெயரால் அழைக்கின்றனர்?
- விளையாடும் நேரம் காலம் என்ன?
- விளையாட்டின் வடிவம் யாது?

- விளையாட்டின் தன்மை யாது?
- விளையாடுவோர் எத்தனை குழுவாகப் பிரிவர்? சமமான எண்ணிக்கையா?
- விளையாட்டின்போது விதிகள் யாவை?
- வெற்றி, தோல்வி எவ்வாறு தீர்மானிக்கப்படும்?
- பையன்கள் விளையாடும் விளையாட்டா? அல்லது சிறுமியர் விளையாடும் விளையாட்டா?
- பரிசுகள், தண்டனை உண்டா?
- விளையாட்டு பற்றிய நம்பிக்கை உண்டா?
- விலக்குகள் உண்டா?

குறிப்பு

போன்ற வினாக்களை நிரல்பட மாதிரியாகக் கொள்ளலாம்.

## 9.4. கள ஆய்வுக்குத் தேவையான பொருட்கள்

ஓர் ஆய்வாளன் களப்பணி மேற்கொள்ளும்போது களப்பணிக்கு முன் பின்பற்ற வேண்டியன, களப்பணியின்போது பின்பற்ற வேண்டியன, களப்பணிக்குப் பின் பின்பற்ற வேண்டியன என மூன்று நிலைகளில் அமையும்.

### 9.4.1. களப்பணிக்கு முன்

களப்பணிக்கு முன் களப்பணியாளர் எந்த ஊரில் களப்பணி மேற்கொள்ளப் போகிறோம், யாரையெல்லாம் சந்திக்கப்போகிறோம், தகவல் சேகரிக்கும் இடம், எந்தக் காலத்தில் தகவல் சேகரிக்கப்போகிறோம், அதற்கான வினாநிரலும் பட்டியலும் போன்றவை களப்பணிக்கு முன் ஆய்வாளன் கவனத்தில் கொள்ள வேண்டியவை யாகும்.

#### 9.4.1.1. களப்பணி ஊர்களைத் தேர்ந்தெடுத்தல்

எந்தக் களப்பணியும் தொடங்குவற்கு முன்பு திட்டக் களப்பணி செல்லக் கூடிய இடங்களை முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும். உதாரணமாக, ஒரு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களை ஆய்வு செய்வோர், அந்த மாவட்டத்திலுள்ள வட்டங்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு

வட்டத்திற்கும் ஐந்து ஊர்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஐந்து ஊர்களுக்கும் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். புதிய வழக்காறுகள், பாடல்கள் கிடைக்க வாய்ப்பாக இருக்கும். முடிந்த மட்டும் நகர நாகரிகத்தினின்றும் விலகி ஆற்றங்கரை, மலையடிவாரம், கடலோரப்பகுதி போன்ற இயற்கை அமைப்பை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

### 9.4.1.2. தகவலாளியைத் தேர்ந்தெடுத்தல்

களப்பணி இடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது எவ்வளவு கவனம் செலுத்துகிறோமோ அந்த அளவுக்குத் தகவலாளியைத் தேர்ந்தெடுக்கும் போதும் கவனம் செலுத்த வேண்டும். சமூகத்தில் ஒருசிலர்தான் பாடல், கதை, பழமொழி முதலியவற்றைத் தெரிந்தவராக இருப்பர். மேலும் தகவலாளியின் பெயர், வயது, கல்வி, பால், இடம், சாதி, சூழல் போன்ற அனைத்து விவரங்களையும் தொகுக்க வேண்டும். தாலாட்டு, ஒப்பாரி தாய்க்குலத்தின் படைப்பாகும். ஒப்பாரியும் தாழ்ந்த சாதியினரிடையேதாம் அதிகம் காணமுடியும். தகவலாளியிடமே பாடலுக்கான பொருள் விளக்கம் கேட்பது பயனுடையதாக இருக்கும். நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரிக்கும் போது சூழல் பற்றியும் ஆராய வேண்டும். சமூகச் சூழல் வழக்காறுகளின் உள்ளடக்கத்தைப் பாதிப்பதும் உண்டு. வழக்காறுகளின் நடைத்திறனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 9.4.1.3. தகவல் சேரிக்கும் இடம்

பெரும்பாலோர் தொழில் செய்யும் இடத்தில் சேகரிப்பது இயற்கையாக இருக்கும் என்பர். வினாநிரல், வினாப்பட்டியல், உற்றுநோக்கல் முறை, பேட்டி முறை மூலம் தகவலாளியிடமிருந்து செய்திகளைச் சேகரிக்க வேண்டும். சேகரிக்கும்போது ஏற்படும் பொதுப் பிரச்சினைகளைக் காண்போம்.

ஆய்வுக்குச் செல்லும் இடங்களில் ஒருவரை நண்பராக்கிக் கொண்டு, அவர் மூலம் தகவலாளியைச் சந்திக்க வேண்டும். தகவலாளிகளை நண்பர்களாகக் கருதிப் பழகினால் நிறையச் செய்திகள் சேகரிக்க வாய்ப்புண்டு. தகவலாளியிடமிருந்து உடனே செய்தி சேகரிப்பதோ அல்லது பாடல் பாட வைப்பதோ அவ்வளவு எளிமையான

குறிப்பு

காரியமல்ல; அவற்றிற்குப் பல உத்திமுறைகளைக் கையாள வேண்டும். எந்தச் சூழலில் நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரிக்க வேண்டும் என்பதையும் ஆராய்ந்து அறியவேண்டும். ஆய்வாளன் எந்தச் சூழலில் எந்த முறையில் தொகுக்க வேண்டும் என்பதை முடிவு செய்தாக வேண்டும். சூழல் வகைகளைப் பற்றி ஆராய்வது நாட்டுப்புற இயலில் இன்றியமையாத ஒன்றாகும்.

சூழல்களை, இயற்கைச் சூழல், செயற்கைக் சூழல், தோற்றுவிக்கப்பட்ட இயற்கைச் சூழல் என்று மூன்றாகப் பிரிக்கலாம். இயற்கைக் சூழலை நெகிழ்வற்ற சூழல், அரை நெகிழ்வற்ற சூழல், நெகிழ்வுச் சூழல் என மேலும் இவற்றை மூன்றாகப் பகுக்கலாம்.

இயற்கைக் சூழலில்தான் செய்திகளைச் சேகரிக்க வேண்டுமெனக் கள ஆய்வு நூல்கள் கூறுகின்றன. இது ஓரளவிற்குத்தான் உண்மை. மீனவர் பாடும் அம்பா பாடலைக் கடலில் சென்றுதான் பதிவு செய்யவேண்டும். தொழில் பாடல்களைத் தொழில் செய்யும் இடத்திற்குச் சென்று பதிவு செய்யவேண்டும். அப்போதுதான் அது இயற்கையாக அமையும். கதைப்பாடல்கள் போன்றவற்றை இயற்கைச் சூழலில் தொகுத்துக் கொண்டு, விளக்கங்களைச் செயற்கைச் சூழலில் தொகுக்கலாம். நாட்டுப்புற வழக்காறுகள் அனைத்தும் இயற்கைச் சூழலில் தொகுக்க முடியாது.

தமிழ் நாட்டுப்புறவியல் சேகரிப்புகள் அனைத்தும் பெரும்பாலும் செயற்கைச் சூழலில் தொகுக்கப்பட்டவையாகும். பலர் பங்கு பெறும் சூழலைச் செயற்கையாக உருவாக்க முடியாது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, ஒப்பாரிப் பாடல்களைச் சாவு வீட்டிற்குச் சென்று சேகரிக்க முடியுமா? ஒப்பாரிப் பாடல்களைச் செயற்கைச் சூழலில் மட்டுமே சேகரிக்க முடியும். செயற்கைச் சூழலில் தொகுப்பினை இயன்றவரை இயல்பாகவும் இயற்கையாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். சமுதாய உணர்வு, பயன்பாடு பற்றிய ஆய்வுக்குச் செயற்கை சூழல் பயன்படாது.

தாலாட்டுப் பாடவேண்டுமானால், தொட்டில் கட்டி அதில் குழந்தையை இட்டு ஆட்டினால்தான் சிலருக்குப் பாட வரும். தோற்றுவிக்கப்பட்ட இயற்கைச் சூழலில்தான் சிலருக்குப் பாடவரும். கும்மிப்பாட்டு போன்வற்றையும் இச்சூழலில்தான் சேகரிக்க முடியும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் முத்துப்பட்டன் கதைகளை வில்லுப்பாட்டு மூலம்தான் பதிவு செய்ய முடியும். முன்னரே பதிவு செய்யப்பெற்ற பாடங்களை ஒலி பரப்பி, புதிய தகவலாளரை ஊக்குவிக்கலாம். தனது குரலை மீண்டும் ஒலிப்பதிவில் பாடிக் கேட்கப் பலர் முன்வருவர். இந்த உத்தி மூலம் பாட மறுக்கும் சிலரும் தொடர்ந்து பலமணி நேரம் பாடுவர். நாட்டுப்புற வழக்காற்றுச் சேகரிப்புக்கு இயற்கைச் சூழலே சிறப்பு. அது இல்லாதபோது தோற்றுவிக்கப்பட்ட இயற்கைச் சூழலைப் பயன்படுத்தலாம். கள ஆய்வாளர் பார்வையாளராக இருந்து செய்திகளைச் சேகரிக்க வேண்டும்.

நாட்டுப்புறப்பாடல் போன்றவற்றை அவ்வாறே சேகரிக்க வேண்டும். அவர்கள் உச்சரிப்பது போன்றே எழுதப்பட வேண்டும். நாட்டுப்புறப் பாடல்களின் சொற்களை மாற்றிப் பொருள் கொள்ள முயலக்கூடாது. அவ்வாறு பொருள் கொண்டால் அது நமது உணர்வுகளைத்தான் பிரிதிபலிக்கும். நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிக்கும்போது சேகரித்த பாடலை அப்படியே கொடுத்துவிட்டு, அடிக்குறிப்பில் களப்பணி ஆய்வாளர் தமது விளக்கங்களையோ சொல் மாற்றங்களையோ கொடுக்கலாம். பாடல்களில் காணப்படும் சில சொற்கள் பல வரலாற்று உண்மைகளை நமக்கு அறிவிக்கும்.

## 9.4.1.4. களப்பணி அறிவு

களப்பணி ஆய்வுக்குச் செல்வதற்கு முன் இத்துறையில் வந்துள்ள நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் முழுமையாகவும் முறையாகவும் கற்றிருக்க வேண்டும். களப்பணி ஆய்வாளன் தன் ஆய்வைத் தொடங்கும் முன் கள ஆய்வு நடத்தப்படும் மக்களைப் பற்றியும், அவர்கள் வாழும் பகுதியைப் பற்றியும், இதுவரை வெளிவந்த நூல்கள், மக்கள் கணிப்புத் தொகுதி, மாவட்ட விவரத் தொகுப்புகள் முதலியவற்றைப் படிக்க வேண்டும். முன்னரே யாரேனும் அப்பகுதியில் பணியாற்றி இருந்தால், அவரைச் சந்தித்து விவரங்களைச் சேகரிக்க வேண்டும். அவர் தரும் விவரங்கள் களப்பணி ஆய்வுக்குப் பெரும் பயன் தரும். அப்பகுதியைப் பற்றியோ அவ்வட்டார மக்களைப் பற்றியோ நாளிதழ், மாத இதழ்களில் செய்தி வந்திருப்பின், அவற்றைப் படித்துக் குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். கள ஆய்வு செல்வதற்கு முன் கள ஆய்வு பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

நாட்டுப்புறவியலின் பல்வேறு கூறுகளைச் சேகரிப்பதற்குக் கள ஆய்வு நுட்பங்களைத் தெரிந்திருக்க வேண்டும்.

குறிப்பு

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. மாதிரி ஆய்வின் தன்மைகள் யாவை?
2. மாதிரி ஆய்வில் வினாநிரலின் பங்களிப்பு யாது?
3. கள ஆய்வு நிலைகள் யாவை?
4. களப்பணிக்கு முன் பின்பற்ற வேண்டியவை யாவை?

## 9.4.1.5. களப்பணிக்குப் பயன்படும் கருவிகள்

களப்பணி ஆய்வாளர் களப்பணிக்குச் செல்லும்போது பேட்டரியால் இயங்கும் ஒலிப்பதிவு நாடாக்கருவி ஒன்றும், மின்விசையால் இயங்கும் ஒலிப்பதிவு நாடாக்கருவி ஒன்றும் எடுத்துச் செல்லுதல் வேண்டும். கேமரா, செல்போன் போன்றவற்றையும் எடுத்துச் சென்றால் ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு ஆகிய இரண்டையும் பதிவு செய்யலாம். பேனா, பென்சில், குறிப்பேடு, பேப்பர், பிளேடு, மை பாட்டில் போன்றவற்றையும் கவனமாக எடுத்துச் செல்ல வேண்டும். களப்பணியில் ஒன்று இல்லாவிட்டாலும் பணி தடைப்படும். ஒலிப்பதிவு நாடாக் கருவியைப் பழுது பார்க்கத் தெரிந்திருப்பதும் நல்லது.

## 9.4.1.6. களப்பணி செல்லும் முன் திட்டம்

ஓர் ஆய்வாளர் களப்பணிக்குச் செல்லும் முன் சில முன்னேற்பாடுகளைச் செய்துக்கொள்வது அவசியம். அவை பின்வருமாறு:

- களப்பணி செல்லும் இடம் குறித்த தெளிவு.
- தகவலாளியைத் தேர்வு செய்தல்.
- களப்பணியில் உதவியாளரை நியமித்தல்.
- களப்பணிக்குத் தேவையான ஊர்தி.
- களப்பணியின் போது ஆய்வாளருக்குத் தேவைப்படும் உணவு, தண்ணீர் போன்றவை.
- களப்பணி மேற்கொள்ளும்போது தேவைப்படும் கேமரா, செல்போன், ஒலிநாடா, ஒலிநாடாக்கருவி, பேனா, நோட்டு, பேப்பர், பென்சில் போன்ற உபகரணங்கள்.

குறிப்பு

## 9.4.1.7. வினாநிரலும் வினாப்பட்டியலும்

களஆய்வின் வெற்றி வினாநிரலையும் வினாப்பட்டியலையும் நல்ல முறையில் தயாரிப்பதில்தான் உள்ளது. கள ஆய்விற்கு இவ்விரண்டும் இன்றியமையாதனவாகும். இவை நல்லமுறையில் அமைந்துவிட்டால், களப்பணி ஆய்வாளன் எதிர்பார்த்த பலனை அடையலாம். வினாநிரல், வினாப்பட்டியல் என்பது மொத்தத்தில் சேகரிக்க வேண்டிய செய்திகளின் கருத்தை அறிய உதவும் சாதனமாகும். சமூக அறிவியல் துறைகளில் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் முறைகளாகும்.

## 9.4.1.7.1. வினாநிரல்

வினாநிரல் என்பது ஆய்வாளர்தாம் எடுத்துக் கொண்ட ஆய்வுத் தலைப்பிற்கேற்ப வினாக்களைத் தயாரித்து அதனை அச்சிட்டுத் தபால் மூலம் தகவலாளிக்கு அனுப்பி வைத்தலாகும். தகவலாளி அதனைப் படித்து வினாநிரலை நிறைவு செய்து களப்பணி ஆய்வாளருக்கு அனுப்புவார். நாட்டுப்புறவியலில் வினாநிரலின் பங்கு மிகச் சிறியதாகும். ஏனென்றால் பெரும்பாலான நாட்டுப்புற வழக்காறுகள் படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்களிடமிருந்து சேகரிப்பதாகும். வினாநிரல் மூலம் நம்பகமான தகவல்களைப் பெறமுடியாது. மொழியியல் ஆய்வு சர்வே போன்ற நாட்டுப்புறவியலில் ஆய்வு சர்வே நடத்தினால் இம்முறை பெரிதும் பயன்படும்.

வினாநிரல் நான்கு பகுதிகளைக் கொண்டதாக அமையும். நோக்கம், நெறிமுறைக் கட்டளைகள், தகவலாளி பற்றிய விவரம், வினாநிரலின் உடல்பகுதி என அவை அமையும். களப்பணி ஆய்வாளர் எடுத்துக்கொண்ட ஆய்வின் நோக்கத்தை விவரித்திருப்பார். பின்னர் வினா நிரலை நிறைவு செய்வதைப் பற்றிய விளக்கம் இருக்கும். அதன்பின்னர்த் தகவலாளி பற்றிய குறிப்பும் வினாநிரலும் அமைந்திருக்கும்.

வினாநிரலை கட்டமைப்புடைய வினாநிரல், கட்டமைப்பில்லா வினாநிரல் என இரண்டாகப் பிரிக்கலாம். இதில் கட்டமைப்புடைய வினாநிரலை மேலும் இரண்டு நிலைகளாகப் பகுக்கலாம். அதாவது, வரையறுத்த வடிவமுடைய வினாநிரல், பரந்த வடிவமுடைய வினாநிரல்

என அவை அமையும். கட்டமைப்புடைய வினாநிரல் என்பது ஆய்வுத் தலைப்பிற்கேற்ப வினாக்களை நன்கு சிந்தித்துத் தயாரித்ததாகும். வரையறுத்த வகைகளில் செய்திகளைச் சேகரிக்க வரையறுத்த வடிவமுடைய வினாநிரலைப் பயன்படுத்துவர். தகவலாளி தனது விருப்பம்போல் விடை தருவதற்கு ஏற்ற முறையில் அமைந்த வினாநிரலைப் பேட்டியின் வழிகாட்டு என்று கூறுவர். ஓரளவு வளைந்து கொடுக்கும் தன்மை உடையது.

### 9.4.1.7.2. வினாப்பட்டியல்

வினாப்பட்டியலை மூன்று நிலைகளாகப் பகுக்கலாம். உற்று நோக்கி நிரப்பும் வினாப்பட்டியல், ஆவண வினாப்பட்டியல், மதிப்பீடு வினாப்பட்டியல் என அவை அமையும். உற்றுநோக்கி நிரப்பும் வினாப்பட்டியல் மூலம் மக்களது பழக்க வழக்கங்கள், சடங்குகள் முதலியவற்றைப் பதிவு செய்யலாம். ஆவணங்கள், வரலாறு முதலியவற்றில் இருந்து தரவுகள் திரட்ட ஆவண வினாப்பட்டியலைப் பயன்படுத்தலாம். மதிப்பீட்டு வினாப்பட்டியல் மூலம் மக்கட்தொகைக் கணிப்புப் போன்வறற்றைச் சேகரிக்கலாம். வினாப்பட்டியல் மூலம் ஆய்வாளனுக்கும் தகவலாளிக்கும் நேரடித் தொடர்பு ஏற்படுவதுடன் மேலும் மேலும் துருவித் துருவிக் கேட்டுச் செய்திகளைச் சேகரித்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது. நாட்டுப்புறவியல் துறையில் வினாப்பட்டியலைத்தான் பெரும்பாலும் பயன்படுத்துவர். தகவலாளியிடமிருந்து பெரும்பாலும் செய்திகளைச் சேகரிக்க இம்முறைதான் சிறந்ததாக அமைகிறது.

### 9.4.2. களப்பணியின் போது

களப்பணியின் போது ஆய்வாளன் மேற்கொள்ள வேண்டியன பற்றி இங்குக் காணலாம். சேகரிப்புப் பணியைக் களப்பணி ஆய்வாளரின சோதனைக் கூடம் என்பர். களப்பணி ஆய்வாளர் களப்பணி ஆய்வு நடக்கும் மக்களிடையே தாமும் ஒருவராக வாழ்ந்து அவர்களது அன்பைப் பெறவேண்டும். களப்பணி ஆய்வாளர் பண்பாலும் நடத்தையாலும் நல்ல பெயர் எடுக்க வேண்டும். அம்மக்களது ஆதரவே ஆய்வு வெற்றி பெறுவதற்கு அடிப்படையாகும். நாட்டுப்புற மக்களைப்

குறிப்பு

போன்றே ஆடை அணிதல் நல்லது. களப்பணி ஆய்வாளர் மக்களது நம்பிக்கையைப் பெறாவிட்டால், களப்பணி சிறப்பாக அமையாது. அவர்களது சடங்குகளிலும் கலந்து, அவர்களுள் ஒருவராக வாழவேண்டும். பொறுமையும், நாட்டுப்புற இயலுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் இயல்பும் களப்பணி ஆய்வாளருக்கு இன்றியமையாதனவாகும். களப்பணி ஆய்வாளன் திறந்த மனத்துடன் எத்தகைய துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு பொறுமையுடன் பணியாற்ற வேண்டும் புதியனவற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் இருக்க வேண்டும்.

### 9.4.2.1. காலமும் பொழுதும்

பெரும்பாலும் கோடைக்காலம்தான் களப்பணிக்கு ஏற்ற காலமாகும். பகலில் சேகரிப்பதும் இரவில் சேகரிப்பதும் கள ஆய்வாளனையும் தகவலாளியையும் பொறுத்த செயலாகும். சில நாட்டுப்புறக் கலைகள் இரவில் நிகழ்த்துவதால் இரவில்தான் செய்திகளைச் சேகரிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஐயம் ஏற்படும் செய்திகளில் பலரிடம் விளக்கம் கேட்டுப் பெறலாம். தொடர்ந்து பணியாற்றினால் இருவருக்குமே மனச்சோர்வு ஏற்படும். சிறிது இடைவெளிக்குப்பின் பணி தொடர்வது நல்லது. சேகரிப்பில் தகவலாளியின் கையொப்பம் பெறுதல் நல்லது.

### 9.4.2.2. உற்றுநோக்கல்

மனத்தில் நோக்கத்தை வைத்துக் கொண்டு ஒன்றை நுணுக்கமாக நோக்குவது உற்றுநோக்கல் எனப்படும். வினாநிரல், வினாப்பட்டியல் போன்றே உற்றுநோக்கல் மூலமும் செய்திகளை அறிந்து கொள்ளலாம். உற்றுநோக்கலை இருவகையாகப் பகுக்கலாம். அதாவது, பங்குபெறும் உற்றுநோக்கல், பங்குபெறா உற்றுநோக்கல் என அவை அமையும்.

நாட்டுப்புறக் கலைகள் ஒரு சமுதாயத்தின் குலச்சடங்குகள் முதலியவற்றை ஆய்வு செய்வோர் உற்றுநோக்கல் முறைகளைப் பயன்படுத்தித் தரவுகள் திரட்டலாம். மானிடவியல் துறையில் இம்முறைதான் பெரிதும் பயன்படுகிறது. நாட்டுப்புறவியலைப் பொறுத்தமட்டில் நாட்டுப்புறக் கலைகளை ஆய்வு செய்வோர் இம்முறைகளைப் பயன்படுத்தித் தரவுகள் சேகரிக்கலாம். மேலும்

இக்கலையின் நுணுக்கங்களை அறிய, அக்கலையிலே பங்கு பெறலாம். அக்கலையில் பங்கு பெற்றால்தான் கலையின் நுணுக்கங்களையும் அக்கலையில் ஈடுபட்ட கலைஞர்களையும் நன்கு அறிந்து கொள்ளவும் இக்கலைகளில் ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் சிலர் அக்கலைகளை நடத்துமளவிற்குத் தேர்ந்த கலைஞராகிவிடுவதையும் காண்கிறோம். கரகாட்டம், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்றவற்றில் ஆய்வு செய்வோர் சிலர் இந்த முறைகளைப் பின்பற்றுகிறார்கள். உற்றுநோக்கல் கருதுகோளை உருவாக்கப் பயன்படுகிறது. கருதுகோளை உருவாக்க மட்டுமின்றிக் கருதுகோளைச் சோதித்துப் பார்க்கவும் இம்முறை பயன்படுகிறது.

### 9.4.2.3. நேர்காணல்

களப்பணி ஆய்வாளர் தகவலாளியை நேரே கண்டு கலந்துரையாடுவது நேர்காணல் ஆகும். வினாநிரல், வினாப்பட்டியல், உற்றுநோக்கல் போன்று நேர்காணல் என்னும் பேட்டி முறையும் செய்திகளைச் சேகரிக்கப் பயன்படும் முறைகளில் ஒன்றாகும். இந்த முறையை கட்டமைப்புப் பேட்டி, கட்டமைப்பில்லா பேட்டி, ஒருமுகப்படுத்தும் பேட்டி, பன்முறை நிகழும் பேட்டி, ஆழ்ந்த பேட்டி என ஐந்து வகையாகப் பாகுபடுத்தலாம்.

இதழியல் துறையில் பயன்படுத்தப்பட்டு வந்த இம்முறையை நாட்டுப்புறவியல் துறையிலும் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரிக்கவும் வழக்காறு பற்றி நாட்டுப்புற மக்களின் எண்ணங்களை அறியவும் இம்முறை சிறந்தது எனலாம். நாட்டுப்புற நம்பிக்கை பற்றிச் சேகரிப்போர், நாட்டுப்புற நம்பிக்கை பற்றித் தகவலாளியின் கருத்து, உணர்வு முதலியவற்றை அறிந்துகொள்ள இம்முறை பயன்படுகிறது. பரவல் பற்றியும் நேருக்குநேர் கேள்வி கேட்டு அறிந்து கொள்ள முடிகிறது. கலைகளை ஆராயும் ஆய்வாளர் கட்டமைப்பில்லாப் பேட்டி முறையைப் பயன்படுத்தி, கலைஞர்களிடமிருந்து தகவல்களைச் சேகரிப்பர். தகவலாளியைப் பல விஷயங்களைப் பற்றிப் பேசி, தனது ஆய்வுத் தலைப்புக்கு ஈர்த்துச் சென்று, அதன்மூலம் ஆர்வத்தைத் தூண்டி, ஐயங்களை எழுப்பி, வினாவுக்கு விடை காண முற்படுவர். தகவலாளியிடம் அறிவதற்கு இம்முறை பெரிதும் பயன்படுகின்றது. கட்டமைப்புப் பேட்டி முறை மூலம்

குறிப்பு

ஆய்வுக்கு வேண்டிய வினாக்களை முன்னரே சிந்தித்துத் தெளிவாக வரையறுத்துக் கொண்டு தகவலாளியிடமிருந்து தரவுகளைச் சேகரிக்கலாம். இவ்விரண்டு முறைகளும் இத்துறையில் நன்கு பயன்படுத்தப்படுகின்றன. ஒரே பொருள் குறித்துப் பலரிடமும் வினவலாம். தகவலாளர்களை நேரில் சந்தித்து உரையாடுவதால் ஐயங்களையும் நுட்பமான தகவல்களையும் பெறலாம். ஆய்வாளருக்கு ஏற்படும் சந்தேகங்களை மீண்டும் மீண்டும் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம். மெய்ம்மைகளின் உண்மைத் தன்மையை ஒப்பிட்டுக் காணலாம். படியாத கலைஞர்களிடம் இப்பேட்டி முறையைப் பயன்படுத்தி நிறையத் தரவுகள் சேகரிக்கலாம்.

இம்முறைகளைப் பயன்படுத்தித் தகவலாளியிடமிருந்து செய்திகளைச் சேகரிக்கலாம். நாட்டுப்புறவியலின் பல்வேறு கூறுகளை ஆராய்வோர் அவற்றிற்கு ஏற்றவாறு தனித்தனி வினா ஏடு தயாரிக்க வேண்டும். காட்டாக, மீனவர் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் மீனவர் சமூகத்தை ஆராயும் ஆய்வுக்குப் படகு, தோணி, கட்டுமரம், வலை, மீன்களின் பெயர், மீன் பிடிக்கச் செல்லும் நேரம், பருவ காலம், காற்று, இரவில் நேரத்தை அறிய உதவும் விண்மீன்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றைப் பற்றி அறியும் நோக்கத்துடன் வினாநிரல் அமையவேண்டும். அதே வினாநிரலைப் பழமொழி, விடுகதைக்குப் பயன்படுத்த முடியாது. நாட்டுப்புறவியலின் பல்வேறு கூறுகளுக்கேற்ப வினாநிரல் தயாரிக்க வேண்டும். வினாநிரல் தயாரிப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**

5. களப்பணிக்குத் தேவைப்படும் கருவிகள் யாவை?
6. களப்பணியில் வினாநிரலின் பங்களிப்பு யாது?
7. வினாப்பட்டியலின் வகைகள் யாவை?
8. களப்பணியின்போது ஆய்வாளர் பின்பற்றப்படுவன யாவை?

## 9.4.3. களப்பணிக்குப் பின்

களப்பணியில் சேரிக்கப்பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பெறுவன பற்றி இனிக் காணலாம்.

குறிப்பு

## 9.4.3.1. வகைப்படுத்துல்

களப்பணி ஆய்வில் சேகரித்தல்தான் முக்கிய பணியாகும். ஆனால், எந்தவொரு ஆய்விலும் சேகரித்தலும் வகைப்படுத்தலும் ஆய்வு செய்தலும் இன்றியமையாதவையாகும். கள ஆய்விற்கு வகைப்படுத்தலும் ஆய்வு செய்தலும் நேரடித் தொடர்பு இல்லையெனினும், ஆய்வுக்கு இன்றியமையாதவை என்ற நிலையில் அவற்றைப் பற்றிச் சுருக்கமாகக் காணலாம். ஒரே மாதிரியாக இருப்பனவற்றை இனங்கண்டு ஒன்றாக்குவதே வகைப்படுத்துதல் எனப்படும். கதைக்கும் கதைப்பாடலுக்கும் உலகப் புகழ்பெற்ற இருவகை வகைப்படுத்தும் முறை உண்டு. Tale-type index, Motif index ஆகியவை அவை. இம்முறைகள் ஆண்டி ஆர்னேயும் ஸ்டித்தாம்சனும் உருவாக்கினார்கள்.

தமிழக நாட்டுப்புறப் பாடல்களைத் தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், காதல் பாடல்கள், தொழில் பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், பக்திப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், பன்மலர்ப் பாடல்கள் என்று வகைப்படுத்தலாம். நாட்டுப்புறக் கதைகளை மனிதன் கதைகள், மிருகக் கதைகள், மந்திரக் கதைகள், தெய்வக் கதைகள் என்று வகைப்படுத்தலாம். நாட்டுப்புறக் கதைப்பாடல்களை சமூகக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், புராணக் கதைப்பாடல்கள், புனைகதைப் பாடல்கள் என்று வகைப்படுத்தலாம். தமிழ்ப் பழமொழிகளை அளவு அடிப்படையிலான பழமொழிகள், பொருள் அடிப்படையிலான பழமொழிகள், அகரவரிசை அடிப்படையிலான பழமொழிகள், அமைப்பியல் அடிப்படையிலான பழமொழிகள், பயன்பாட்டு அடிப்படையிலான பழமொழிகள் என்று வகைப்படுத்தலாம்.

## 9.4.3.2. தரவுகளை ஆய்வு செய்தல்

கள ஆய்வில் சேகரித்ததை, பின்னர் வகைப்படுத்தி ஆய்வு செய்ய வேண்டும். வகைப்படுத்தலும் ஆய்வு செய்தலும் கள ஆய்வுக்குப் பின்னர் செய்ய வேண்டியவை. எனினும் இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகும். சேகரிப்பும் வகைப்படுத்தலும்

நல்ல முறையில் அமைந்தால், ஆய்வும் சிறப்பாக அமையும். தமிழகத்தில் மேற்கொண்ட பெரும்பாலான ஆய்வுகள் விளக்க ஆய்வாகவே உள்ளன. பா.ரா. சுப்பிரமணியம் அமைப்பியல் முறையைத் தாலாட்டு, ஒப்பாரிக்குப் பயன்படுத்தி ஆராய்ந்தார். நாட்டுப்புற மரபுகளை ஆராய வரலாற்றை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்பர். இத்தரவுகளைக் கொண்டு ஆய்வாளர் வரலாற்று-புவியியல் கோட்பாடு, வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு, இலட்சியக் கோட்பாடு, செயல்திறன் கோட்பாடு, உளவியல் ஆய்வுக் கோட்பாடு, அமைப்பியல் கோட்பாடு, வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு, கலப்புப் பண்பாட்டுக் கோட்பாடு, நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு, மக்கள் பண்பாட்டுக் கோட்பாடு, சூழ்நிலைக் கோட்பாடு ஆகிய கோட்பாடுகளை முன்னிருத்தி ஆய்வாளர் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும்.

## 9.5. தொகுத்துக் காண்போம்

- களப்பணியின் மாதிரி ஆய்வுகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- களப்பணிக்குத் தேவையானவை எவையெவை என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 9.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 9.3. | 2. | 9.3. |
| 3. | 9.4. | 4. | 9.4.1. |
| 5. | 9.4.1.5. | 6. | 9.4.1.7.1. |
| 7. | 9.4.1.7.2. | 8. | 9.4.2. |

## 9.7. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. மாதிரி ஆய்வை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. களப்பணிக்கு முன் பின்பற்ற வேண்யடியன பற்றி விளக்குக.
3. களப்பணியின்போது பின்பற்ற வேண்டியன பற்றி விளக்குக.
4. களப்பணிக்குப்பின் பின்பற்ற வேண்டியன பற்றி விளக்குக.

# கூறு 10. எழுத்து - பட ஆதாரங்கள் - திரைப்படம் - ஒலிப்பதிவு - ஒளிப்பதிவு

குறிப்பு

## 10.1. முன்னுரை

ஆய்வாளன் தான் வகுத்துக்கொண்ட கருதுகோளை நிரூபிப்பதற்கும், கருதுகோளின் மெய்ம்மைகளைக் உய்த்துணர்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் பல்வேறு வகையான ஆதாரங்களை நாடி, அவற்றில் கூறப்பெற்றிருக்கும் உணர்த்தப்பெற்றிருக்கும் மெய்ம்மைகளை உணர்ந்து தான் கொண்ட கருதுகோளை நிலைநிறுத்துவான். இவற்றில் எழுத்து நிலையில் அமைந்த ஆதாரங்கள், படங்களின் ஆதாரங்கள், திரைப்படங்களின் ஆதாரங்கள், ஒளிப்பதிவுகளின் ஆதாரங்கள், ஒலிப்பதிவுகளின் ஆதாரங்கள் எனப் பல வகையில் அமையும். அவற்றைப் பற்றி இப்பகுதியில் காணலாம்.

## 10.2. குறிக்கோள்கள்

- ஆய்வில் எழுத்தின் இன்றியமையாமை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வில் படங்களின் இன்றியமையாமை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வில் திரைப்படம் பெறும் பங்கு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- திரைப்படத்தின் வரலாறு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஒலிப்பதிவு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வில் ஒலிப்பதிவின் பங்கு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஒளிப்பதிவு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஒளிப்பதிவின் வரலாறு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வில் ஒளிப்பதிவின் பங்கு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 10.3. எழுத்து

குறிப்பு

தமிழ் மொழியில் உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1 ஆக 247ம் தமிழ் எழுத்து ஆகும். இவ்வெழுத்துக்களால் எழுதப்பெற்ற ஆதாரங்களே எழுத்து ஆதாரங்கள் ஆகும். ஆய்வாளனின் கருதுகோளுக்கு அமையும் ஆதாரங்களான முதன்மை ஆதாரங்கள் மற்றும் துணைமை ஆதாரங்கள் எல்லாம் எழுத்து நிலையில் அமைந்திருந்தால் அவற்றை எழுத்து ஆதாரங்கள் எனலாம். பொதுவாக எழுத்து நிலையில் அமைந்த ஆதாரங்களைப் பின்வருமாறு பகுக்கலாம்.

- பல்வேறு பொருண்மைகளில் அமைந்த ஓலைச்சுவடிகள் (சங்க இலக்கியம் தொடங்கி சிற்றிலக்கியம் வரையிலான இலக்கிய ஓலைச்சுவடிகள், இலக்கண ஓலைச்சுவடிகள், சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள், சோதிட ஓலைச்சுவடிகள், நாட்டுப்புறவியல் தொடர்பான ஓலைச்சுவடிகள், கணக்குச் சுவடிகள், ஆவணச் சுவடிகள், பட்டயங்கள், அறிக்கைகள், பத்திர ஆவணங்கள் போன்றவை)
- உரைநடை நூல்கள் (இலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள், வரலாற்று நூல்கள், திறனாய்வு நூல்கள் போன்றவை)
- செய்யுள் நூல்கள் (இலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள், மருத்துவ நூல்கள், சோதிட நூல்கள் போன்றவை)
- பாட நூல்கள் (பள்ளி மற்றும் கல்லூரிப் பாட நூல்கள்)
- மருத்துவ நூல்கள் (செய்யுள் நடையில் அமைந்தவை, உரைநடையில் அமைந்த குறிப்புகள்)
- உரையும் செய்யுளும் கலந்த ஓலைச்சுவடி மற்றும் அச்சு நூல்கள்
- கலைக்களஞ்சியங்கள் (தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாழ்வியல் களஞ்சியங்கள் மற்றும் அறிவியல் களஞ்சியங்கள், தமிழில் தமிழ் வளர்ச்சிக்கழகம் வெளியிட்ட கலைக்களஞ்சியங்கள், Encyclopedia of Sociology, Encyclopedia of Philosophy, Encyclopedia of Religions போன்றவை)
- விவர நூல்கள் (தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணைகள், தமிழ்நூல் விவர அட்டவணைகள் போன்றவை)
- அகராதிகள் (ஒரு மொழி அகராதிகள், இருமொழி அகராதிகள், பன்மொழி அகராதிகள்)

குறிப்பு

- அரசு ஆவணங்கள்
- வழக்குமன்றத் தீர்ப்புகள்
- தனிச் செய்யுட் பகுதிகள்
- கடிதங்கள் (அறிஞர் அண்ணாவின் கடிதங்கள், கலைஞர் மு. கருணாநிதியின் கடிதங்கள் போன்றவை)
- அச்சிடப்பெறாத கையெழுத்துப் படிகள் (இராமலிங்க அடிகளாரின் மனுமுறை கண்ட வாசகம் போன்றன)
- நாட்குறிப்புகள் (ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகள் போன்றன)
- தன்விவரக் குறிப்புகள்
- தன் வரலாறுகள் (தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரின் என் சரித்திரம் போன்றவை)
- அறிஞர் தம்முடைய நூலுக்கு எழுதிய முன்னுரைகள் (சாமிநாதம், தாமோதரம் போன்றவை)
- கட்டுரைகள் (ஆய்வுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், தலக் கட்டுரைகள்)
- கதைகள் (சிறுகதை, நாவல்)
- நாடகங்கள் (எழுத்து நிலையில் அமைந்த மேடை நாடகங்கள், தெருக்கூத்துக்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நாடகங்கள் போன்றவை)
- கதைப்பாடல்கள்
- பழமொழிகள்
- எழுத்து நிலை நேர்காணல்
- எழுத்து நிலை வினாநிரல்
- இதழ்கள் (நாளிதழ், வார இதழ், இருவார இதழ், மாத இதழ், காலாண்டு இதழ், அரையாண்டு இதழ், ஆண்டிதழ்)
- மலர்கள் (பிறந்த நாள் மலர், நினைவு நாள் மலர், குடமுழுக்கு மலர், ஆண்டு மலர், விழா மலர், வைர விழா மலர், பொன்விழா மலர் போன்றன...)
- ஆய்வுக் கோவைகள் (ஒருவருடைய கட்டுரைகளின் தொகுப்பு, பலருடைய கட்டுரைகளின் தொகுப்பு)

குறிப்பு

- ஆய்வடங்கல்கள் (தொல்காப்பிய ஆய்வடங்கல், திருக்குறள் ஆய்வடங்கல், சங்க இலக்கிய ஆய்வடங்கல் போன்றவை)
- சொற்பொழிவுகள் (சங்க இலக்கியச் சொற்பொழிவுகள், சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் போன்றவை)
- அறிக்கைகள் (ஆய்வறிக்கை, விசாரணை அறிக்கை, தொழில்நுட்ப விளக்க அறிக்கை, தனிவரைவு, முதல் தகவல் அறிக்கை, மதிப்பீட்டறிக்கை, வரவு செலவு அறிக்கை, கள ஆய்வு அறிக்கை போன்றவை)
- துண்டு வெளியீடுகள்
- ஒற்றைத்தாள் விளம்பரங்கள்
- எழுத்துநிலை இணையதளக் குறிப்புக்கள்
- எழுத்துநிலை கணிப்பொறிக் குறிப்புக்கள்
- எழுத்துநிலை திரைப்படங்கள்
- வெளியிடப்பெறாத ஆய்வேடுகள் (ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடுகள், முனைவர் பட்ட ஆய்வேடுகள், முதுமுனைவர் பட்ட ஆய்வேடுகள், திட்டக் கட்டுரைகள் போன்றவை)

## 10.4. பட ஆதாரங்கள்

எழுத்து ஆதாரங்கள் மட்டும் கொண்டு ஒரு ஆய்வு நிறைவடைவதில்லை. எழுத்து ஆதாரங்களுக்கு உறுதுணை செய்யும் பிற வகையான ஆதாரங்களும் பயன்படும். எழுத்து ஆதாரங்களுக்குப் பிற வகை ஆதாரங்கள் உதவுவது போல் பிற வகையான ஆதாரங்களுக்கு எழுத்து ஆதாரங்களும் உதவுவதுண்டு. இந்நிலையில் எழுத்து ஆதாரங்களுக்கு உதவுவதாக பட ஆதாரங்கள் பயன்படுகின்றன. இம்மாதிரியான ஆய்வுகள் பெரும்பாலும் சிற்பத்துறையில் நிகழ்த்தப்படுகின்றன. ஒரு கோயிலில் உள்ள ஒரு வகையான சிற்பம் மற்றொரு கோயிலில் அதே சிற்பம் ஒரே மாதிரியாகவோ வேறுமாதிரியாகவோ இருக்கும். அதுபோல் காலத்தால் இவைகள் வேறுபட்டிருக்கும். இந்த மாதிரியான சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பட ஆதாரங்களைக் கொண்டு ஆய்வாளர் ஓரளவு சிற்பத்தின் காலத்தைக் கணிக்க இயலும். எடுத்துக்காட்டாக, கீழ்க்காணும் இரண்டு திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தி

சிற்பங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஆய்வாளர் பின்வருமாறு சுட்டுவதைக் காணலாம்.



**குறிப்பு**





திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் கோயிலில் கருவறைச் சுவரின் தென்புற தேவகோட்டத்தில் அமைந்திருக்கின்ற சிவனின் குரு வடிவம் தட்சிணாமூர்த்தியாகும். இவர்தம் குரு வடிவில் நன்மார்க்கங்களையும், நன்னெறிகளையும், நற்கல்வியையும் உணர்த்துவதாகக் கருதப்படுகின்றார். வேதம், வேதாந்தம், உபநிடதம், யோக சாஸ்திரம், இசை, இலக்கணம், தத்துவம் போன்ற கல்விசார் பாடங்களைப் போதிப்பவராகக் கருதப்படுகின்றார். நற்சிந்தனை, நன்னெறி போன்ற ஞானமார்க்கத்தைப்

புகட்டுவதினால் தட்சிணம் என்ற முன் அடைமொழியுடன் குறிப்பிடப்பட்டு அழைக்கப்படுகின்றார். மேலும் தென்புற தேவகோட்டத்தில் அமைக்கப்படுவதினால் தட்சிணாமூர்த்தி எனப்படுகின்றார். வியாக்யானம், ஞானம், இசை, யோகம் போன்றவைகளை அளிப்பதினால் வியாக்யான தட்சிணாமூர்த்தி, ஞான தட்சிணாமூர்த்தி, கான தட்சிணாமூர்த்தி அல்லது வீணாதர தட்சிணாமூர்த்தி மற்றும் யோக தட்சிணாமூர்த்தி என்கின்ற நான்கு பெயர்களால் குறிப்பிடப்படுகின்றார்.

இவர் பொதுவாக தன் வாசஸ்தலமான கயிலை மலையில் வட விருட்சத்தின் கீழ் அமர்ந்து சனாகாதி முனிவர்களுக்கு வேதங்களை உபதேசிப்பதாகக் கருதப்படுகின்றார். சனகர், சனந்தனர், சனாதரர் மற்றும் சனத்குமாரர் என்கின்ற நால்வரும் சனாகாதி முனிவர்கள் என்று தமிழ் சமய இலக்கிய வழக்கில் சொல்லப்படுகிறது. ஆனால் நாரதர், வசிஷ்டர், பிருகு, பாரத்துவாஜர், ஜனகர், அகஸ்தியர், ஜமதக்னி ஆகிய ஏழு ரிஷிகள் குருவாகிய தட்சிணாமூர்த்தியிடம் பாடம் கற்றனர் என்று வடமொழி வழக்காறுகள் சொல்கின்றன. விசுவாமித்திரர், புலஸ்தியர் மற்றும் ஆங்கிரசர் ஆகிய முனிவர்கள் இவர் அருகில் அமர்ந்திருப்பவர்களாக செய்யவேண்டும் என்று சாரஸ்வதீய சித்ர கர்ம சாஸ்திரம் குறிப்பிடுகின்றது. இவர் அருகில் தேவகணங்களும், வியந்தர தேவதைகள் என்று குறிப்பிடப்படுகின்ற கின்னரர், கின்னரி, வித்யாதரர்கள், சித்தர்கள் ஆகியோர்களையும் காட்டலாம் என்று சிற்பரத்தினம் கூறுகின்றது.

தட்சிணாமூர்த்தியின் வலப்புறத்தில் நாரதர், ஜமதக்னி மற்றும் வசிஷ்டரையும், பாரத்துவாசர், ஜனகர் மற்றும் அகஸ்தியர் ஆகியோர் இடப்புறத்திலும் அமர்ந்து பாடம் அறிந்தனர் என்று விஷ்ணு தர்மோத்ர புராணம் குறிப்பிடுகின்றது. இம்முனிவர்கள் மெல்லிய உடலமைப்பும், ஒட்டிய வயிறு கொண்டவர்களாகவும், வயதான தோற்றமும், தாடியும் மீசையும் உடையவர்களாகவும், உருத்திராட்ச மாலை அணிந்து, ஜடாமகுட கேச அலங்காரம் பூண்டவர்களாகவும் காட்டப்பட வேண்டும் என்று சிற்ப நூல்கள் குறிப்பிடுகின்றன. அகஸ்தியர் மட்டும் தொந்தி வயிறு உடையவராக சித்தரிக்கப்படுகின்றார்.

தட்சிணாமூர்த்தியானவர் கயிலை மலையில் உள்ள பாறை ஒன்றில் அமர்ந்திருப்பவராகவும், அவருக்குப் பின்புறம் ஆலமரம் என்கின்ற

வடவிருட்சம் இருக்கும் படியாகவும் சிற்பங்களில் செய்ய வேண்டும். இவர் வீராசன கோலத்தில் அமர்ந்திருப்பவராக செய்யப்படுகிறது. வலது கால் தொங்கவிடப்பட்ட நிலையில் இடது காலை மடித்து தொங்கவிடப்பட்ட வலக்காலின் முட்டி மீது கிடத்தி வைக்கப்பட்டும், நேராக நிமிர்ந்து உடல் கொண்டவராக அமர்ந்திருக்கும்படி இருக்கின்ற கோலம் வீராசனமாகும். தொங்கவிடப்பட்ட வலக்காலின் கீழ் அறியாமையின் சின்னமாகக் கருதப்படும் முயலகன் அல்லது அபஸ்மாரனைக் காட்டவேண்டும். இவன் சிறிய கண உருவம் கொண்டவனாகவும், குப்புற வீழ்ந்து கிடப்பவனாகவும், நாகம் ஒன்றினைப் பற்றி விளையாடுவது போன்றும் அல்லது நாகமுத்திரை காட்டி இருப்பவனாகவும் செய்ய வேண்டும். இவன் அறியாமை அல்லது இருளின் சின்னமாகக் கருதப்படுகின்றான். ஞானத்தினால் அறியாமையை அகலச் செய்கின்றார் இறைவன் என்பதை உணர்த்தக் கூடிய சிற்ப படைப்பாகும்.

சுவாமியின் முகம் எழிலார்ந்த வடிவில், அழகு நிறைந்து, சாந்தபாவம் கொண்டவராக செய்யவேண்டும். இவர் மூன்று கண்கள், நான்கு கைகள் உடையவராக செய்யப்பட வேண்டும். முன் வலக்கரம் வியாக்யான முத்திரை அல்லது ஞான முத்திரை காட்டியவாறு இருத்தல் வேண்டும். இம்முத்திரையில் வலக்கையின் உள்ளங்கை பக்தர்கள் அல்லது முனிவர்களை நோக்கி இருக்கும் படியாகவும் அமைத்து, கட்டை விரலும், ஆள்காட்டி விரலும் ஒன்றாக சேர்ந்திருக்கும்படியாக அமைத்தல் வேண்டும். வலக்கையின் உள்ளங்கை உள்நோக்கி அமைந்திருப்பின் சின் முத்திரை எனப்படுகிறது. வியாக்யான முத்திரையை சம்தம்ச முத்திரை என்றும் அழைப்பர். முன் இடக்கரத்தில் புத்தகம் அல்லது ஓலைச்சுவடி இடம்பெறச் செய்யவேண்டும். பின் வலக்கரத்தில் நாகத்தையோ அல்லது உடுக்கை (டமருகம்)யையோ காட்டலாம். பின் இடதில் அக்னியைக் காட்டலாம்.

இவரை எட்டுக் கைகள் கொண்டவராக செய்யலாம் என்று காசியப்ப சில்ப சாஸ்திரம் குறிப்பிடுகின்றது. இதில் மேற்குறிப்பிடப்பட்ட வலக்கரத்தில் வியாக்யான முத்திரை இடம்பெறச் செய்து, முன்இடக்கரம் நீட்டப்பட்டு, மடக்கப்பட்ட இடக்காலின் முட்டி மீது இருத்தி வைக்கப்பட்ட நிலையில் செய்யலாம் என்கிறது. இதனைத் தண்ட அஸ்தம் என்று

குறிப்பிடுகின்றது. மேலும் மாறாக, இடக்கரம் வரத முத்திரை உடையதாகவோ அல்லது ஓலைச் சுவடியைப் பெற்றிருப்பதாகவோ செய்யலாம். மேலும் பின் வலக்கரத்தில் அக்ஷ மாலையும் (அக்கமாலை), பின் இடதில் தீச்சட்டியும் இடம்பெறச் செய்யலாம்.

இவரது ஜடாமுடி அலங்காரம் ஜடாபந்தமாகவோ, ஜடாபார மாகவோ அல்லது ஜடாமண்டலமாகவோ செய்யலாம். ஜடாமுடி கட்டப்பட்டதை ஜடாபந்தம் என்றும், விரிந்து பரந்து இருப்பின் ஜடாபாரம் என்றும், ஜடாபாரமே வட்ட வடிவில் மண்டலமாக சித்தரித்து காட்டி இருப்பின் ஜடாமண்டலம் என்றும் சிற்ப நூல்கள் குறிப்பிடுகின்றன. இவரது ஜடையின் வலப்புறத்தில் தூர்தூரா (தத்தூராம்) என்கின்ற ஊமத்தைப் பூவும், நாகமும் இருக்க வேண்டும். இடப்புறத்தில் கபால மண்டையோடும், பிறைச்சந்திரனும் காட்டப் படவேண்டும்.

கழுத்தணிகளான கந்திகை, சரப்பளி மற்றும் கிரைவேயக ஹாரம் (நீண்ட துளசி, மணி அல்லது ருத்திராட்ச மாலை) அணிகலன் களும், முன் நெற்றியில் லலாட பட்டம் என்கின்ற பட்டமும், வலக்காதில் மகர குண்டலமும், இடக்காதில் பத்ர குண்டலமும், மார்பில் யக்ஞோபவீதம் என்கின்ற முப்புரி நூலும், வயிற்றில் உதரபந்தமும், இடுப்பில் கடி வஸ்திரம், கடி சூத்திரத்துடன் கூடிய மேகலை, மற்றும் காலில் பாதசரஸ் போன்ற அணிகலன்களும், மேற்புயத்தில் கேயூரம் மற்றும் கீழ்க்கையில் கடகவளையமும் (கங்கணம்) இடம்பெற்றிருக்க வேண்டும்.

வியாக்யான தட்சிணாமூர்த்தி வகைக்கும் ஞான தட்சிணா மூர்த்தி வகைக்கும் பெரும் வித்தியாசம் எதுவும் காண இயலாது. இவரை ஆலமர் செல்வன், ஆல்கெழு கடவுள் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

யோகாசனம், உத்குடிகாசனம் அல்லது அர்த்த உத்குடிகாசனத்தில் உள்ளவராகக் காணப்படுகின்ற வடிவங்கள் யோக தட்சிணாமூர்த்தி வடிவம் எனப்படுகின்றது. இதில் இரு கால்களும் யோகா சனத்தில் வைக்கப்பட்டிருப்பதையும், இரண்டு கால்களும் மடக்கப்பட்டு பீடத்தில் ஊன்றி இருப்பதாகவும் செய்து, இரு கால்களைக் கட்டும் யோக பட்டம் இடுப்பினையும் சேர்த்து சுற்றப்பட்டு இருக்கின்றதை உத்குடிகாசனமாகவும் சொல்லப்படுகிறது.

இசைக் கருவிகளைக் கொண்டு இசை (கானம்) எழுப்பி கல்வி போதிக்கும் முறையும் சிற்பங்களில் கையாளப்படுகின்றது. வீணையைக் கையில் ஏந்தி, முன் கைகளில் வீணையை வாசிப்பது போன்ற வடிவங்கள் வீணாதர தட்சிணாமூர்த்தி எனப்படுகின்றார். மிருதங்கத்தைக் கொண்டு முன் கைகளினால் வாசிக்கும் மிருதங்க தட்சிணாமூர்த்தி வடிவமும் காணப்படுகின்றது. மிருதங்க தட்சிணா மூர்த்தி சிற்ப வகை மிக அரியதாக கிடைத்துள்ளது. கழுகுமலை (திருநெல்வேலி மாவட்டம்)யில் பாண்டியர்களால் கி.பி.8ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட வெட்டுவான் கோயிலில் மிருதங்க தட்சிணாமூர்த்தி சிற்பம் ஒன்று உள்ளது. இத்தகைய வகை பெருமளவில் காணப்படவில்லை என்றாலும் கூட வீணாதர தட்சிணாமூர்த்தி பல இடங்களில் உள்ள கோயில்களில் காணப்படுகின்றது. விஜயாலய சோழனால் (கி.பி.850-870) கட்டப்பட்டதாகக் கருதப்படுகின்ற நார்த்தாமலை கோயிலில் விமான கிரீவப் பகுதி தேவகோட்டத்தில் இருப்பதையும், இதனைத் தொடர்ந்து சோழர்கால கோயில்களில் பல இடங்களில் அமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

வட இந்தியப் பகுதிகளில் தட்சிணாமூர்த்தியின் கோட்பாட்டைத் தழுவி அமைந்த தெய்வ வடிவமாகத் திகழ்வது நகுளீசர் ஆகும். இவர் சிவனின் 28ஆவது வடிவமாக புராணங்களில் குறிப்பிடப்படுகிறது. ஒரியா, குஜராத், வங்காளம், கர்நாடகம் மற்றும் பீகார் பகுதிகளில் 9-10ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட கோயில்களில் இவரது சிற்பங்கள் காணப்படுகின்றன. இவர் கைகளில் மாதுளம் பழமும், லகுடம் என்ற தண்டமும் பெற்று இருப்பவராகவும், பத்மாசனத்தில் வீற்றிருப்பவராகவும் செய்யப்படுகிறது. இவரும் நான்கு முனிவர்களான கௌசிகர், மைத்ரேயர், கார்கியர் மற்றும் கௌரூஷ்யர் ஆகியோர்களுக்கு உபதேசம் செய்பவராகக் காட்டப்படுகிறது.

வட இந்தியாவில் அஹிச்சத்ராவில் கிடைத்த குப்தர்கால (கி.பி.3ஆம் நூற்றாண்டு) சிற்பமே முதல் சிற்பம் என்று கூறலாம். தமிழகத்தில் இராசசிம்ம பல்லவனால் (கி.பி.700-730) குடையப்பட்டதாகக் கருதப்படும் ஓலக்கனேசுவரர் கோயிலில் தென்புறக் கோட்டத்தில் உள்ள சிற்பமே முதல் சிற்பம் என்று குறிப்பிடலாம். பாதாமியில் (கருநாடகம்,

கி.பி.6ஆம் நூற்றாண்டு) உள்ள குடைவரைக் கோயிலில் இப்படிமம் காணப்படுகிறது.

இக்கோயிலில் தட்சிணாமூர்த்தி சில கிடைத்துள்ளன. கருவறையின் தென்புறச் சுவரில் உள்ள தட்சிணாமூர்த்தியின் படிம அமைதி 20ஆம் நூற்றாண்டின் தன்மையை ஒத்துள்ளது. இக் கோயிலில் இருந்த பழமையான சிற்பத்தினை அகற்றிவிட்டு மாற்றாக இப்புதிய பாணியைக் கொண்ட படிமம் வைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது.

10ஆம் நூற்றாண்டின் படிம அமைதியைக் கொண்டுள்ள தட்சிணாமூர்த்தியின் சிற்பம் தற்போது சங்கரேசுவரர் கோயிலில் தெற்கு நோக்கி உள்ளது. நான்கு கைகள் கொண்டவராகவும், வலக்கரத்தில் அபய முத்திரையைக் காட்டியும், இடக்கரத்தில் ஓலைச்சுவடியைப் (புத்தகம்) பெற்றுள்ளவராகவும் செய்யப்பட்டுள்ளது. பின் வலக்கரத்தில் நாகத்தினைக் கொண்டும், பின் இடக்கரத்தில் அக்னியைக் கொண்டுள்ளவாறு செய்யப்பட்டுள்ளது. வலக்கால் தொங்கவிடப்பட்ட நிலையில், இடக்கால் மடக்கி வலக்காலின் மீது வைத்துள்ளார். ஊன்றப்பட்ட காலின் கீழ் முயலகன் இருக்க, சுற்றிலும் சனகாதி முனிவர்கள் நால்வர் வீற்றிருக்கின்றனர்.

ஜடாபந்தகேச அலங்காரம் தலையில் இருக்க, நாகம் இடச் சென்னியிலும், பிறைநிலா வலப்பக்கத்தினையும் அலங்கரிக்கின்றது. பின்புறம் ஆலமரத்தின் கிளை ஒன்று உள்ளது. கழுத்தில் உள்ள ஆர வரிசைகள் சரியாக புலப்படவில்லை, வயிற்றில் உதர பந்தமும், மார்பின் குறுக்கே இடமிருந்து வலமாக செல்லக் கூடிய யக்ஞோபவீதமும் காணப்படுகின்றன. முகத்தில் உள்ள எழில்கோலம், நயம், மென்மை, அமைதி ஆகியவைகளை மிகச் செறிவாக செய்துள்ளனர். கண்கள் கீழ் நோக்கிய அதோமுகமாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் மென்மை அல்லது கடினத் தன்மை இல்லாத நிலை ஆகியவைகள் மிக அழகாக செய்துள்ளனர் (படம் 1).

மற்றொரு சிற்பத்தில் யோக தட்சிணாமூர்த்தியின் புடைப்புச் சிற்பம் உள்ளது. அர்த்த உத்குடிகாசனத்தில் இருப்பவராகவும், இவரது எதிரில் சிவயோகி (நாயன்மார்) ஒருவர் மஸ்தகாஞ்சலி (தலைமேல் கூப்பி தொழுதல்) செய்து வழிபடுபவராகவும் அமைக்கப்பட்டுள்ளது.

மஸ்தகாஞ்சலி செய்து வழிபடுபவர் மாணிக்க வாசகராக இருக்கலாம். திருப்பெருந்துறையின் (ஆவுடையார் கோயில்) சமய வரலாற்றுடன் தொடர்புடைய படிமமாக இது அமைந்துள்ளது (படம் 2). இச்சிற்பத்தின் காலம் கி.பி.12-13ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். மற்றொரு சிற்பம் செட்டியார் மண்டபத்திற்கு எதிரில் உள்ள தூணில் உள்ளது. இவர் கைலாசத்தின் மீது அமர்ந்திருப்பவராகவும், ஜடாமண்டலகேசம் தலையை அலங்கரிக்கின்றவாறும், இரண்டு கைகள் மட்டுமே கொண்டவராகவும் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரு கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தி சிற்பம் அமைந்துள்ள பாங்கை விளக்குவதற்கு அவற்றைப் படம் எடுத்து அப்படத்தைக் கொண்டு எழுத்து ஆய்வு செய்யப்படுகிறது. இதுபோல் வரைபடங்களைக் கொண்டு நில அமைப்பை ஆய்வு செய்யலாம்.

## 10.5. திரைப்படம்

திரைப்படம் அல்லது நகரும் படம் என்பது படிமங்களின் வரிசைகள் திரையில் நகரும் போது ∴பை தோற்றப்பாட்டின் படி ஒரு உண்மையான நாடகக் காட்சி நடைபெறுவது போன்ற ஒரு தோற்றம் செய்யக் கூடிய திரைப்படலம் ஆகும். திரைப்படத்தை நகரும் ஒளிப்படக் கருவி மூலம் ஒளிப்படத்தின் காட்சியை பதிவு செய்வதன் மூலமோ, இயக்கமூட்டல் தொழில்நுட்பத்தினால் வரைபடங்கள் அல்லது உருவ மாதிரிகளை ஒளிப்பதிவு செய்வதன் மூலமோ, சிஜிஐ மற்றும் கணினி இயக்கமூட்டல் மூலமோ, இவைகளில் பலவற்றை ஒன்றாக பயன்படுத்துவதன் மூலமோ, விசுவல் எபெக்ட்ஸ் மூலமோ உருவாக்குகின்றனர். திரைப்படத்தின் ஒரு திடமான பொருள் என்னவென்றால் அது எண்ணங்கள், கதைகள், உணர்வுகள், அழகு அல்லது வெளி ஆகியவற்றை ஒரு உணர்ச்சிப் பெருக்குடன் பதிவு செய்யப்பட்ட காட்சிப் படமாக தரும் ஒரு கலையாகும்.

திரைப்படம் ஆக்கம் செய்யும் முறையானது ஒரு கலையாகவும், ஒரு தொழில் துறையாகவும் விளங்குகிறது. திரைப்படங்கள் பொதுவாக ஒளிப்படலங்களில் பதியப்பட்டு, பின் அதனை ஒளிப்படப் பெருக்கியின் மூலம் திரையின் மீது பெரிய அளவிலான படமாக காட்சிப்படுத்தப்படும். தற்காலத்தில் எண்முறை ஒளிப்படலங்களாக வன்வட்டிலோ அல்லது

பளிச்சுவட்டிலோ ரெட்ஒன் ஒளிப்படக் கருவியின் உதவியால் காட்சிகளைப் பதியப்படுகிறது.

திரைப்படம், பொதுவாக பொழுதுபோக்கிற்காக தயாரிக்கப்பட்டு முன்னர் திரையரங்குகளின் திரைகளில் காண்பிக்கப்பட்டு, இப்பொழுது திரையரங்குகள் தவிர தொலைக்காட்சி, குறுந்தட்டு, பேழை, இணையம் போன்ற ஊடகங்கள் மூலமும் காண்பிக்கப்படும் நகரும் படங்களையும், அப்படங்களின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள துறையையும் குறிக்கும் சொல்லாகும். திரைப்படங்கள் பெரும்பாலும் பின்னணி இசை, உரையாடல்கள் மற்றும் பாடல்களுடன் காணப்படும். அவ்வகையான ஒலிப்படலம் திரையில் காணப்படும் ஒளிப்படத்திற்கு ஏற்றார் போன்று அமைந்திருக்கும். படச்சுருளுக்குள் ஒரு பகுதியில் உள்ளதாகவும், திரையில் காட்சிப்படுத்தப்படாத ஒரு பகுதியாகவும் இது அமைந்திருக்கும்.

## 10.5.1. திரைப்படத்தின் வரலாறு

ஒளிப்படம் எடுக்கும் முறையினை கி.பி.1830ஆம் ஆண்டில் கண்டறிந்த பிறகு, எட்வர்ட் மைபிரிட்ஷ் என்னும் ஆங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையின் அசைவுகளை இயக்கப்படமாக எடுத்து வெற்றி கண்டார். அதன்பின், ஈஸ்ட்மென் என்பவர் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார். ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியை தாமஸ் ஆல்வா எடிசன் உருவாக்க, அமெரிக்க அறிஞர் பிரான்சிஸ் சென்கின்ஸ் கி.பி.1894இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படமொன்றைப் பலரும் காணும் வகையில் வடிவமைத்துக் காட்டினார். இதுவே, புதிய படவீழ்த்திகள் உருவாக அடிப்படையாக அமைந்தது. பிரான்சிஸ் உருவாக்கிய இவ்வியக்கப் படத்தில் நாட்டியம், கடல் அலைகள் கரையில் மோதும் காட்சிகள் முதலியன காணப்பட்டன. மேலும், இவையனைத்தும் ஊமைப் படங்களாக அமையப்பெற்றன. இவற்றை மக்களிடையே காட்டிக் கட்டணம் பெறப்பட்டது.

இந்தியா, சீனா, ஜாவா போன்ற நாடுகளில் சினிமா போன்று திரையில் காட்டப்படும் பாவைக்கூத்து நடைமுறையில் இருந்தது. திரைப்படத்தின் வரலாறு தொடங்கும் முன்பே, நாடகம் மற்றும் நடனங்களுக்குப் பல அங்கங்கள் இருந்தன. அவை நாடகக்

குறிப்பு

குறிப்புகள், நாடக வடிவமைப்புகள், நாடக உடைகள், தயாரிப்பு, இயக்கம், நாடகக் கலைஞர்கள், இரசிகர்கள், கதைப்படங்கள், இசை ஆகியவையாகும். அதன் பிற அங்கங்கள் புதியதாக உருவாயின அத்துடன் மைஸ்அன்சீன் (முழுத் திரைப்படமும் ஒரே ஒரு முறை மட்டும்) போன்று பல விமர்சனங்களும் எழுந்தன. அப்பொழுது இருந்த தொழில்நுட்பங்களினால் ஒருமுறை திரையிடப்பட்ட திரைப்படத்தை மறுமுறை திரையிட இயலவில்லை.

ஒளி ஊடுருவும் வகையில் மெல்லியதாக உள்ள இழைத்து பக்குவப்படுத்தப்பட்ட மிருகங்களின் தோல்களில் வண்ண உருவங்களை வரைந்து, அவற்றை ஒளி உமிழும் விளக்குக்கும், வெண்திரைக்கும் நடுவில் அசையச் செய்து, அதன் மூலம் பாவைக்கூத்து கலை நிகழ்ச்சியை நடத்தினர். கதாபாத்திரங்கள் பேசும் வசனங்களையும், விளக்கங்களையும் உண்மையான மனிதர்கள் தங்கள் குரலில், திரைக்குப்பின் நின்று கொண்டு, அந்த கதாபாத்திரங்களுக்காக பேசினார்கள். இவற்றின் முக்கிய அம்சம் பொழுது போக்கு ஆகும்.

## 10.5.2. திரைப்படக் கருவிகள்

திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள், செலுலாய்டு என்னும் பொருளால் ஆனது. படம் எடுக்கப் பயன்படும் சுருளானது எதிர்ச்சுருள் ஆகும். தனித்தனிப் படச்சுருள்களில் ஒலி மற்றும் ஒளிப்பதிவுகள் எடுக்கப்படும். திரைப்படத்தில் ஒளிப்பதிவு செய்யும் கருவிக்குப் படம்பிடிக்கும் கருவி என்று பெயர். இக்கருவியில் ஓரடி நீளமுள்ள படச்சுருளில் 16 படங்கள் வீதம் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாகப் படம் பிடிக்கப்படும்.

இவ்வாறு உருவாக்கப்படும் திரைப்படங்கள் ஆய்வுக் கருதுகோளை மையமிட்டதாக அமைவதைக் காணலாம். திரைக்கதை ஒரு குறிப்பிட்ட கருதுகோளைக் கொண்டு அத்திரைப்படம் எடுக்கப்படும். குறிப்பாக தண்ணீர் பிரச்சனையை மையமிட்ட திரைப்படமாக "கே. பாலச்சந்திரனின் தண்ணீர் தண்ணீர்" அமைந்திருப்பதையும், கற்பழிக்கப்பெற்ற திருமணமான பெண் தன்னுடைய கணவன் கைவிட, கற்பழித்தவனிடமே அடைக்கலம் புகுந்து, கற்பு நெறியோடு வாழ்ந்து

வரும் ஒரு பெண்ணின் கதையைக் கருதுகோளாகக் கொண்ட "சிறை" போன்று எண்ணற்ற திரைப்படங்களை எடுத்துரைக்கலாம்.

குறிப்பு

ஒரு ஆய்வாளர் ஆய்வில் எடுத்துரைக்கும் செய்திகளைத் திரைப்படமாக்கியும் வெளியிடுவர். ஒலியும் ஒளியும் நகரும் படமும் கொண்ட ஒரு திரைப்படத்தினை உருவாக்கிய ஆய்வாளன் தான் கொண்ட கருதுகோளை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்த உதவுவது திரைப்படம். குறும்படமாகவும் இது அமையும். அரிதாரம் பூசாமல், நடிக்கச் சொல்லாமல் தத்ரூபத் திரைப்படமாக ஆய்வாளன் தன்னுடைய ஆய்வுப் பொருண்மையை வெளிப்படுத்தும் போது அவ்வாய்வில் உண்மைத் தன்மை வெளிப்படும்.

## 10.6. ஒலிப்பதிவு

ஒலிப்பதிவு என்பது பல ஒலி மூலங்களைத் தனித்தனியாகப் பதிவு செய்து பிறகு கலந்து இசையைப் பதிவு செய்யும் முறை ஆகும். இதில் ஒவ்வொரு ஒலி மூலம் 'தடம்' எனப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட பல ஒலித் தடங்கள் ஒத்தியக்கப்பட்டு இசை உருவாக்கப்படுகிறது. பலதட ஒலிப்பதிப்பு ஒலிப்பேழை, நான்கு அல்லது எட்டுத் தடப்பேழைகள், 2" இருசுருள் 24-தடம் சார்ந்த தளவாடங்கள், எண்ணியல் ஒலிப்பதிவு தளவாடங்கள், ADAT (அலெஸிஸ் எண்ணியல் ஒலிநாடா) எட்டுத் தட இயந்திரங்கள், நிலைவட்டு சார்ந்த தளவாடங்கள் ஆகியவை மூலம் சாதிக்கப்படுகிறது. மிகப் பெரிய ஒலிப்பதிவுக் கூடங்கள் பல 24-தட இயந்திரங்களை ஒத்தியக்குகின்றன. எனவே, இவை நூறு ஒலித்தடங்களைப் பதிவு செய்து கலக்கின்றனர்.

கணினி சார்ந்த ஒலிப்பதிவு தளவாடங்களில் ஒலியட்டையின் எண்ணியல் அல்லது ஒப்புமை உள்ளீடுகளால் நிர்ணயிக்கப்படுகிறது. பதிவு நிறைவடைந்ததும், ஒலிப்பதிவு செய்யப்பட்ட தடங்கள் இரு பிரிப்பிசை (Stereo) என்கிற இரண்டு தடங்களாக இரு பிரிப்பிசைப் பதிவு மூலம் கீழ்க்கலக்கப்பட்டு ஒலிப்பேழைகள், குறுவட்டுகள் ஆகிய ஊடகங்களில் படியெடுப்பதற்கும் விநியோகப்படுத்துவதற்கான வடிவத்தில் மாற்றப்படுகிறது. பெரும்பாலான கலைஞர்கள் தோற்கருவிகள், இசையெழுப்புகள் ஆகியவற்றை முதல் தடங்களாகப் பதிவு செய்கின்றனர். தோற்கருவிகள் இரண்டே தடங்களாக

கீழ்க்கலக்கப்படலாம் அல்லது பல தடங்களாக விட்டு வைக்கப்படலாம். பலதட ஒலிப்பதிவில் இறுதியாக பதிவு செய்யப்பட்ட தடங்கள் குரலிசையாக அமைகின்றன.

குறிப்பு

கி.பி.2000க்குப் பின்னர் தனிநபர் கணினி ஒரு முக்கியமான ஒலித்தடப் பதிவியாக உருவாகியுள்ளது. கணினியுடன் ஒரு ஒலியட்டை பயன்படுத்தப்படுகிறது. ஒலியட்டையின் ஒலிவாங்கி உள்ளீட்டில் குரலிசையைப் பதிவு செய்ய ஒரு ஒலிவாங்கியும், தட உள்ளீட்டில் கித்தார் மிகைப்பி, இசையுருப்பி, இசைப்பலகை அல்லது கேட்பொலி அடைமுகத் தளவாடங்கள் ஆகியவற்றுடன் இணைக்கப்படுகிறது. கேட்பொலி இடைமுக வன்பொருள் கேட்பொலிக் குறிகைகளை PCI, USB, Firewire இணைப்புகள் மூலம் கணினிக்கு அனுப்புகிறது.

ஒலி ஒலிப்பதிவு, எழுதப்பட்ட ஒலித்தடமும், இசையுடன் பதிவு செய்யப்பட்டு இயக்கப்படம், புத்தகம், தொலைக்காட்சி நிகழ்ச்சி அல்லது வீடியோ கேம் ஆகியவற்றின் படங்களுடன் ஒத்திசைக்கப்படலாம். ஒரு திரைப்படம், வீடியோ அல்லது தொலைக்காட்சி விளக்கக் காட்சியின் ஒலிப்பதிவில் இடம்பெற்றுள்ள வணிக ரீதியாக வெளியிடப்பட்ட ஒலிப்பதிவு ஆல்பம் அல்லது ஒத்திசைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஒலியைக் கொண்ட ஒரு படத்தின் இயற்பியல் பகுதி. மூவி படங்களுடன் ஆடியோவை ஒத்திசைக்க, படத்தின் விளிம்பில் ஒரு ரெக்கார்டிங் பேண்ட் இணைக்கப்பட்டுள்ளது. ஆப்டிகல் பதிவில், பக்கவாட்டு நிழல்கள், கீற்றுகளின் பரப்பளவு மாறுபாடுகள் அல்லது இரண்டின் கலவையும் புகைப்பட ரீதியாக எரிக்கப்படுகின்றன. மேலும் திட்டமிடப்பட்டால் அது ஒளியுடன் கதிர்வீச்சு செய்யப்பட்டு ஒளிமின் குழாய் மூலம் மின் சமிக்ஞையாக மாற்றப்படுகிறது. காந்தப் பதிவில், ஒருகாந்தப் பொருள் ஒரு படத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது மற்றும் டேப் ரெக்கார்டரைப் போல பதிவு செய்யப்பட்டு மீண்டும் உருவாக்கப்படுகிறது. இந்த முறை எட்டு மில்லிமீட்டர் திரைப்படங்களிலும் செய்யப்படுகிறது. மேலும் 4 முதல் 7 சேனல் ஸ்டீரியோ ஒலிகள் பரந்த திரை திரைப்படங்களில் பயன்படுத்தப்படுகின்றன. திரைப்பட இசையைப் பதிவு செய்த பதிவுகள் ஒலி தடங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

ஒலிப்பதிவு செய்யப்பெற்ற பொருண்மைகள் மீண்டும் எழுத்து வடிவில் வருவதும், ஒலி வடிவிலேயே ஒலிக்கச் செய்வதும் ஆய்வின்

*Self-Instructional Material*

தன்மையைப் பொருத்து மாறுபடும். ஆய்வாளன் தான் சேகரித்த ஒலித் தரவுகளை ஒலி அலைகளாகவே ஒலி பரப்பச் செய்வதும் உண்டு. இன்று வானொலி மூலமும் கைபேசி மூலமும் இணையதளம் மூலமும் ஒலி பெருக்கிச் செய்து தன்னுடைய ஆய்வுப் பொருண்மையை ஆய்வாளன் விளக்குகின்றான்.

## 10.7. ஒளிப்பதிவு

ஒளிப்பதிவு என்பது அசையும் படங்களின் படப்பிடிப்பு தொடர்பான ஒரு கலையும், அறிவியலும் ஆகும். இது படப்பிடிப்பு, படச்சுருள் உருத்துலக்கல் என்பவற்றை உள்ளடக்கிய நுட்பத்தைக் குறிக்கும். திரைப்படத்தை ஒளிப்பதிவு செய்பவர் ஒளிப்பதிவாளர் எனப்படுகின்றார். ஒளிப்பதிவாளர திரைப்படங்களின் காட்சி தொடர்பானவற்றில் இயக்குநருடன் சேர்ந்து முக்கியமான பங்கு வகிப்பவராக உள்ளார். ஒளிப்பதிவு, திரைப்படத் தயாரிப்போடு தொடர்புடைய ஒருகலை வடிவம். ஒளியுணர் பொருட்களைப் பயன்படுத்தி பிம்பங்களைப் படமாகப் பிடிக்கும் முறை கி.பி.19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே கண்டுபிடிக்கப்பட்டு இருந்தாலும், அசையும் படங்களைப் பிடிப்பதற்குப் புதிய வடிவத்திலான படப்பிடிப்பு முறையும், புதிய வகை அழகியலும் தேவையாக இருந்தது.

### 10.7.1. ஒளிப்பதிவின் வரலாறு

கி.பி.1873ஆம் ஆண்டு யூன் 19ஆம் தேதி, எட்வார்டு முய்பிரிட்சு (Eadweard Muybridge) என்பவர், 24 ஒளிப்படக் கருவிகளைப் பயன்படுத்தி “சாலி கார்டினர்” என்னும் பெயர் கொண்ட குதிரை ஓடுவதை வெற்றிகரமாகப் படம்பிடித்தார். ஒளிப்படக் கருவிகள் குதிரை ஓடும் பாதைக்கு இணையாக வரிசையாக வைக்கப்பட்டு இருந்தன. அடுத்தடுத்த ஒளிப்படக் கருவிகளுக்கு இடையிலான தூரம் 21 அங்குலமாகவும், இந்த வரிசையின் மொத்த நீளம் 20 அடியாகவும் இருந்தது. ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், 1882ஆம் ஆண்டில், பிரெஞ்சு அறிவியலாளரான எட்டியென்-யூல்சு மரே (Etienne-Jules Marey) என்பவர் ஒரு செக்கனுக்கு 12 தொடர் படங்களைப் பிடிக்கக் கூடிய ஒளிப்படக் கருவி ஒன்றைக் கண்டுபிடித்தார். இரண்டாவது சோதனை அசைபடம் “ரவுண்டே பூங்காக் காட்சி” (Roundhay Garden Scene) என்பது. இதை லூயிசு லே பிரின்சு (Louis Le Prince)

என்பவர் உருவாக்கினார். இங்கிலாந்தில் உள்ள ரவுண்டே என்னும் இடத்தில் கி.பி.1888 அக்டோபர் 14ஆம் தேதி பிடிக்கப்பட்ட இப்படமே மிகப் பழைய அசைபடம்.

குறிப்பு

ஒளிப்பதிவு வழியாகவும் ஆய்வாளன் தான் தொகுத்த ஆதாரங்களை ஆய்வுலகிற்கு எடுத்துக் காட்டுகின்றான். இன்று கேமரா, செல்போன் போன்ற கருவிகளின் மூலம் ஒளிப்பதிவு செய்து தொலைக்காட்சி, இணையதளம் போன்றவற்றில் ஆய்வாளன் தன்னுடைய ஆய்வுப் பொருண்மையை விளக்க முடியும்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. எழுத்து ஆதாரங்கள் நான்கினை எடுத்துரைக்க.
2. பட ஆதாரங்களின் பயன் யாது?
3. திரைப்பட ஆதாரத்தை ஆய்வில் பயன்படுத்தும் விதம் யாது?
4. ஒலிப்பதிவு பற்றிக் குறிப்பு வரைக.
5. ஒளிப்பதிவு பற்றிக் குறிப்பு வரைக.
6. ஒளிப்பதிவின் வரலாறு கூறுக.

## 10.8. தொகுத்துக் காண்போம்

- ஆய்வில் எழுத்தின் இன்றியமையாமை பற்றியும், படங்களின் இன்றியமையாமை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வில் திரைப்படம் பெறும் பங்கு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- திரைப்படத்தின் வரலாறு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வில் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவின் பங்கு பற்றியும், ஒளிப்பதிவின் வரலாறு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 10.9. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 10.3. | 2. | 10.4. |
| 3. | 10.5. | 4. | 10.6. |
| 5. | 10.7. | 6. | 10.7.1. |

குறிப்பு

## 10.10. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. ஆய்வில் எழுத்து ஆதாரங்களாகப் பயன்படுவன பற்றிக் கட்டுரை வரைக.
2. திரைப்படத் தோற்ற வரலாறும் பயன்பாடும் குறித்து கட்டுரை வரைக.
3. ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு ஆகியன ஆய்வில் பயன்படும் திறத்தை விளக்குக.

# கூறு 11. ஆய்வேடு உருவாக்கம் - ஆய்வேட்டின் அமைப்பு

## 11.1. முன்னுரை

ஆய்வாளனுக்கு ஓர் ஆய்வேடு அது தன் முடிவுகளை மற்றவர்களுக்கு அறிவிக்கும் உத்திகளிலேதான் அதன் மதிப்பு அடங்கியிருக்கிறது. தாம் கண்ட சான்றுகளையும் முடிபுகளையும் படிப்பவர் எளிதில் உணர்ந்து மதிப்பிடத்தக்க வகையில் வெளியிடுவதே ஆய்வறிக்கை ஆகும். ஆய்வு செய்வதின் உள்ளார்ந்த தெளிவான முடிவான பகுதி இவ்வாய்வறிக்கை. ஆய்வின் முடிந்த பயனாக இது திகழ்கிறது. ஆய்வாளனின் வெற்றியைச் சோதித்தறிய வாய்ப்பளிப்பதும் இதுவேயாகும். ஆய்வு முயற்சிகளில் பல நிலைகள் உண்டு. கருதுகோள், சான்று மூலத் தொகுப்பு, பகுத்தாய்தல், விளக்குதல் என்பன. அனைத்திற்கும் மிக்க திறமை வேண்டும். ஆய்வினும் அனைத்துப் படி நிலைகளும் மிக்க கவனத்திற்குரியன எனினும் இவ்வாய்வறிக்கை துய்ப்பாளனின் தனித்திறனுக்கு மிகுதியும் உரியதெனப் போற்றுவர். ஆய்வறிக்கை உருவாக்க ஆழ்ந்த சிந்தனையும் முயற்சியும் பொறுமையும் ஊடுருவிப் பார்க்கும் திறமையும் சிக்கலை முழுமையாக அணுகும் முறையும் சான்றுகளைத் தொகுத்துப் பகுத்தாய்தலில் திறனும் கைவரப் பெற்றிருக்க வேண்டும். எடுத்து விளக்கும்போது தற்சார்பின்னையும் மொழியை ஆளும் திறமையும் பெற்றிருக்க வேண்டும். இப்பகுதியில் ஆய்வாளர் ஆய்வேடு

உருவாக்கும் முறைகள் மற்றும் நெறிகள் பற்றியும், ஆய்வேட்டின் அமைப்பு பற்றியும் காணலாம்.

குறிப்பு

## 11.2. குறிக்கோள்கள்

- ஆய்வாளர் ஆய்வேடு உருவாக்கும் நெறிகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வேடு உருவாக்குவதில் ஆய்வாளர் பின்பற்றவேண்டிய வழிகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வேட்டின் அமைப்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 11.3. ஆய்வேடு உருவாக்கம்

ஓர் ஆய்வாளன் தன் புதிய கண்டுபிடிப்புக்களை வெளியிடும் முறையில் அவனது திறன் பளிச்சிடும். அவ்வாய்வேடு யாருக்காக உருவாக்கப்படுகிறதோ அவர்களுக்கேற்ப எழுதுவதே முறையாகும். ஓர் ஆய்வேட்டைப் படிப்பவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. பொது மக்களும் ஒருதுறைப் புலமையற்றவர்கள்.
2. நிர்வாகிகட்கும் திட்டம் உருவாக்கியவர்கள்.
3. ஆய்வாளர்கட்கும் துறை அறிஞர்கட்கும் தேர்வாளர்கட்கும் எழுதப்படுவது முனைவர், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடுகள் இதன்கண் அடங்கும்.

நிர்வாகிகளுக்கு அளிக்கப்படுவதும் கருத்தரங்குகளில் அளிக்கப்படுவனவும் வாய்மொழி அறிக்கையாக அமைவதுண்டு. இஃது ஆய்வாளர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள உதவும். ஆய்வாளரின் சிக்கலான அணுகுமுறை நேரடி விவாதத்திற்குட்படுகிறது. முடிபுகளை வெளியிடுவதில் நேர்மையும் வெளிப்படையாகச் சொல்லும் தன்மையும் ஏற்படுகிறது. நன்கு சிந்தித்துத் தகவலைத் தரவேண்டும். கருத்துக்களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் தரல்வேண்டும். திறனாய்வு படைத்த கூட்டத்தில் வெளியிட்டால், தெளிவும் பயனுள்ள வகையில் அதனைத் திருத்திக் கொள்ளவும் உதவும் என்பர்.

வரிவடிவ அறிக்கையில் திருத்தம் என்பது வடிவம் சார்ந்தது. மெய்ம்மைகளை விளக்குதலும் சிக்கலைப் பற்றிய அறிவையும் மொழியாற்றலையும் அடிப்படையாகக் கொண்டது. தெளிவுடைமை

என்பது அறிக்கையாளரின் தனித்திறமை அல்லது அறிவு ஆற்றலால் விளைவது.

குறிப்பு

### 11.3.1. பொது மக்களுக்கான ஆய்வேடு உருவாக்கம்

பொது மக்களுக்கான அறிக்கையில் மெய்ம்மைகள், கண்டுபிடிப்புகள், பரிந்துரைகள் இடம்பெறும். துறையறிவு பெறாதார்க்கு எழுதுவதுதான் மிகவும் கடினம். இவ்வறிக்கை தெளிவாகவும் எளிமையாகவும் அதே நேரத்தில் சற்று உயர்வாகவும் இருக்கவேண்டும். தெளிவு, கவர்ச்சி உடையனவாகவும் அதே நேரத்தில் துறை நுட்பச் செய்திகளைக் குறைத்தும் இருக்க வேண்டும். கூடுமானவரை விளக்கப்படங்களைச் சேர்க்க வேண்டும். ஆய்வு பற்றிய நடைமுறைக் கூறுகளைத் தெளிவுபடுத்த வேண்டும். முடிபுகளையும் பரிந்துரைகளையும் முதலில் எழுதிவிட்டுப் பின்னர்தான் மற்றவற்றைத் தொடவேண்டும். பொது மக்களுக்கு இவ்வகையில் கூறிவிட்டால் ஆய்வறிக்கையின் இன்றியமையாமை நன்கு விளங்கும். ஆய்வின் குறிக்கோள், சிக்கல், கண்டுபிடிப்புகள், பரிந்துரை எனப் பொதுமக்கள் அறிக்கை அமைய வேண்டும்.

### 11.3.2. நிர்வாகிகளுக்கான ஆய்வேடு உருவாக்கம்

நிர்வாகிகட்கு அறிமுகப்படும் பொதுப்படையான ஆய்வறிக்கை தொகுப்புரையும் பரிந்துரைகளும் கொண்டதாக இருக்க வேண்டும். ஆய்வாளர்கட்கென எழுதப்படுகின்ற ஆய்வறிக்கை பல விரிவான பகுதிகளைக் கொண்டதாக இருக்கும். இது துறைச்சார்புடையவர்களால் உருவாக்கப்படுகின்ற அறிக்கையாகும். இவ்வறிக்கை,

1. ஒருபொருள் பற்றிய தனிக்கட்டுரை
2. துறை சார்ந்த இதழுக்கு உருவாக்கப்படும் கட்டுரை
3. தொழிலியல் சாராத முழு அறிக்கை

என்ற வகையில் அமையும். இக்கட்டுரைகளின் மெய்ம்மைகளைத் தொகுப்பதிலும் பின்பற்றப்படும் நெறிமுறைகளிலும் சிறிது வேறுபாடு உண்டு. நெறிமுறைகள் கூறப்பட வேண்டும். புள்ளிவிவரமும் தரலாம். இத்துறை அறிக்கை நான்கு பகுதிகளைக் கொண்டதாகும்.

1. சிக்கலும் அதன் தன்மையும்
2. நெறிமுறைகளும் துல்லியமான செம்மையும்
3. புள்ளி விவரமும் அவற்றின் நம்பகத் தன்மையும்
4. புள்ளி விவரத்தைத் தருக்க வடிவாக வெளியிட்டுள்ள முறை

## 11.3.3. ஆய்வாளருக்கான ஆய்வேடு உருவாக்கம்

முன்னுரை, சிக்கல், ஆய்வு நெறிமுறை, மெய்ம்மைகள், கண்டுபிடிப்புக்கள், விளைவுகள், முடிபு, பரிந்துரை போன்ற பகுதிகள் அனைத்தும் அடங்கியிருக்கும் வைப்புமுறைத் திட்டம் தெளிவைத் தரும். ஆய்வாளருக்கு மொழிப் புலமை இருக்க வேண்டும். அறிக்கை எளிமையாக நேரடியாகச் சுருக்கமாக இருக்க வேண்டும். திட்ட வரையறையும் கருத்துச் சுருக்கமும் இருக்க வேண்டும். ஒவ்வொரு தலைப்பினுள்ளும் உட்பிரிவினுள்ளும் என்னென்ன எழுதக்கூடும் என்பதைச் சுருக்கமாக வரைந்து கொள்ள வேண்டும். இவை அடிக்கடி மாற்றிக் கொள்ள நேரிடும். இறுதியில் அமைவதே ஆய்வேட்டின் இயல் தலைப்புக்களாகவும் உட்தலைப்புக்களாகவும் இடம்பெறும். ஆய்வறிக்கை உருவாக்குவதில் இரண்டு படிநிலைகள் உண்டு.

1. ஆய்வின் போதே உருவாக்குவது/எழுதுவது.
2. சான்று மூலங்களைத் தொகுத்து, பகுத்து, ஆராய்ந்து இறுதியில் உருவாக்குவது/எழுதுவது.

சிக்கல், கருதுகோள், பின்பற்றும் ஆய்வு நெறிமுறைகளை முன்னதாகவே விளக்கிவிடலாம். ஆய்வும் ஆய்வறிக்கை எழுதுவதிலும் ஒன்றினொன்று தொடர்ந்து செயற்படவேண்டும்.

ஓர் ஆய்வறிக்கையைத் தொடர்ந்து எழுத/உருவாக்க மூன்று பெரிய பிரிவுகள் உண்டு.

1. வரையறைத்திட்டம்
2. எழுதுநிலை
3. அடிக்குறிப்பு, சான்று காட்டல்

தொகை, வகை, விரி என்ற முறையில் ஆய்வேட்டின் உட்பிரிவுகளைப் பிரிக்க வேண்டும். ஓர் ஆய்வறிக்கையில் இயல், உட்பிரிவு, பத்தியமைப்புக்கள் அனைத்திலும் வடிவப்பாங்கு ஊடுருவி

நிற்கும். பொதுவமைப்பு, தொடக்கம், இடைத்தொடர்பு, அடிக்குறிப்பு, பின்னிணைப்பு போன்ற அனைத்துப் பகுதிகளும் இவ்வடிவ ஒருமைப்பாட்டிற்கு அமையவேண்டும். நம் இலக்கண நூல்கள் தொகை, வகை, விரி என்ற நிலையில் எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். பரிமேலழகர் திருக்குறள் உரையில் பால் வைப்பு, இயல் வைப்புமுறை, அதிகாரம் வைப்புமுறை, குறள் வைப்புமுறை கூறிச் சொல்லும் காரண காரிய இயைபு விளக்கம் மனங்கொளத்தக்கதாகும். பேராசிரியரிடம் இவ்வைப்புமுறை தொல்காப்பியத்தில் சிறந்து விளங்குகிறது.

ஆய்வுகளை இரண்டாகப் பிரிக்கலாம். கால உணர்வு அடிப்படை, மற்றதில் கால உணர்வு இரண்டாம் நிலைப்பட்டதே. கால வரிசைமுறை என்ற அடிப்படை வாதத்தில் வளர்ச்சிப்படிகள் அடிப்படையாய் அமையும். கால வரிசைமுறை என்ற அமைப்பிலுள்ள குறைபாடு எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரே தலைப்பின்கீழ்ச் சொல்ல வேண்டி வரும். ஆய்வறிக்கையின் உறுப்புக்களில் இடைத்தொடர்பு மிக முக்கியமானது. மெய்ம்மைகளை, கருத்துக்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கூறவேண்டும். கடின உழைப்பால் நிரல்பட எழுதவேண்டும். பெரும் பிரிவுகளிடையே இயைபு, இயல்களிடையே இயைபு, அதன் உட்பிரிவுகளில் இயைபு, பத்திகளில் இயைபு, வாக்கிய இயைபு, அதன் சொல்லாட்சி இயைபு என அமைக்கப்படுவதாகும்.

## 11.3.4. முன்னுரை உருவாக்கம்

சிக்கலின் தன்மை, ஆய்வின் பரப்பு, கண்டுபிடிப்பின் சுருக்கம் முதலியவற்றை முன்னுரையில் சொல்லிவிட வேண்டும். முன்னுரையில் நெறிமுறைகளைப் பற்றி அவசியம் குறிப்பிட வேண்டும். ஆய்வின் வரலாறு, பின்னணி, தற்போதை நிலை, சிக்கலின் இன்றியமையாமை முதலியவற்றை விளக்கியாக வேண்டும். முன்னுரை மூலம் எதை உணர்த்தப் போகிறது என்பதைத் தொலைநோக்காகக் காட்டுவது என்று குறிப்பிடலாம்.

ஆய்வுரை என்பது ஆய்வுச் சிக்கலின் விளக்கம் என்பர். ஆய்வுத் தலைப்பின் விளக்கம், ஆய்வு நோக்கு, போக்கு ஆகியவற்றை முன்னதாக விளக்கிவிட வேண்டும். ஆய்விற்குப் பின்பற்றிய முறைகள், ஆய்வின் பரப்பு சுட்டிக் காட்ட வேண்டும். சான்று மூலமும் சுருக்கித்தர

வேண்டும். கருதுகோளைப் பற்றி விளக்கியாக வேண்டும். ஆய்வுச் சிக்கலை விளக்குவதே இப்பகுதியின் பயனாகும். ஆய்வுப் பரப்பினைச் சுட்டிக் காட்டும்போது தடைகளை விளக்கியாக வேண்டும். ஆய்வு என்பது தொடரோட்டம் போன்றது என்பதை மறக்கக் கூடாது. முன்னுரையில் 'யான்', 'எனது' என்ற வாசகங்கள் இடம்பெறக் கூடாது. ஆய்வாளர் மற்றவர் ஆய்வைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். சான்று மூலம் பற்றிச் சுருக்கி எழுதவேண்டும். முதன்மைச் சான்றுகள், துணைமைச் சான்றுகள் பற்றியும் சுருக்கமாகக் கூறவேண்டும். பின்பு கருதுகோள் பற்றி விளக்க வேண்டும். முதல் இயல் சுருக்கமாக அமைவதுன் தான் சொல்ல வந்த செய்தியை முழுமை உடையதாக அமைக்க வேண்டும்.

## 11.3.5. ஆய்வுநெறி விளக்கம்

ஆய்வு நெறியை விளக்கி எழுதுவது மிக இன்றியமையாத பகுதியாகும். ஆய்வு கள ஆய்வைச் சார்ந்ததா? துணைநூற்பட்டியலைச் சார்ந்ததா? செய்ம்முறைப் பயிற்சியைச் சார்ந்ததா? என்பதை விளக்கியாக வேண்டும். சான்று மூலங்களைத் தொகுக்கும் உத்தி மிகவும் முக்கியமானதாகும். கருதுகோளின் நிறை, குறைகளை ஆராய வேண்டும். மெய்ம்மை என்பது சான்று ஆதாரங்களாகும். இம்மெய்ம்மைகளைப் பகுத்து ஆராய வேண்டும். மெய்ம்மைகளை விளக்கப் புள்ளி விவர அட்டவணை, விளக்கப்படங்கள், வரைபடங்கள் தேவையாயின் அவற்றையும் தரப்பட வேண்டும். சில நேரங்களில் கருதுகோளுக்கு மாறாகவும் முடிவு இருப்பதுண்டு. முடிபுகளைத் தெளிவாகத் தரவேண்டும். கண்டுபிடிப்புக்கள் இன்றைய கொள்கைக்கும் நடைமுறைக்கும் ஒத்ததாக இருக்க வேண்டும். ஆய்வாளர் முக்கியமான இடங்களில் எல்லாம் தம் ஆய்வுக்குத்தக்க சான்றுகளைக் காட்ட வேண்டும். கற்பனை முழுவதும் தவிர்க்க வேண்டும். இன்றைய ஆய்வாளர்களில் பெரும்பகுதியினர் பரந்த மனத்துடன் ஆய்வுலகில் புகுந்துள்ளனர் என்பது மகிழ்ச்சியூட்டும் செய்தியாகும். இன்றைய ஆய்வில் மிகையாகப் பொதுமைப்படுத்தும் போக்கு, குத்துமதிப்பாகச் சராசரிப்படுத்தும் போக்கு, அனுமானித்தல், பொதுமைப்படுத்துதல் போன்றவற்றில் மிக்க கவனமும், கூரிய மதிநுட்பமும் வேண்டும். ஆய்வில் தெளிவும் விளக்கமுமே தேவைப்படுவன. சிக்கல்கள் மிகக்

குறிப்பு

குழப்பமாகவும் கண்டுபிடிப்புக்கள் மிகப் புதுமையாகவும் இருக்கும்போது மொழிநடை மிக எளிமையாக இருக்க வேண்டும். மெய்ம்மைகளைத் திரித்துக் கூறக்கூடாது. ஆய்வாளர்கள் விருப்பு வெறுப்பற்ற மனம் உடையவர்களாகத் திகழவேண்டும்.

ஆய்வு மேற்கொண்டு தொடரப்படுவதற்குத் தலைப்பு உட்கருத்தாகும். ஒவ்வொரு ஆய்வேட்டிற்கும் சிக்கல்கள், விடை காணவேண்டிய எவ்வகை ஆய்வு தேவைப்படும் என்பதனையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். முடிபுகள் என்பன அரிமா நோக்குடையன. மெய்ம்மை என்பது ஆய்வாளர் தம் ஆராய்வினால் சான்று கண்டு கூறியவை. மெய்ம்மை வழியில் இருந்து தருக்க ரீதியாகப் பெறப்பட்டமை, உய்த்துணரப்படுபவை, கண்டுபிடிப்புக்களிலிருந்து உய்த்துரணப்படுவதாகும். மெய்ம்மைகளும் கண்டுபிடிப்புக்களும் எதை உணர்த்துகிறதோ அதுவே முடிவாகும். மெய்ம்மைகள், கண்டுபிடிப்புக்கள் முதலியவற்றை முன்னுரையில் எழுதுதல் வேண்டும். பரிந்துரைகளை ஆய்வாளர் கூறும்போது அவரது திறமை வெளிப்படும். இதற்குப் பயிற்சியும் மொழிப் புலமையும் வேண்டும்.

## 11.3.6. குறிப்புக்களை ஆளும் திறன்

குறிப்புக்களைத் துல்லியமாகவும், தேவைக்கேற்ற அளவும் எவ்வெவ்வாறு தேடி எடுக்கிறோமோ அதற்கேற்பச் செம்மை சிறப்புற அமையும். குறிப்புக்களைத் தனித்தனி அட்டைகளில் அல்லது உதிரித்தாள்களில் எழுதி வருவதே நல்லது. இதனால் அறிக்கையின் அமைப்பு சிறப்புறும். எழுதுகின்ற நிலையில் தனித்தனிக் குறிப்புக்கள் பேருதவி புரியும். அடிக்கடி மாற்றியமைப்பதற்கு வசதியாக உதிரித்தாள்களை எழுதுவதே நல்லது. சில தலைப்பிலுள்ள குறிப்புக்கள் போதுமானவை அல்ல எனக் கண்டுபிடிப்பதற்கும் இது உதவும். இ∴து புள்ளி விவரங்கள் தொகுப்பதற்கும் பயன்படும். உதிரித்தாள்களில் உள்ள குறிப்புக்கள் பல்வேறு இடங்களில் பயன்படுத்த வசதியாக இருக்கும். ஆய்வாளர் குறிப்புக்களை நினைவுபடுத்தி எந்தெந்த இடங்களில் அமைய வேண்டுமோ அந்தந்த இடங்களில் சேர்ப்பார். இக்குறிப்புக்களைத் தொகுத்தும் வகுத்தும் எழுதின் தேவைக்கேற்ற இடங்களில் பயன்படுத்தலாம். ஒவ்வொரு

குறிப்பு

தலைப்பிலும் எழுதும்போது எதை நீட்டி எழுதலாம், எதைச் சுருக்கமாக எழுதலாம் என நினைவிற் கொள்ளப்படும். குறிப்புக்களைத் துல்லியமாகவும் தேவைக்கேற்ற அளவும் எவ்வெவ்வாறு தேடி எடுக்கின்றோமோ அதற்கேற்பச் செம்மை சிறப்புற அமையும். குறிப்புக்களை எடுத்தாளும் திறமையுடையவராக இருக்க வேண்டும். ஆய்வேட்டை எழுதும்போது குறிப்புக்களைத் தொகுத்தும் வகுத்தும் எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு தலைப்பும் எழுதும்போதும் குறிப்புக்களை நினைவுகூர வேண்டும்.

## 11.3.7. ஆய்வேடு உருவாக்குதலில் சிந்தனை

ஆய்வேடு உருவாக்கும்போது சுயமாகச் சிந்திக்க வேண்டும். அமைப்பு நிலையிலே அது இன்றியமையாதது. மெய்ம்மைகள், நெறிமுறைகள் முதலியவற்றைப் பற்றி அவர் ஆராய்ந்து கொண்டே இருக்க வேண்டும். எழுதும்போது மட்டும் சிந்தித்தால் போதும் என்று இருக்கக் கூடாது. எல்லாவற்றைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

## 11.3.8. ஆய்வேட்டின் வடிவ வரையறை

அடிப்படையான வரையறை ஆய்வறிக்கைக்கு இன்றியமையாதது. இதனை ஆய்வின் தொடக்க நிலையிலே செய்து கொள்ளலாம் அல்லது ஆய்வறிக்கையின் முதல்படி எழுதும்போதும் வடிவ வரையறை செய்து கொள்ளலாம். இவை ஆய்வேட்டை நன்கு எழுதுவதற்குத் துணைசெய்யும். எழுதத் தொடங்கும் முன்பு இவ்வரையறை இருப்பது மிக இன்றியமையாததாகும். ஒவ்வொரு பெருந்தலைப்பாகவும் உட்தலைப்பினைப் பார்த்தும் எழுதவேண்டும். தொகை, வகை, விரி என்ற நிலையில் எழுதும்போதும் குறிப்புக்களைக் கவனமாகக் கவனிக்க வேண்டும். ஏதேனும் ஓர் அடிப்படைத் திட்டம் போதுமானது. இவ்வரையறைத் திட்டம் எவ்வளவு விளக்கமாகவும் விரிவாகவும் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆய்வறிக்கை எழுதும் திறமை எளிமையாக அமையும். ஏதேனும் வரையறை அடிப்படையில் தொடங்கியே ஆகவேண்டும். ஆங்காங்குச் சிறுசிறு மாற்றங்கள் செய்து கொள்ளலாம். வரையறை நன்கு அமைந்தால் எழுதுவது சுலபமாக இருக்கும். ஆய்வேட்டைத் தொடர்ந்து எழுதுவதற்குக் காரண காரிய

குறிப்பு

முறையில் உட்தலைப்புக்களாய் அமைந்து ஆய்வேட்டின் சட்டகமாய் விளங்கும். எனவே தலைப்பு அடிப்படை வரையறை மிகவும் இன்றியமையாததாகும். ஆய்வேட்டை எழுதத் தொடங்கும்போது பத்தி முறை வரையறை மிகவும் இன்றியமையாததாகும். ஒவ்வொரு பத்திக்கும் மற்றொரு பத்திக்கும் சங்கிலித் தொடர்போல் பின்னிப்பிணைந்து அமைய வேண்டும்.

## 11.3.9. ஆய்வறிக்கையை விரித்து உருவாக்கல்

வரையறைத் திட்டத்தை எழுதி முடித்த பிறகே ஆய்வறிக்கையின் முதற்படியை எழுதத் தொடங்க வேண்டும். கருத்தும் மொழிநடையும் தெளிவாக இருத்தலைக் காணலாம். சில ஆய்வேடுகள் சிக்கல் தீர்வில் முனையாமல் சிக்கலின் சிறப்புக்களைப் பற்றியே அழுத்தம் தரும். இத்தகைய குறைபாட்டுக்குக் காரணம் இளம் ஆய்வாளர்களின் பயிற்சியின்மையேயாகும். சிக்கலான மொழிநடையில் எழுத விரும்புவதால் மற்றொன்று விரித்தல் போன்ற குறைகள் நேரலாம். வாசகரை நினைவிற் கொள்ளுதல், மெய்ம்மைகளிலும் சிக்கல்களிலும் ஆய்வாளருக்கு இருக்கும் பிடிப்பு, அவரது மொழிப்புலமை, குறிப்புக்களின் வடிவம் முதலியன ஒரு வழியில் துறை சார்புடையார்க்கு எழுதுவது எளிது. அவர்களுக்குச் சிக்கலின் தன்மை புரியும். எழுதும்போது ஆற்றொழுக்கான எளிய வைப்புமுறை போதுமானதாகும்.

## 11.3.10. செம்மைப்படி உருவாக்கல்

ஆய்வேடு செம்மைப்படியாக உருவாக வேண்டுமானால் மூன்று முறை எழுதி செம்மைப்படியாக உருவாக்க வேண்டும்.

### 11.3.10.1. முதற்படி உருவாக்கல்

முதற்படி எழுதும்போது பொருளடக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும். தொடர்புடைய அனைத்தும் எழுதுவதாகவும் ஆய்வறிக்கை முழுவதையும் ஓர் ஒருமைப்பாட்டிற்குள் கொண்டு வருவதையும் போற்ற வேண்டும். எழுத்து நிலையில் முதல்படி மிகவும் முக்கியமானதாகும். சான்றுகளை ஒருங்கிணைத்துப் பின்னவும் இயைபுகளைத் தெளிவுபடுத்தவும் ஆய்வாளர் தாமே மதிப்பீடு செய்து கொள்ளவும் இது உதவும். இரண்டாவது படி எழுதும்போது வேண்டாதவற்றை நீக்கி

விடலாம். இம்முதல்படி நிலையில் மெய்ம்மைச் சான்று முழுவதையும்-மெய்ம்மைகளின் சுருக்கம், செம்மை, மெய்ம்மைகளின் காரண காரிய இயைபு, கருத்தோட்டம் போன்றவற்றைக் குறிக்கோள்களாகக் கொள்ள வேண்டும். எல்லாக் கருத்துக்களையும் விரித்து எழுத வேண்டும். புதிய கருத்துக்கள் தோன்றினால், அவற்றையும் இணைத்துக் கொள்ள வேண்டும். குறிப்புக்களின் முக்கிய சாராம்சத்தை மட்டும் எழுதிக் கொள்ள வேண்டும். ஆய்வாளர் விருப்பு, வெறுப்பைக் காட்டுவதைத் தவிர்க்க வேண்டும். யாம், எனது போன்ற சொற்களை ஆய்வேட்டில் பயன்படுத்தக் கூடாது. முடிந்த மட்டும் உகந்த எழுத்து நடையைப் பின்பற்ற வேண்டும். முதலிலேயே முன்னுரை எழுதுவதாகும். ஆனால், அதனைக் கடைசியாகத்தான் எழுத வேண்டும். தொகுத்தவற்றை வைத்துக்கொண்டு சிந்தித்துக் கொண்டே எழுத்து வடிவாக்க வேண்டும். ஆய்வேட்டில் மிகவும் முக்கியமான பகுதி முடிவுரையாகும். முடிபுகளை எழுதும் பகுதி ஆய்வேட்டில் சுருங்கியதாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். அஃது ஆய்வேட்டில் சிறந்த வலுமிக்க பகுதியாகும். பொருளடக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஆய்வறிக்கை முழுவதையும ஓர் ஒருமைப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும். சான்றுகளை ஒருங்கிணைத்துப் பின்னவும் இயைபுகளைத் தெளிவுபடுத்தவும் முழுமையான சமநிலைப்பாடு, அமைப்பு ஆகியவற்றை ஆய்வாளர் தயார் செய்ய இம்முதற்படி உதவும். முதலில் மையப் பகுதியைத்தான் எழுத வேண்டும். முடிவுரையை நன்கு சிந்தித்து எழுத வேண்டும்.

## 11.3.10.2. இரண்டாம்படி உருவாக்கல்

இரண்டாம் படியில் ஆய்வாளர் படிவத்திற்கும் மொழிக்கும் மிக்க கவனம் செலுத்த வேண்டும். ஆய்வேட்டிற்கு நல்ல வடிவம் கொடுக்க வேண்டும். பதிப்புமுறை திருத்தங்கள் செய்ய வேண்டும். இரண்டாவது படி எழுதும்போது மொழித்திறன் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். இங்குதான் நடை, சொல்லாட்சித்திறன், தொடராட்சித்திறன் முதலியவற்றை நன்கு கவனிக்க வேண்டும். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், சொல்லை உரிய இடத்தில் கவனமாக ஆளவேண்டும். சந்திப்பிழை, ஒற்றுக்கள், ஒருமை-பன்மை மயக்கம், நிரல்பட எழுதிச்

குறிப்பு

செல்லல் முதலியவற்றில் நன்கு கவனம் செலுத்த வேண்டும். பத்திரிகை நடை, ஆணை நடை, ஒட்டு நடை, விளம்பர நடை போன்ற நடைகளைத் தவிர்க்க வேண்டும். முடிந்தமட்டும் சொந்தப் பாணியில் எழுத வேண்டும். சுருக்கமாகக் கருத்துக்களை வெளியிட்டால் மொழிநடை நன்றாக அமையும். மொழித்திறன் ஆய்வையும் அறிக்கையையும் சிறப்புடையதாக ஆக்கும். நிரல்பட எழுதிச் செல்லுதல் அடிப்படையில் இன்றியமையாததாகும். தெளிவுடைமையும் மிகத் தேவையானது. அலங்கார நடையில் எழுதுதல் கூடாது. கூறியது கூறல், தெளிவின்மை, தேவையின்றி நுட்பமாய் ஆராய்வது போல் காட்டிக் கொள்ளல், பத்திரிகை நடை, ஆணை நடை போன்றவற்றைக் கையாளக் கூடாது. தெளிவாகிறது, புலப்படுகிறது போன்ற சொற்களும் நடையும் பெரிதும் பயன்படும். குறிப்பிட்ட கருத்து ஒன்றிற்கு ஆளப்படாத பயனில் சொற்களை விட்டுவிடவேண்டும். நீண்ட திரும்பத் திரும்ப வரும் சொற்களைத் தவிர்த்திட வேண்டும். பத்திகள், உட்பிரிவுகள், இயல்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஆய்வறிக்கை முழுமையாகவும் அளவோடும் முறையோடும் அமைந்துள்ளதா எனப் பார்க்க வேண்டும். சொல்லும் தொடரும் மரபுப் பண்போடு அமைந்துள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

### 11.3.10.3. மூன்றாவதுபடி உருவாக்கல்

மூன்றாவது படியே இறுதியான படியாகும். இறுதியில் சில திருத்தங்களைச் செய்யவும் சிறுசிறு அழகுபடுத்தல்களை மேற்கொள்ளவும் இது பயன்படும். மூன்றாவது படி செம்படியாகும். மேன்மேலும் தெளிவும் திருத்தமும் செம்மையும் மூன்றாவது படியில்தான் அமையும். குறைந்தது மூன்று முறையேனும் எழுதி எழுதித் திருத்தமுற்ற பிறகே ஆய்வேட்டை முழுமையாக்க வேண்டும். மூன்றாவது படிதான் முழுமையான படியாகும்.

### முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. பொதுமக்களுக்கான ஆய்வேடு உருவாக்கத்தின் தேவை என்ன?
2. ஆய்வேடு உருவாக்கும் மூன்று பிரிவுகள் யாவை?
3. ஆய்வேட்டில் முன்னுரையின் நோக்கம் யாது?

4. ஆய்வாளர் ஆய்வேட்டில் குறிப்புகளை ஆளும் திறத்தை விளக்குக.
5. ஆய்வேட்டின் வடிவ வரையறை குறித்துக் கூறுக.
6. செம்மைப்படி உருவாக்கும் படிநிலைகள் யாவை?

குறிப்பு

## 11.4. ஆய்வேட்டின் அமைப்பு

மனிதனுக்கும், விலங்கிற்கும், பறவைக்கும் உடற்கூறு அமைவது போல ஓர் ஆய்வேட்டிற்கும் உடற்கூறு உண்டு. ஓர் ஆய்வேட்டில் புற அமைப்பு, அக அமைப்பு என இரு பகுதிகள் உண்டு.

### 11.4.1. ஆய்வேட்டின் புற அமைதி

ஆய்வேட்டின் புற அமைப்பு பொதுவானது; யாராலும் எளிதாக விளங்கிக் கொள்ளக் கூடியது. ஆய்வேட்டின் பொருளடக்கத்தில் இருந்து பின்னிணைப்புகள் வரையிலான பகுதிகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதும், இயல் பிரித்தல், தலைப்பில், பத்தி பிரித்தல், அடிக்குறிப்பிடுதல், சான்றுகாட்டல், மேற்கோள் ஆட்சி, பக்கவரையறை, சான்றிதழ்கள், தாளின் அளவு, அச்செழுத்தின் உரு, அளவு, ஆய்வேட்டைத் தைத்தல் கட்டுதல் போன்றன எல்லாம் புறக்கட்டமைப்பில் அடங்கும். பெரும்பாலான ஆய்வேடுகளில் இவை சரியாகவே இருக்கக் காணலாம். பட்டு, வெல்வெட் துணிகளால் பளபளவென அட்டையிட்டுக் கைவண்ணம் காட்டும், படித்த கூலித் தொழிலாளர் கைவண்ணத்தைக் காட்டும் ஆய்வேடுகள் பல உள்ளன. இவற்றைப் பற்றியெல்லாம் பின்வரும் கூறு பதின்மூன்று மற்றும் பதினான்கில் காணலாம். இங்கு அக அமைப்புப் பற்றி மட்டும் காணலாம்.

### 11.4.2. ஆய்வேட்டின் அக அமைதி

ஓர் ஆய்வேட்டின் உள்ளமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என எண்ணுதல் ஆய்வாளருக்கு அசியமாகிறது. ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆய்வேடுகளுக்குரிய அக அமைதியானது முன்னுரை வரைவு, ஆய்வுத் தலைப்பு விளக்கம், மேற்கொள்ளும் ஆய்வு முறை விளக்கம், கருதுகோள் விளக்கம், இயல் முன்னுரையும் பத்தி பிரிப்பும், எடுத்துரை உத்திகள், இயல் முடிப்பு, அடிக்குறிப்பும் மேற்கோளும்,

ஆய்வு நடை, இயல் இயைபு, முடிவுரை, பின்னிணைப்புகள் என்ற வகைப்பாட்டில் ஆய்வேட்டின் உட்பகுதி அமைய வேண்டும். இவற்றில் பின்வரும் கூறு பதினான்கில் அடிக்குறிப்பு, மேற்கோள் ஆகியன பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இங்கு ஏனையவற்றை மட்டும் காணலாம்.

### 11.4.2.1. முன்னுரை வரைவு

ஆய்வேட்டின் முன்னுரையை ஆய்வாளர் தொடக்கத்திலேயே எழுதுதல் கூடாது. ஆய்வின் இயல்கள் அனைத்தும் எழுதி ஆய்வு முடிவுரையையும் எழுதிய பின்னரே முன்னுரை எழுதப்பெறல் வேண்டும். ஆய்வேட்டின் அகத்தே எவையெல்லாம் இடம்பெறுகின்றன என்று காட்டுவதோடு அமையாது, ஆய்வின் நோக்கம், ஆய்வின் பின்புலம், ஆய்வாளரின் ஆர்வம், தகுதி, தலைப்பிற் கொண்ட ஈடுபாடு, ஆய்வு முன்னோடிகள், ஆய்வுச் சிக்கலைத் தெரிதலின் காரணம், ஆய்வின் வரையறை-எல்லைகள், பரப்பு, ஆய்நெறி, ஆய்வுப் பகுப்பு, மேற்கொண்ட உத்திகள், எதிர்கொண்ட இடர்ப்பாடுகள், கருதுகோள், உதவியாய் அமைந்தன, துணைநின்றோர், பயன்தந்த நூலகங்கள், களங்கள், ஆய்வுச் சிக்கலில் முடிவுகண்ட பகுதிகள், முடிவு காணாப் பகுதிகள், எதிர்கால ஆய்வுத் தொடர்ச்சிக்கு அமைந்த இடங்கள், வாய்ப்புகள் ஆகிய அனைத்தும் முன்னுரையில் அமைக்க வேண்டும். ஒவ்வோர் ஆய்விற்கும் ஓர் தூண்டல், ஓர் உந்துதல், ஓர் பின்புல நிகழ்வு, ஓர் உள்ளக் கிளர்ச்சி, பிறரால் ஓர் அறிவுறுத்தல், ஓர் சிக்கலின் தோற்றம் இருக்கக் கூடும். அதனை முன்னுரையில் கூறுதல் வேண்டும். ஆய்வாளர் தமக்குமுன் இந்தத் துறையில் ஆய்வு நிகழத்தியோரை ஒளிவு மறைவின்றி முன்னுரையில் குறிப்பிடவேண்டும். ஆய்வாளரின் ஆய்வுத் தலைப்பு குறித்து யாரேனும் ஒரு கட்டுரை எழுதியிருப்பினும் சிறு தகவல் அளிப்பினும் அவற்றை மறவாது முன்னுரையில் குறிப்பிட்டுப் போற்றுதல் ஆய்வு நாகரிகமாகும்.

### 11.4.2.2. ஆய்வுத் தலைப்பு விளக்கம்

ஆய்வுக்கு மேற்கொண்ட தலைப்புப் பற்றி முன்னுரையில் மிக எளிய நடையில் விளக்குதல் வேண்டும். அயல்மொழிப் பெயர்கள், தொழில்நுட்பக் கருவிகளின் பெயர்கள், குறியீட்டுப் பெயர்கள், புனைபெயர்கள், ஊர் ஆறு போன்றவற்றின் பெயர்கள் ஆகியவை

ஆய்வுத் தலைபபில் இடம்பெறுமானால் அவற்றை முன்னுரைக்கண் விளக்குதல் நலம். சில நேரங்களில் ஒரு தலைப்பைக் குறித்த விளக்கமே தனி இயலாக அமைவதும் உண்டு. தலைப்பை உறுதி செய்து கொள்ள மேற்கொள்ளப்பெற்ற படிப்பு, சிந்தனை, கலந்தாய்வு, விவாதம், வழிகாட்டல் ஆகியவற்றைப் பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.

## 11.4.2.3. மேற்கொள்ளும் ஆய்வுமுறை விளக்கம்

ஆய்வாளர் தாம் மேற்கொள்ளும் ஆய்வு அணுகுமுறை எத்தன்மைத்து என்பதை விளக்குதல் வேண்டும். ஒவ்வோர் ஆய்விலும் மையக் கருத்தை அணுகிடப் பயன்பட்ட ஆய்வு முறையே அந்த ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வுமுறையாகும். அதாவது, வரலாற்றாய்வு அணுகுமுறை, ஒப்பீட்டாய்வு அணுகுமுறை, சோதனை ஆய்வு அணுகுமுறை, உய்த்துணர் ஆய்வு அணுகுமுறை, செலுத்துநிலை ஆய்வு அணுகுமுறை, அமைப்பியல் ஆய்வு அணுகுமுறை, நடைமுறைசார் ஆய்வு அணுகுமுறை, மாதிரி ஆய்வு அணுகுமுறை, அளந்தறி ஆய்வு அணுகுமுறை, மதிப்பீட்டாய்வு அணுகுமுறை, புள்ளிவிவர ஆய்வு அணுகுமுறை, விளக்கவியல் ஆய்வு அணுகுமுறை, செயல்முறை ஆய்வு அணுகுமுறை, மரபியல் ஆய்வு அணுகுமுறை, நாட்டுப்புறவியல்ஆய்வு அணுகுமுறை, வரலாற்றுப் புவியியல் ஆய்வு அணுகுமுறை, வரலாற்று மீட்டுருவாக்க ஆய்வு அணுகுமுறை என்றெல்லாம் ஆய்வாளர் மேற்கொள்ளும் ஆய்வு அணுகுமுறைகள் அமையலாம். குறிப்பாக, ந. சுப்பிரமணியன் ‘சங்ககால ஆட்சியியல்’ என்னும் தம் ஆய்வேட்டில் சங்கம் என்ற அமைப்பு இருந்தது பற்றி வரிசையாகச் சான்றுகளைத் தந்த பின்பு,

> “சங்ககாலம் தனக்குப் பின்பு சமய வழிபாடு உருவாக இடமளித்தது. தமிழிலக்கியத்தின் பொற்காலம், ரோம நாட்டின் அகஸ்டஸ் காலமான கி.பி.4ஆம் நூற்றாண்டுடன் முடிந்திருக்க வேண்டும். எனவே, ஏறத்தாழச் சங்கமும் மதுரையை ஆண்ட கடுங்கோன், காஞ்சியை ஆண்ட சிம்ம விஷ்ணு ஆகியோருக்கு முற்பட்டதாதல் வேண்டும்”

என்று குறிப்பிடுகிறார். இது வரலாற்றியல் ஆய்வு அணுகுமுறைக்கு ஒரு சான்றாகும். நூல் முழுமையிலும் இம்முறை தழுவியே ஆய்வு

நடக்கின்றது. அறிஞர் தமிழண்ணல், சங்க இலக்கியங்களை வடமொழி, கிரேக்க இலத்தீன் மொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்கின்றார். பொதுமைக் கூறுகளையும், இலக்கியக் கொள்கைகளையும் ஆராயும் அவர்தம் 'சங்க இலக்கிய ஒப்பீடு' என்னும் நூல் ஒப்பீட்டாய்வு அணுகுமுறைக்கு எடுத்துக்காட்டாக அமையக் காணலாம்.

## 11.4.2.4. கருதுகோள் விளக்கம்

ஆய்வைத் தொடர்ந்து செலுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த மூலக் கருதுகோள் இன்னதென்று முன்னுரைக்கண் குறிப்பிட வேண்டும். அக்கருதுகோள் இறுதிவரை நின்று ஆய்வு முடிவாக உருக்கொண்டதா என்பதும் விளக்கப்பெறல் வேண்டும். இன்னின்ன சான்றாதாரங்களால், ஒரு கருதுகோள் கைவிடப்பட்டது என்பதும் முன்னுரையில் கூறப்படவேண்டும். கருதுகோளைப் பெறுதற்குக் காரணமாக அமைந்த நிகழ்வு, சிந்தனை, பட்டறிவு, பிறர் கூற்று ஆகியனவும் முன்னுரையிலேயே இடம்பெறல் வேண்டும்.

## 11.4.2.5. இயல் முன்னுரை

ஒவ்வோர் இயலுக்கும் ஒரு சுருக்கமான முன்னுரை அமைதல் வேண்டும். நெற்றிப் பொட்டைப் போலவும் தாலியைப் போலவும் பெண்ணின் மங்கலநிலை உணர்த்தும் கட்டுரைக்கண் இடம்பெறும் செய்தியைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தொடக்கத்தில் முன்னுரையாகத் தருதல் வேண்டும். கபிலர் பற்றி ஆராயப் புகுந்த வே. வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள், 'கபிலர்' என்ற தம் நூலின் முதல் இயலில்,

> "தமிழ் நாட்டில் கபிலர் என்னும் பெயரால் விளங்கிய புலவர் இருவர்; அவராவார். தொல்கபிலரும் கபிலரும். இவர்களேயன்றி, சாங்கிய மதத்தின் ஆசிரியராகிய கபில முனிவரொருவரும் இருந்தனர். அவர் இத்தமிழ்நாட்டில் வாழ்ந்த வல்லராயினும் சமய நூலறிவினால் அவர் பெயரும் இந்நாட்டில் நிலைபெற்றிருக்கின்றது. கபில முனிவரைத் திருமாலின் அவதாரம் என்று புகழ்ந்து கூறுதலும் உண்டு.

நம் நாட்டில், பெரும்புலமை வாய்ந்து விளங்கிய கபிலர் என்னும் புலவருக்கு முற்பட்ட காலத்தில் கபிலர் என்னும் பெயருடைய வேறொரு புலவர் வாழ்ந்திருந்தார் ஆகலின் அவருக்குத் 'தொல்' என்னும் அடைமொழி கொடுத்துத் தொல்கபிலர் என்று அவரை வழங்குகின்றனர். ஆதி சங்கராசாரியர், ஆதி வண் சடகோபசுவாமி என வழங்குதலும் இம்முறையில் அமைந்தனவேயாகும். தமிழ்ப் புலவராய்த் திகழ்ந்திருந்த கபிலரிருவருள் பிற்காலத்தவராகிய கபிலரது வரலாறே ஈண்டு நம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகின்றது"

என்ற இருபத்திகளை முன்னுரையாகத் தந்துள்ளார். நல்ல இயல் முன்னுரைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாக அமையும்.

## 11.4.2.6. பத்திப் பிரிப்பு

ஒரு கருத்திற்கு ஒரு பத்தி என்ற வரையறையை ஆய்வாளர் கடைப்பிடிக்க வேண்டும். கருத்துணர்ந்த நான்கைந்து உட்பிரிவுகள் தேவைப்படுமாயின் ஒவ்வோர் உட்பிரிவிற்கும் ஒரு பத்தியைத் தேர்ந்து கொள்ள வேண்டும். பத்திக்குள் வருகின்ற கூற்று, நூற்பெயர், இடப்பெயர் போன்றவை தக்க குறிகளுடன் இடம்பெறல் வேண்டும். வேறுமொழிப் பெயராயின் பத்திக்குள் அடைப்புக்குறியின் உள்ளே தரல் வேண்டும். கருத்தின் உட்பிரிவுகளைக் குறித்துத் தனித்தனியே பத்தியமைக்கும்போது முதற்பத்தியில், 'முதலாவதாகக் காணத்தக்கது' என்றும் இரண்டாம் பத்தியில் 'இனி இரண்டாவதாகக் காணத்தக்கது' என்றும் மூன்றாம் பத்தியில் 'முற்கூறிய இரண்டை அடுத்து மூன்றாவதாகக் காணத்தக்கது' என்றும் எழுதப்பெறல் வேண்டும். இத்தகைய அமைப்பைப் பன்னூற்றாண்டுக்கு முன்பே பரிமேலழகர் தாம் வரைந்த திருக்குறளுரையில் கடைப்பிடித்துள்ளார் என்பது கருதத்தக்கது. பத்திகளுக்கு எண்ணிடும் முறையும் பின்பற்றப்படுகிறது.

## 11.4.2.7. எடுத்துரை உத்திகள்

ஓரியலுக்குள் கூறும் கருத்தை உரைப்பதற்குப் பயன்படும் உத்திகள் நோக்கத் தக்கன. பாரதியின் தேசிய கீதங்களில் வரலாற்றுக் குறிப்புக்கள் என்பது ஆய்வேட்டில் ஓரியலாகும்.

குறிப்பு

- தேசத்தலைவர்களின் வரலாறுகள்.
- விடுதலை இயக்கத்தில் தேசத்தலைவர்களுக்கிருந்த தொடர்பு.
- தேசத்தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் காரணமான நிகழ்ச்சிகள்.
- தேசத்தலைவர்களின் செயல்களைப் பதிவு செய்த ஆவணங்கள்.
- பாரதி தேசத்தலைவர்களைக் குறித்துக் கவிதையில் கூறியுள்ள செய்திகள்.

என்ற ஐந்து நிலைகளில் தேசிய கீதங்கள் ஆராயப்பெற வேண்டும். வரலாற்றுக்கும் கவிதைக்கும் இடையே அமைந்த வேறுபாடுகளை ஆராய்ச்சி உத்திகளால் இனம்பிரிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக விஞ்ச் துரையும் வ.உ.சிதம்பரம் பிள்ளையும் உரையாடுவது போன்ற அமைப்புக் கற்பனையானது. உரையாடல் கற்பனையாயினும் அதிலுள்ள செய்திகள் உண்மையானவை. இவற்றைச் சரியான பொருளுணர் உத்திகளால் அறிந்து கூறவேண்டும்.

உள்ளுறை, இறைச்சி, குறிப்பு போன்றவற்றால் பொருள் புதைந்தும், மறைந்தும் இருக்கக் கூடியவற்றை வெளிப்படுத்துதல், வஞ்சப்புகழ்ச்சி, பழித்ததுபோன்று புகழ்தல் போன்றவற்றைப் புலமறிந்து தெளிவாக்குதல், அங்கதம், நிரல்நிறை, அடிமறி, கொண்டு கூட்டுப் போன்றவற்றால், தெற்றெனப் பொருள் விளங்கா இடங்களை விளக்குதல் ஆகிய செயல்களைத் தகுந்த உத்திகளைக் கொண்டு ஆய்வாளர் செய்தல் வேண்டும்.

## 11.4.2.8. இயல் முடிப்பு

ஒவ்வோரியலும் முடியும் போது அவ்வியலைத் தொடங்குமுன் படிப்பார்க்கு ஏற்படக்கூடும் ஐயங்கள், திரிபுகள் ஆகியன அகற்றப்பட்டிருக்க வேண்டும். இயல் முடிவில் இவ்வியலின் முடிவுகளாவன எனத் தொகுத்துக் கூறுதலும் நலம் பயக்கும். இயலின் இறுதிப் பத்தியில் ‘இதுகாறும் கண்டவற்றால் கீழ்வரும் மெய்ம்மைகளை அறியப் பெற்றோம்’ என்றும் முடிக்கலாம். இவ்வாறு கூறுவதன் வழி முடிவுரையைச் சுருக்கிக் கூற வாய்ப்பு உள்ளது. இயல் முடிவில் ‘இது மேலாய்வுக்குரியது’ என்றோ ‘இவை தீர்க்கப்பெறா ஐயங்களே’ என்றோ ‘இவற்றை வேறுவகையாக எண்ணக்கூடும்’ என்றோ கூறுதல் பொருந்தாது.

இயல் முடிவுகள் கூறும்போது கவனிக்கத்தக்கது ஒன்றுண்டு. உலகறிந்த மெய்ம்மைகளையும், புள்ளிவிவரத் தொகுப்புகளையும், பாட்டு, கோட்பாடு ஆகியவற்றின் விளக்கங்களையும், பாத்திரப்படைப்புகளின் பண்பு விரிவுகளையும், உவமைகள் அணிகளின் பட்டியல்களையும் இயல் முடிவில் அளித்தல் கூடாது. இந்த ஆய்வே இம்முடிவுகளைத் தந்தது எனக் கருதப்பெறுமாறு இயல் முடிவு அமைதல் வேண்டும்.

## 11.4.2.9. ஆய்வு நடை

பல ஆய்வேடுகளில் தற்செருக்குடை நடை அமைதல் இப்போது காணப்பெறுகின்றது. மறைமலை அடிகளாரின் கல்விப் பரப்பும், உ.வே.சாமிநாதையரின் உழைப்பும், சோமசுந்தர பாரதியாரின் வழக்கியலறிவும், இராகவையங்கார்களின் இலக்கியப் பயிற்சியும், வையாபுரிப் பிள்ளையின் அறிவு நுட்பமும் செருக்காக நடையைக் காட்டவில்லை. "இத்தலைப்பில் இதுவரையில் எவரும் ஆராய்ந்து கூறாத கருத்துக்களை இந்த ஆய்வேடு அளிக்கின்றது", "கலைத்துறையில் இஃது ஒரு சாதனையாகும்", "எவரும் காணாத புதிய ஆய்வு முடிவுகளை இந்த ஆய்வேட்டில் காண முடியும்" என்பன போன்றவை தேவையில்லை. தங்களுக்கு அமைந்த அளவிட முடியாத அறிவுப் பருக்கைக் கண்டு அறிஞர் பிறர் விளக்க வேண்டுமே யன்றித் தாமே வியந்து கொள்ளல் தேவையின்று. அதேபோன்று செய்யும் படைப்புக்குரிய பழைய மரபுக் கூறான அவையடக்கமும் ஆய்வேட்டுக்கு வேண்டுவதில்லை. மிரள்கின்ற நடையும் மிரட்டுகின்ற நடையுமின்றிக் காலாற மேய்ந்து வயிறார உண்டு மாலையில் மடிநிறைந்து கட்டுத்தறி நோக்கி மெல்லென வரும் பசுவின் நடைபோலவும், கடலிடைப்படிந்து முகந்தெழுந்து வானிற் கனத்துப் பரந்து பெய்ய நடக்கும் முகிலின் செலவு போலவும், ஆய்வு நடை அமைதல் வேண்டும். நீண்ட தொடர்கள் வேண்டுமிடத்து நீண்டமையலாம். குறுந்தொடராய் அமைய வேண்டிய இடத்துக் குறுந்தொடராய் அமையலாம். ஆனால் பிழைபடு நடை கூடாது. ஒரே பொருள் உடையன போலத் தோன்றும் சொற்களிடையே உள்ள பொருள் வேறுபாடு தெரியாத ஆட்சியைப் பல

குறிப்பு

ஆய்வேடுகள் காட்டுகின்றன. கடவுள்-தெய்வம்; வேந்தன்-மன்னன்; ஊடல்-துனி; அடி-வரி; பரிமாணம்-பரிணாமம்; நாட்டியம்-நட்டுவம்; சூடுதல்-அணிதல் இவைபோன்ற சொற்களின் பொருள் வேறுபாடறிந்து எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு தொடரும் முடிவான கருத்தை நோக்கி அடியிடுவதாக அமைய வேண்டும்.

காணமுடிகிறது என்று எழுதுவதில் ஒரு மயக்கநடை அமைப்பு உள்ளது. காண இயலுகின்றதா, காண முடிந்து போகின்றதா எனக் கருதுமாறு உள்ள இவ்வாட்சியைத் தவிர்க்க வேண்டும். இதுபோலச் சொல்லப்படுகின்றது, அறியப்படுகின்றது, தெரிவிக்கப்படுகின்றது, என்றும் கருத இடமிருக்கின்றது, சொன்னாலும் பிழையில்லை, கருதத்தான் வேண்டியுள்ளது போன்ற நடையமைப்புகளைத் தவிர்க்கலாம். ஆய்வேட்டின் நடை இலக்கணச் சூத்திர நடை போன்று அமைதல் நலம்.

குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியத் தோன்றும் ஆற்ற தென்ப.

இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும் வழிஅதுவே
மனையகம் புகாஅக் காலை யான.

பகற்புணர் களனே புறனென மொழிப
அவளறி உணர வருவழி யான.

இவற்றில் கூறப்பெற்றன யாவை? அகப்பொருளில் குறியென்பது இரவிலும் பகலிலும் நிகழ்வது; அவற்றுள் இரவுக்குறி என்பது வீட்டிலுள்ளவர் உரைப்பன கேட்கும் இடத்தது; பகற்குறிக்கு உரிய களமாவது மதிலின் புறத்தது ஆகும். இவ்வாறு ஒன்றை முதற்கண் தொகுத்துச் சுட்டி விளக்கம் கூறியும் பின்பு வரிசையுற ஒவ்வொன்றாய் விளக்கியும் அமைதல் நல்லதாகும்.

## 11.4.2.10. இயல் இயைபு

ஓர் ஆய்வேட்டின் தகுதி அதன் இயல் பிரிவுகளாலும், அவ்வியல்கள் ஒன்றற்கொன்று பொருந்த இயைவதாலும் பெறப்படும். ‘குறுந்தொகையில் கருப்பொருள்’ என்பது ஆய்வுத் தலைப்பு. இத்தலைப்பிற்குரிய இயல்களாக,

குறிப்பு

- குறுந்தொகைக் கட்டமைப்பும் கருத்தும்
- குறுந்தொகையும் தொல்காப்பிய இலக்கணமும்
- குறுந்தொகையில் தாவரங்கள்
- குறுந்தொகையில் உயிரினங்கள்

எனப் பிரிப்பது எவ்வளவு தவறென நினைத்தல் வேண்டும். இந்த ஆய்வேட்டை மேலோட்டமாகப் பார்ப்பவர் கருப்பொருள்வேறு, தாவரம் வேறு, உயிரினம் வேறு என்றன்றோ கருதுவர். இந்த ஆய்வேட்டின் இயல்கள்,

- குறுந்தொகை நூலமைப்பும் நுவல் பொருளும்
- கருப்பொருள் இலக்கணம்
- குறுந்தொகையில் கருப்பொருள் பெறுமிடம்
- குறுந்தொகையில் கருப்பொருள் உணர்த்தும் செய்திகள்
- குறுந்தொகையில் கருப்பொருள் பிறபொருள் இயைபு

என்றவாறு அமைதல் ஏற்றதாகும். ஒவ்வோர் இயலுக்கும் உள்ள இயைபு மிகவும் பொருத்தமானதாக அமைய வேண்டும். ‘தமிழகத்தில் பத்தாண்டுக்கல்வி’ என்னும் ஆய்வேட்டில்,

- தமிழகத்தில் தொடக்கக் கல்வி
- தமிழகத்தில் இடைநிலைக் கல்வி
- தமிழகத்தில் மேனிலைக் கல்வி
- தமிழகத்தில் முறைசாராக் கல்வி
- தமிழகத்தில் கல்விச் சிக்கல்களும் தீர்வுகளும்
- தமிழகத்தில் கல்வித் திட்டமிடுதல்

என்றவாறு இயைபுற அமைக்கப்பட்டமை காணற்குரியது. இன்ன இயலுக்குப் பின் இன்ன இயல் ஏன் வைக்கப்பட்டது என எண்ணி உணருமாறு இயல்வைப்பு அமைக்கப்பெற வேண்டும். கல்வியின் பெருமையினைத் திருவள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்ற நான்கு அதிகாரங்களாகக் காட்டுகிறார். கல்வி என்ற அதிகாரத்திற்குப்பின் கல்லாமை என்ற அதிகாரம் வைக்கப்பட்ட சிறப்பைப் பரிமேலழகர், “கல்விச் சிறப்பு மேல்விதி முகத்தாற் கூறிய துணையான் முற்றுப் பெறாமை நோக்கி, எதிர்மறை முகத்தானும் கூறுகின்றதாதலின் இது கல்வியின் பின் வைக்கப்பட்டது என்றும்,

கற்றவழி அதனினாய அறிவை வலியுறுத்தலானும் கல்லாத வழியும் அதனை உண்டாக்குதலாலும் இது கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது” என்கின்றார்.

குறிப்பு

கல்வி கேள்விகளினாய அறிவோடு உண்மையறிவுடையனாதல் என்றவாறு அதிகார இயைபு காட்டியுள்ளமை காணத்தகும். பெரும்பாலான ஆய்வேடுகளில் இந்த அதிகார இயைபு அமைவதில்லை. நூலைக் குறித்த புறச் செய்திகள், புலவர் வரலாறுகள், இடம் களன் ஆகியவற்றின் தலைப்பு பல ஆய்வேடுகளில் ஓரியலின் பெயராக அமைவதோடு அதனிலேயே ஆய்வும் அடங்கி விடுகிறது. முன்னும் பின்னுமுள்ள இயல்கள் எல்லாம் ஆராய்ச்சிக்குத் தேவையற்ற ஆனால் ஆய்வேட்டின் பக்க அளவிற்குத் தேவையானவையாக மட்டும் அமைகின்றன.

## 11.4.2.11. முடிவுரை

முடிவுரையில் ஆராய்ச்சியில் பெறப்பட்ட முடிபுகள் மட்டுமே கூறப்பெற வேண்டும். அவை என்ன வகையான விளைவுகளை ஏற்படுத்தும் என்றோ, அவை எந்த அளவிற்கு இன்றியமையாதன என்றோ எவ்வாறு பெறப்பட்டன என்றோ கூறுதல் தேவையில்லை. எடுத்துக்காட்டாகப் பேராசிரியர் அ. சிதம்பரநாதனாரின் தமிழ் யாப்பியலில் மேனிலையாய்வு என்ற நூலில் முடிவுரை இரு பக்கங்களிலேயே அமைந்தமை காணலாம். ஆய்வின் முடிபாக மேற்கண்ட பக்கங்களில் ‘தொல்காப்பியர் காலத்தில் நிலைமண்டில ஆசிரியம் இல்லை என்றும் புறநானூற்றில் பலர் கருதுவதுபோல் அல்லாமல் வஞ்சியடிகளும் இடம்பெற்றுள்ளமையும் காட்டப்பெற்றுள்ளன. மேலும் தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்னும் நேரிசை வெண்பா இல்லை’ என்பதும் குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு தாம் கண்ட முடிவுகளை இருபக்க அளவில் அவர் தந்துள்ளார். எனவே, மீண்டும் இயல்களின் சுருக்கமாகவோ அவற்றில் கூறியது கூறலாகவோ முடிவுரை அமைதல் ஆகாது. முடிவுரையில் பெறப்பட்ட இம்முடிவுகளால் புதிய ஊழி பிறக்கும் என்றோ உலகச் சிக்கல்கள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்றோ மானுட முயற்சிக்கு அப்பாற்பட்ட இறைவன் திருவருள் என்றோ பெருமை கூறிக்கொள்ள வேண்டியதில்லை. காலம் பல முடிவுகளை அழித்திருக்கிறது. அறிதோறும் அறியாமை காண்பதே ஆய்வாளரின்

பண்பாதல் வேண்டும். முடிவுரைக்கண் தொடர்ந்த ஆய்வுப் புலன்களைத் தம் பட்டறிவின் காரணமாக ஆய்வாளன் காட்டுவான் எனில் அ.்.து ஏற்புடையதாகும்.



**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**



7. ஆய்வேட்டின் பகுதிகள் எத்தனை? அவையாவை?
8. ஆய்வேட்டின் புற அமைதியில் அமைவன யாவை?
9. ஆய்வேட்டின் அக அமைதியில் அமைவன யாவை?
10. ஆய்வு நடை – குறிப்பு வரைக.
11. இயல் இயைபு குறித்து விளக்குக.
12. முடிவுரையில் இடம்பெறுவன யாவை?

## 11.5. தொகுத்துக் காண்போம்

- ஆய்வாளர் ஆய்வேடு உருவாக்கும் நெறிகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வேடு உருவாக்குவதில் ஆய்வாளர் பின்பற்றவேண்டிய வழிகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வேட்டின் அமைப்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 11.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 11.3.1. | 2. | 11.3.3. |
| 3. | 11.3.4. | 4. | 11.3.6. |
| 5. | 11.3.8. | 6. | 11.3.10. |
| 7. | 11.4. | 8. | 11.4.1. |
| 9. | 11.4.2. | 10. | 11.4.2.9. |
| 11. | 11.4.2.10. | 12. | 11.4.2.11. |

## 11.7. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. ஆய்வேடு உருவாக்கும் நெறிமுறைகள் யாவை?
2. ஆய்வேட்டின் அமைப்பு பற்றிக் கட்டுரை வரைக.

குறிப்பு

# பிரிவு 4. இயல் பிரிப்பு - கருத்து விளக்கம் - புறக்கட்டமைப்பு
# கூறு 12. பகுதிகள் - இயல் பிரிப்பு - கருத்து விளக்கம்

## 12.1. முன்னுரை

ஆராய்ச்சியின் முடிவுகளைத் தொகுத்து எழுதி உருவாக்குவது ஆய்வறிக்கை எனப்படும். சிறிய ஆய்வறிக்கையைக் குறு ஆய்வேடு என்றும், பெரிய ஆய்வறிக்கையை ஆய்வேடு என்றும் கூறுவர். ஆய்வேடு என்பது பரந்து கற்றலின் முதலாகப் பெறும் கருத்துக்களின் தொகுப்பாகும். சிறந்த ஆய்வேடு என்பது சமநிலையோடு கருத்துக்களையும் தருக்கங்களையும் கோட்பாட்டு அடிப்படையின் இயல்பான முடிவுக்கு வருகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் ஆய்வேடு பல பகுதிகளைக் கொண்டுள்ளது. அவற்றைப் பற்றியும், இயல் பிரிப்பு பற்றியும், ஆய்வேட்டின் கருத்து எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றியும் இப்பகுதியில் காணலாம்.

## 12.2. குறிக்கோள்கள்

- ஆய்வேட்டின் பகுதிகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வேட்டில் இயல் பிரிப்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வேட்டில் கருத்து என்னும் கருதுகோள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 12.3. பகுதிகள்

ஆய்வேட்டை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை, முன்பகுதி, முதன்மைப் பகுதி, பின்பகுதி என அமையும். முன்பகுதியில் ஆய்வேட்டின் தலைப்புப் பக்கம், மேற்பார்வையாளர் சான்றிதழ், ஆய்வாளர் உறுதிமொழி, நன்றியுரை, பொருளடக்கம், அட்டவணை, சுருக்கக் குறியீட்டு விளக்கம் போன்ற பகுதிகள் இடம்பெற்றிருக்க வேண்டும். அதாவது, ஆய்வேட்டின் தலைப்பு, எந்தப் பல்கலைக்கழகத்திற்கு எந்தப் பட்டத்திற்காக அளிக்கப்படும் ஆய்வேடு, ஆய்வாளர் பெயர், எந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஆய்வேடு வழங்கப்படுகிறது என்ற செய்தி தலைப்புப் பக்கத்தில் அமையவேண்டு. இந்த ஆய்வேடு இதற்கு முன்பு வேறு எந்தப் பட்டத்திற்கும் வழங்கப்பெறவில்லை என்று மேற்பார்வையாளர் சான்றிதழ் வழங்க வேண்டும். இந்த ஆய்வேடு இவருடைய சொந்த முயற்சியில் உருவானது என்ற செய்தியும் அங்கே இடம்பெறவேண்டும். ஆய்வாளரும் சொந்த முயற்சியில் உருவாக்கப்பெற்றது என்றும் வேறு எந்த ஆய்வுப் பட்டத்திற்கும் வழங்கப்பெறவில்லை என்றும் சான்றிதழும் உறுதிமொழியும் அளிக்கவேண்டும். நன்றியுரையில் யார் யார் எந்தெந்த வகையில் உதவி செய்திருக்கிறார்கள் என்ற செய்தியை வரிசையாகத் தரலாம். ஆய்வேட்டின் முகப்புப் பக்கத்திலிருந்து சுருக்கக் குறியீட்டு விளக்கம் வரை ரோமன் எண் கொடுக்கலாம்.

ஆய்வேட்டின் முதன்மைப் பகுதியில் முன்னுரை, உடற்பகுதி, முடிவுரை ஆகியன இடம்பெற்றிருக்க வேண்டும். அதாவது, முன்னுரையில் தலைப்பு விளக்கம், ஆய்வின் எல்லை, ஆய்வு ஆதாரங்கள், ஆய்வுக்கு வகுத்துக் கொண்ட திட்டங்கள் முதலான செய்திகள் இடம்பெற்றிருக்க வேண்டும். முன்னுரை ஆய்வுச் சிக்கலை அறிமுகப்படுத்துவதாகவும், ஆய்வுச் சிக்கலை சுருக்கமாக எடுத்துரைப்பதாகவும் அமைய வேண்டும். கருதுகோள்கள் கொடுக்க வேண்டும். ஆய்வு அணுகுமுறைகள் சுருக்கமாகத் தரவேண்டும். தலைப்புகள் சுருக்கமாக இருக்க வேண்டும். கிளைத்தலைப்பு, உட்தலைப்பு போன்றவற்றைப் பகுத்துத் தருதல் வேண்டும்.

ஆய்வேட்டின் உடற்பகுதி ஆய்வேட்டின் இயல் தலைப்புக்கள் மிகச் சுருக்கமாக அமைக்க வேண்டும். இயல் வைப்பு ஏறுமுகமாக

இருக்கவேண்டும். ஒன்றின் ஒன்று தெளிவுபடுத்தி வளர்த்துக் கொண்டே சென்று ஒரு நிலையில் முடிக்க வேண்டும். இவற்றில் செறிவும் செம்மையும் பேணப்பட வேண்டும்.

குறிப்பு

விவாதங்கள் படிப்பார் மனங்கொள்ளும் வண்ணம் அமையின், ஆய்வேடு பொருளுரை என்று சிறப்பித்துக் கூற ஏதுவாக அமையும். இயல்களின் இறுதி முடிவுரை கூறுவதும் உண்டு. எல்லா இயல்களுக்கும் சுருக்கமாகக் கூறவேண்டும். ஆய்வேடு தனி முயற்சியில் உருவானதாக இருக்க வேண்டும். ஒரு கொடையாக விளங்க வேண்டும். அறிவியல் படைப்புப் போல விளங்க வேண்டும். முன் இயல்களில் கண்டுபிடித்த புதுக்கூறுகளைத் தெளிவாக விளக்க வேண்டும். சான்றுகளால் உறுதி செய்யப்பட்ட தன்மைகளை மட்டும் பொதுமைப்படுத்திக் கூறவேண்டும். சிறந்த ஆராய்ச்சிகள் பிரிதாய்வாற்றலாலும் சிந்தனையாலும் பெறப்பட்ட முடிவுகளைத் தன் அறிவின் எல்லைகளை விரிவுபடுத்தும். முடிவுரையில் இந்த ஆய்வில் கிடைத்த முடிவுகள், எதிர்காலத்தில் செய்ய வேண்டிய ஆய்வுக் குறிப்புக்கள் இடம்பெற்றிருக்க வேண்டும்.

ஆய்வேட்டின் ஒவ்வொரு பக்கத்திற்கும் தொடர் எண் இடவேண்டும். முதல் பக்கத்திலிருந்து கடைசிவரை தொடர்ச்சியாக எண்ணிடல் வேண்டும். ஒவ்வோர் இயலிலும் முடிந்தால் அந்தந்தப் பக்கத்திலோ அல்லது அந்த இயல் முடியும் பக்கத்திலோ அடிக்குறிப்பைத் தருவது நன்றாக இருக்கும். ஆய்வில் படங்கள் இருந்தால், அந்தப் படங்களுக்கு எண்ணிடல் வேண்டும். பொருளடக்கத்திற்கு அடுத்தாற்போல் அந்த விவர அட்டவணையை அமைக்க வேண்டும். விவர அட்டவணைக்கு எண்ணிடல் வேண்டும்.

பின்பகுதியில் பின்னிணைப்பு, துணைநூற்பட்டியல், அகரநிரல், விளக்கப் படங்கள், நேர்காணல் போன்றன இடம்பெற்றிருக்க வேண்டும். ஆய்வேட்டின் உட்பகுதியில் சில விவரச் சுருக்கங்களைத் தந்திருக்கலாம். அவற்றின் விரிவு தேவை எனில் அவை பின்னிணைப்பாகத் தரலாம். பட்டியல்கள், வரைபடங்கள், நிலப்படங்கள், முழு அறிக்கைகள், அட்டவணைகள், வழி விளக்கப்படங்கள், நிழற்படங்கள் ஆகியவற்றில் எவை எவை தேவையென முன்னரே முடிவு செய்து கொண்டு அவற்றைச் சேகரித்து ஒழுங்குபடுத்திக் கொள்ள

வேண்டு. துணைநூற்பட்டியலில் முதன்மை நூல்கள் என்றும் துணைமை நூல்கள் என்றும் இருவகையாகப் பிரித்தளிக்க வேண்டும். துணைநூற்பட்டியல் மிகப் பெரியதாக இருக்க வேண்டும் என்றில்லை. துணைநூற்பட்டியலில் தனி நூல்கள், தொகை நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், பதிப்பு நூல்கள், பிறமொழி நூல்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், அறிக்கைகள், நிறுவன வெளியீடுகள், மலர்கள், ஆய்வேடுகள் ஆகியவை அவற்றின் இனம் புலப்படுமாறு காட்டப்பெறுதல் வேண்டும். துணைநூற்பட்டியலில் ஒவ்வொரு நூலும் அகர வரிசையில் அமைக்க வேண்டும். ஆசிரியர் பெயர் வரிசை அல்லது நூற்பெயர் அகர வரிசை என்ற முறையில் துணைநூற்பட்டியல் அமையலாம்.

## 12.4. இயல் பிரிப்பு

ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு நூறு பக்கமும் முனைவர்ப்பட்ட ஆய்வேடு இருநூற்றைம்பது பக்கமும் இருக்க வேண்டும் என்று பல்கலைக்கழகங்கள் எதிர்பார்க்கின்றன. இப்பக்க எல்லைக்குக் குறையாமல் இருப்பது நல்லது. இந்நிலையில் ஆய்வேட்டை ஐந்து அல்லது ஆறு இயல்களாகப் பிரித்துக் கொள்ளுதல் நல்லது. பேராசிரியர் மு.வரதராசனார் அவர்கள் தம்முடைய 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்ற ஆய்வேட்டைக் கீழ்க்காணுமாய இயல் பிரித்துக் கொண்டுள்ளார்.

இயல் 1. இயற்கை பெறுமிடம்
இயல் 2. பாடிய புலவர்கள்
இயல் 3. நிலம்
இயல் 4. வானம்
இயல் 5. பயிரினமும் உயிரினமும்
இயல் 6. உவமையில் இயற்கை

இவ்வியல் ஒவ்வொன்றும் மேற்கொண்ட ஆய்வுத் தலைப்பிற்கு இன்றியமையாதது. இந்த ஆய்வேடு ஏழு இயல்களைக் கொண்டுள்ளது. ஏழுக்கு மேலாக அமைவது பொருத்தமாக இருக்காது. இயல் பிரிக்குமிடத்து, பிறர் ஆய்வேடுகளில் கொண்டுள்ள இயல் தலைப்புகளைத் தவிர்த்தல் வேண்டும். பாரதியாரைப் பற்றி ஆராய்வாரில் பலர் முதல் இயலாகப் பாரதியார் வாழ்வும் பணியும் எனக்

கொள்கின்றனர். ஒருவர் தம் ஆய்வேட்டின் இத்தலைப்பில் எழுதியபின் மற்றவர் இத்தலைப்பில் ஆய்ந்து கூறுவதற்கு இடமேது? கூறியது கூறல் என்பது ஆய்வில் நிகழக் கூடாது. தொடர்புடைய அனைத்து ஆய்வுகளையும் விடாது காணுதல் வேண்டும். யார் எத்தலைப்பில் ஆய்வு செய்துள்ளார், எத்தலைப்பு யாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பவற்றை அறிதல் வேண்டும்.

ஆய்வேட்டின் இயல் பிரிப்பானது ஒவ்வோர் இயலுக்கும் பொருந்தப் பிரிக்க வேண்டும். குறுந்தொகையில் கருப்பொருள் என்ற பொருண்மையில் அமையும் ஆய்வேட்டின் இயல்கள்,

இயல் 1. குறுந்தொகை நூலமைப்பும் நுவல் பொருளும்
இயல் 2. கருப்பொருள் இலக்கணம்
இயல் 3. குறுந்தொகையில் கருப்பொருள் பெறும் இடம்
இயல் 4. குறுந்தொகையில் கருப்பொருள் உணர்த்தும் செய்திகள்
இயல் 5. குறுந்தொகையில் கருப்பொருள் பிறபொருள் இயைபு

என்றவாறு அமைதல் ஏற்புடையதாக இருக்கும்.

## 12.5. கருத்து விளக்கம்

ஆய்வாளன் ஆய்வில் கொள்ளும் கருத்தே கருதுகோள். ஆய்வின் சிக்கலைத் தீர்ப்பதற்கு முதலில் உருவாக்கிக் கொள்ளும் விளக்கம் அல்லது தீர்வு என்பதே கருதுகோள். ஆய்வாளன் உருவாக்கிக் கொள்ளும் தற்காலிகமான விளக்கங்கள் ஆய்வின் சிக்கலுக்குத் தீர்வாக அமையும். அவ்விளக்கங்களின் அடிப்படையில் மேலும் தொடர்ச்சியாக நுணுகி ஆராயும் ஆய்வின் விளைவு மெய்யான தீர்வுகளுக்கு இட்டுச் செல்லும்.

அறிந்தவற்றைக் கொண்டு உருவாக்கிய தற்காலிகமான நோக்கின் அடிப்படையில் ஏனைய தரவுகளைத் திரட்டவும் உற்றுநோக்கி ஆராயவும் முற்படுவர். சிக்கலுக்குரிய தீர்வாகக் கருதுகோள் அமைகிறது. எனவே, தற்காலிகமான ஒன்றைக் கருதுகோள் என்கிறோம். ஆய்வுப் பயணத்தில் அது மாற்றம் பெறவும் கூடும். ஆய்வாளர் தெரிந்த மெய்ம்மைகளை

உற்றுநோக்கி, பகுத்தாராய்வதற்குரிய சிக்கலை உருவாக்கிக் கொள்ள முனைகின்றார். அவ்வாறான தொடக்கமே கருதுகோள் ஆகின்றது.

ஏற்பட்டுள்ள சிக்கலுக்குத் தற்காலிகமான விளக்கம் அல்லது தீர்வு ஒன்றை உருவாக்கிக் கொள்ளாமல் ஆய்வில் நாம் ஓரடிகூட எடுத்து வைத்து முன்னேற முடியாது. ஆய்வுப் பொருளில் ஆய்வாளனுக்கு முன்னமே உள்ள பட்டறிவின் துணையால் இத்தகைய விளக்கங்கள் உருவாக்கப்படலாம். அவ்வாறு முன்மொழி உரைகளாக அவை உருவாக்கப்படுகையில் அவற்றைக் கருதுகோள்கள் என்று வழங்குவர்.

முன்கூட்டியே உருவாக்கிக் கொள்ளும் முன்மொழிவுரை அல்லது ஊகம், கருதுகோள் என்று உணரலாம். கருதுகோளைக் கொண்டு ஆய்வாளன் ஆய்வைத் தொடர்கின்றான். அது பொருந்தி வரவில்லை என்றால் வேறு ஒன்றை உருவாக்கிக் கொள்கின்றான். ஆய்வாளனின் தலையாய நோக்கம் அறிவுத்தேடலாக, உண்மையை நாடும் நாட்டமாக அமைவதால், மீண்டும் மீண்டும் சோதித்துப்பார்த்து, சரியான கருதுகோளை உருவாக்கிட முயலவேண்டும். கருதுகோள் ஒரு முறை உருவாக்கப்பட்டு விட்டால் அது மாற்றத்திற்கு உட்படாதது என்றில்லை. அது, பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு ஆராயப்படும்போது மெய்ம்மைகளுக்கு இடையேயான காரண, காரிய இயைபுகளை விளக்கி, ஆய்வின் மையக்கருத்தை நிறுவுவதாக இருக்கும்.

செயலறிவால் உணர்ந்துகொள்ளப்படுமாறு சோதனைக்கு ஏற்றதாகக் கருதுகோள் உருவாக்கப்பட வேண்டும். களத்தில் உற்றுநோக்கி அறிவதன்வழியே சோதித்து அறியுமாறு அமையக்கூடிய வண்ணம் சில ஊகங்களை உடையதாகக் கருதுகோள் அமையவேண்டும்.

உற்று நோக்கக் கூடியவற்றிற்கு அணுக்கத் தொடர்புடையதாகக் கருதுகோள் அமையவேண்டும். இத்தன்மையில் தவறின் சோதனைக்குரிய மெய்ம்மைகளுடன் கூடிய தொடர்பினைக் கண்டறிய இயலாது. கொள்கையளவில் தெளிவானதாகக் கருதுகோள் அமையவேண்டும். கருதுகோளில் கூறப்படும் கொள்கைகளில் குழப்பம் ஏதுமின்றித் தெளிவாக வரையறுத்துக் கொள்ளவேண்டும். உருவாக்குவதில் மட்டுமின்றி, இயங்குவதிலும் இத்தெளிவு காணப்பட

வேண்டும். சரியாக வரையறுக்கப்படாத, கொள்கைகளை உள்ளடக்கிய, பொருள் மயக்கம் தரவல்ல கருதுகோளைச் சோதித்துக் காணமுடியாது.

கருதுகோள் திட்டவட்டமானதாக இருக்கவேண்டும். பெரும்பாலும், பொதுவான தொடர்புகளில் தங்கள் கருதுகோள்களை வெளியிடுவதில் நாட்டம் மிக்கவர்களாக ஆய்வாளர்கள் உள்ளனர். அக்கருதுகோள்கள் ஆரவாரமிக்க பெரிய திட்டமுடையவைகளாக, எளிதாகச் சோதனைக்கு உட்படாதவைகளாக அமைந்துள்ளன. ஆய்வாளரின் இத்தகு நாட்டம் தற்கேடான ஒன்றாகும். எனவே, இத்தகு ஆர்வத்தை அவர்கள் விட்டுவிடல் வேண்டும். தெளிவான சொற்றொடர்களால் ஆனதாகக் கருதுகோள் அமைதல் வேண்டும்.

கோட்பாடுகளின் அமைப்பிற்குத் தொடர்புடையதாகக் கருதுகோள் இருத்தல் வேண்டும். இதனால், கருதுகோளினைச் சோதித்தாய்வதால் எந்த அளவிற்குக் கோட்பாடுகள் அளவில் நன்மை விளையும்? என்ற வினாவிற்கு விடைகிடைக்கும், கருதுகோள் இவ்வாறு கோட்பாடுகளுடன் உறவு பூண்டிருப்பதாக அமையுமாயின் கோட்பாடுகளைத் தரமிக்கதாக ஆக்குவதாக, துணை செய்வதாக அல்லது அவற்றை மறுப்பதாக ஆய்வு அமையக்கூடும்.

கோட்பாடுகளே உருவாக்கப்படாத, பிறர் புகாத புதிய துறைகளில், கருதுகோள் உருவாக்குவது என்பது எங்ஙனம் பொருந்தும் என்ற வினா எழலாம். கற்பனை கலந்தது என்பதும், மேலும் விரிவாக ஆய்வதற்கும், புதிய கோட்பாடுகளை உருவாக்குவதற்கும் துணைபுரியுமாறு கருதுகோள் உருவாக்கப்படும் என்பதும் சிந்தித்தற்குரியன. தெரிந்த கோட்பாடுகளின் அடிப்படையில், புதிய துறைகளுக்குக் கருதுகோள் உருவாக்குவதும் அறிவின் வளர்ச்சிக்குத் துணைசெய்யும்.

நல்ல கருதுகோள் தெளிவாகவும் சுருக்கமான இலக்கணங்களுடனும் இருத்தல் வேண்டும். புதிய கொள்கைகளை விளக்குகையில் முன்னோரின் வழியில் மரபிற்கு ஏற்ற மதிப்பளித்திடும் பாங்கைப் பின்பற்ற வேண்டும். தெரிந்த உத்திகளைக் கொண்டு சோதித்துப் பார்க்கும் வண்ணம் கருதுகோள் அமைதல் வேண்டும். சுருக்கமாகவும் செறிவாகவும் சொல் விளையாட்டிற்கு இடந்தராததாகவும் கருதுகோள் இருக்க வேண்டும். குறைந்த அளவு ஊகங்களையும்,

எண்ணிக்கையில் அருகிய கொள்கைகளையும் கொண்டதாகக் கருதுகோள் உருவாக்கப்பட வேண்டும்.

புதிய துறைகளில் விளக்க ஆய்வாக முதல் ஆய்வு அமைகையில் தரவுகளைத் திரட்டித் தருவதே தலைப்பணியாக அமைகின்றது. அங்குக் கருதுகோள் ஒன்றை உருவாக்கிச் சோதித்துப் பார்ப்பது என்பது, பின்னர்தான் மேற்கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக, கோயில்கள் பற்றிய ஆய்வைக் கூறலாம். முதல் நிலையில், அவ்வாறான ஆய்வுகளில் கூறியது கூறலும் பகுதி ஒத்திருத்தலும் காணப்படினும் விளக்க ஆய்வாகவே அவை அமையும். பின்னரே, அவற்றில் கருதுகோள் உருவாக்கம் மேற்கொள்ளப்படும்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. ஆய்வேட்டின் பகுதிகள் யாவை?
2. முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேட்டின் பக்க வரையறை எவ்வளவு?
3. கருதுகோளின் நோக்கம் யாது?
4. நல்ல கருதுகோள் எவ்வாறு அமையும்?

## 12.6. தொகுத்துக் காண்போம்

- ஆய்வேட்டின் பகுதிகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வேட்டில் இயல் பிரிப்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வேட்டில் கருத்து என்னும் கருதுகோள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 12.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 12.3. | 2. | 12.4. |
| 3. | 12.5. | 4. | 12.5. |

## 12.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. ஆய்வேட்டின் பகுதிகள் குறித்துக் கட்டுரை வரைக.
2. ஆய்வேட்டின் இயல் பிரிப்பை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. ஆய்வில் கருதுகோளின் தேவை குறித்து கட்டுரை வரைக.

குறிப்பு

# கூறு 13. ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு - பின்னிணைப்பு

## 13.1. முன்னுரை

ஆராய்ச்சியின் முடிபுகளைத் தொகுத்து எழுதி உருவாக்குவது ஆய்வறிக்கை எனப்படும். சிறிய ஆய்வறிக்கையைக் குறு ஆய்வேடு (Dissertation) என்றும், பெரிய ஆய்வறிக்கையை ஆய்வேடு (Thesis) என்றும் கூறுகிறோம். ஆய்வேடு என்பது பரந்து கற்றன் முதலாகப் பெறும் கருத்துக்களின் தொகுப்பே ஆகும். சிறந்த ஆய்வேடு என்பது சமநிலையோடு கருத்துக்களையும் தருக்கங்களையும் கோட்பாட்டு அடிப்படையின் இயல்பான முடிபுக்கு வருகிறது. ஆய்வேட்டை உருவாக்குவதும் நூலை வெளியிடுவதும் முற்றிலும் வேறுபட்டதாகும். இங்கு ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றியம் ஆய்வேட்டின் பின்னிணைப்பு என்னென்னவெல்லாம் அமையவேண்டும் என்பது பற்றியும் காணலாம்.

## 13.2. குறிக்கோள்கள்

- ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பில் அமையத்தக்கன யாவை என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ஆய்வேட்டின் பின்னிணைப்புகள் எவையெவை என்பது பற்றித் தெரிந்துகொள்வீர்கள்.
- பின்னிணைப்புகள் எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 13.3. ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு

ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பில் ஆய்வாளர் கருத்துச் செலுத்துதல் இன்றியமையாதது ஆகும். பல நல்ல கருத்துவளம் மிக்க நூல்கள் தரங்குறைந்த அச்சு, அழகற்ற கட்டமைப்பு, தகுதியற்றதாள், முறையற்ற வைப்புமுறை, திருத்தப்பெறாத மெய்ப்பு, வரிசையில் அமையாத பக்கங்கள் ஆகியவற்றால் மதிப்பிழந்து போவதுண்டு. புறக்கட்டமைப்பு என்பது நூலின் உள்ளடங்கிய கருத்தை நூல் வடிவில் காட்டும் அனைத்துக் கூறுகளையும் அடக்கியதாகும்.

- அட்டை, அட்டையமைப்பு, அட்டையில் அச்சு
- அட்டையை அடுத்த ஒட்டுத்தாள்
- தலைப்புப் பக்கம்
- நெறியாளர் சான்றிதழ்
- ஆய்வாளர் உறுமொழி
- நன்றியுரை
- பொருளடக்கம்
- அட்டவணை
- சுருக்கக் குறியீட்டு விளக்கம்
- முன்னுரை
- இயல்கள்
- முடிவுரை
- துணைநூற்பட்டியல்
- பின்னிணைப்புகள்

என்ற முறையில் ஆய்வேட்டை அடுக்க வேண்டும். அடுக்குமுன் பத்திப் பிரிப்புப் பக்கத் தொடர்ச்சி, இயல் முடிவில் அடிக்குறிப்பு வரிசை ஆகியன சரியாக உள்ளனவா எனக் காணுதல் வேண்டும்.

ஆய்வேட்டின் அட்டை காலண்டர் அட்டையைப்போல் தடிமனாக இருக்க வேண்டும். A4 அளவுடைய அட்டையாக இருக்க வேண்டும். அட்டையின் மேற்புறம் தலைப்புப் பக்கத்தில் உள்ள செய்திகள் அனைத்தும் இடம்பெறவேண்டும். அதாவது, ஆய்வுத் தலைப்பு, எதற்காக ஆய்வேடு எவ்விடத்திற்கு அளிக்கப்பெறுகிறது, ஆய்வாளர் பெயர், ஆய்வாளரின் பதிவு எண், ஆய்வு செய்யும் துறை, பல்கலைக்கழகத்தின் பெயர், ஊர், ஆய்வேடு சமர்ப்பிக்கும் ஆண்டு மாதத்துடன் குறிப்பிட வேண்டும். அட்டையின் மேற்பக்கம் வண்ணத்

தாளில் அச்சிட்டு மேற்படி தகவல்களைக் கோர்த்து வைப்பர். இன்று முதுகுப் பகுதியில் ஆய்வுத் தலைப்பும், ஆய்வாளர் பெயரும், ஆண்டும் குறிப்பிடுவர்.

குறிப்பு

ஆய்வேட்டின் தலைப்பு, எந்தப் பல்கலைக்கழகத்திற்கு எந்தப் பட்டத்திற்காக அளிக்கப்படும் ஆய்வேடு, ஆய்வாளர் பெயர், எந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஆய்வேடு வழங்கப்படுகிறது என்ற செய்தி தலைப்புப் பக்கத்தில் அமைய வேண்டும். அதாவது,

## பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள்

**தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர்பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு**

**மோ.கோ. கோவைமணி**

**முனைவர் பட்ட ஆய்வாளர்**

**ஓலைச்சுவடித்துறை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர் - 613 010**

**2002**

என்றவாறான செய்திகள் A4 தாளின் முழுக்க நிறைந்து மையப்படுத்தி இருக்க வேண்டும். ஆய்வேட்டின் தலைப்பு 24 புள்ளியிலும், ஆய்வாளர் பெயர் 14 புள்ளியிலும், துறை மற்றும் பல்கலைக்கழகத்தின் பெயர், ஊர், ஆண்டு ஆகியன 18 புள்ளியிலும் ஏனையவை 12 புள்ளியிலும் எழுத்தமைப்பு அமைந்து Bold செய்திருக்க வேண்டும்.

முனைவர் பட்டத்திற்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பெறும் இந்த ஆய்வேடு ஆய்வாளரின் சொந்த முயற்சியால் உருவானது என்றும், இந்த ஆய்வேடு இதற்கு முன்பு வேறு எந்தப் பட்டத்திற்கும் ஆய்வரங்கிற்கும் வழங்கப் பெறவில்லை என்றும் ஆய்வு நெறியாளர் சான்றிதழ் வழங்கவேண்டும்.

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் முனைவர் பட்டம் பெறுவதற்காகச் செய்யப்பெற்ற இந்த ஆய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானதாகும். இவ்வாய்வேடு வேறு பட்டத்திற்கோ, ஆய்வரங்கிற்கோ அனுப்பப்பெறவில்லை என உறுதி கூறுகிறேன் என்று ஆய்வாளரின் உறுதிமொழி இருக்க வேண்டும்.

நன்றியுரையில் யார் யார் எந்தெந்த வகையில் உதவி செய்திருக்கிறார்கள் என்ற செய்தியை வரிசையாகத் தரவேண்டும். குறிப்பாக, ஆய்வு செய்ய அனுமதி அளித்த பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர் மற்றும் அலுவலர்களுக்கும், ஆய்வு நெறியாளருக்கும், ஆய்வுக்குத் தேவையான நூல்கள் வழங்கிய நூலகங்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், ஆய்வேடு கட்டமைப்புச் செய்தவர்களுக்கும் கட்டாயம் நன்றி சொல்லியிருக்க வேண்டும். மேலும், ஆய்வாளருக்கு ஆய்வுக் காலத்தில் உதவி செய்தவர்கள் பற்றியும், கருத்துரை வழங்கியவர்கள் பற்றியும் நன்றியுரையில் நன்றி தெரிவிக்கலாம். ஆய்வாளர் உறுதிமொழிப் பத்திரத்திலும் நன்றியுரைப் பகுதியிலும் ஆய்வாளர் கையொப்பமிட வேண்டும்.

ஓர் ஆய்வேட்டின் முதன்மைப் பகுதிகள் முன்னுரை, உடற்பகுதி, முடிவுரை, பிற்சேர்க்கை, அகரநிரல் போல்வன சார்புப் பகுதிகளே. முன்னுரை, முடிவுரை என்ற இயல்கள் எப்படி அமைய வேண்டும் என்று சிந்தித்து அமைக்க வேண்டும். முன்னுரையில் தலைப்பு விளக்கம், கருதுகோள், ஆய்வின் எல்லை, ஆய்வு ஆதாரங்கள், ஆய்வுக்கு வகுத்துக்கொண்ட திட்டங்கள், ஆய்வுப் பயன் முதலான செய்திகள் இடம்பெறலாம்.

முடிவுரையில் இந்த ஆய்வில் கிடைத்த முடிவுகள், எதிர்காலத்தில் செய்ய வேண்டிய ஆய்வுக் குறிப்புக்கள் இடம்பெறுவதுண்டு.

குறிப்பு

ஆய்வேட்டில் ஒவ்வொரு பக்கத்திற்கும் தொடர் எண் இடவேண்டும். முதல் பக்கத்திலிருந்து கடைசிவரை தொடர்ச்சியாக எண்ணிடல் வேண்டும். ஒவ்வோர் இயலிலும் முடிந்தால் அந்தந்தப் பக்கத்திலோ அல்லது அந்த இயல் முடியும் பக்கத்திலோ அடிக்குறிப்பைத் தருவது நன்றாகவே இருக்கும். ஆய்வில் படங்கள் இருந்தால், அந்தப் படங்களுக்கு எண்ணிடல் வேண்டும். பொருளடக்கத்திற்கு அடுத்தாற்போல் அந்த விவர அட்டவணையை அமைக்க வேண்டும். விவர அட்டவணைக்கு எண்ணிடல் அவசியம். முகப்புப் பக்கத்திலிருந்து உள்ளுறை வரை உரோமன் எண் கொடுக்கலாம். முன்னுரையிலிருந்து வேறு பக்க எண்ணிட்டுக் கொடுக்கலாம்.

## 13.3.1. ஆய்வுரையைத் தட்டச்சுச் செய்பவர்

ஆய்வுரை நல்ல முறையில், தட்டச்சுச் செய்யப்பட வேண்டும். ஆய்வேடுகளைத் தட்டெழுத்துச் செய்து பழக்கமுள்ள - அனுபவமுள்ள தட்டெழுத்தரிடம் ஆய்வுரைக் கையெழுத்துப்படியைக் கொடுத்துத் தட்டச்சுச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் ஆய்வுரை ஆய்வு நெறிகளின் அடிப்படையில் சிறப்பாக அமையும். பின்னர் நன்முறையில் கட்டமைப்புச் செய்பவரிடம் தட்டெழுத்துப் படிகளைக் கொடுத்துக் கட்டமைப்புச் செய்யவேண்டும்.

## 13.3.2. ஆய்வுரைத் தாள்

நல்ல, தரமுடைய பாண்டுத் தாளில் ஆய்வேடு தட்டெழுத்துச் செய்யப்பட வேண்டும். குறைந்தபட்சம் 80புளுஆக்குக் குறையாத தாளில் தட்டெழுத்துச் செய்யப்பட வேண்டும். 11”X8” அளவுள்ள தாள்களே ஏற்றது. இருபது வருடங்களுக்கு முன்பு வரை தட்டச்சு எந்திரத்தின் மூலமே ஆய்வேடு உருவாக்கப்பெற்றது. தற்போது கணிப்பொறி மூலம் தட்டச்சு செய்து ஆய்வேடு உருவாக்கப்படுகிறது. முன்னர், தட்டெழுத்துக்கான கார்பன் தாளும், நாடாவும் தரமுடையனவாகவும், புதியனவாகவும் இருக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்திற்கு எத்தனை ஆய்வுரைப்படிகளை அளிக்க வேண்டுமோ, அத்துடன் ஆய்வாளர் தமக்கென ஒரு படியையும் சேர்த்து தட்டெழுத்துச் செய்துகொள்ள வேண்டும். கார்பன் தாளில் அமையும் தட்டெழுத்தின் இறுதிப் படியை ஆய்வாளர் தமக்கென வைத்துக்கொண்டு, ஏனையவற்றைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்க வேண்டும். ஆனால், இன்றோ தட்டச்சுப்பொறியின் பயன்பாட்டில் ஆய்வேட்டினை யாரும் தட்டெழுத்தை உருவாக்குவதில்லை. மாறாக கணிப்பொறியில் தட்டெழுத்தை உருவாக்கி சேமித்துக் கொண்டு, அவற்றிலேயே திருத்தங்கள் மேற்கொண்டு இறுதிப் படியை Print செய்கின்றனர். இந்தப் படியைக் கொண்டு தேவைப்படும் படிகளை Xerox எடுத்துப் பயன்படுத்துகின்றனர்.

## 13.3.3. ஓரப்பகுதிகள்

தையற் கட்டுக்கு ஏற்ற வகையில் இடது பக்கத்தில் 40mm இடம் விட்டும், வலது பக்கத்தில் 25mm இடம் விட்டும், மேலும் கீழும் ஏறக்குறைய 25mm இடம் விட்டும் ஆய்வுரையைத் தட்டச்சு செய்யவேண்டும்.

## 13.3.4. இடைவெளி

ஆய்வுரைப் பகுதியின் உடற்பகுதி ஈரலகு இடைவெளி விட்டும், மேற்கோள்கள் அடிக்குறிப்புக்கள் ஓரலகு இடைவெளி விட்டும் தட்டெழுத்துச் செய்யப்பட வேண்டும். மேற்கோளை எழுதும்போது ஆய்வுப் பகுதியிலிருந்து ஐந்தலகு இடைவெளி விட்டுத் தொடங்க வேண்டும். மேற்கோளை அடுத்து ஆய்வுப் பகுதியை எழுதும்போது ஐந்தலகு இடைவெளி விடவேண்டும்.

## 13.3.5. தலைப்புகள்

இயல்களுக்குப் பொருத்தமான, சுருக்கமான தலைப்பிட வேண்டும். இயல் தலைப்பை மேலிருந்து 20mm இடம்விட்டு, மையப்படுத்தித் தட்டெழுத்துச் செய்ய வேண்டும். கட்டுரைத் தொடக்கம் இயல் தலைப்பிலிருந்து மூன்றலகு இடம்விட்டு அமைய வேண்டும். இயல் தலைப்பு ஒவ்வொன்றையும் சிறப்பாக-எடுப்பாகக் காட்டவேண்டித் தனித் தாளில் தட்டெழுத்துச் செய்யப்பட்டு, அவ்வவ்வியல் தொடக்கப்

குறிப்பு

பக்கத்திற்கு முன்னர் வைக்கும் வழக்கத்தை, இன்றைய நடைமுறையில் நாம் காணலாம். இயல் உட்பிரிவுத் தலைப்புகளை இடப்பகுதி ஓரத்திலிருந்து தட்டெழுத்துச் செய்து Bold எழுத்தில் காட்ட வேண்டும். பின்னிணைப்புகளின் தலைப்புகளையும் இயல் தலைப்புகளைப் போலவே புதிய பக்கத்தில் மேலிருந்து 20mm இடம் விட்டு, மையப்படுத்தித் தட்டெழுத்துச் செய்ய வேண்டும். அட்டவணைகள், விளக்கப் படங்கள், இவற்றின் தலைப்புகளை அட்டவணைகள் அல்லது விளக்கப் படங்கள் இவற்றிற்கு நேர் மேலாக மையப்படுத்தித் தட்டெழுத்துச் செய்ய வேண்டும். புகைப்படமாயின் அதன் விவரத்தை அல்லது தலைப்பை அதற்குக் கீழே மையப்படுத்தி எழுதவேண்டும்.

### 13.3.6. தட்டெழுத்துப் படிகளைத் திருத்துதல்

ஆய்வுரை தட்டெழுத்துச் செய்யப்பட்ட பின்னர், ஒவ்வொரு பக்கத்தையும் கவனமாகப் படித்துப் பிழைகளைத் திருத்த வேண்டும். தட்டெழுத்தாளரால் சில எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகள் நிகழலாம். குறிப்பாக, சொற்களின் உள்ளாக வரும் எழுத்துப் பிழைகள் நிகழக்கூடும். இப்பிழைகள் திருத்தப்பட்டதா என மற்றொரு படி எடுத்து பழைய படியோடு ஒத்துப் பார்க்க வேண்டும். பிழை திருத்துவோர் கணிப்பொறியில் Save என்ற பொத்தானை பயன்படுத்தாமல் விட்டுவிட்டால் மேற்கொள்ளப்பெற்ற திருத்தங்கள் திருத்தப்பெறாத நிலையை எய்தும். இதைக் கவனத்தில் கொண்டு திருத்தப்பெற்றவை Save செய்யப்பெற்று படியெடுக்கப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

### 13.4. பின்னிணைப்பு

ஆய்வேடு மூன்று பகுதிகளைக் கொண்டது. ஆய்வேட்டின் முற்பகுதி, ஆய்வேட்டின் நடுப்பகுதி, ஆய்வேட்டின் பிற்பகுதி என அவை அமையும். இதில் ஆய்வேட்டின் பிற்பகுதியைத் தான் பின்னிணைப்பு என்கிறோம். இப்பின்னிணைப்பில் துணைநூற்பட்டியல், ஆய்வோடு தொடர்புடைய அட்டவணைகள், ஆய்வுத் தொடர்பான ஆவணங்கள், ஆய்வுத் தொடர்பான வரைபடங்கள், கள ஆய்வு அறிக்கைகள், நேர்காணல், ஓலைச்சுவடி, கல்வெட்டு, செப்பேடு ஆகியவற்றின் படிகள், நிழற்படங்கள் என்ற முறையில் பின்னிணைப்புக்கள் அமைதல் வேண்டும்.

துணைநூற் பட்டியலில் அடிக்குறிப்பில் இடம்பெற்ற நூல்கள், அடிக்குறிப்பில் இடம்பெறாமல் பயன்பட்ட நூல்கள் மற்றும் தொடர்புடைய பிற நூல்கள் ஆகிய மூன்று நிலைகளில் அமையலாம்.

கடினமான சான்று ஆதாரங்களை இறுதியில் பிற்சேர்க்கையில் இணைத்து விடுகிறார்கள். பெரும்பாலும் நூலின் இறுதியில்தான் அமையும். பிற்சேர்க்கைகள் உத்திகள் பற்றியன. குறிப்பிட்ட உத்தி கையாளப்பட்டிருந்தால் அதை இறுதியில் விளக்க வேண்டும். கருத்துக்கள், கலைச்சொற்கள் இவற்றையும் விளக்க வேண்டியிருக்கும். புள்ளி விவரங்களைத் தரவேண்டியிருக்கும். படங்கள், விளக்கப் படங்கள் இறுதியில் இணைக்க வேண்டியதிருக்கும். உத்திகள் அல்லாதன பற்றிய பிற்சேர்க்கைகள் கணக்கற்றவையாகும். பயனுள்ள தகவல்களை நூலின் இறுதியில் தரலாம். மூல ஆதாரங்கள், நீண்ட அட்டவணைகள், நீண்ட மேற்கோள்கள், வினாத்தாள் முறை, ஆய்வடங்கலையும் பின்னிணைப்பாகக் கொடுக்கலாம். மூலநூலுக்கு உதவக் கூடிய பிற்சேர்க்கைகளைத் தரலாம். தொடர்பற்ற எதையும் பிற்சேர்க்கையில் தரக்கூடாது. ஆய்வறிக்கையின் ஒரு பாகமாக இருக்க வேண்டியவற்றைத் தரலாம்.

### 13.4.1. பின்னிணைப்புக்களில் அமையத்தக்கன

ஆய்வுப் பகுதியிலோ அல்லது அடிக்குறிப்பிலோ விளக்கம் அளிக்கப்படாத, போதுமான விளக்கம் பெறாத செய்திகளை விளக்குவதற்கு வாய்ப்பு நல்குவது பின்னிணைப்பாகும். எளிதில் பலருக்கும் கிடைக்காத ஆய்வுத் தொடர்பான மூல உண்மைக் கூறுகளைப் பலருக்கும் பயன்படும் வண்ணம் பின்னிணைப்பில் தரலாம். ஆய்வுக்கு அடிப்படையான மூல உண்மைக் கூறுகள் அச்சேறாத பழஞ்சுவடிகளில் இருந்தும் எடுக்கப்பட்டிருக்கலாம். அவற்றைப் பின்னிணைப்பில் கொடுத்தல் சிறப்பானது. பலருக்கும் பயன்படுவதோடு மேற்கொண்டு ஆய்வுப் பணியைத் தொடங்குவோருக்கும் பெரும்பயன் அளிக்கும். நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி ஆராய்வோர், தம் ஆய்வுப் பணிக்கு அடிப்படை அல்லது முதன்மை மூல உண்மைக் கூறுகளாகச் சேகரித்த பாடல்களை அப்படியே பின்னிணைப்பில் தரலாம். கள ஆய்வின் மூலம் பெற்ற அனுபவங்களைப் பின்னிணைப்பில் தரலாம். ஆய்வுத் தொடர்பாகக் கள ஆய்வின் போது எடுத்த புகைப்படங்களைப்

பின்னிணைப்பில் சேர்க்கலாம். கள ஆய்வின் போது ஆய்வுத் தொடர்பாக நிகழ்த்திய பேட்டிகள், வினாத்தாள் வரிசை முறை, உரையாடல்கள் போன்றவற்றையும், வானொலி, தொலைக்காட்சி உரைகள் போன்றவற்றையும் தரலாம். நீண்ட அட்டவணைகள், விளக்கப்படங்கள், வரைகட்டப் படங்கள் போன்றன ஆய்வோடு தொடர்பு கொண்டிருப்பின் அவற்றையும் பின்னிணைப்பில் சேர்க்க வேண்டும். ஆய்வுப் பகுதியில் ஏதாவது குறிப்பிட்ட புதிய உத்தி முறைகள் கையாளப்பட்டு இருந்தால் பின்னிணைப்பில் விளக்க வேண்டும். சமுதாயவியல், புள்ளியியல், புவியியல் போன்ற பாடத்துறை ஆய்வுகளில் கணித அடிப்படையிலான புள்ளி விவரப் பட்டியல்களைப் பின்னிணைப்பில் சேர்த்தல் இன்றியமையாதது. ஆசிரியர் பெயர் அகரநிரல், கலைச்சொல் அகரநிரல், கலைச்சொல் விளக்க அகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி ஆகியவற்றையும் சேர்க்கலாம். ஆவணச் சான்றுகளையும் தரலாம்.

## 13.4.2. பின்னிணைப்புப் பிரிவுகள்

பின்னிணைப்பில் இடம்பெறும் செய்திகள் பலவாக இருப்பின், அவற்றைக் கொடுக்கப்படும் செய்திகளுக்கு ஏற்ப பின்னிணைப்பு-1, பின்னிணைப்பு-2, பின்னிணைப்பு-3 என்றவாறு பிரித்து ஒவ்வொரு பின்னிணைப்புக்கும் தக்க பெயரிட வேண்டும். ஒவ்வொரு பின்னிணைப்பையும் புதிய பக்கத்தில் தொடங்க வேண்டும். பின்னிணைப்புகள் இடம்பெறும் பக்கத்தை முறையாக ஆய்வேட்டின் பொருளடக்கத்தில் குறிக்க வேண்டும்.

## 13.4.3. அட்டவணைகள், விளக்கப்படங்கள்

புள்ளிவிவர ஆய்வில் அட்டவணைகள், விளக்கப் படங்கள் பெரிதும் பயன்படும். இறுதி அறிக்கையில் அட்டவணைகளையும், வரைபடக் கருவிகளையும் தேர்ந்தெடுத்துச் சிறந்தவற்றை மட்டுமே இணைக்க வேண்டும். இறுதியில் பிற்சேர்க்கையில் துணைச்சான்றுகளாகச் சேர்க்கக் கூடியன ஒருவகை. அட்டவணைகளாக நூலின் இடையில் சேர்க்கக் கூடியன மற்றொரு வகையாகும். முன்னையவை மூல ஆதாரங்களாகும். பின்னையவை உய்த்துணரப்பட்ட ஆதாரங்களாகும். ஒவ்வோர் அட்டவணையும் தெளிவாக, சுருக்கமாக

குறிப்பு

அமைய வேண்டும். எந்த அளவு நுலின் உதவியின்றியே அட்டவணையைப் புரிந்துகொள்ள வேண்டும். அட்டவணையில் உள்ளதை நூலிலோ நூலில் உள்ளதை அட்டவணையிலோ திரும்ப வருமாறு சேர்க்கக் கூடாது. ஒவ்வோர் அட்டவணையையும் சேர்க்கும் முன்பு அது முழுதும் தேவைதானா என்பதைச் சிந்திக்க வேண்டும். மிக அதிகமான அட்டவணைகள் தேவைப்பட்டால் அவற்றை எளிமைப்படுத்திச் சேர்த்திட வேண்டும்.

## 13.4.4. பின்னிணைப்பின் பயன்கள்

- ஆய்வாளர் மேற்கொண்ட தன் முயற்சியின் சிறப்பினைக் காட்டுவது பின்னிணைப்பாகும். ஆய்வாளரின் பரந்துபட்ட அறிவின் திறனையும் பின்னிணைப்பு காட்டும்.
- பின்வரும் ஆய்வாளருக்கு வேண்டிய ஆய்வு பற்றிய அருஞ் செய்திகள் பின்னிணைப்புகளில் இடம்பெறுவதால், அவை அவர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடும்.
- ஆய்வுத் தொடர்பான பேட்டிகள், வினா வரிசைகள், உரையாடல்கள், அட்டவணைகள், விளக்கப்படங்கள் போன்றவற்றை முழுமையாகப் பின்னிணைப்பின் மூலமாக அறிந்து கொள்ளமுடிகிறது.
- ஆய்வுப் பகுதியிலோ அல்லது அடிக்குறிப்பிலோ போதுமான விளக்கம் பெறாத செய்தி அல்லது கருத்துப் பற்றிய விளக்கத்தைப் பின்னிணைப்பில் தருவதால் அவை பலருக்கும் பயனுடையதாக அமைகிறது.

## 13.4.5. பின்னிணைப்பில் ஆய்வாளர் பின்பற்ற வேண்டியன

ஒவ்வொரு பின்னிணைப்புக்கும் ஆய்வோடு நெருங்கிய தொடர்புடையதாக இருப்பதோடு போதுமான விளக்கத்தைப் பெற்றிருக்கிறதா? என்பதைப் பார்க்க வேண்டும். ஆய்வுப் பகுதிக்கு வலிவும், தரமும் அளிக்கும் தொடர்புடைய பகுதிகளை மட்டுமே பின்னிணைப்பில் சேர்க்க வேண்டும். ஆய்வேட்டுக்குத் தொடர்பில்லாத செய்தி எத்தன்மைத்தாயினும் அதைச் சேர்க்கக் கூடாது. பின்னிணைப்புத் தலைப்புகள் சரியான இடத்தில் நிறத்தக் குறியீடு இன்றி அமைக்கப்பட வேண்டும். தலைப்புப் பெயரைப் பின்னிணைப்புச்

*Self-Instructional Material*

செய்திக்கு அரண் சேர்க்கும் வகையில் எழுத வேண்டும். இணைக்கப்பட்ட பின்னிணைப்புகளுக்கு முறைப்படி எண்ணிட வேண்டும்.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**

1. ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பில் இடம்பெறும் சான்றிதழ்கள் யாவை?
2. நன்றியுரையில் இடம்பெறக்கூடியவர்கள் யார்யார்?
3. ஆய்வேட்டின் ஓரப்பகுதிகள் எவ்வாறு அமைக்க வேண்டும்?
4. பின்னிணைப்புக்களில் அமையத்தக்கன யாவை?

## 13.5. தொகுத்துக் காண்போம்

- ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பில் அமையத்தக்கன யாவை என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது பற்றியும், ஆய்வேட்டின் பின்னிணைப்புகள் எவையெனை என்பது பற்றியும் தெரிந்து கொண்டீர்கள்.
- பின்னிணைப்புகள் எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 13.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 13.3. | 2. | 13.3. |
| 2. | 13.3.3. | 4. | 13.4.1. |

## 13.7. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு குறித்துக் கட்டுரை வரைக.
2. ஆய்வேட்டின் பின்னிணைப்புகள் யாவை? அவற்றில் ஏதேனும் மூன்றினைப் பற்றி விளக்குக.

# கூறு 14. மேற்கோள் - அடிக்குறிப்பு - துணைநூற்பட்டியல்

குறிப்பு

## 14.1. முன்னுரை

ஆய்வாளர் தன்னுடைய ஆய்வில் பல்வேறு நிலைகளில் எடுக்கப்பெற்ற தரவுகளை ஆய்வேட்டின் பகுதிக்குள் பொருத்தமான இடங்களில் எடுத்துக் காட்டும்போது அத்தரவுகள் மேற்கோள் என்றும், அத்தரவுகள் பற்றிய குறிப்பு அடிக்குறிப்பு என்றும், அத்தரவுகள் பெற்ற நூலைப் பற்றிச் சொல்லுவது துணைநூற் பட்டியல் என்றும் கூறலாம். இவற்றைப் பற்றி இப்பகுதியில் காணலாம்.

## 14.2. குறிக்கோள்கள்

- மேற்கோள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- அடிக்குறிப்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- துணைநூற் பட்டியல் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 14.3. மேற்கோள்

“முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும் பொன்னேபோல் போற்றுவம்” என்பது நன்னூல் இலக்கணம் கற்பிக்கும் நெறி. நமக்குமுன் எத்தனையோ ஆய்வுகள் தோன்றியிருக்கலாம், எத்தனையோ அரிய கருத்துக்கள் புதியதாகச் சொல்லப்பட்டு இருக்கலாம். அவை நமக்கு அரணாகவும் முரணாகவும் இருக்கலாம். அவற்றையெல்லாம் மேற்கோளாகக் காட்டி அவை குறித்த நம் சிந்தனைகளை வெளிப்படுத்துல் ஆய்வியல் நெறியாகும். ஆய்வு என்பதே முன்னோர் செய்த பணிகளிலிருந்து கால்கொள்வதே ஆகும்.

### 14.3.1. மேற்கோள்களின் நோக்கம்

ஆய்வுக் கட்டுரையில் இன்றியமையாது தேவைப்படும் இடங்களில் மட்டுமே மேற்கோளை ஆய்வாளர் பயன்படுத்த வேண்டும்.

- ஆய்வாளர் சில கருத்துக்களை மிகவும் தெளிவுபடுத்துகின்ற பொழுதும், தனது கருத்துக்களை நிறுவுகின்ற பொழுதும் பிறருடைய கருத்துக்களை மேற்கோளில் காட்டுவர்.

குறிப்பு

- ஆய்வுச் சிக்கலை அணுகி, நுணுகி ஆராயும்போது மூல உண்மைக் கூறுகள் பிற அறிஞர்களின் கருத்துக்கள் ஆகியன ஏற்ற இடங்களில் மேற்கோளாகக் காட்டப்படுவதால் ஆய்வுச் சிக்கலைத் தீர்வு காண்பதும் உறுதிப்படுத்துவதும் எளிதாகின்றது.
- மூல ஆசிரியரின் கருத்துக்களை அப்படியே அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கிலும் அப்படியே மேற்கோளில் அக்கருத்துக்கள் ஆளப்படுவதுண்டு.

## 14.3.2. மேற்கோளின் வகைகள்

மேற்கோள்களை அளவு அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, சிறிய மேற்கோள் (Short Quotation); மற்றொன்று, பெரிய மேற்கோள் (Long Quotation) என அவை அமையும். சிறிய மேற்கோள்கள் நான்கு வரிகள் வரை இருக்கக் கூடியனவாகும். பெரிய மேற்கோள்கள் பொதுவாக ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வரிகளுடன் கூடியனவாகும்.

## 14.3.3. மேற்கோள் தரவுகள் எத்தன்மைத்தன

ஆய்வாளர் தாம் படிக்கும் ஆய்வு நூல்களில் தம்முடைய ஆய்வுக்குத் தேவையான மேற்கோள் பகுதிகள் எவை என்பதைக் குறித்துப் பின்வருமாறு காணலாம்.

- கூறும் கருத்துக்கு அரணாகும் செய்திகள்.
- மறுக்கப் பெறும் செய்திகள், பயிலும் நூல்கள், இடங்கள்.
- சரியான மூலப் பகுதிகள், உரைகள்.
- இதுகாறும் பிறருக்குக் கிடைக்காக ஆவணப் பகுதிகள்.
- பாடவேறுபாடுகள்.
- சொற்பொழிவுகள், நேர்காணல்களில் கிடைத்த தகவல்கள்.
- புகழ்பெற்ற தொடர்கள், செய்யுட்கள், பழமொழிகள்.
- வரலாற்றுக் குறிப்புகள், ஆண்டுகள், மாதங்கள், நாள்கள்.
- புதிய தகவல்கள், செய்திகள், ஆய்வுக் குறிப்புகள்.
- பொருள் முரண்கள், கூற்று முரண்கள்

இவற்றின் அடிப்படையில் கருத்துக்களை விவாதிக்க மேற்கோள்கள் காட்டப்பெறலாம். ஓர் ஆய்வில் மேற்கோள் மிகுதியாகப் பயன்படுத்துதல்

தவறு. மிகவும் முக்கியமான இடத்தில் மட்டும் மேற்கோளைப் பயன்படுத்தவேண்டும்.



## 14.3.4. குறிப்பட்டை

குறிப்பு

குறிப்பெடுப்பதற்கும் அட்டைகளைப் பயன்படுத்துதல் நல்லது. காலங்காலமாகப் பின்பற்றும் நோட்டுப் புத்தகங்களைப் பயன்படுத்தும் வழக்கத்தை விடுத்து, ஆய்வாளர் குறிப்பு அட்டைகளைப் பயன்படுத்த வேண்டும். குறிப்பெடுத்தவற்றை வகைப்படுத்தவோ, மாற்றி அடுக்கவோ அட்டை முறையே துணைசெய்யும். குறிப்பெடுப்பதும் அவற்றைப் பாதுகாப்பதும் ஆய்வின் தலை நாள் தொட்டு நடைபெற வேண்டிய பணியாகும். அட்டை அல்லது அந்த அளவிலான சிறு தாள்களை இப்பணி பயன்படுத்துதல் வேண்டும். அவை ஒரே வடிவம், அளவு, தன்மை கொண்டவையாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மெய்ம்மை அல்லது கருத்து ஒவ்வொரு தனி அட்டையில் குறிக்கப்பட வேண்டும். சிக்கனம் கருதி ஒரே அட்டையில் பலவற்றை எழுதுதல் கூடாது. செய்தியைக் குறித்துக்கொண்டு அதன் கீழே, தனி ஒரு வரியில் அச்செய்தி எந்த நூலில் இருந்து எடுக்கப்பெற்றது. பக்க எண் எது என்ற விவரங்களைக் குறித்துக்கொள்வது இன்றியமையாதது. நூல் பற்றிய விவரங்கள் நூற்பட்டியலிற்குரிய அட்டைகளில் இடம்பெற்றுவிடும். எனவே, குறிப்பட்டை, நூற்பட்டி அட்டை ஆகிய இரண்டையும் இடைவிடாமல் உருவாக்குவது ஆய்வுப் பயணத்தில் தொடர்ந்து நிகழ வேண்டிய பணிகள் ஆகும். எழுத்து மூலச் சான்றிலிருந்து குறிக்காமல் நேரடிச் சான்றின்வழி பெற்றால், குறிப்பின் கீழ்த் தகவலைப் பெற்ற முறையைக் (பேட்டி, வினாநிரல், பட்டியல்) குறித்தல் வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட குறிப்பை ஓர் அட்டையில் குறிக்காமல் இருக்க வேண்டும். ஓர் அட்டையில் ஒரு குறிப்பை எடுக்கும் முறையினைப் பின்பற்றுவதால், தரவுகளை வகைப்படுத்தவும், மீண்டும் மறுவகை செய்யவும் உதவுவதுடன் குவியலான கருத்துத் தொகுதியைப் பிரித்துப் பகுத்து ஆயவும் அதனைப் பின்னர் தொடர்புடைய பத்திகளுடன் ஒப்பிட்டு ஆராயவும் அவைகளுக்கிடையிலான தொடர்பை வெளிப்படுத்தவும் முடியும்.

குறிப்பட்டைகள் மிகுதியாக இருக்கும் ஆய்வுகளில் ஆய்வாளர் பல்வேறு வண்ண அட்டைகளைப் பயன்படுத்தலாம். ஒவ்வொன்றையும்

அந்த வண்ண அட்டையில் மட்டுமே குறிப்பதால் பின்னர் குழப்பம் ஏற்படாது.

குறிப்பு

- துணைநூற்பட்டியல் அட்டைகள்
- நூலிலிருந்து எடுத்த பகுதிகள்
- கள ஆய்வில் உற்றுநோக்கி நேரடியாகப் பெற்ற தகவல்கள்
- பேட்டிகளின் வழியே திரட்டிய தகவல்கள்
- ஆய்வாளரின் எண்ணங்கள், குறிப்புகள்

என்று வகைப்படுத்தி ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வண்ண அட்டைகளைப் பயன்படுத்தலாம். திட்டமிட்ட ஆய்வுப் பயணத்தில், அறிவியல்நெறி சார்ந்த ஆய்வில் இத்தகைய கடும் உழைப்பும் ஆழ்ந்த படிப்பும் இன்றியமையாதன. இவற்றோடு அவற்றை வகைப்படுத்துவதும் இன்றியமையாக் கூறு. இவற்றில் காட்டப்படும் கவனம், ஆய்வைத் திட்டமிட்ட கால எல்லைக்குள் தெளிந்த சிந்தனையுடனும் குழப்பம் எதுவுமில்லாத முறையுடனும் முடிக்க உதவும்.

## 14.3.5. மேற்கோள் காட்டும் நெறிகள்

ஓர் ஆய்வேட்டில் மேற்கோள்களைத் தேவை கருதி ஆளப்பெற வேண்டும். நேரடி மேற்கோள்கள் பயன்தருவனவாகும். மேற்கோள்களில் வேண்டிய பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதை விட்டுவிடுவது பொருத்தமுடையதாகும். ஆய்வேட்டில் பொருத்தமான இடங்களில் மேற்கோள் கையாள வேண்டும். மேற்கோளை எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறே கொடுக்க வேண்டும்.

மேற்கோளுக்குள் மேற்கோள் வரும்போது முன்னதற்கு இரட்டை மேற்கோட் குறியும் பின்னதற்கு ஒற்றை மேற்கோள் குறியும் இடவேண்டும். மேற்கோளைக் காட்ட “. . . . ” இக்குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும். மேற்கோள்களில் மாறுதலோ திருத்தமோ இல்லாமல் அப்படியே எடுத்தாள வேண்டும். சிறு மேற்கோளாயினும் காற்புள்ளி (,) மட்டும் இட்டு அவ்வாறே எழுதிச் செல்லலாம். பெரியமேற்கோளாயின் முக்காற்புள்ளி (:) இட்டு அப்பகுதியை எழுதவேண்டும். பிறமொழி மேற்கோளை மொழி பெயர்த்துத்தான் ஆய்வேட்டின் உடற்பகுதியில் போடவேண்டும்.

குறிப்பு

மேற்கோள் பெரியதாக இருப்பின் இடப்புற ஓரத்திலிருந்து நான்கு இடம் உள்ளே தள்ளி அமைதல் வேண்டும். இங்கு மேற்கோள் குறியீடு அவசியமில்லை. அடிக்குறிப்புக்களில் ஆளப்படும் அனைத்து மேற்கோள்களும் குறியீடுகளுடன் அமைக்கப்பட வேண்டும். மேற்கோள் பகுதியில் ஆசிரியர் தந்துள்ள குறிப்பு எழுத்துப் பிழையோ தவறாகவோ இருப்பின் பிழையான பகுதியை அடுத்து [Sic] என்று அடிக்கோடிட்டுச் சதுர அடைப்பினுள் தரவேண்டும். அதனையடுத்துத் திருத்தம் இடம்பெற வேண்டும். மேற்கோள் தொடர்ச்சியாகக் காட்டப்படாவிட்டால் . . . . . பின் தொடரலாம்.

அடிக்குறிப்புகளில் ஆளப்படும் அனைத்து மேற்கோள்களும் குறியீடுகளுடன் அமைக்கப்பட வேண்டும். மேற்கோளாக எடுத்தாளும் பகுதியில் அறிஞர் பெயரின்றிக் கட்டுப் பெயராகயிருப்பின் சதுர அடைப்பில் [ ] ஆசிரியர் பெயர் தருதல் வேண்டும். இரண்டு, மூன்று வரிக் கவிதைகளை மேற்கோள் காட்டின் மேற்கோள் குறியீடு அவசியமில்லை. இடதுபுறம் கொஞ்சம் தள்ளித் தொடங்கலாம்.

மேலைநாட்டு ஆய்வேடுகளில் இருவகையான மேற்கோள் நெறிகள் காணப்படுகின்றன. 1. தற்கால அமெரிக்க மொழிக்கழக முறை, 2. அமெரிக்க உளவியல் கழக முறை. முதல் முறையின்படி கட்டுரையில் இடம்பெறும் மேற்கோளைக் கீழ்க்கண்டவாறு காட்டலாம்.

> "இம்முல்லைப் பாட்டை ஏனை ஒன்பது பாட்டுக்களோடும் ஒப்பவைத்து நோக்குங்கால், இ∴து ஏனையவற்றைப் போல் மிக உயர்ந்த தீஞ்சுவை நடையினதாகக் காணப்படவில்லை யென்து தோன்றுகின்றது" (மறைமலையடிகள் 78)

இம்மேற்கோளுக்குப் பின் (மறைமலையடிகள் 78) எனக் குறித்தது நூலாசிரியர் பெயரையும் அவரது படைப்பொன்றின் எழுத்தெட்டாம் பக்கத்தில் இச்செய்தி காணப்படுகின்றது என்று காட்டுவதற்கு ஆகும். இது குறித்து முழுவிவரங்கள் ஆய்வேட்டின் இறுதியில் இடம்பெறும் துணைநூற்பட்டியலில் கண்டுகொள்ளக்கூடும். ஆய்வேட்டில் நூலாசிரியரின் நூல்கள் ஒன்றுக்கு மேற்பட்ட காட்டப்பெறு இருப்பின் (மறைமலையடிகள், முல்லைப்பாட்டு 78) என்று நூற்பெயரின் ஒரு பகுதியையேனும் இணைத்துக் கூறல் வேண்டும்.

குறிப்பு

அமெரிக்க உளவியல் கழக முறையில் மேற்கோள் காட்டுதலில் ஒரு சிறு வேறுபாட்டைக் காணலாம்.

> "இம்முல்லைப் பாட்டை ஏனை ஒன்பது பாட்டுக்களோடும் ஒப்பவைத்து நோக்குங்கால், இ∴து ஏனையவற்றைப் போல் மிக உயர்ந்த தீஞ்சுவை நடையினதாகக் காணப்படவில்லை யென்து தோன்றுகின்றது" (மறைமலையடிகள், 1997, ப.78)

எனக் குறிக்கப்பெறும் நிலையை இங்குக் காணலாம். இதில் ஆண்டும், பக்கத்தைக் குறிப்பப் 'ப.' என்ற எழுத்தும் சேர்ந்துள்ளன.

## 14.3.6. மேற்கோள் அறம்

ஒரு நூலிலிருந்து ஒரு செய்தியை எடுத்தாளும்போது அதனை முறையாகக் குறிப்பிடுதல் ஆய்வுத் துறைக்குரிய தலையாய அறமாகும். யார் இதனையெல்லாம் காணப்போகின்றார்கள் என்ற போக்கில் மேற்கோள் எனக் காட்டாது விடுவது பல தவறுகளுக்கும் வழிவகுக்கும். குறிப்பிட்ட ஒரு சொல் தமிழ் இலக்கியத்தில் முதன் முதலில் ஒன்பதாம் நூற்றாண்டில்தான் ஆளப்பெற்றுள்ளது என்று ஒருவர் எழுதினார். உண்மையில் அச்சொல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குரிய நூலிலேயே ஆளப்பெற்றிருக்கிறது. பின்பு ஆய்வு செய்த பலரும் இன்னாரால் இச்சொல் ஒன்பதாம் நூற்றாண்டில்தான் முதன் முதலில் ஆளப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளனர் எனக் குறிக்காமல் தாங்களாகவே அறிந்ததுபோல் அதனை ஒன்பதாம் நூற்றாண்டிற்குரியது எனக் குறித்துள்ளனர். ஆய்வறம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இத்தவறு இவர்கள்பால் நிகழ்ந்ததாகாமல் போயிருக்கும்.

பல அரிய ஆராய்ச்சி நூல்கள் கிடைக்காமல் போவதுண்டு. எனினும் அவற்றிலிருந்து சில பகுதிகளைச் சிலர் தம் நூல்களில் மேற்கோளாகக் காட்டியிருப்பர். எடுத்துக்காட்டாகச் சிந்துவெளி அகழ்வாய்வு குறித்துச் சர் ஜான் மார்ஷல், மார்ட்டிமம் வீலர், ஹீராஸ் பாதிரியார் ஆகியோர் ஆய்ந்து எழுதியுள்ள நூல்கள் இன்று மறு அச்சு ஆகவில்லை. ஆனால் இவற்றிலிருந்து அரிய செய்திகளை மா. இரசமாணிக்கனார், க.த. திருநாவுக்கரசு, கே.கே. பிள்ளை ஆகியோர் தம் நூல்களில் எடுத்துக் காட்டியுள்ளனர். இவர்களிடமிருந்து இப்பகுதியை எடுத்துக்காட்டும் சிலர் தாமே முற்குறித்த நூல்களில் படித்துப் பார்த்து

எடுத்துக் கொண்டது போல் குறிக்கின்றனர். ஒருவரால் தவறாகக் குறிக்கப்பட்ட பக்க எண்ணைக் கூட அப்படியே குறித்திருப்பது இதற்குச் சான்றாகும். ஜான் மார்ஷலின் கருத்தைத் திருநாவுக்கரசு இவ்வாறு எடுத்துரைக்கிறார் என்று காட்டுவதால் ஆய்வாளர் மதிப்பு ஒன்றும் குறைந்துவிடாது. ஒருவர்தம் ஆய்வேட்டில் அச்சுக்கு வராத கையெழுத்துப் படியினை மேற்கோளாகக் காட்டும்போது அது கையெழுத்துப்படி எனக் குறிக்காமல் விட்டுவிட்டார். அதனைப் பார்த்து அம்மேற்கோளைக் கையாண்ட மற்றொருவர் அதனை அச்சிட்ட நூல் என்று கருதித் தாமாகவே ஆண்டு, பக்கம் ஆகியவற்றைச் சேர்த்து மேற்கோளை நிறைவுடையதாக ஆக்கி இருக்கின்றார்.

## 14.3.7. மேற்கோளில் சுட்டுப் பெயர்கள்

மேற்கோளில் முதன் முதலாக அவன், அவர், அது, அவை, அவர்கள், அவள் என்ற சுட்டுப் பெயர்கள் வந்தால் அச்சுட்டுப் பெயரைஅடுத்த பகர அடைப்புக் குறியினுள் பெயரைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

> “அவர்கள் [பரதவர்கள்] ஒரு காலத்தில் பேராற்றல் பெற்றவர்களாத் திகழ்ந்தனர். கடற் செலவில் தக்கிருந்த சிறந்த திறமையும், முதிர்ந்த அனுபவமும் அவர்களை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத செல்வர்களாகவும் உயர் தலைமையாளர்களாகவும் விளங்கச் செய்தன”[1]

மேற்கண்ட மேற்கோளில் அவர்கள் என்ற சுட்டுப்பெயர் யாரைக் குறிக்கிறது? என்பதை அறியும் வண்ணம் பகர அடைப்புக் குறியினுள் [பரதவர்கள்] எனச் சுட்ட வேண்டும். அதே மேற்கோளில் மீண்டும் ‘அவர்களை’ என வரும் இடத்தில் சுட்டத் தேவையில்லை. இவ்வாறு மேற்கோளில் பெயர் குறிக்கப்படாமல் அவன், அவர், அவள், அது, அவர்கள் போன்ற சுட்டுப் பெயர்கள் வரும்போது, சுட்டுப் பெயரை அடுத்து பகர அடைப்பினுள் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

## 14.3.8. செய்யுள் மேற்கோள்

செய்யுளை மேற்கோளில் ஆளும்போது மூலத்தில் உள்ளபடியே எழுதுதல் வேண்டும். இரண்டு அடிகளை மட்டும் மேற்கோளாக

குறிப்பு

ஆண்டால் உடற்பகுதியிலேயே இரட்டை மேற்கோள் குறியீட்டினுள் எழுத வேண்டும். இரு அடிகளையும் பிரித்துக் காட்ட முதலடியின் முடிவில் / என்றவாறு சாய்வுக்கோடிட வேண்டும். அல்லது ,(காற்புள்ளி) இடவேண்டும். இரண்டு அடிகளுக்கு மேற்பட்டிருந்தால் ஆய்வு தொடக்க ஓரப்பகுதியிலிருந்து 0.5 இன்ச் தள்ளி நூலிலுள்ளவாறு எழுதுதல் வேண்டும். ஆய்வுப் பகுதியிலிருந்து தனித்து எழுதப்படுவதால் மேற்கோள் குறியீடு தேவையில்லை.

இரண்டு அடிகளாயின், "முதிர்வார் இப்பி முத்த வார்மணல்/கதிர்விடு மணியின் கண்பொரு மாடத்து"[3] என எழுதி மற்ற எழுதித்திலிருந்து வேறுபடுத்திக் காட்ட சாய்வெழுத்தாகவோ Bold எழுத்தாகவோ காட்ட வேண்டும். இரண்டு அடிகளுக்கு மேற்பட்டிருப்பின்,

*ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும்*
*நாடெனப்படுவது நினதே அத்தை ஆங்க*
*நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு நேந்தே*
*நினவ கூறுவல் எனவ கேண்மதி*
*அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து*
*முறைவேண்டு பொழுதின் பதன்எளி யோர்ஈண்டு*
*உறைவேண்டு பொழுதில் பெயர்பெற் றோரே*[4]

எனச் சாய்வு எழுத்தாகவோ Bold எழுத்தாகவோ காட்ட வேண்டும்.

## 14.3.9. உரைநடை மேற்கோள்

மூன்று வரிகளாக உரைநடை மேற்கோள் அமையுமாயின், அதனை ஆய்வின் உடற்பகுதியிலேயே இரட்டை மேற்கோள் குறியீட்டினுள் எழுதவேண்டும். மூன்று வரிகளுக்கு மேற்பட்டிருப்பின் தொடக்க ஓரப்பகுதியிலிருந்து 0.5 இன்ச் தள்ளி பத்தி தொடங்குவதுபோல் தொடங்கி எழுதவேண்டும். இவ்வாறு எழுதுவதால் மேற்கோள் குறியீடு தேவையில்லை. தற்போது கணிப்பொறியில் ஆய்வேடு உருவாக்குவதால் இம்மேற்கோள் பகுதியை சாய்வெழுத்தாகவோ டீழடன எழுத்தாகவோ காட்டலாம். ஜஎ.டு.ஸ சமணர்கள் துறவு பூண்டு பொதுப்பணி புரிந்தனர். அவர்களைப் போலவே தமிழ்நாட்டு அந்தணர்களும் துறவு பூண்டு பொதுப்பணி

செய்தனர் என்பது மதுரைக் காஞ்சியால் அறியலாகும் புதுச் செய்தியாகும். இது பற்றிச் சாமி சிதம்பரனார்,

> அக்காலத்திலேயே மதுரையிலே பவுத்த சமணப் பள்ளிகளைப் போல அந்தணர் பள்ளி இருந்ததாக இவ்வாசிரியர் கூறுகிறார். இது ஒரு புதிய செய்தி. சமணத் துறவிகளைப் போலத் தமிழ்நாட்டு அந்தணர்களிலும் துறவிகள் இருந்தார்கள். அவர்கள் வேத வேதாந்தங்களைப் போதித்து வந்தார்கள் என்ற உண்மையை இதன் மூலம் காணலாம்[3]

என்றவாறு அமைக்கலாம்.

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

1. மேற்கோள் - குறிப்பு வரைக.
2. மேற்கோள் வகைகள் யாவை?
3. குறிப்பட்டையின் நோக்கம் யாது?
4. மேற்கோள் அறம் யாது?

## 14.4. அடிக்குறிப்பு

ஆய்வறிக்கைக்கு அடிக்குறிப்பிடுதல் மிக இன்றியமையாத ஒன்றாகும். சான்றுகளின் வழி நடுநிலையோடு அறிவியலாய்வு என்பதைக் காட்டும் நெறி என்பதை மறக்கக் கூடாது. மூலப் பகுதியில் காட்டப்படும் ஆதாரங்களுக்கான விவரங்கள் அடிக்குறிப்பில் இடம்பெற வேண்டும். அந்தந்தத் துறைகளில் உழைத்தவர்களின் பெயர்களை அடிக்குறிப்புக்கள் காட்டி விடுகின்றன. ஆய்வாளர் பிறரிடமிருந்து பெற்றது என்பதை அடிக்குறிப்புகள் காட்டி விடுகின்றன. மறுப்பாளரிடமிருந்து காத்துக் கொள்ளவும் இஃது உதவும். ஆய்வேட்டில் பிற இயல்களுடன் மாட்டெறிவதற்கு எதிர்குறிப்பாக இது பயன்படும்.

எடுத்தாண்ட நூல், கட்டுரை பற்றிய விவரம் அடிக்குறிப்பில் அமைய வேண்டும். மேற்கோள் எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்ட விவரமும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்துவிடும். ஒரு பொருள் பற்றிப் பல்வேறு ஆசிரியர்கள் கூறிய கருத்துக்களை மிகச் சுருக்கமாக

குறிப்பு

அடிக்குறிப்பில் கொடுக்கலாம். ஆய்வேட்டிற்குரிய இன்றியமையாமை அடிக்குறிப்புத் தருவதில் ஏற்படுகிறது. ஆய்வேட்டில் கூறப்படும் கருத்துக்களுக்கும் முடிவுகளுக்கும் அடிக்குறிப்பே ஓர் அரணாக அமைந்து அழுத்தத்தையும் நிறைவையும் கொடுக்கின்றது. பிறரிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களை அறிவிக்கப் பயன்படுகின்றது. சான்று ஆதாரங்களைத் தேடி அடிக்குறிப்பு உறுதுணை புரியும். எதிர்க்குறிப்பாகப் பயன்படும். ஒருவர் காட்டும் அடிக்குறிப்புக்கள் அவரது புலமையின் பரப்பையும் ஆழத்தையும் காட்டும். பிறரது கருத்திலிருந்து தமது சொந்தக் கருத்தைக் காட்டவும் தம்மைத் தாக்காமல் காட்டிக் கொள்ளவும் பயன்படும். பிறமொழி மூலத்தை அப்படியே அடிக்குறிப்பில் தந்துவிட்டு அதன் மொழிபெயர்ப்பை ஆய்வேட்டின் உடல் பகுதியில் தரவேண்டும். மேற்கோள் முடியும் இடத்தில் எண் இடவேண்டும். எண் தொடர்ச்சியாக அமைதல் வேண்டும். அந்தந்தப் பக்கத்தில் எண் இடுவதும் உண்டு. ஆசிரியர் பெயர், நூலின் பெயர், பக்க எண் முதலியவற்றை இடவேண்டும். டாக்டர் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். தமிழண்ணல் (இராம. பெரியகருப்பன்) என இடல் வேண்டும். பதிப்.ஆ., மொ.ப.ஆ., பொ.ப.ஆ., என இடல் வேண்டும்.

நன்கு அறியப்பட்ட மெய்ம்மைகளுக்கு மேற்கோள் காட்டத் தேவையில்லை. வெளியிடப்பட்ட நூல், கட்டுரை காட்டலாம். இன்றியமையாத இடமாக இருப்பின் கையெழுத்துப் படியினைக் காட்டலாம். ஒரே கருத்து பலர் கூறியிருந்தால், காலத்தால் முற்பட்டவர் கருத்தைக் காட்ட வேண்டும். பிறமொழி மொழபெயர்ப்புத் தரலாம். அப்படியே தரவேண்டும் என்றால் அடிக்குறிப்பில் தரவேண்டும். தம் கருத்துக்கு அரணான இடங்களில் எடுத்துக்காட்ட வேண்டும். புறநடையான கருத்துக்களைச் சுட்டுமிடங்களில் தரலாம். அளவாகக் கொடுக்க வேண்டும். தருக்க முறையில் Abbreviation தந்தால் போதுமானது. அந்தந்தப் பக்கத்தில் அடியிலேயே அமைத்தல் சிறந்த முறையாகும். இயல்தோறும் இறுதியில் அமைப்பதும் உண்டு.

ஒரு நூலின் அடிகளை, வரிகளை, கருத்தை, சாரத்தை, எடுத்து மொழியும் போது அவற்றை மேற்கோள் குறிகள் இட்டுக்காட்டி இறுதியில் எண் கொடுத்து அடிக்குறிப்பில் அந்நூற்பகுதி குறித்த விவரங்களைக் காட்ட வேண்டும். ஆராய்ச்சியில் உழைப்பையும் தரத்தையும் காட்டும்

பகுதி இது. ஒவ்வொரு நூலையும் படிக்கும்போதே சரியாகக் குறிப்பெடுத்துக் கொள்வது இவ்வடிக்குறிப்பிடுதலுக்குப் பெரிதும் உதவும். பக்கம் குறித்துக் கொள்ள மறந்து போனதால் நூலையே மேற்கோளாகக் காட்ட முடியாத நிலை ஏற்படுவதுண்டு.

ஒவ்வொரு பக்கத்திற்கும் தனித்தனியாகத் தொடர் எண்ணிடும் முறையும் ஒரு இயலுக்கே தொடர்ந்து எண்ணிடும் முறையும் வழக்கத்தில் உள்ளன. ஆய்வுரை எழுதும்போதே அடிக்குறிப்புக்கான தொடர் எண் முறை பின்பற்றப்பட வேண்டும். அடிக்குறிப்புக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் முழுமையாகவும் தரவேண்டும். பெயர்களைக் குறிப்பிடும்போது முன்னெழுத்துக்களையும் குறிப்பிட வேண்டும். அடிக்குறிப்பை ஒரு நூலிலிருந்து முதன் முதலாகத் தரும்பொழுது முழு விவரம் தந்து, பிறகு வரும்போது ஆசிரியர் பெயரும் நூற்பெயரும் தரலாம். அதே நூலை மீண்டும் காட்ட நேருமானால் ஆசிரியர் பெயரும் நூற்பெயரும் தந்தால் போதுமானது.

ஒரு நூலிலிருந்து அடுத்தடுத்து மேற்கோள் காட்ட நேர்ந்தால் முதலில் ஆசிரியர் பெயர், நூற்பெயர் சுட்டிய பின்னர்ப் பக்கங்களைப் போடவேண்டும். 'மேலது', 'மேற்படி' எனப் போட்டு பக்க எண் குறிப்பிடலாம். முற்காட்டிய நூலிலிருந்தே சில பக்கங்கள் இடைவெளிவிட்டு மீண்டும் காட்டுதல் நேர்ந்தால், ஆங்கிலத்தில் ழி.உவை. என்று ஆசிரியர் பெயருக்குப் பின் போட்டு ப.2 என எண்ணைக் குறிப்பிட வேண்டும். தமிழில் ஆசிரியர் பெயருக்குப் பின் மு.நூ. எனப் போடவேண்டும்.

## 14.4.1. அடிக்குறிப்பு அமைத்திடும் முறைகள்

நூலாசிரியர் எழுதிய ஒரு நூலின் பகுதியை மேற்கோளாகக் காட்டும்போது அடிக்குறிப்பு அமைவதைப் பின்வருமாறு காணலாம்.

> "தேள்கடி கோடைக் காலத்தில் மிகுதியாகக் காணப்படுகிறது. பெரியவர்களிடம், கொட்டிய இடத்தில் மட்டும் வலியும் எரிச்சலும் உண்டாகிறது. ஆனால் குழந்தைகளிடம் பொதுவான உடல் குறிகளுடன் இரத்த ஓட்ட அயர்வும் ஏற்படுவதனால், தோல் குளிர்ந்து இரத்த அழுத்தம் குறைந்து, நாடி வீழ்ந்து விடுகிறது. அரிதாக மிகுகாய்ச்சலுடன் இசிவும் ஏற்படலாம். சில

வேளைகளில் தேக்க இதய அயர்வும் உண்டாகிறது. எந்த வயதிலும் இக்குறிகள் தேன்றக்கூடும்."[11]

மேற்குறித்த பகுதியை எடுத்துக்காட்டும் ஆசிரியர் அடிக்குறிப்பில்,

குறிப்பு

11. குழந்தை நல மருத்துவம் - தொகுதி 2, ஞா. இராஜராஜேஸ்வரி மற்றும் அ. ஜெகதீசன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2003, ப.338 எனக் குறிப்பிடவேண்டும்.

ஒருவருக்கு மேற்பட்டவரால் ஒரு நூல் எழுதப்பட்டிருப்பின், நூலின் தலைப்பில் நூலாசிரியர்கள் பெயர்கள் எவ்வரிசையில் குறிப்பிடப்பட்டு உள்ளனவோ அவ்வரிசையில் அடிக்குறிப்பிலும் காட்டப்பெறல் வேண்டும். "முத்துச் சண்முகன், சு. வெங்கடராமன், இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள், ப.111" என்றவாறு இடப்பெற வேண்டும். இருவர்க்கு மேற்பட்ட பலர் எழுதிய ஒரு நூலை அடிக்குறிப்பில் இடும்போது முதற்பெயரினை மட்டும் குறிப்பிட்டுவிட்டு 'மற்றும் பிறர்' எனக் குறிப்பிட வேண்டும். எனினும் துணைநூற் பட்டியலில் ஆசிரியர் அனைவர் பெயரையும் நூலிற் காணப்பெறும் வரிசையிலே இடம்பெறச் செய்தல் வேண்டும். எ.டு.

ம.ரா.பொ. குருசாமி, சுப. அண்ணாமலை, கதிர் மகாதேவன் (மொ.பெ.), பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.131

இவ்வாறு அடிக்குறிப்பில் எழுதுவதோடு சுருக்கக் குறியீட்டு விளக்கத்தில் மொ.பெ. மொழிபெயர்ப்பு எனக் குறித்தல் வேண்டும்.

ஒரு நிறுவனம், ஓர் அமைப்பு, ஒரு கழகம், ஒரு குழு ஆகியவற்றின் சார்பாக ஒரு நூல் வெளியிடப்பட்டிருப்பின் அடிக்குறிப்பில், "தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், பன்னிரண்டாம் வகுப்புப்பொதுத் தமிழ்ப் பாடநூல், சென்னை 1996, ப.77" என்று குறிப்பிட வேண்டும்.

பலருடைய கட்டுரைகள் தொகுக்கப் பெற்று ஒருவரால் பதிப்பிக்கப் பெற்றிருப்பின், "பழந்தமிழ்ப் புதுமை, ச. சிவகாமி, (தொ.ஆ.), உமாமஹேஸ்வரி (பதி.), ப.53" எனக் குறிப்பிட வேண்டும்.

பலருடைய கட்டுரைகள் தொகுக்கப்பெற்ற தொகுப்பில் குறிப்பிட்ட ஒரு கட்டுரையிலிருந்து மேற்கோள் காட்டப்பெற்றிருப்பின், "ஞானத்தின் திருவுரு (கட்.), பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், <u>கரந்தைக்</u>

கட்டுரைக் கோவை, ப.14” எனக் குறிப்பிட வேண்டும். இங்குக் கட்டுரையை நூலிலிருந்து வேறுபடுத்த நூற்பெயருக்கு அடிக்கோடு இடல்வேண்டும் அல்லது போல்ட் செய்ய வேண்டும்.

குறிப்பு

கலைக்களஞ்சியம், விவரநூல், அகராதிகள் போன்றவற்றிலிருந்து குறிப்புக்களைத் தந்தால் “கலைக்களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம் நான்காம் தொகுதி, சமூக அமைப்பு (கட்), ஐராவதி கார்வே, ப.470” என அடிக்குறிப்பில் குறிப்பிட வேண்டும். இக்குறிப்பில் கட்டுரையின் பெயர் அடிக்கோடு இடம்பெற்றுள்ளது. “தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை தொகுதி 7, ப.387” என்றும் குறிப்பிடலாம்.

சிறு அறிக்கைகள், துண்டு வெளியீடுகள், ஒற்றைத்தாளில் விளம்பரம், செய்தித்தாளின் சிறுபகுதி ஆகியவற்றைக் குறித்துத் தெளிவாக பின்வருமாறு அடிக்குறிப்பு அமைதல் வேண்டும்.

- சுவடி தாரீர், மோ.கோ. கோவைமணி, தஞ்சாவூர், ப.2.
- நமது அவசரத் தேவை - மொழிக் கொள்கை, வா.செ. குழந்தைசாமி, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, ப.6.
- கொள்கை விளக்கக் குறிப்பு, கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, மானியக் கோரிக்கை எண்.17, 1994, ப.42.
- ஆசிரியருக்குக் கடிதங்கள், தினமணி, சென்னைப் பதிப்பு, 16.4.1952.
- சொற்பிறப்பியல் அகரமுதலி பற்றிப் பாவாணரின் கருத்தும் நோக்கமும், அறிக்கை, பெருஞ்சித்திரன், தென்மொழி, சுவடி 17, ஓலை 6-7, ப.7.
- புத்தக வரலாற்றில் புதிய புரட்டு - விளம்பரம், ஆனந்த விகடன், 30.11.97, ப.47.
- தொல்லியல் கழக ஆண்டறிக்கை, 2018, ப.42.
- பாரதியின் கடித இலக்கியம் - இ. சுந்தரமூர்த்தி, தமிழாய்வு இதழிலிருந்து எடுத்து வெளியிடப்பெற்ற துண்டு வெளியீடு, ப.110.
- புலமை, பல்கலைக் காலாண்டு இதழ், தொகுதி 2, ஏப்ரல்-சூன் 1976, ப.214.

**குறிப்பு**

இவ்வாறு அடிக்குறிப்பு இடம்பெறுவதோடு, சிறு அறிக்கைகள், துண்டு வெளியீடுகள், ஒற்றைத்தாள் விளம்பரங்கள், செய்தித்தாள்களில் பெட்டிச் செய்திகள் ஆகியவற்றை ஒளியச்சுச் செய்து பின்னிணைப்புக்களில் இணைத்தல் வேண்டும்.

ஆண்டு குறிக்கப்படாத நூல்கள், பக்க எண் குறிக்கப்படாத நூல்கள், வெளியீடுகள் ஆகியவற்றை முறையே "மகர நெடுங்குழைக்காதர் பாமாலையந்தாதி, ஸ்ரீ.உ.வே. எஸ்.கே. ராமகிருஷ்ணய்யங்கார் (பதி.), ஆண்டு இல்லை, ப.36" என்றும், "என்ன செய்ய வேண்டும், இந்திய அரசு மனித வளமேம்பாட்டுத்துறை வெளியீடு, 1992, பக்கம் இல்லை" என்றும் அடிக்குறிப்பில் குறிப்பிட வேண்டும்.

அச்சிடப்பெறாத கையெழுத்துப்படிகளாயின் அவை சரியான ஆவணங்கள்தாம் என்று அரிய கையெழுத்து வல்ல ஆய்வுத்துறை, தொல்பொருள் துறை போன்றவற்றால் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றின் ஒளியச்சுப் படிகளையும் பின்னிணைப்பில் இணைத்தல் வேண்டும். அடிக்குறிப்பில், "மனுமுறை கண்ட வாசகம், இராமலிங்க அடிகளாரின் கையெழுத்துப் படி (சான்றளிக்கப்பெற்றது)" என்று குறிப்பிட வேண்டும். பதிவு செய்யப்பட்ட பத்திரம், கருவூலச்சீட்டு, மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளின் ஆணை ஆகியவற்றின் ஒளியச்சுப் படிகளைப் பின்னிணைப்பில் தருவதோடு அடிக்குறிப்பில் அவற்றின் நாளை மறவாது குறிக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெற்றுப் பட்டம் வழங்கப்பட்ட அச்சிடாத ஆய்வேடும் மேற்கோள் காட்டத்தக்கதே. "சித்த மருத்துவத்தில் நாடி - வெளியிடப்பெறாத ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1988, பக்.23-34" என்று அடிக்குறிப்பில் ஆய்வேடு அளிக்கப்பெற்ற ஆண்டு, பல்கலைக்கழகத்தின் பெயர் ஆகியவற்றைக் குறிக்க வேண்டும்.

தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளை மேற்கோள் காட்டும் போது அவை ஒளிபரப்பப்பெற்ற அல்லது ஒலி பரப்பப்பெற்ற நாள் நேரம் தொலைக்காட்சி, வானொலி நிறுவனத்தின் பெயர் ஆகியவற்றையும் குறிப்பிடல் வேண்டும். "புதுமைப்பித்தன் படைப்பாற்றல், கு.வெ. பாலசுப்பிரமணியன், விஜய் தொலைக்காட்சி, சென்னை, மாலை 5,30,

12.10.1997” என்றும், “தமிழிசைப் பண்கள், ப.சுந்தரேசனார், திருச்சி வானொலி நிலையம், இலக்கியப் பேருரை, இரவு 9.30-10.00, 6.4.1987” என்றும், நிகழ்ச்சியில் பங்குபெற்றோர் பலராயின், “முனைவர் ஆறு. அழகப்பன் மற்றும் ஐவர்” என்றும் குறித்தல் வேண்டும். திரைப்பாடல், ஒலிநாடா ஆகியவற்றிலிருந்தும் மேற்கோள் காட்டலாம். அவற்றின் பெயர், வெளியீட்டாளர் பெயர், ஆண்டு ஆகியன அடிக்குறிப்பில் இடம்பெற வேண்டும்.

குறிப்பு

## 14.4.2. அடிக்குறிப்பில் சுருக்கக் குறியீடுகள்

ஆய்வாளர் ஆய்வேட்டில் அடிக்குறிப்பு குறிப்பிடும்போது இடத்திற்கேற்பவும், பொருளுக்கேற்பவும் சுருக்கக் குறியீடுகள் இடம்பெறுவதுண்டு. அச்சுருக்கக் குறியீடுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பின்வருமாறு அமையும்.

| | | |
|---|---|---|
| ப. | - | பக்கம் |
| p. | - | page |
| பக். | - | பக்கங்கள் |
| pp. | - | pages |
| மேற்படி | - | அதே இடத்தில் |
| ibid | - | ibidem |
| மேலது | - | அதுவே |
| idem | - | the same |
| மு.நூ. | - | முற்காட்டிய நூலிலிருந்து |
| op.cit. | - | opera citato in the work cited/quoted |
| மு.ப. | - | முற்காட்டிய பகுதியிலிருந்து |
| loc.cit. | - | Loco citato:in the same place cited |
| supra | - | above இந்நூலின் முன்னர் உள்ள பக்கம் |
| infra | - | below இந்நூலின் பின்னர் உள்ள பக்கம் |
| தே.இ. | - | தேதி இல்லை.∵.வெளியிட்ட ஆண்டு இல்லை |
| n.d. | - | no date |
| இ.இ. | - | வெளியிட்ட இடம் இல்லை |
| n.p. | - | No place of publication |
| vide | - | See vide Appendix I |

**குறிப்பு**

| | | |
|---|---|---|
| பதி. | - | பதிப்பாசிரியர்.ஃ.பதிப்பு |
| ed. | - | Editor/Edition |
| முதலியவர்கள் | - | இரண்டிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் |
| el.al. | - | et alii and other |
| ப.உ. | - | பதிப்புரிமை |
| c. | - | copyright |
| ஒ.பா. | - | ஒப்பிட்டுப் பார்க்க |
| cf. | - | canfer |
| இ.கா. | - | இணைத்துக் காண்க |
| cp. | - | camparo |
| எ.டு. | - | எடுத்துக்காட்டு |
| eg. | - | example |
| தொ. | - | தொடர்ச்சி |
| தொடர். | - | தொடர்ச்சி |
| ct seq | - | ct sequens and the following |
| f. | - | the page following |
| ff. | - | the pages following |
| அ.பொ. | - | அதன் பொருளாவது |
| i.e. | - | that is |
| மு.கு. | - | முக்கியக் குறிப்பு |
| n.b. | - | note bene, note well |
| Passim | - | here and there |
| q.v. | - | quod vide which see, See vide |
| தி.ப. | - | திருத்திய பதிப்பு |
| Rev.ed. | - | Revised Edition |
| மொ.பெ. | - | மொழிபெயர்ப்பு |
| trans. | - | Translator or Translation |
| பா. | - | பாட்டு |
| v. | - | verse |
| பாக். | - | பாக்கள் |
| vv. | - | verses |
| அ.யா. | - | அ.ஃ.து யாதெனில் |

Viz. - Vide licet> namely

எதிர். - எதிரான

Vs. - Versus against



குறிப்பு

### 14.4.3. அடிக்குறிப்பின் பயன்கள்

- ஆய்வாளர் எந்தெந்த நூல்களிலிருந்து ஆய்வுக்குத் தேவையான கருத்துக்களை எடுத்தாண்டுள்ளார் என்பதை அறியப் பயன்படுகிறது.
- பிறமொழி நூல்களிலிருந்து மேற்கோளை எடுத்தாண்டால், மொழிபெயர்ப்பை ஆய்வுப் பகுதியில் எழுதிவிட்டு, பிறமொழி நூல் மூலக் கருத்தை அப்படியே தர அடிக்குறிப்பு பயன்படுகிறது.
- ஆய்வேட்டின் முன்னும் பின்னும் வெவ்வேறு இடங்களில் கூறிய கருத்துக்களை ஓரிடத்தில் ஒப்பிட்டுக் காட்டவும், உறழ்ந்து காட்டவும் அடிக்குறிப்பு பயன்படுகிறது.
- இன்றியமையாத தேவையின்போது மூலத்தை அப்படியே தரவும் அடிக்குறிப்பு பயன்படுகிறது.
- சில செய்திகளைத் தெளிவாக ஆய்வுப் பகுதியில் விளக்க முடியாத நிலை ஏற்படும் பொழுது, விளக்கம் தர இடம் தருவது அடிக்குறிப்பே ஆகும்.
- ஆய்வுக் கட்டுரையிலுள்ள ஒரு செய்தியே பல இடங்களில் கொடுக்கப்பட்டிருந்தால் அதனைத் தெரிவிக்கவும் அடிக்குறிப்பு பயன்படுகிறது.
- எடுக்கப்படும் மேற்கோள், கருத்துகள், இடம்பெறும் நூலாசிரியருக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக அடிக்குறிப்பு அமைகிறது.
- ஆய்வாளரின் சிந்தனையோட்டமும், கருத்தோட்டமும தடைபடாமல், சீரான முறையில் தெளிவாகக் கருத்துகளை ஆய்வுப் பகுதியில் எடுத்துக் கூற வழி வகுப்பது அடிக்குறிப்பே ஆகும்.

## 14.4.4. அடிக்குறிப்பில் ஆய்வாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்

குறிப்பு

- நூலில் உள்ளவாறே ஆசிரியர் பெயரை எழுத வேண்டும். டாக்டர், பேராசிரியர், புலவர், கவிஞர், சித்த மருத்துவர், லயன், திரு., திருவாளர், திருமதி போன்ற சிறப்புப் பட்டங்களை அடிக்குறிப்பில் எழுதத் தேவையில்லை.
- மேற்கோள் எண்களுக்கேற்ப முறைப்படி அடிக்குறிப்பிட வேண்டும்.
- நூற்பெயரை அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டும். பகுதி, தொகுதிகள் இருந்தால் அவற்றிற்கும் அடிக்கோடிட வேண்டும். இது தட்டச்சு எந்திரம் மூலம் ஆய்வேடு தயார் செய்யும்போது கடைபிடிக்க வேண்ய முறை. தற்போது கணிப்பொறியில் தட்டச்சு செய்வதால் Bold Lettersஇல் காட்டலாம்.
- கட்டுரையாயின் கட்டுரையின் தலைப்பை ‘ ’ என ஒற்றை மேற்கோளுள்ளும், கட்டுரை இடம்பெறும் நூற்பெயரை அடிக்கோடிட்டும் அமைக்க வேண்டும். அடிக்கோடிடுதலுக்கு மாற்றாக தற்போது கணிப்பொறியில் Bold Lettersஇல் காட்டலாம்.
- அடிக்குறிப்பில் மூலப்பகுதியை அமைக்கும்போது, இரட்டை மேற்கோள் குறியீட்டினுள் எழுத வேண்டும்.
- குறுக்க விளக்கங்களைத் தேவையான இடங்களில் முறைப்படி பயன்படுத்த வேண்டும்.
- அடிக்குறிப்பில் விளக்கம் அளிக்க வேண்டியிருப்பின் சுருக்கமாக விளக்கமளிக்க விழைதல் வேண்டும்.
- அடிக்குறிப்பில் விளக்கம் அதிகமாக அளிக்க வேண்டியிருப்பின் அதைப் பின்னிணைப்பில் எழுதுதல் நன்று. அடிக்குறிப்பில் இடம்பெற வேண்டிய விளக்கம் பின்னிணைப்பில் இருந்தால், அடிக்குறிப்பில் பின்னிணைப்பைப் பார்க்கவும் எனக் குறிப்பிட்டு, பின்னிணைப்பு எண்ணையும் குறிப்பிட வேண்டும்.
- அடிக்குறிப்பு எழுதும் முறையை முதற்படி எழுதும் போதே தொடங்க வேண்டும்.

- அடிக்குறிப்பை ஆளும் நெறிமுறைகளின் அடிப்படையில் அனைத்து அடிக்குறிப்புகளும் கையாளப்பட்டுள்ளனவா? என்பதை ஆய்வேடு முழுமையும் பார்த்துச் சரி செய்தல் வேண்டும்.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்**

5. அடிக்குறிப்பில் இடம்பெறுவன யாவை?
6. அடிக்குறிப்பு அமைத்திடும் முறைகள் யாவை?
7. சுருக்கக் குறியீடு ஏதேனும் நான்கினைச் சுட்டுக.
8. அடிக்குறிப்பு நெறிமுறைகள் யாவை?

## 14.5. துணைநூற்பட்டியல்

ஆய்வேட்டின் இன்றியமையாத பகுதியாக துணைநூற்பட்டியல் விளங்குகிறது. ஆய்வாளருக்குச் சிறப்பாகப் பயன்படக் கூடிய வகையில் விளங்குகிறது. துணைநூற்பட்டியலுக்குத் தமிழில் ஆய்வடங்கள், கருவி நூற்பட்டியல், பார்வை நூற்பட்டியல், உசாத்துணை நூல்கள், ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள் என்ற வேறு பெயர்களும் உண்டு. துணைநூற்பட்டியலின் அமைவிடம், அமைக்கும் முறை, வகைகள், பயன்கள் பற்றி இனி விளக்கமாகக் காண்போம்.

### 14.5.1. துணைநூற்பட்டியல் அமைவிடம்

துணைநூற்பட்டியல் ஆய்வேட்டில் இரண்டு இடங்களில் இடம்பெற்று வருகிறது. ஒன்று, ஆய்வேட்டின் உடற்பகுதிக்கும் பின்னிணைப்புகளுக்கும் இடைப்பகுதியில் அமைகிறது. மற்றொன்று, பின்னிணைப்புகளின் இறுதியில் அமைகிறது. இவ்வாறு இரு இடங்களில் துணைநூற்பட்டியல் அமைந்தாலும் ஆய்வேட்டின் உடற்பகுதியை அடுத்து துணைநூற்பட்டியல் இடம்பெறுவதே சிறப்பானதாகும்.

### 14.5.2. துணைநூற்பட்டியலில் இடம்பெறத்தக்கன

ஆய்வேட்டின் தலைப்புத் தொடர்பான நூல்கள், கட்டுரைகள், உரையாடல், வானொலி மற்றும் தொலைக்காட்சி உரைகள், நூலின் மதிப்புரை, பேட்டிகள் போன்றவைகள் துணைநூல் பட்டியலில் கொடுக்க வேண்டும். முதலில் ஆய்வு தொடர்பான நூல்களைத் தொகுக்க வேண்டும். அதனைச் செயல்துணை நூல்பட்டியல் (Working

Bibliography) என்றும், எடுத்தாண்ட நூல்களை மட்டும் குறிப்பிடுவது Select Bibliography என்றும், படித்ததை Complete Bibliography என்றும், முழு விவரமும் அடங்கியதை Annotated Bibliography என்றும் கூறுவர்.

### 14.5.3. துணைநூற்பட்டியலை வகைப்படுத்துதல்

துணைநூற்பட்டியலை இரண்டு முறைகளில் வகைப்படுத்தலாம். ஒன்று, மூல உண்மைக் கூறுகளின் அடிப்படையில்; மற்றொன்று, நூல்கள், கட்டுரைகள், பேட்டிகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி உரைகள், அறிக்கைகள், கலைக்களஞ்சியம் என்ற அடிப்படையில் வகைப்படுத்தலாம். மூல உண்மைக் கூறுகளின் அடிப்படையில் வகைப்படுத்துகின்ற பொழுது துணைநூற்பட்டியல் அடிப்படை மூல உண்மைக் கூறுகள், இரண்டாம் நிலை மூல உண்மைக் கூறுகள் என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது.

வரலாற்று ஆய்வுகளைப் பொறுத்தவரை ஏராளமான ஆவணங்கள், அறிக்கைகள், கல்வெட்டுக்கள், அரசாங்கச் சட்டங்கள், நாட்குறிப்புக்கள், விவரத் தொகுப்புச்சுவடி, அரசிதழ்கள், தொகுப்புக்கள், அறிவுரை கோரல், கையேடுகள், குறிப்பேடுகள், நினைவூட்டுகள், வருடாந்திர நூல்கள் எனப் பல்வேறு மூலக்கூறு ஆதாரங்களைப் பார்க்க வேண்டி வரும். இதே மாதிரியாக அரசியல் தலைவர்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இருந்தால், மேற்படி தலைவர்கள் எழுதிய கையெழுத்துப் படிகள், கடிதங்கள், எழுதிய நூல்கள் போன்றவை மூலக்கூறு ஆதாரங்கள் பட்டியலில் இடம்பெறும். துணைநூற்பட்டியல் தயாரிக்கும் பொழுது, கவனமாக ஆய்ந்து வரிசைப்படுத்த வேண்டும்.

### 14.5.4. துணைநூற்பட்டியலின் வகைகள்

துணைநூற்பட்டியல் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் தன்மையையும், இயல்பையும் கணித்து செயல் விவரத் தொகுப்பு, மேற்கோள் துணைநூற்பட்டியல், தேர்வு துணைநூற்பட்டியல் எனத் துணைநூற்பட்டியல் மூன்று வகையாகப் பகுக்கப்படுகின்றது.

## 14.5.4.1. செயல்விவரத் தொகுப்பு

ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்ததும், ஆய்வு தொடர்பான மூல உண்மைக் கூறுகளைச் சேகரிப்பதற்கென முதலில் உருவாக்கப்படும் துணைநூற்பட்டியல் செயல்விவரத் தொகுப்பு எனப் பெயர்பெறும். இத்துணைநூற்பட்டியல் பொதுவாக ஆய்வுத் தலைப்பிற்குத் தொடர்பான நூல்கள், ஆய்வேடுகள் போன்றவற்றில் இடம்பெற்றுள்ள துணைநூற் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றது. தலைப்பிற்குத் தொடர்பாகத் தென்படுகின்ற கட்டுரைகள், இடம்பெறும் இதழ்கள், மலர்கள் போன்றவைகளும் அவ்வப்போது இத்துணைநூற் பட்டியலில் உள்ளடக்கப்படுகின்றன. இதுதான் ஆய்வின் முன்னோடியும், முதன்மையும், முதுகெலும்பும் ஆகும். எந்த அணுகு முறையை ஆய்வில் கடைப்பிடிக்க வேண்டும், எம்முறையில் சிக்கல்களைத் தீர்வுகாண வேண்டும், எத்தகைய முடிவுகளை உறுதிப்படுத்த முடியும் என்பன போன்ற நிலைகளில் ஆய்விற்கு உறுதுணையாக ஆய்வின் தொடக்கத்தில் உருவாக்கப்படுவதே செயல்விவரத் தொகுப்பு ஆகும். ஆய்வினை எளிதாக்குவதும், ஆய்விற்கு வழி காட்டியாக இருப்பதும், அத்துணைநூற் பட்டியலே ஆகும். இதுவே ஆய்வினைச் சீராக, செம்மையாக செய்ய வழி கோலுவதுடன், இறுதியாக ஆய்வேட்டின் துணைநூற் பட்டியலாகவும் மலர்கின்றது.

## 14.5.4.2. மேற்கோள் துணைநூற்பட்டியல்

ஆய்விற்குப் பயன்பட்ட அனைத்து நூல்களும், கட்டுரைகளும் மற்றும் பிறவும் இதிலடங்கும். இதன் மூலம் ஆய்வாளர் என்னென்ன நூல்களை தம் ஆய்விற்குப் பயன்படுத்தினார் என்பதை அறிந்து கொள்ளலாம். மேற்கோள் துணைநூற்பட்டியலை வைத்து ஆய்வினை ஓரளவு மதிப்பாய்வு செய்துவிடலாம். ஆய்வுத் தலைப்பிற்குப் பொருத்தமான ஆழமான கருத்தடங்கிய நூல்கள் பலவுண்டு. அத்தகைய ஆழக்கருத்துக்கள் நிறைந்த நூல்கள் இடம்பெறவில்லையேல், ஆய்வாளர் சில முக்கியகிமான நூல்களை ஆய்வுக்குப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டார் என்பதே எளிதில் இத்துணைநூற்பட்டியலைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

குறிப்பு

### 14.5.4.3. தேர்வுத் துணைநூற்பட்டியல்

ஆய்வு திறம்பட அமைய ஆய்வு தொடர்பாக ஏராளமான நூல்களும், கட்டுரைகளும் மற்றும் பிறவும் பயன்படுகின்றன. ஆய்வாளரின் ஆய்வின் அனுமானத்தை நிரூபிக்க வைக்கும் நிலையில் பயன்படுகின்ற அனைத்து நூல்களையும் பிறவற்றையும் துணைநூற்பட்டியலில் அடக்குவது கடினம். ஆகவே ஆய்வாளர் தமது ஆய்வுக்கு எடுத்தாண்ட நூல்களில் முக்கியமான நூல்களையும், கட்டுரைகளையும், பிறவற்றையும் தேர்ந்தெடுத்து இத்துணைநூற்பட்டியலை உருவாக்குகின்றனர். இதுவே தேர்வுத் துணைநூற்பட்டியல் என்று அழைக்கப்படுகின்றது.

### 14.5.5. துணைநூற்பட்டியல் அமைக்கும் விதம்

ஆய்வு தொடர்பான படித்த எல்லா நூல்களையும் கொடுக்க வேண்டியதில்லை. அடிக்குறிப்பில் இடம்பெற்ற நூல்கள் அனைத்தும் துணைநூல் பட்டியலில் இடம்பெற வேண்டும். ஆய்வேட்டிற்குத் துணைபுரிந்த நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் துணைநூற் பட்டியலில் இடம்பெற வேண்டும். ஆசிரியர் பெயர், நூலின் பெயர், பதிப்பாளர், இடம், ஆண்டு முதலியவற்றைத் தொகுத்துத் தரவேண்டும். ஒரே ஆசிரியர் எழுதியுள்ள பல நூல்களை ஆண்டுவாரியாகத் தொகுத்துத் தரவேண்டும். மறுபதிப்பு, இரண்டாம் பதிப்பு என்பனவற்றையும் குறிக்க வேண்டும். நூலின் மூல ஆசிரியர், மொழி பெயர்ப்பாளர் பெயர் கூறியிருந்தால், இரண்டையும் குறிப்பிடவேண்டும். கட்டுரையாக இருந்தால் இதழின் பெயர், பகுதி, தொகுதி, ஆண்டு, மாதம் பக்க எண் போன்றவற்றையும் குறிப்பிட வேண்டும். வெளியான ஆண்டு, பதிப்பாளர் பெயர் இல்லையெனில் இல்லை எனக் கூறல் வேண்டும். தொகுப்பாசிரியர் (தொ.ஆ.), பதிப்பாசிரியர் (பதி.ஆ.), மொழிபெயர்ப்பாளர்கள் (மொ.பெ.ஆ.) என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தமிழ் ஆங்கிலம் தனித்தனியே தரலாம். நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் ஆகியவற்றையும் தனித்தனியே தரலாம். ஆசிரியர் இல்லாத நூலைக் கடைசியில் தரலாம். அடிக்குறிப்பில் முதலெழுத்து (Initial) முன்னாலும் துணைநூற்பட்டியலில் பெயருக்கும் பன்னாலும் தரப்படவேண்டும். தமிழ் ஆய்வேடுகளில் தமிழ் நூல்கள்

முதலிலும் அடுத்து ஆங்கில நூல்களும் தரப்படல் வேண்டும். எடுத்துக்காட்டுக்குச் சில துணைநூல் பட்டியல் ஆய்வேட்டில் அமைக்கும் விதத்தைக் காணலாம்.

குறிப்பு


1. பரமசிவம், த.கோ.(பதி.), சாந்தாதி அசுவமகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2005.

2. கோவைமணி, மோ.கோ., பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2010.

3. கோவைமணி, மோ.கோ., (பதிப்.), தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை-தொகுதி 8, தமிழ்ப் பல்கலைக்கழகம், வெளியீடு எண்.365, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு வெளியீடு, தஞ்சாவூர், 2010, ISBN:978-81-7090-408-3.

4. கோவைமணி, மோ.கோ., 'நாடி மருத்துவம் - ஓர் அறிமுகம்', செந்தமிழ், மதுரை தமிழ்ச் சங்கம், மதுரை, தொகுதி 84, பகுதி 4, திசம்பர் 1990, பக்.13-20.

5. வரதராசன், மு., மொழி வரலாறு, பாரி நிலையம், சென்னை, 1969.

6. கோவைமணி, மோ.கோ., ஓலைச்சுவடியியல், பாமொழி பதிப்பகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு 2016.


தகவல் வாயில்களைக் கண்டு, பகுத்தும் வகுத்தும் ஆய்வாளர் தகவல்களைத் திரட்டத் தலைப்பட்டவுடன், துணைநூற்பட்டியல் ஒன்றை உருவாக்குதல் வேண்டும். ஒவ்வொரு நூலிற்கும் அல்லது கட்டுரைக்கும் தனித்தனியான அட்டைகளைப் பயன்படுத்துல் வேண்டும். அட்டைகளைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று கூறுவதில் பொருள் இருக்கிறது. நூற்பட்டியலை ஆசிரியர் பெயரில் அகர வரிசைப்படுத்தவும் இது துணைசெய்யும். தொடர்ந்து மேற்கொள்ளும் ஆய்வுப் பயணத்தில் அப்போதைக்கப்போது படிக்கும் நூல்களைக் குறிக்கவும், குறித்தவற்றில் திருத்தங்கள் செய்யவும் அட்டைகளே துணைசெய்யும். அட்டைகளைப் பயன்படுத்துவதால் காலம் மிச்சப்படுகிறது. வரிசைப்படுத்துவதில் ஒரு நூலோ அல்லது கட்டுரையோ மாற்றி அடுக்கப்பட வேண்டுமானால், அட்டைகளை மாற்றுவது எளிது. புதியனவற்றைச் சேர்த்துக் கொள்ளவும் அட்டைகளைப் பயன்படுத்தும் முறையே சிறந்தது. மேலும்,

இறுதியில் ஆய்வேட்டைத் தட்டச்சு செய்யும் பொழுது, அகர வரிசைப்படுத்தப்பட்டு வரிசை எண் இடப்பட அட்டைகளை அப்படியே பயன்படுத்துவது நல்லது. பன்முறை மாற்றிமாற்றி அடுக்க அட்டைகளே பயன்படும்.

## 14.5.6. துணைநூற்பட்டியலின் பயன்கள்

- ஆய்வாளர் எந்தெந்த நூல்களிலிருந் தமது ஆய்வுக்கு அடிப்படை, இரண்டாம் நிலை மூல உண்மைக் கூறுகளைத் திரட்டினார் என்பதை அறியப் பயன்படுகின்றது.
- ஆய்வேட்டினைப் படிப்போர் மேலும் சில விளக்கங்களை அறிய, நூலைப் பற்றிய முழு விவரங்களையும் துணைநூற்பட்டியல் மூலமாக அறிந்துகொள்ள உதவுகிறது.
- ஆய்வாளர் தம் ஆய்வுக்கு மேற்கொண்ட உழைப்பின் உன்னதச் சிறப்பினைப் புலப்படுத்துகிறது.
- பின்வரும் ஆய்வாளருக்கு செயல்முறை துணைநூற்பட்டியலை உருவாக்கப் பயன்படுகின்றது.

## 14.5.7. துணைநூற்பட்டியலில் ஆய்வாளர் பின்பற்ற வேண்டியன

- துணைநூற்பட்டியல் ஆசிரியர் பெயர் அகர வரிசைப்படி முறையாக அமைந்துள்ளதா? என்பதைக் கவனிக்க வேண்டும்.
- நூலின் பெயர் அடிக்கோடிடப்பட்டுள்ளதா அல்லது சாய்வெழுத்தில் உள்ளதா அல்லது Bold எழுத்தில் உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.
- கட்டுரைத் தலைப்பு மேற்கோளுக்குள்ளும், அது இடம்பெற்ற மலர் அல்லது இதழின் பெயர் அடிக்கோடிடப்பட்டுள்ளதா அல்லது சாய்வெழுத்தில் உள்ளதா அல்லது Bold எழுத்தில் உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.
- முறைப்படி குறியீடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதைக் கவனிக்க வேண்டும்.
- தொகுதி எண், பதிப்பு, வெளியீடு பற்றிய விவரங்கள் போன்றவை முறைப்படி குறிக்கப்பெற்றுள்ளனவா என்பதைக் கவனிக்க வேண்டும்.

குறிப்பு

## முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்கள்

9. துணைநூற்பட்டியலின் வேறு பெயர்கள் யாவை?
10. ஆய்வேட்டில் துணைநூற்பட்டியலின் அமைவிடம் எது?
11. செயல்துணைநூற்பட்டியல் என்றால் என்ன?
12. துணைநூற்பட்டியலின் பயன்கள் யாவை?

## 14.6. தொகுத்துக் காண்போம்

- மேற்கோள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- அடிக்குறிப்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- துணைநூற் பட்டியல் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 14.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 14.3. | 2. | 14.3.2. |
| 3. | 14.3.4. | 4. | 14.3.6. |
| 5. | 14.4. | 6. | 14.4.1. |
| 7. | 14.4.2. | 8. | 14.4.4. |
| 9. | 14.5. | 10. | 14.5.1. |
| 11. | 14.5.2. | 12. | 14.5.6. |

## 14.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. மேற்கோள் வகைகள் யாவை? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. அடிக்குறிப்பில் அமைவன யாவை? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. துணைநூற்பட்டியலின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

# மேலும் பயில்வதற்கான நூல்கள்

குறிப்பு

1. கணேசன், எஸ்.என்., ஆய்வியல் கோட்பாடுகளும் செயல்முறைகளும், பயோனியர் புக் சர்வீசஸ், சென்னை, 1991.

2. கோவைமணி,மோ.கோ., ஆய்வியல் நெறிமுறைகள், www.kovaimani-Tamilmanuscriptology.blogspot.com, 15.05.2018.

3. சக்திவேல், சு., ஆராய்ச்சி நெறிமுறைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு 1999.

4. சிதம்பரநாதன், வே., ஆய்வியல் முறைகள், சுபா பதிப்பகம், நாகர்கோவில், 1967.

5. சுப்பிரமணியன், ச.வே.(பதி.), ஆராய்ச்சி நெறிமுறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

6. தமிழண்ணல் மற்றும் முத்தையா, இ., தமிழியலாய்வு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1983.

7. பாலசுப்பிரமணியன், கு.வெ., ஆய்வியல் நெறிகள், அனுராதா பதிப்பகம், சென்னை, 17ஆம் பதிப்பு2012.

8. பாலசுப்பிரமணியன், சி., ஆராய்ச்சி முறையியல் ஓர் அறிமுகம், பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு 1979.

9. பெரிய கருப்பன் மற்றும் இராம. இலக்குமணன், எம்.எஸ்., ஆய்வியல் அறிமுகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1977.

10. முத்துச்சண்முகன் மற்றும் வேங்கடராமன், ஆய்வுக் கட்டுரை எழுதும் முறை, முத்துப் பதிப்பகம், மதுரை, 1979.

11. முத்துச்சண்முகன் மற்றும் வேங்கடராமன், சு., இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, முதற்பதிப்பு 2013.

12. விசுவநாதன், ஈ.சா., ஆய்வு நெறிமுறைகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு 1976.

**அழகப்பா பல்கலைக்கழகம்**

**தொலைநிலைக்கல்வி இயக்ககம்**

**முதுகலை (தமிழ்) - 31944 – ஆராய்ச்சி அறிமுகம்**

**இரண்டாமாண்டு – நான்காம் பருவம்**

**மாதிரி வினாத்தாள்**

குறிப்பு

I. **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** (10x2=20)

1. உய்த்துணர் ஆய்வு என்றால் என்ன?
2. விளக்கத் தலைப்பு என்றால் என்ன?
3. ஆய்வாளருக்குரிய சிறந்த அணிகலன்கள் யாவை?
4. கருதுகோள் என்றால் என்ன?
5. உற்றுநோக்கல் என்றால் என்ன?
6. மரபியல் ஆய்வு என்றால் என்ன?
7. வினாநிரலின் நோக்கம் யாது?
8. முன்னுரையின் நோக்கம் யாது?
9. நன்றியுரையில் இடம்பெறக்கூடியவர்கள் யார்யார்?
10. மேற்கோள் அறம் யாது?

II. **ஏனையேனும் ஐந்தினுக்கு விடையளிக்கவும்.** (5x5=25)

11. (அ) மதிப்பீட்டாய்வு முறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆய்வின் முன்வரலாற்றை அறிவதன் தேவை குறித்து வரைக.

12. (அ) கருதுகோளின் வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) உற்றுநோக்கலின் பயன்கள் யாவை?

13. (அ) கோட்பாட்டாய்வு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வினாப்பட்டியல் வகைகள் யாவை? குறிப்பு தருக.

14. (அ) ஆய்வில் ஒலிப்பதிவின் தேவை குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) ஆய்வாளர் ஆய்வேட்டில் குறிப்புகளை ஆளும் திறத்தை விவரி.

*Self-Instructional Material*

15. (அ) முடிவுரையில் இடம்பெறுவன பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) வரையறுக்கப்பட்ட ஆய்வு அணுகுமுறை பற்றிக் கூறுக.

குறிப்பு

III. **எவையேனும் மூன்றினுக்கு விடையளிக்கவும்.** (3x10=30)

**16.** நாட்டுப்புற ஆய்வு வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

17. கருதுகோளின் வகைகள் யாவை? ஏதேனும் இரண்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

18. கட்டுப்பாடுடைய மற்றும் கட்டுப்பாடற்ற உற்றுநோக்கல் பற்றிக் கட்டுரை வரைக.

19. ஆய்வேட்டின் செம்மைப்படி உருவாக்கும் படிநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

20. ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பு குறித்து கட்டுரை வரைக.